# பிள்ளைகளுக்குச் சமாதானத்தைக் கற்பித்தல்

ஏ. எஸ். பாலசூரிய



கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித் துறை
தேசிய கல்வி நிறுவகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளுக்குச் சமாதானத்தைக் கற்பித்தல்

ஏ. எஸ். பாலசூரிய

தமிழாக்கம்:

**ஆர்தர் ஜோன்ஸ் பெர்னாண்டோ**

பதிப்பாசிரியர்:

**தை. தனராஜ்**

கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Teaching Peace to Children

(Model lessons for upper secondary classes)


| | | |
|---|---|---|
| Author | : | A. S. Balasooriya |
| Translated by | : | Arthur Jones Fernando |
| Edited by | : | T. Thanaraj |
| Sponsor | : | UNICEF<br>Education for Conflict<br>Resolution Project |
| First Publication | : | Tamil 7000 copies 1995 |

(for free distribution to schools in Sri Lanka to promote peace education)



© Department of Education Management Development
National Institute of Education
Maharagama, Sri Lanka.



**ISBN : 955-597-308-3**


சமாதானக் கல்வியை அறிமுகப்படுத்துவதற்காக இலங்கைப் பாடசாலைகளில் இலவசமாக விநியோகிப்பதற்காக அச்சிடப்பட்டது.

## பிள்ளைகளுக்குச் சமாதானத்தைக் கற்பித்தல்


| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | ஏ. எஸ். பாலசூரிய |
| தமிழ் மொழிபெயர்ப்பு | : | ஆர்தர் ஜோன்ஸ் பெர்னாண்டோ |
| பதிப்பாசிரியர் | : | தை. தனராஜ் |
| சித்திரம் | : | ரத்னசிரி கொடிக்கார |
| அச்சுப் பதிப்பு | : | கிரபிக் சிஸ்டம்ஸ் (பிரைவட்) லிமிட்டட்<br>இல. 11, உஸ்வத்த மாவத்தை, கோட்டே.<br>தொலைபேசி : 867280 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளுக்குச் சமாதானத்தைக் கற்பித்தல்

## ஓர் மாதிரிப் பாடத்திட்டம்

## (உயர் இடைநிலை வகுப்புகளுக்காக)


**ஏ.எஸ். பாலசூரிய**

எம். எஸ். சி. (மோரேஹவுஸ்) எம். ஏ. (பௌத்த பாளி பல்கலைக் கழகம்), பீ. ஏ. (பேராதனை), பீ. ஜீ. டி. ஈ. எம். (தே. க. நி) கல்வி முகாமைத்துவம், கல்வி நிர்வாக பட்டப்பின் டிப்ளோமா (மோரேஹவுஸ்) பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப் பத்திரம் (கட்டுக்குருந்த) (யு. என். டி. பி. - பிலிப்பைன்ஸ்)



**தமிழாக்கம்** : ஆர்தர் ஜோன்ஸ் பெர்னாண்டோ

**பதிப்பாசிரியர்** : தை. தனராஜ்

**உதவி** : ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் (யுனிசெப்)

**பதிப்பு** : கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புள்ள ஆசிரியரே,

நான் மக்கள் தடுப்பு முகாம் ஒன்றிலிருந்து உயிர் தப்பிய ஒருவனாவேன்.

எனது கண்கள்,

எந்தவொரு மனிதனும் காணக்கூடாத காட்சிகளை கண்டுள்ளன. படித்த பொறியியலாளர்களால் நிர்மாணிக்கப் பட்ட விஷவாயு கொண்ட அறைகள், படித்த வைத்தியர்களால் விஷ ஊசியேற்றப்பட்ட பிள்ளைகள், பயிற்றப்பட்ட தாதிமாரால் கொல்லப்பட்ட சிசுக்கள், உயர் கல்லூரிகளில் படித்த மாணவர்களாலும் பல்கலைக்கழகங்களில் படித்த பட்டதாரிகளாலும் சுடப்பட்டு எரிக்கப்பட்ட பெண்களினதும் கைக்குழந்தைகளினதும் சடலங்கள் ஆகியவற்றைக் கண்டு நான் அதிர்ந்துள்ளேன்.

இப்போது எனக்குக் கல்வி மீது சந்தேகம்.

எனது கோரிக்கை,

உங்களிடத்தில் கற்றுக் கொள்ளும் மாணவர்கள் மானிடத்தை நேசிக்க உதவுங்கள். உங்களது முயற்சி ஒருபோதும் படித்த இராட்சசர்களை, மன விகாரம் கொண்ட திறன் படைத்தோரை, படித்த 'ஈச்மன்களை' உருவாக்கக் காரணமாகாது இருக்கட்டும்!

வாசிப்பு, எழுத்து, கணிதம் என்பன எம் குழந்தைகளை மேலும் மானிடங் கொண்டமைய வழிகாட்டினால் மட்டுமே அவை முக்கியமானவையாக விளங்கும்.

(பிரித்தானிய ப்ரட்போர்ட் இடைநிலைப் பள்ளியின் விளம்பரப் பலகை ஒன்றில் பெயர் குறிப்பிடப்படாத ஒரு நபரால் எழுதப்பட்டு ஒட்டப்பட்டிருந்த வாசகம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருளடக்கம்** **பக்கம்**

**விடயம்**

1. பாடத்திட்ட அறிமுகம் ........................................ 1
2. சமாதானம் என்றால் என்ன? ........................................ 10
3. மானிட வன்முறைப்பண்பு பற்றிய பிரச்சினை ........................ 16
4. சமாதானக் கல்வியும் ஆசிரியரும் ........................................ 29

**மாதிரிப் பாடங்கள்**

**விடயம்** 1. அன்போடு வாழ்வோம் ........................................ 34
1.1 இயற்கைச் சுற்றாடலின் வனப்பைக்காணல் ............. 35
1.2 அன்பு என்றால் என்ன? (1) ........................... 38
1.3 அன்பு என்றால் என்ன? (2) ........................... 42
1.4 அன்பின் பொருள் ........................................ 45
1.5 மானிட சகோதரத்துவம் .................................. 48
1.6 பல்வேறு வேறுபாடுகளைச் சகித்தல் ..................... 50
1.7 சமூக இயைபாக்கம் ........................................ 55
1.8 மரியாதைப் பண்புடைமை .................................. 59
1.9 அமைதியான மனம் ........................................ 62
1.10 கருணையின் சக்தி ........................................ 66

**விடயம்** 2. எல்லாவற்றினதும் நல்ல பக்கத்தை நோக்குவோம் .................. 72
**பாடம்** 2.1 எல்லாவற்றினதும் நல்ல பக்கத்தை நோக்குவோம் .................. 73
2.2 துன்பத்தில் இருந்து இன்பத்தை நோக்கி ................ 80
2.3 ஆக்கபூர்வமான நோக்கு ........................................ 85

**விடயம்** 3. விலங்குகள் மீது கருணை காட்டுவோம்................. 93
3.1 எமக்கும் விலங்குகளுக்கும் இடையே இருக்க வேண்டிய தொடர்புகள் ........................ 94
3.2 விலங்குகளை இம்சித்தல் ........................................ 99
3.3 மதங்கள் கற்பிக்கும் ஜீவகாருண்யம் ......................106

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயம் 4. இம்சையின் தன்மையை விளங்கிக் கொள்வோம் ..... 114
பாடம் 4.1 இம்சிக்கும் செயற்பாடு என்றால் என்ன? ............... 115
4.2 இம்சித்தல் என்றால் என்ன? ............................ 119
4.3 இம்சித்தல் இயற்கையானதா? ............................ 123
4.4 கந்தையாவின் கதை ............................ 128

விடயம் 5. இம்சையைத் தவிர்ப்போம் ............................ 132
பாடம் 5.1 யுத்தம் அவசியமா ? ............................ 133
5.2 பயங்கரவாத உபாயங்கள் ............................ 139
5.3 மனிதாபிமானத்தை அழித்தொழிக்கும் உபாயங்கள் ............................ 145
5.4 அசோக மன்னர் ............................ 152
5.5 அஹிம்சை என்றால் என்ன? ............................ 161

விடயம் 6. எமக்கிடையே உள்ள பிணக்குகளை பரஸ்பர ஒத்துழைப்பு மூலம் தீர்த்துக் கொள்வோம் ............. 165
பாடம் 6.1 பிணக்கு என்றால் என்ன? ............................ 166
6.2 பிணக்குகளை ஆக்கபூர்வமாகத் தீர்த்துக் கொள்வதன் முக்கியத்துவம் ............................ 169
6.3 பிணக்குகளைத் தீர்த்தல் ............................ 175
6.4 பேச்சுவார்த்தை ............................ 180
6.5 ஆளிடைத் தொடர்பு ............................ 189

விடயம் 7. சமூகத்தை மாற்றியமைப்பதில் அஹிம்சைவழிச் செயன்முறைகளைக் கைக்கொள்வோம் ................ 194
பாடம் 7.1 பலாத்காரத்துக்குப் பலாத்காரத்தால் பதில் கூறல் ....... 195
7.2 இம்சையைப் பற்றி மேலும் ............................ 199
7.3 அஹிம்சாவாதத்தின் கோட்பாடுகள் (1) ................ 202
7.4 அஹிம்சாவாதத்தின் கோட்பாடுகள் (2) ................ 207
7.5 அஹிம்சை வழிச் செயல்கள் - விடய ஆய்வு ........... 211
7.6 அஹிம்சை வழிப் போராட்ட முறைகள் (1) ............. 219
7.7 அஹிம்சை வழிப் போராட்ட முறைகள் (2) ............ 227
7.8 அஹிம்சாவாதத்துக்கு எதிரான சவால்கள் ............... 235


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடயம்** 8. சமாதானம் நிறைந்த உலகைக் கட்டி யெழுப்புவோம் ........ 242

**பாடம்** 8.1 சமாதானம் என்றால் என்ன? (1) ........ 243

8.2 சமாதானம் என்றால் என்ன? (2) ........ 245

8.3 சமாதானத்தைக் கட்டியெழுப்புவோம் (1) ........ 249

8.4 சமாதானத்தைக் கட்டியெழுப்புவோம் (2) ........ 253

8.5 சமாதானத்தைக் கட்டியெழுப்புவோம் (3) ........ 257

8.6 ஜனநாயகச் சமூகத்தின் பண்புகள் ........ 262


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சமாதானக் கல்வி பற்றிய ஆர்வம் தோன்றியுள்ள இக்கால கட்டத்தில் மாணவர்க்குச் சமாதானத்தைக் கற்பிக்கையில் கைக்கொள்ளத் தக்க எண்ணக்கருக்கள் பற்றியும், அவற்றைப் பாடங்களாகத் தயாரித்துக் கொள்ளக்கூடிய விதம் பற்றியும் விளக்கம் அளித்தல் இந் நூலின் குறிக்கோளாகும். பல்வேறு ஆசிரியப் பயிற்சிக் கருத்தரங்குகளின்போது இத்தகைய பாடத்திட்டத்தின் அவசியம் தெளிவாக உணரப்பட்டது.

சமாதானக் கல்விப் பயிற்சியின் இறுதி எதிர்பார்ப்பு, முறையான பாடவிதானத்திற்குள் சமாதானக் கல்வியைக் கற்பிப்பதற்கான கற்பித்தல் திறனை ஆசிரியர்களுக்கு அளிப்பதேயாகும். எனினும் அது தொடர்பாக முதலில் சமாதானத்தை முறையான விதத்தில் கற்பிப்பதில் அனுபவத்தைப் பெறுதல் வேண்டும். இப் பாடவிதானம் அதற்கு உதவும் என்பது திண்ணம்.

பாடசாலைக்குக் கிடைக்கும் இவ்வாசிரியர் கைந்நூல் முதலாவதாக அதிபராலும், பின்னர் ஆசிரியர் குழாத்தில் சகலராலும் கற்கப்படல் வேண்டும். சமாதானக் கல்வி தொடர்பாகப் பாடசாலையில் ஆசிரியர் அபிவிருத்திக் கருத்தரங்கை நடத்துதலும் பொருத்தமானது எனலாம். அத் தகைய கருத்தரங்கின் பின்னர் இப்பாட விதானத்தை உயர் இடைநிலை ஆண்டு மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கு ஒழுங்கு செய்யலாம்.

இப்பாடத் திட்டத்தைத் தயாரிக்க நீண்டகாலமாகப் பல நூல்களைக் கற்றும் ஆய்வுகள் நடத்தியும் உற்சாகமாகச் செயற்பட்ட செயற்றிட்ட அதிகாரி திரு. ஏ. எஸ். பாலசூரிய அவர்களுக்கும், தமிழில் மொழிபெயர்த்த திரு. ஆர்தர் ஜோன்ஸ் பெர்னாண்டோ அவர்களுக்கும் தமிழில் பதிப்பித்த எமது செயற்றிட்ட அதிகாரி திரு. தை. தனராஜ் அவர்களுக்கும் மாணவ பரம்பரையின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு இதனைப் பதிப்பிக்க உதவி வழங்கிய ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியத்துக்கும் (யுனிசெப்) எனது மனமார்ந்த நன்றி.

**ஈ. எஸ். லியனகே**
பணிப்பாளர்

கல்வி முகாமைத்துவ அபிவிருத்தி துறை
தேசிய கல்வி நிறுவகம்
22. 09. 1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

எமது இளைய தலைமுறை எதிர்காலத்தில் வன்முறையைச் சாராதிருக்கும் பொருட்டு அவர்களைச் சமாதானத்தில் நாட்டம் கொண்ட பிரஜைகள் கூட்டத்தவராக எவ்வாறு ஆக்கலாம் என்ற வினாவுக்குக் கல்வி ரீதியாக எடுக்கத் தக்க செயல் வழிகளில் இந்நூல் ஓர் ஒளியாக விளங்குமெனில் அதுவே எமக்குப் பரமதிருப்தி.

இதனை எழுதும் பணியை வழங்கிய முகாமைத்துவ அபிவிருத்தித்துறையின் பணிப்பாளர் ஈ. எஸ். லியனகே அவர்களுக்கும் எம்மை ஊக்குவித்த அதன் விரிவுரையாளர் குழுவுக்கும் எமது நன்றி. மேலும் இங்கு இடம் பெறும் இந்து சமய ஜீவகாருண்யம் பற்றிய கற்பித்தல்களைத் தேடி வழங்கி உதவிய வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் ஆத்மகனானந்த சுவாமிகளுக்கும் எனது நன்றி.

மிகக் குறுகிய காலத்தில் இதனைச் சிங்களத்தில் இருந்து தமிழில் மொழிபெயர்த்த வென்னப்புவவைச் சேர்ந்த திரு. ஆர்தர் ஜோன்ஸ் பெர்னாண்டோவுக்கும் இந்நூலைப் பதிப்பித்த எனது சகாவான திரு. தை. தனராஜ் அவர்களுக்கும் எனது விசேட நன்றி.

இலங்கைச் சிறார்களின் முன்னேற்றம் கருதி இதன் பதிப்பித்தற் செலவை ஏற்ற யுனிசெப் நிறுவனத்துக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்கள் பாடசாலைக்கு வழங்கப்படும் இப்புத்தகத்தின் வாயிலாக மாணவர்கள் உரிய பயனைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக நீங்கள் செயற் படுவீர்கள் என நம்புகிறோம்.

**ஏ. எஸ். பாலசூரிய**

கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித்துறை,
தேசிய கல்வி நிறுவகம்,
22. 09. 1994.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

இம் மொழிபெயர்ப்பு நூலின் மூலநூலை சிங்களத்தில் எழுதியுள்ள தேசிய கல்வி நிறுவகத்தின் செயற்றிட்ட அதிகாரியான திரு. ஏ. எஸ். பாலசூரிய தமிழ் வாசகர்களுக்கு ஏற்கெனவே அறிமுக மானவராவார். அவரது நூல்களில் ஒன்று ''பாடசாலைகளில் முரண்பாடுகளை முகாமைத்துவம் செய்தல் ''என்னும் தலைப்பில் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டு, அச்சிடப்பட்டு ஏற்கெனவே பாடசாலைகளுக்கும் ஏனையோருக்கும் வினியோகிக்கப்பட்டுள்ளது.

பிணக்குகளைத் தீர்த்தல் (Conflict Resolution) என்னும் எண்ணக்கரு தொடர்பான நூல்கள் இன்று ஆங்கில மொழியில் நிறையவே வெளிவந்துவிட்டன. ஆனல் தமிழில் இவ்விடயம் தொடர்பான நூல்கள் அரிது. அவ்வெற்றிடத்தை ''பிள்ளைகளுக்குச் சமாதானத்தைக் கற்பித்தல்'' என்னும் இம் மொழிபெயர்ப்பு நூல் ஓரளவேனும் தீர்த்துவைக்கும் என்பது எமது நம்பிக்கை. இவ்வரிசையில் இன்னும் ஒரு சில நூல்கள் வெளிவரவுள்ளன.

இந்நூலைத் தமிழிலும் வெளியிட அனுமதித்த தேசிய கல்வி நிறுவக பணிப்பாளர் நாயகம் கலாநிதி பிரேமதாச உடகம அவர்களுக்கும், நிதி உதவிகள் செய்த யுனிசெப் (இலங்கை) சமாதான கல்விச் செயற்றிட்ட அதிகாரிகளுக்கும் சரளமான தமிழில் மொழிபெயர்த்த திரு. ஆர்தர் ஜோன்ஸ் பெர்னாண்டோ அவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றி.

இந்நூலின் உள்ளடக்கம் மற்றும் மொழிபெயர்ப்பு தொடர்பான வாசகர்களின் விமர்சனங்களை எமது எதிர்க்காலப் பணிகளின் உயர்வு கருதி ஆவலுடன் எதிர்பார்க்கிருேம்.

**தை. தனராஜ்**
பதிப்பாசிரியர்

கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
22. 09. 1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடத்திட்ட அறிமுகம்.

**குறிக்கோள்**

இப்பாடத் திட்டம் உயர் இடைநிலை ஆண்டு - அதாவது 8, 9, 10, 11 ஆகிய ஆண்டு மாணவர்களுக்கு சமாதான வழியில் அமைதியாக வாழும் வழிகளை அறிமுகஞ் செய்து அவ்வாறு வாழ்வதற்கு அவசியமான எண்ணக் கருக்களையும் நடத்தைத் திறன்களையும் பெற்றுத் தரும் நோக்கோடு உருவாக்கப்பட்டது.

1. மாணவர்களிடத்தில் கருணையின் முக்கியத்துவத்தையும், அதன் வழி வாழ்வதன் அவசியத்தையும் எடுத்துக் காட்டுதல்.

2. தன்னையும் உலகையும் ஆக்கபூர்வமாக (Positively) நோக்க மாணவர்களை வழிப்படுத்தல்.

3. மாணவரது உள்ளங்கள் வன்முறையின்பால் சார்வதற்கு இடமளிக்காது அவர்களை அஹிம்சையின் பால் வழிப்படுத்தல்.

4. நபர்களுக்கு இடையே தோன்றும் பிணக்குகளையும், சமூக அநீதி களையும் அகற்றுவதன் பொருட்டு மேற்கொள்ளப்படும் போராட்டங்கள் வன்முறையைக் கையாண்டு தீர்த்துக் கொள்வதிலும் பார்க்கக் கூடுதலான பயனுள்ள வழியில் அஹிம்சையைக் கையாண்டு தீர்த்துக் கொள்ள இயலும் என்பதை எடுத்துக் காட்டல்.

கடந்த சில தசாப்தங்கள் எம் இளைய பரம்பரையினரிடம் தோன்றிவளரும் வன்முறை பற்றி பாடசாலைகள் இன்னும் கூடுதலான அவதானத்தைச் செலுத்த வேண்டும் என்பது எமது அபிப்பிராயமாகும். அது தொடர்பான ஏதாவது ஒரு செயல் வழியை மேற்கொள்ள வேண்டிய காலம் வந்திருக்கிறது. இதற்கு முன்பு நாம் குறிப்பிட்ட 'சமாதானக்கல்வி தொடர்பான கற்றல் செயற்பாடுகள்' என்ற ஆசிரியர் வழிகாட்டல் நூலின் மூலமும் இம் மாதிரிப் பாட விதானத்தின் மூலமும் அத்தகைய பரிகார செயல் வழிகளைக் குறிப்பிட முயன்றுள்ளோம்.

மேலே குறிப்பிட்டவாறு எட்டு விடயங்களை இனங்கண்டு, அவற்றின் அடிப்படையில் கற்பிக்க வேண்டிய பாட விடயங்கள் கற்றல் செயற்பாடுகள் மற்றும் மதிப்பீட்டு முறைகள் என்பன தீர்மானிக்கப்பட்டன. ஒவ்வொரு விடயமும் பின்வரும் குறிக்கோள்களைக் கொண்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடயம் : 1. அன்போடு வாழ்வோம்.**

**குறிக்கோள்கள்:**

1. மானிட வாழ்வின் மீது கௌரவத்தை உருவாக்கலும், அதன்படி தமதும், ஏனையோரதும் உயிர்களை ஒரே விதமாக மதிக்கத்தக்கதாக ஊக்குவித்தலும்.

2. அன்பு, கருணை, நட்பு பற்றிய விளக்கத்தை விருத்தி செய்தல்.

3. மானிட சமூகத்தின் பல்வகை வேறுபாடுகளைச் சகித்துக் கொள்ளும் பண்பை விருத்தி செய்தல்.

4. சமூக இசைவாக்கத்தையும், மரியாதையளிக்கும் பண்பையும் வளர்த்தல்.

5. அமைதியும் சமாதானமும் நிறைந்த உள்ளத்தைக் கொண்டிருக்க வழிகாட்டல்.

**விடயம்: 2. எல்லாவற்றினதும் நன்மையான பக்கத்தையே நோக்குவோம்.**

**குறிக்கோள்கள் :**

1. வாழ்வை நன்னோக்கோடு பார்க்கத் தூண்டுதல்.

2. ஏனையோர் மீதும் நன்னோக்கோடு செயற்படத் தூண்டுதல்.

**விடயம் : 3. விலங்குகள் மீது கருணை காட்டுவோம்.**

**குறிக்கோள்கள் :**

1. விலங்குகள் எம்மால் காக்கப்பட வேண்டிய பெறுமதியான இயற்கை வளங்கள் என்பதை விளங்கிக் கொள்ளச் செய்தல்.

2. விலங்குகளை இம்சிப்பதை விலக்கிக் கொள்ள வழிகாட்டல்.

3. விலங்குகளுக்குரிய அடிப்படையான வாழும் உரிமைகளை அறிமுகஞ் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடயம் : 4. இம்சையின் தன்மையை விளங்கிக் கொள்வோம்.**

**குறிக்கோள்கள் :**

1. இம்சை என்றால் என்னவென இனங் காணச் செய்தல்.

2. இம்சை சமூகப் பிரச்சினை எனக் குறிப்பிடுதல்.

3. இம்சையானது இயற்கைக்கு மாறானதும், விஷமத்தனமானது மான நடத்தையாகும் என்பதை விளங்கிக் கொள்ளச் செய்தல்.

4. மனிதக் கொலையை வெறுத்து ஒதுக்கக் கற்பித்தல்.

**விடயம் : 5 இம்சையை ஒழிப்போம்.**

**குறிக்கோள்கள்:**

1. யுத்தத்தின் அழிவுத்தன்மையைப் புரிந்து கொள்ள உதவுதல்.

2. இம்சையைச் சமூகப் போராட்ட உத்தியாகச் சிலர் கைக் கொள்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டல்.

3. பயங்கரவாதம் கைக்கொள்ளும் உத்திகளை விளங்கிக் கொள்ளச் செய்வதன் மூலம் மாணவர்கள் பயங்கரவாதத்துக்கு ஆட்படுவதைத் தவிர்த்தல்.

4. மனித மனத்தை மனிதாபிமானம் அற்றதாக மாறச் செய்யும் உளவியல் காரணிகளை அறிமுகஞ் செய்தல்.

5. அசோக மன்னரது வாழ்க்கை வரலாற்றை சமர்ப்பிப்பதன் வாயிலாக அஹிம்சையான வாழ்வை இனங்கண்டு கொள்ள உதவுதல்.

6. அஹிம்சை முறையின் பண்புகளைக் குறிப்பிடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடயம் : 6 எமக்குள்ளை காணப்படும் பிணக்குகளை பரஸ்பர ஒத்துழைப்போடு தீர்த்துக் கொள்வோம்.**

**குறிக்கோள்கள் :**

1. ஆக்கபூர்வமாக பிணக்குகளைக் கையாளுவதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளச் செய்தல்.

2. பிணக்குகளைத் தீர்ப்பதற்கு அவசியமான அடிப்படைத்திறன்விருத்தி.

3. மானிடத் தொடர்புகளுக்கு அவசியமான அடிப்படைத் திறன் விருத்தி.

**விடயம் : 7 சமூகத்தை மாற்றியமைப்பதில் அஹிம்சை வழிச் செயல் முறைகளைக் கைக்கொள்வோம்.**

**குறிக்கோள்கள் :**

1. இம்சைக்கு அஹிம்சையால் பதிலளிக்கவியலும் என்பதை எடுத்துக் காட்டுதல்.

2. அஹிம்சாவாதத்தின் தத்துவங்களையும், கோட்பாடுகளையும் அறிமுகஞ் செய்தல்.

3. சமூகத்தை மாற்றியமைக்கவும், அநியாயத்தை நீக்கவும். கைக்கொள்ளத்தக்க அஹிம்சை வழிப் போராட்ட முறைகளை அறிமுகஞ் செய்தல்.

4. அஹிம்சாவாதத்தின் சிக்கல்களை ஆய்வு ரீதியில் நோக்க வழிகாட்டல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிக்கோள்கள் :**

1. சமாதானத்தைப் பல்வேறு கண்ணோட்டங்களில் நோக்கி விளங்கிக் கொள்ளச் செய்தல்.

2. சமூகத்தில் சமாதானத்தைக் கட்டியெழுப்பச் சாதகமான காரணிகளை அறிமுகஞ் செய்தல்.

3. சமூகப் பிணக்குகளைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்ளும் திறன் விருத்தி.

4. ஜனநாயகமான சமூகப் பண்புகளை இனங் கண்டு கொள்ளச் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடசாலையில் இதன் பயன்பாடு**

இது ஒரு கட்டாயமான பாடத்திட்டமோ அன்றிப் பாடவிதானமோ அல்ல. இது வகுப்பறையில் மாணவர்க்குப் பயன்படும் மாதிரி மட்டுமே. அத்துடன் ஆசிரியர்களது பார்வையை விரிவடையச் செய்வதற்காகத் தயாரிக்கப்பட்ட ஆசிரிய அபிவிருத்தி ஊடகமாகவும் இதனைக் கொள்ள முடியும். எவ்வாறாயினும் ஒரு பாடசாலை இப் பாடவிதானத்தைத் தம் இடைநிலை ஆண்டு மாணவருக்குக் கற்பித்தல் பயனுடையது எனக் கருதினால் இதனை மேலதிக பாடத்துக்கான செயற்பாடாகக் கைக் கொள்ளலாம். அதனைக் கீழ் வரும் முறைகளுள் வசதியான எந்தவொரு முறையாலும் கையாள முடியும்.

1. கால அட்டவணையில் சமாதானக்கல்வி என வாரத்தில் ஒரு பாட வேளையைப் புகுத்துதல் அல்லது தெரிவு செய்யப்பட்ட ஏதாவதொரு தினத்தில் பாடவேளைகளில் இருந்து 05 நிமிடங்கள் வீதம் குறைத்துப் புதிய பாடவேளை ஒன்றினை உருவாக்கிக் கற்பித்தல்.

2. பாடசாலை நேரத்தின் பின்னர் வார இறுதியில் அல்லது விடுமுறை நாட்களில் மேலதிக விசேட பாடமாக ஒழுங்கு செய்தல். (பூரணமாகப் பாடங்களைக் கற்றுக் கொண்ட பின்னர் மாணவருக்குத் தராதரப் பத்திரங்களை வழங்குதல் ஊக்குவித்தலாக அமையும்)

3. ஓய்வு பாடவேளைகளின் போது வகுப்புகளுக்குச் செல்லும் ஆசிரியர்கள் வாயிலாகக் கற்பித்தல்.

4. சமூகக்கல்வி, மொழி, சமயம் போன்ற பாடங்களோடு தொடர்பு பட்ட பொருத்தமான விடயங்களோடு சில பாடங்களைச் சேர்த்துக் கொள்ளல்.

5. மேலதிகமாக ஆசிரியர் குழுவினது அபிவிருத்திச் செயற்பாடாகக் கருதி ஆசிரியர்களது அறிவையும் எண்ணக்கருக்களையும் விருத்தி செய்யும் பொருட்டு இப் பாடத்திட்டத்தைக் கற்றலில் ஈடுபடுத்துதலும் பயனுடையதாக இருக்கும். அதன் வாயிலாக ஆசிரியர்கள் தாம் இப் பாடத்தைக் கற்பிப்பவர்கள் ஆயினும் சந்தர்ப்பம் கிடைக்கும் போது சமாதான எண்ணக்கருக்களைப் பிள்ளைகளிடம் புகுத்துவதற்குத் தூண்டப்படுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக்கு வெளியில் இதன் பயன்பாடு

இப் பாடத்திட்டத்தைத் தயாரிக்கும் போது பாடசாலைக்கு வெளியேயான கல்வித் தேவைகள் பற்றியும் கவனஞ் செலுத்தப்பட்டது.

1. ஆசிரியர் கலாசாலைகளிலும் கல்வியியல் கல்லூரிகளிலும் பயன் படுத்துவதற்காக: சமாதானக்கல்வி / பிணக்குத் தீர்வுக் கல்வி சமீப காலமாக ஆசிரியப் பயிற்சிப் பாடவிதானத்தில் சேர்க்கப்-பட்டுள்ளது. எல்லா ஆசிரியர்களும் சமாதானக் கல்வி தொடர்பான ஏதாவதொரு பயிற்சியைப் பெறுதல் காலத்தின் தேவையாக இருக்கிறது.

2. ஆசிரியர் சேவைக் காலப் பயிற்சிகள் தொடர்பாக:

   சமாதானக்கல்வி, பிணக்குத் தீர்வுக்கல்வி, விழுமியக்கல்வி, மதம்சார்கல்வி ஆகிய பாடங்கள் தொடர்பாக நடத்தப்படும் ஆசிரிய சேவைக்கால கருத்தரங்குகளின்போது விருப்பின்படி இதனைப் பயன்படுத்தலாம். (உதாரணங்கள் : சமாதானக்கல்வி எண்ணக் கருக்களையும் பாட உள்ளடக்கப் பகுதிகளையும் அடையாளங்காணல், மாதிரிப் பாடங்களைத் தயாரித்தல், கற்பித்தல் முறைகளை இனங் காணல்.)

3. முறைசாராத / மக்கள் கல்விக்காக:

   பல்வேறு அரசு சார்பற்ற இயக்கங்கள் வாயிலாக இளைஞர்க்காக நடத்தப்படும் மனிதவள அபிவிருத்திக் கருத்தரங்குகளில் பயிற்சியின் பொருட்டு இங்கு காணப்படும் சில எண்ணக்கருக்கள் கையாளத்தக்க தாக இருக்கும்.

4. மறைக்கல்வி அல்லது விழுமியக்கல்வி நிகழ்ச்சி நிரல்களுக்காக.

5. இளைஞர் புனர்வாழ்வு விவகாரங்கள் தொடர்பாக:

   எமது நாட்டிலே மாணவர்களுக்காகவும், இளைஞர்களுக்காகவும் புனர்வாழ்வுப் பயிற்சி நெறிகள் பல இருப்பினும், அவற்றில் பயன் படுத்தக்கூடிய பாடவிதானமொன்று அல்லது பயிற்சி வழி-காட்டல் கைந்நூல் ஒன்று இதுவரை தோன்றவில்லை. இத்தகைய குழுவினருக்கு எத்தகைய எண்ணக்கரு விருத்தியைச் செய்வது இவ்வெளியீடுகள் இரண்டினாலும் பெரும்பாலும் தீர்க்கப்படும் என நம்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கற்பித்தலுக்கான ஆலோசனைகள்:**

1. எந்தவொரு பயனுள்ள கற்பித்தலுக்கும் முன்னர் ஆயத்தம் அவசியம். நீங்கள் தெரிவு செய்த பாடத்தைக் கவனமாக வாசித்து அங்கு இடம் பெறும் எல்லா எண்ணக்கருக்களையும் ஆழமாக விளங்கிக் கொள்ளவும். விசேடமாகப் பிள்ளைகளை கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்து முன்னர் அவற்றை நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

2. பாடத்தின் குறிக்கோள்களை ஆரம்பத்தில் இருந்தே நினைவில் வைத்திருத்தல் அவசியம். இறுதியில் அக் குறிக்கோள்கள் எவ்வளவு தூரம் அடையப்பட்டன என அறிந்து கொள்ளும் பொருட்டு மதிப்பீட்டை நடத்தவும்.

3. எல்லாப் பாடங்களையும் பிள்ளைகளைப் போலவே ஆசிரியராகிய தாமும் கற்றல் அனுபவமாகக் கொள்ள வேண்டும். பூர்த்தி யாக்கப்பட்ட பாடத்தை மறுபரிசீலனை செய்து தம் தவறுகளை இனங்கண்டு தொடர்ந்தும் கற்றல், தொடர்ச்சியான ஆசிரிய அபிவிருத்திக்கு ஏதுவாக அமையும்.

4. அவசியப்படும் சந்தர்ப்பங்களுக்கு மேலதிகமாக உங்கள் கருத்துக் களைப் பிள்ளைகளுக்குக் கற்பித்தலைத் தவிர்த்தல் நன்று. அதற்குப் பதிலாக வினாவைச் சமர்ப்பித்துப் பிள்ளைகளது அனுபவங்கள், அறிவு, மனப்பாங்குகள் போன்றவற்றின் ஊடாக உகந்த எண்ணக் கருக்களைத் தோற்றுவிக்க உதவலாம். நல்ல சாமதான ஆசிரியர் உதவி புரிவராவார். பாட விடயங்களை அவசியமாக விளக்க வேண்டிய சந்தர்ப்பத்திலும் விவாதத்தை ஆரம்பித்தல், அதனைச் சரியான பாதையில் திசை திருப்பல், அதனை எழுச்சி பெறச் செய்தல் ஆகிய சந்தர்ப்பங்களின்போது மட்டுமே நீங்கள் கதைக்க வேண்டும். சிந்தித்தல், விவாதித்தல் என்பனவற்றில் மாணவரே ஈடுபடுதல் வேண்டும்.

5. ஏனைய பாடங்களை விடச் சமாதானக்கல்வி வெற்றிகரமாக அமைய வேண்டுமாயின் கட்டயமாக அதற்கு உகந்த வகுப்புச் சூழ்நிலை இருத்தல் வேண்டும். அது பிள்ளைகளைச் சகஜ தன்மையோடு நடந்து கொள்ளவும், தமது உண்மையான கருத்துக்களையும் உணர்வுகளையும் வெளிப்படையாக வெளியிடவும் இடமளிப்பதாக அமைய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஒருவேளை பிள்ளைகளது உற்சாகம் கீழ் மட்டத்தை அடைவதாகக் காணப்படின் புத்துணர்வை ஊட்டலால் அல்லது பாடத்தைக் நடத்தும் முறையை மாற்றியமைப்பதனால் உற்சாகத்தை திரும்பவும் தோற்று விக்கவும்.

7. சந்தர்ப்பத்துக்குத் தகுந்தவாறு நீங்கள் நெகிழ்ந்து கொடுக்க வேண்டும்.

8. விவாதங்களின்போது எழும் சிறப்பான எண்ணக்கருக்களை அல்லது விடயங்களைக் கரும்பலகையில் சுருக்கமாக எழுதுக.

9. காலம் வரையறுக்கப்பட்டதால் அதனை ஒழுங்குபடுத்திக் கொள்ளல் அவசியம்.

10. எல்லா மாணவர்களும் பாடத்தில் கலந்து கொள்ளத்தக்கதாகச் செய்யவும். விவாதத்தில் உற்சாகமான மாணவர் சிலர் மாத்திரமே கலந்து கொள்ளச் செய்தல் உசிதமல்ல.

11. சமாதானக் கல்விக்கு மிகப் பொருத்தமாக அமைவது சோக்ரடீசின் வினா விடை முறையே. அங்கு ஆசிரியர் எத்தகைய கண்ணோட்டத்திலும் ஒன்றியிருக்காது உண்மையை ஆராயும் பொருட்டு வினாக்களை வினவுவார். இது திறந்த கலந்துரையாடல் முறை எனவும் அழைக்கப்படுகிறது.

12. ஒரு வினா தொடர்பாக ஒரே கண்ணோட்டத்திலேயே கவனஞ் செலுத்தப்பட்டதாக உணரப்படின், 'இப் பிரச்சினையை இம் முறையில் மட்டுமா நோக்க வேண்டும்?' 'இதனை வேறு விதமாக நோக்கும் எவரேனும் உளரா?' எனக் கேட்டு வேறும் கண்ணோட்டத்தைப் பெற்றுக் கொள்ளவும். அதன் பின்னர் அவற்றை ஒரு பக்கஞ் சாராது நோக்கச் செய்யலாம். எல்லா வினாக்களும் தீர்ப்புடன் முற்றுப் பெறவேண்டியதில்லை.

13. தமது வகுப்பு மாணவர்களது தரத்துக்குப் பொருத்தமாக தெரிவு செய்த பாடத்தின் ஆழத்தை ஆசிரியர் கூட்ட அல்லது குறைக்க நேரிடலாம்.

14. பாடத்தை மதிப்பிடும் சந்தர்ப்பத்தில் தாம் கற்றுக் கொண்டவை எவையென மீட்டலுக்காகப் பிள்ளைகளை ஊக்குவிக்கவும். *அவ்வாறு கற்றுக்கொண்டவற்றைத் தம் வாழ்வில் எவ்வாறு கைக்கொள்ளலாம் என வினவவும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமாதானம் என்றால் என்ன?**

சமாதானம் என்பது பல்வேறு பொருள்களைத் தரும் பதமாகும். ஒருவர் அதனைக் கையாளும் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப நாம் அதன் கருத்தை ஊகிப்போம். அது மட்டுமன்றிச் சமாதானம் பற்றிப் பலரும் பலவாறு வரைவிலக்கணகளைத் தருகின்றனர்.

எனவே இங்கு நாம் சமாதானம் என்பதனால் கருதப்படுவது எதுவென ஆரம்பத்திலேயே விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

ஒருவர் தாம் சமாதானமாக இருப்பதாகக் கூறுகையில் அதனால் உணர்த்தப்படும் பொருள் எதுவெனத் தேடிப் பார்ப்பதன் மூலம் இவ் ஆய்வை ஆரம்பிக்கலாம் என எண்ணுகிறேன்.

**இக்கூற்றினால் அவர் :**

★ தம் உடல், உள, சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு வாழ்கிறார் எனவும்,

★ தாம் பிணக்குகள் இன்றி வாழ்கிறார் எனவும்,

★ தாம் நிச்சலனமான சிந்தையின் விளைவாகத் தோன்றும் மன அமைதியோடு வாழ்கிறார் எனவும்.

★ தாம் ஏனையோருடன் மோதிக் கொள்ளாது நட்புறவுடனும் ஒத்துழைப்புடனும் வாழ்கிறார் எனவும்,

★ மனிதர் ஒருவரோடொருவர் பிணங்கிக் கொள்ளாத சமூகச் சூழலில் தாம் வாழ்கிறார் எனவும்,

★ தாம் இயற்கைச் சுற்றாடலோடு உசிதமாகப் பொருந்தி வாழ்கிறார் எனவும் வெளிப்படுத்துகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'ஒரு நாட்டில் சமாதானம் காணப்படுகிறது' என்பதனால் கருதப்படுவன பின்வருவனவாகும்:**

★ நாட்டு மக்கள் உடல், உள, சமூகத் தேவைகளின் நிறைவு பெற்று வாழ்கிறார்கள்,

★ நாட்டு மக்கள் தமக்குள் பிணக்குள் இன்றி வாழ்கிறார்கள்,

★ நாட்டில் அமைதி நிலவுவதால் மக்கள் மகிழ்வோடும் திருப்தியோடும் வாழ்கிறார்கள்,

★ நாடு யுத்தங்கள் அற்ற வலயத்தில் அல்லது கோளத்தில் பாதுகாப்புடன் இருக்கிறது,

★ நாட்டில் மனித நடவடிக்கைகளுக்கும் இயற்கைச் சுற்றாடலுக்கும் இடையே சமநிலையும் நற்தொடர்பும் உள்ளன,
*(உதாரணம்: சுற்றாடல் பாதுகாப்புக் காரணமாக உரிய காலத்தில் மழை பெய்தல்.)*

மேலே குறிப்பிடப்பட்ட அம்சங்களின் அடிப்படையில் தோன்றும் சமாதானம் பற்றிய மாதிரி இவ்வாறான தோற்றத்தைக் கொண்டிருக்கும்.




இம் மாதிரி தனிநபர், குடும்பம், இயக்கம், சமூகம், நாடு, உலகம் ஆகிய எந்த அடிப்படையிலும் சமாதானத்தை ஆய்வு செய்யக் கைக் கொள்ளலாம்.

நபர் என்ற அலகின்படி அதனைக் கீழ்வருமாறு விளக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளக சமாதானம்:** தாம் தம்மோடு ஒத்துச் செல்லல், உளச் சிக்கல்கள் இன்மை, உடல் உளத் தேவைகளின் திருப்தி, உளச் செயற்றொகுதிகளில் சிக்கலின்மையும் ஒழுக்க நடத்தையில் சிக்கலின்மையும் ஒழுங்கும் (பௌத்த மதத்தில் இது சீலம் எனப்படுகிறது) ஆன்மீக முழுமையுடன் வாழும் திருப்தி, தொழிற்திருப்தி, மனோவமைதி, உளச் சுகம், அன்பு, அழகுணர்வு, திடகாத்திரம், சுகம், உளச்செழுமை, சுகமான ஆன்மீக எண்ணக்கரு.

**சமூகச் சமாதானம்:** தனிநபருக்கும் சமூகத்துக்கும் இடையே ஒத்துப் போதல், சமூக இசைவாக்கம், மனிதனோடு கொண்டுள்ள ஒற்றுமை, நட்புறவு, ஒத்துழைப்பு, பிணக்குகள் அற்ற மக்கள் வாழ்வு, நியாயமும் நீதியும் நிறைவேறத்தக்கதாக தனிநபர் உரிமைகளை உறுதிப்படுத்தும் முறையான சமூக இயக்கங்களும் அரசியலும், அடிப்படை மனிதத் தேவைகளை உறுதிப்படுத்தும் சமூகச் செயன்முறைகள், சௌபாக்கியம், அபிவிருத்திச் சுதந்திரமும் சகோதரத்துவமும். இயற்கைச் சுற்றாட-லோடான சமாதானம்: தனிநபருக்கும் இயற்கைச் சுற்றாடலுக்கும் இடையே தொடர்பு/சமநிலை, சமூகத்துக்கும் இயற்கைச் சுற்றாடலுக்கும் இடையே சிறந்த தொடர்பு/சமநிலை, இயற்கைச் சுற்றாடலோடு கவின்கலையானதும் ஆன்மீகமானதுமான தொடர்பு, சுற்றாடற் சமநிலை, தடைகளற்ற இயற்கைச் சுற்றாடல், இயற்கையோடு கொண்ட நெருக்கம்.

**முழுமையான சமாதானம்:** இதனால் கருதப்படுவது மேலே குறிப்பிட்ட எல்லா அம்சங்களும் பூரணத்துவமானபோது தோன்றும் மிகப் பொருத்தமான நிலையே (Synergy). இப் பதத்தின் பொருள் ஒன்றினது பிரிவுகள் ஒன்றோடொன்று பொருந்துவதால் தோன்றும் பண்பு என்பதாகும். எனவே நபரொருவர் முழுமையான சமாதானம் பற்றிய அனுபவத்தைப் பெற மேலே மாதிரியில் குறிப்பிடப்பட்ட மூன்று பிரிவுகளிலுமே சமாதானம் நிலவ வேண்டும். வேறு சொற்களில் இதனை விளக்குவதாயின் உளச் சமாதானத்தைக் கடைப்பிடிப்பதால் மட்டும் ஒருவர் பரிபூரணமான சமாதானத்துடன் வாழ்கிறார் எனக் கூறவியலாது. அது தொடர்பாகத் தம்மில் ஏற்படுத்திக் கொண்ட சமாதானம் சமூக சமாதானத்தைக் கட்டியெழுப்ப உடந்தையாகக் கொண்டு செயற்பட வேண்டியதோடு சமூகத்தையும் அடுத்த பக்கமாக இயற்கைச் சுற்றாடலோடு கலந்து கொள்ளச் செயற்படுதல் வேண்டும்.

சமாதானம் என்பது பெரும்பாலும் நாம் மேலே குறிப்பிட்டவாறு முழுமையான அர்த்தத்தோடு அன்றிப் பொருளியல், சட்டவியல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் போன்ற அம்சங்களைக் கொண்ட கண்ணோட்டங்களின் ஊடாகவே கையாளப்படுகிறது. ஒரு நாட்டிலே சமாதானத்தைக் கட்டியெழுப்பும் பணியின் போது பல்வேறு துறைகளின் ஊடாகச் செயற்படல் சமாதானத்தை நடைமுறைப்படுத்தலை இலகுவாக்கும். எனினும் சிலர் தம் துறைக்கு அப்பால் எதனையும் காண மாட்டார். வேறு சிலர் ஒரே துறையின் வரையறைக்குள் நின்று, ஏனைய துறைகளைக் கவனியாது விடுவர். மேலே காட்டிய மாதிரியில் சமாதானம் பற்றிய பல பிரிவுகளை அடங்கிய கண்ணோட்டத்தைத் தொகுத்துக் கொள்ளலாம்.

**உள்ளக சமாதானம்: (தனிநபர் சமாதானம்)**

★ ஒரு நபரின் பிழையற்றதும் தெளிவானதுமான வாழ்க்கையின் ஊடாகவே சமாதானம் பிறக்கிறது.

★ சமாதானம் என்பது மனவமைதியே.

★ மனவமைதி உண்மையான சமாதானமாகும்.

★ சமாதானம் என்பது விவேகம், கருணை என்பவற்றின் ஊடாகவே தோன்றும்.

★ மதஞ் சார்ந்த வாழ்க்கையின் ஊடாகவே சமாதானம் தோன்றும்.

**சமூகச் சமாதானம் :**

★ நபர்கள், குழுக்கள், இனப் பிரிவுகள் மத்தியிலான மோதல்களைத் தீர்க்கும் செயல் முறைகளால் சமூகத்தில் சமாதானம் தோன்றும்.

★ நபர்கள், குழுக்கள், இனப் பிரிவுகள் இடையில் சிறந்த தொடர்பு சாதனங்கள் காரணமாகத் தோன்றும் புரிந்து கொள்ளலாலும் ஒத்துழைப்பு, நட்புறவு என்பன காரணமாகவும் ஒரு சமூகத்தில் சமாதானம் தோன்றும்.

★ சரியான அரசியல் செயல்முறைகள் வாயிலாகவும் சமாதானம் தோன்றும். உதாரணம்: ஜனநாயக நடவடிக்கைகள்.

★ சட்டத்தையும் நியாயத்தையும் நிறுவுவதால் சமாதானம் தோன்றும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பொருளதார விருத்தியால் / வறுமையை ஒழிப்பதால் / அடிப்படை மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்வதால் / பொருளாதார முரண்பாடுகளை அகற்றுவதால் சமாதானம் தோன்றும்.

★ சமூக நன்டைத்தைகளை அபிவிருத்தி செய்வதால் சமாதானம் தோன்றும்.

★ மனித உரிமைகளைப் பாதுகாத்தல் வாயிலாகச் சமாதானம் தோன்றும்.

**இயற்கைச் சுற்றாடலோடு சமாதானம் :**

★ இயற்கைச் சுற்றாடலோடு ஆன்மீகத் தொடர்பைக் கட்டியெழுப்பிக் கொள்வதால் உளச் சமாதானம் தோன்றும். வாழ்வும் சமாதானமாக அமையும்.

★ இயற்கைச் சுற்றாடலை மனித வாழ்வு அண்மிப்பதால் சமூகத்தில் சமாதானம் தோன்றும். (உதாரணம் : பூங்காக்களை உருவாக்கல், வனவள பாதுகாப்பு, இயற்கை அழகைக் கொண்ட இடங்களைக் காத்தல், மரங்களை நடல், வனவிலங்குகளுக்குப் புகலரண் வழங்குல்)

★ ஒரு நாட்டின் இயற்கைச் சுற்றாடல் தாங்கத்தக்க அளவிலான சனத்தொகையை வைத்திருப்பதால் சமாதானம் தோன்றும்.

★ நகரங்கள் ஒலியினால் மாசடைவதை இயன்றவரை குறைப்பதனால் மக்கள் வாழ்க்கையின் அமைதியின்மையைக் குறைக்கலாம்.

★ சுத்தமான வளியையும் சுத்தமான குடிநீரையும் காத்தல்.

★ சன நெருக்கடியைத் தவிர்த்தல் வாயிலாக மக்களது வாழ்க்கையில் அமைதியை ஏற்படுத்தலாம்.

ஒரு நாட்டில் சமாதானத்தின் பெறுமதியை சுகத்தின் பெறுமதி போன்று பலரும் அதனை இழந்து கொண்டிருக்கையில் அல்லது இழந்து விட்ட பின்னரே காண்கிறார்கள். ஒரு நாட்டில் சமாதானம் தானாகவே தோன்றுவது ஒன்றாகும் எனக் கருதிச் செயற்படுவதால் அதனைப் பெறுதல் கடினம். சமாதானம் தேசிய, மனிதச் சமூகத்தின் குறிக்கோள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என முன்னிலையில் வைத்திருப்பதற்காக வேண்டுமென்றே சமூக நீதி, அரசியல், கல்வி, கலாச்சாரம், பொருளியல் அபிவிருத்தி ஆகிய எல்லாக் களங்களிலும் செயற்பட வேண்டியுள்ளது. அவ்வெல்லாத் துறைகளிலும் உசிதமாகப் பொருந்துமேயாயின் மனித சமூகத்தில் சமாதானம் தோன்றும்.

**சமாதானம் பற்றிய யுத்த வழிப் பிரவேசம் :**

மேலே நாம் நியாயம், ஒத்துழைப்பு, அபிவிருத்தி ஊடாகச் சமாதானத்தைத் தோற்றுவித்துக் கொள்ளும் முறைகள் பற்றிக் கலந்துரையாடினோம். எனினும் அதனிலும் வேறுவிதமாகச் சமாதானத்தைத் தோற்றுவித்துக் கொள்ளவியலும் என நினைக்கும் கூட்டத்தாரும் உள்ளனர். அத்தகையோர், ''சமாதானம் அவசியமாயின் நீங்கள் யுத்தம் புரிய ஆயத்தமாகுங்கள்'' என கூறுகின்றனர். இக் கண்ணோட்டத்தினால் தோன்றியுள்ள கோட்பாடுகளுக்குள் யுத்த நிவாரணக் கோட்பாடு (Theory of Deterrence) பிரதானமானது. றொபட் அல்றிச் *(1982)* அதனை இவ்வாறு விபரிக்கிறார். ''ஆக்கிரமிப்பாளர் முதலாவது தாக்குதலை நிகழ்த்தும் போது அவர்கள் தாங்கிக் கொள்ள இயலாதவாறு பாரிய அளவிலே பிரதித் தாக்குதலை நடத்தும் எச்சரிக்கையே இதன் முதற் தளம். அது அணு ஆயுதத் தாக்குதலுக்கு இலக்காகும் இடங்களான பாரிய நகரங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றுக்கு எதிர்த் தாக்குதலை நடத்தத் தக்க வாய்ப்பை அடிப்படையாகக் கொண்டு அமையும். இதன் பொருட்டு மிகச் சிறந்த அபிவிருத்தி செய்யப்பட்ட ஆயுதங்கள் அவசியமில்லை''. இதனை வேறு விதமாகக் கூறுவதாயின் ஏதாவதொரு நாடு சக்திமிக்க தாக்குதல் யுத்த பலத்தைக் கொண்டுள்ள போது எதிரான நாடு அதனைத தாக்கப் பின்வாங்கும். ஏனெனில் அதனால் தமக்கு நிகழத் தக்க பிரதித் தாக்குதல்களின் விளைவுகள் பாரிய அளவில் இருக்கும் என்பதைச் சந்தேகமின்றித் தெரிந்து வைத்திருப்பதே ஆகும். வல்லரசுகள் ஒன்றையொன்று தோற்கடித்துத் தம் யுத்த பலத்தைக் கட்டியெழுப்பிக் கொள்ள ஆயுதப் போட்டியில் ஈடுபட்டிருப்பதன் காரணம் இத் தத்துவத்தை தம் தேசிய பாதுகாப்புக் கொள்கையாகக் கொண்டிருப்பதே ஆகும். இரு நாடுகள் சமமான யுத்த பலத்தைக் கொண்டிருப்பின் ஒன்றை ஒன்று தாக்குவதைத் தவிர்த்துக் கொள்ளும் என்பது இதனால் கருதப்படுகிறது. இவ்வாறு போரைத் தவிர்த்துக் கொள்ளல் ஒருவரோடொருவர் உறுதிப்படுத்திக் கொண்டதான அழிவிலேயே தங்கியிருக்கும். (Mutually Assured Destruction)இதனைச் சுருக்கமாக MAD கோட்பாடு எனக் குறிப்பிடுவர். ஈ. பீ. தொம்சன் கூறுவதன்படி வல்லரசுகள் தமது அணு ஆயுத பலத்தின் காரணமாகப் போரை ஒத்திப் போட்டுக் கொண்டிருக்கத் தூண்டப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கோட்பாடு ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதில் இருந்து எண்பது வரை மூன்று தசாப்தங்கள் வல்லரசுகளிடையே மிகப் பிரபல்யமாக விளங்கியமை அவர்கள் ஈடுபட்டிருந்த ஆயுத உற்பத்திப் போட்டியை நோக்கும்போது புலனாகின்றது. இதனால் உலக அபிவிருத்திக்காகக் கைக் கொள்ளத்தக்கதாக இருந்த பாரிய அளவிலான பணம் விரயமாயிற்று. அது MAD என்ற ஆங்கில மூன்று எழுத்துக்களாலும் குறிப்பிடப்படுவதால் உண்மையிலேயே இது பைத்தியக்காரத்தனமான கோட்பாடுதான் என்பதைப் பலவிதமாக எடுத்துக் காட்டலாம். அது யுத்தத்தை நிறுத்தச் சில சந்தர்ப்பங்களில் செயற்பட்டதுண்டு. எனினும் அது யுத்தத்தை நிறுத்தவதாக அன்றி ஒருவர் மீது ஒருவர் அஞ்சி யுத்தத்தை ஒத்திப் போடுவது மட்டுமே.

ஒருவரில் ஒருவர் நிச்சயப்படுத்திக் கொண்டதான அழிவை வேறு விதமாகக் கூறுவதாயின் - ''நீ என்னைத் தாக்கு, நானும் உன்னைத் தாக்குவேன்'' என்ற இரு சாராருக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆனதே, இதனை நகைச்சுவையாகப் பின் வருமாறு குறிப்பிடலாம். அதாவது: ''நீ உன்னையே தாக்கிக் கொள். அதே அளவிலேயே நானும் என்னைத் தாக்கிக் கொள்வேன்''. இக் கோட்பாடு போரை ஒத்திப் போடுவதே அன்றி, மோதிக் கொள்ளும் இருசாராரிடையே காணப்படும் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள வழி காட்டுவதல்ல. அடுத்து விருத்தி செய்து கொண்ட அணு ஆயுதங்கள் இருப்பதனால் ஒரு நாடு பொருக்குத் தூண்டப்படவும் கூடும். நாடுகள் தாம் கொண்ட போர்ப்பலத்தையே முதன்மையாகக் கொண்டு ஒருவர் மீதொருவர் செயற்படுவதால் உலகில் கலந்துரையாடலுக்கும் ஆக்கபூர்வமான பிரச்சினைத் தீர்வுக்கும் நியாயத்துக்கும் இடமிருக்காது. அங்கு நியாயமே பலமாவதற்குப் பதிலாகப் பலமே நியாயமாவதற்கான நிலை தோன்றும்.

**மானிட வன்முறைப் பண்பு பற்றிய பிரச்சினை**

எந்தவொரு மனித சமூகத்திலும் சமாதானத்துக்கான எச்சரிக்கை அச் சமூகத்திலே இருந்து தோன்றும் வன்முறையாலேயே விடுக்கப்படு-கிறது. அடுத்தவரில் இம்சையை விளைவிக்கும் எண்ணத்தோடு செயற்படல் வன்முறை எனச் சரளமாகக் குறிப்பிடலாம். ஓர் உளவியல் அகராதியில் விளக்க மளிக்கப்படுவதன்படி வன்முறை எனப்படுவது நபர்களுக்கு அல்லது சொத்துக்களுக்கு எதிராக உடலளவிலான பலாத்காரத்தை பிரயோகித்தல் வாயிலாகப் பகைமையை அல்லது ஆத்திரத்தை வெளிப்படுத்துதலேயாகும். அங்கு கோபத்தை வெளிப்-படுத்த ஆக்கபூர்வமானதும் மனிதாபிமானமானதுமான முறைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும் அவற்றுக்கப் பதிலாக எத்தகைய பரிகாரமும் நியாயமும் இல்லாத விதமாக வன்முறையை கொடூரமாக செயற்படுத்த முனைவதைக் காணலாம். இழிவுபடுத்தல், நடத்தையைப் பழித்தல், சொத்துக்களை எரித்தல், தாக்குதல், காயப்படுத்தல், கொலை புரிதல், கற்பழித்தல், களவு செய்தல், கொள்ளையிடல், குண்டுகளை எறிதல் அல்லது வைத்தல் என்பன அத்தகைய வன்முறையான செயல் வகைகளே. சட்டப்படி இவை நபர்களுக்கு எதிராக அல்லது முழு சமூகத்துக்கும் எதிராக நிகழ்த்தப்படும் குற்றங்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன.

பெரும்பாலான நாடுகளில் குற்றங்களின் எண்ணிக்கை கடந்த மூன்று தொடக்கம் நான்கு வரையான தசாப்தங்களாகத் துரிதமாக அதிகரித்து வருவதைப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. இலங்கை தொடர்பாகவும் இது உண்மையானதாகும். இச் சமூகப் பிரச்சினை தொடர்பாகப் பாரிய அளவிலான கவனஞ் செலுத்தப்பட வேண்டும்.

| ஆண்டு | குற்றங்களின் எண்ணிக்கை | ஆண்டு | குற்றங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| *1975* | *64260* | *1984* | *55064* |
| *1976* | *74629* | *1985* | *56246* |
| *1977* | *85799* | *1986* | *57706* |
| *1978* | *64893* | *1987* | *59606* |
| *1979* | *54932* | *1988* | *65401* |
| *1980* | *54057* | *1989* | *73514* |
| *1981* | *56118* | *1990* | *53744* |
| *1982* | *52903* | *1991* | *53120* |
| *1983* | *62512* | *1992* | *47496* |
| | | *1993* | *48690* |

*1.1* இலங்கையில் கடுமையான, பாரதூரமான குற்றங்களின் வளர்ச்சிக் கோலம்.

ஆதாரம் : குற்றப் பிரிவு, பொலிஸ் தலைமை அலுவலகம், கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டு | தற்கொலைகள் | ஆண்டு | தற்கொலைகள் |
|---|---|---|---|
| 1986 | 6784 | 1990 | 6545 |
| 1987 | 7165 | 1991 | 7411 |
| 1988 | 7531 | 1992 | 7506 |
| 1989 | 7719 | ---- | ----- |

1.2 இலங்கையில் தற்கொலைகளின் வளர்ச்சிக் கோலம்.

ஆதாரம் : பொலிஸ்மா அதிபரின் வருடாந்த நிருவாக அறிக்கை. 1986 - 1992

**உருவம் : 1** இலங்கையில் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் விதம்.

**வன்முறைப் பண்பு ஓர் இயல்பூக்கமா?**

மனிதனது வன்முறை இயல்பை விளங்கிக் கொள்ள உளவியலாளர்களும், சமூகவியலாளர்களும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அது தொடர்பாக அவர்கள் குறிப்பிட்டுள்ள பிரபல்யமான கோட்பாடுகளை இங்கு நாம் சுருக்கமாக ஆராய்வோம். 'சிக்மன்ட் பிராய்ட்' தமது ''நாகரீகமும் விரக்தியும்'' என்ற நூலில் இவ்வாறு எழுதினார். மனிதன் மனிதனுக்கு ஓநாயாவான் (Homo homini lupus) இதன் வாயிலாக அவர் மனிதனில் தம் சகோதர மனிதர் மீதான இயல்பான பகைமை அடங்கியிருப்பதாகக் கூற எத்தனிக்கிறார். மனிதன் மனிதன் மீது கொண்ட பிறவிப் பகை காரணமாக எல்லா நாகரீகங்களும் இறுதியில் அழிவை நோக்கிச் செல்லும்.

மனித வாழ்வு என்பது ஒருவரோடு ஒருவர் கொண்ட எதிரான சக்திகளின் போர்க்களம் என சிக்மன்ட் பிராய்ட் விபரித்தார். அங்கு உயிர் வாழும் எண்ணம் இறக்கும் எண்ணத்தோடு மோதும்; நாகரீகம் இயல் பூக்கங்களோடு மோதும். சமூக இணக்கம் சமூக விரோதத்தோடு மோதும். தர்க்கரிதியான விவேகம் தர்க்க ரீதியற்றதோடு மோதும். இவ்வாறான மோதல்களுக்கு எல்லையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தோடு மனிதன் கொண்ட இயல்பான மோதல் நிலையை இரு வழிகளால் தீர்த்துக் கொள்ள மனிதன் தூண்டப்படுவான் எனப் பிராய்ட் கூறினார். அவையாவன ஒன்றில் நபர் சமூகத்துக்குப் பணிந்து அதனோடு இசைந்து தன்னை மாற்றிக் கொள்ளல். இல்லையேல் சமூகத்துக்கு மாறாக எழுதல்.

மனிதனது இந்த இயல்பு அவன் கடந்து வந்த நீண்ட மிலேச்ச யுகத்தின் எச்சமே. அவ்வாரம்ப கால உணர்வுகள் அவனது அடிமனதில் தற்போதும் அடங்கி உள்ளன. எனினும் வெளிப்படையாக அவன் கொண்டுள்ள மறைக்கல்வி, நன்நடத்தை ஊடாக வளர்ந்த அவனது அதியகத்தின் (Super ego) மூலமாக அக் கீழ்த்தரமான உணர்வுகள் அடக்கப்படுகின்றன. இவ்வுணர்வுகள் பல்வேறு மறைமுகமான விதங்களில் நபரின் எண்ணம், சொல், நடத்தை என்பனவற்றில் பாதிப்புகளை விளைவிக்கும்.

அடிமனதில் தோன்றும் வன்முறைசார்ந்த அமுக்கத்தில் இருந்து விடுபட பிராய்ட் உணர்ச்சி வெளிப்பாட்டையும், கீழ்த் தரமான உணர்வுகளைச் சிறந்த நடத்தைகளுக்காக மாற்றலையும் கைக்கொள்ளும்படி ஆலோசனை வழங்குகிறார். அதாவது மலையேறல், காற்பந்து, றகர் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபடல், நடனம், சுதந்திரமாக உணர்வுகளை வெளியிடல் போன்ற ஆக்கபூர்வமானதும் சமூகம் அங்கீகரிப்பதுமான விதிகள் மூலம் ஆரம்ப உணர்வுகளை வெளிப்படுத்தல். மனிதர் இயற்கை உணர்வுகளை வெளியிடுதலைத் தடைசெய்யும் பல சமூகங்களில் வன்முறை அதிகமாக இருப்பதைக் காணலாம். புதிய உளவியல் ஆய்வாளரான எரிக் பிறொம் சமூகத்தோடு மோதத் தூண்டும் மனிதனது இயல்பூக்க மானது சமூகத்தைத் தனக்கு உகந்ததாக ஆக்கிக் கொள்ள முனைவதன் வாயிலாக அழித்தலின் பால் சார்வதை விடுவித்துக் கொண்டு ஆக்கபூர்வமான கட்சிக்கு திருப்பிக் கொள்ள இயலுமென எடுத்துக் காட்டினார்.

விலங்கியல் விஞ்ஞானியாகிய கொன்ராட் லொறென்ஸ் *(1966)* மனிதனது வன்முறை இயல்பு விலங்குப் பரிணாமத்தின் வழிவந்த இயல்பூக்கம் எனக் கண்டார். அவர் கூறுவதன்படி பல விலங்கினங்களது நிலைப்பாட்டுக்குக் வன்முறை அவசியம். உதாரணமாக பபுன் (குரங்கு) கூட்டமொன்றில் வளர்ந்த ஆண் மிருகங்கள் பெரும்பாலும் ஒன்றோ-டொன்று சவால் விட்டுக் கொண்டு போராடும். இதன் விளைவாக கூட்டத்தில் மிகக்கூடிய பலமும் துணிச்சலும் கொண்ட மிருகம் தலைமையை ஏற்பதால் ஒவ்வொன்றினதும் வலிமைக்கு ஏற்பக் கூட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குபடுத்தப்படும். மேலும் ஓர் உதாரணமாகப் பல பறவை இனங்களுக்குள்ளே காணக்கூடிய பூமிப் போரைக் குறிப்பிடலாம். ஒரு பறவை ஒரு மரத்தைக் கைப்பற்றிக் கொண்ட பின்னர் அப் பறவையின் இனத்தைச் சேர்ந்த மற்றுமொரு பறவை அம் மரத்தை வந்தடையுமாயின் போரிட்டு விரட்டி விடும். இதன் விளைவாக அப் பறவையின் வர்க்கம் அப்பிரதேசம் முழுதும் பரந்து விடும்.

லொறென்ஸ் கூறுவதன்படி மனித் சுற்றாடலோடு மோதுவதன் காரணமாக அவனுள்ளே வன்முறை இயல்பு படிப்படியாகக் கட்டி-யெழுப்பப்படும். அதனைத் தாங்கிக் கொள்ள இயலாது எல்லையைத் தாண்டும்போது எந்தவொரு சிறு சம்பவத்தாலும் வெடிப்பு நிகழ இடமுண்டு. சிலவேளை அதன் பெறுபேறு அழிவானதாக அமையலாம். மனிதனது வன்முறைத் தன்மையை குறைக்கத்தக்க நான்கு வழிகளை அவர் காட்டுகிறார்.

**முதலாவது :** தன்னை உணர்தல்; தன்னைப் பற்றிய நினைவோடு இருத்தல் என்பதே. பல்வேறு நடத்தைகளுக்காகத் தம்மை உள்ளூரச் செயற்படுத்துவனவான உந்தல்கள், எழுச்சிகள், எண்ணங்கள், உணர்வுகள் என்பனவற்றை இனங் கண்டு கொண்டால் அச் சக்திகளுக்கு மூடத்தனமாகப் பலியாவதைத் தவிர்க்கலாம். அவ்வாறே தன்னில் விளங்கும் வன்முறை இயல்பை விடுவித்துக் கொள்ள எவ்விதமாகச் சமூகம் அங்கீகரித்த முறைகளைக் கையாளலாம் என்பதை ஆய்வு செய்வதையும் தான் உணர வேண்டும்.

**இரண்டாவது :** இயல்பூக்கங்களையும் மனவெழுச்சிகளையும் அடிப்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக அவற்றை ஆக்கபூர்வமான செயல்கள் மூலமாக வெளிப்படுத்துதல் வரைதல், இலக்கியம், நாடகம், விளையாட்டுக்கள் போன்ற செயற்பாடுகள் வாயிலாக ஆழ்மன உந்தல்கள் மற்றும் எழுச்சிகளை விடுவிக்கலாம்.

**மூன்றாவது :** நட்புறவுகளை மேலும் விருத்தி செய்து கொள்ளுக. தோழமை வன்முறைத் தன்மையை நலிவடையச் செய்யும். நபர்களுக்கிடையே ஒருவரோடொருவர் பல்வேறு கருத்துக்கள், நம்பிக்கைகள், கண்ணோட்டங்கள் ஆகியவற்றைக் கொண்ட குழுக்களிடையே, இனப்பிரிவுகளுக்கிடையே, இனங்களுக்கிடையே தோழமையை விருத்தி செய்து கொள்வதால் சிறந்த சமாதானச் சூழ்நிலை தோன்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக, சமூகத்தில் மானிட முன்மாதிரிகள், எண்ணக்கருக்கள் உணர்வுகள் ஆகியனவற்றைப் பரப்பவும், அவற்றின் மீது சமூகத்தை கட்டி எழுப்புக. இங்கு கல்வி மிகப் பிரதானமான ஊடகமாகும். இதனை விளக்கிக் கூற வேண்டுமெனில் ஆத்திரப்படும் மனிதரை நகைக்க வழிப் படுத்துவதாகும். நகைச்சுவையால் சினத்தை மாற்றிக் கொள்ள முடியும். அது கணத்தில் எதிரியை நண்பனாக மாற்றும். சமூகத்தில் கொழுந்து விடும் பிகைமை, இம்சை, எதிர்ப்பு என்பனவற்றைக் குணமாக்கத்தக்க திவ்ய ஔடமாக நகைப்பையும் நகைச்சுவைவயயும் கையாளலாம்.

லோறென்ஸ் இன் கருத்துக்களுக்குப் பெரும்பாலும் டார்வினுடைய பரிணாமவாதமும் சிக்மன்ட் பிரொய்ட்டின் உளப்பகுப்பு வாதமும் வழிகாட்டி இருப்பதாகத் தெரிகிறது. டார்வினின் விளக்கப்படி வாழ்வதற்காக ஏற்படும் போராட்டத்திலே மிகப் பொருத்தப்பாடுடைய விலங்கினங்கள் வெற்றி கொள்ள ஏனையவை படிப்படியாக அழியும். வன்முறை வியல்பு இப் பரிணாமத்தால் பெற்ற அம்சமாகப் பிரொய்ட் கண்டார். எனினும் இதற்கு மாறான வேறு கருத்தைக் பிரொபெட்கின் (1904) ''பரஸ்பரஉதவி'' என்ற தமது நூலில் வெளியிட்டார். பரிணாம விருட்சத்தில் ஏதாவது ஒரு விலங்கு வகையினது நிலைப்பாடு உறுதியாகி அவை முன்னணியில் செல்ல வேண்டுமா என்பது முடிவு செய்யப்படுவது நிலைப்பாட்டுக்கான போராட்டத்தினால் அல்ல. அவை அவற்றிடையே பரஸ்பர புரிந்துணர்வு, ஒத்துழைப்பு என்பவற்றின் அடிப்படையிலேயேயாகும்.

எரிக் புறொம் (Eric Fromm - 1974) மனிதனது வன்முறை இயல்பு பற்றி முக்கியமான விடயத்தை எடுத்துக் காட்டினார். மனிதனில் இரு வகையான வன்முறை இயல்புகளை அவர் காண்கிறார். விஷமத் தனமற்ற வன்முறையியல்பு, விஷம வன்முறை இயல்பு என்பனவே அவை. முதாலாவது வகை அப்பாவித்தனமானது. அதன் குறிக்கோள் ஆபத்தில் இருந்து விடுபடல் அல்லது தற்பாதுகாப்பு. அது ஒரு நபரைத் தற்பாதுகாப்புக்காக ஆக்கிரமிக்க அல்லது ஓடிச் செல்லத் தூண்டும். இது மனித வர்க்கத்தின் நிலைப்பாட்டுக்குத் தேவையான இயல்பூக்கமே. எனினும் இரண்டாவதான விஷம வன்முறையியல்பு இயற்கைக்கு மாறான நடத்தையாகும். அது ஒரு நபரினது அல்லது மானிட வர்க்கத்தினது நிலைப்பாட்டுக்கு எவ்வகையிலேனும் உதவாத அழிவுத்தனமான நிலைமையாகும். மனித சமூகத்தில் நாம் கேட்கத்தக்க பல கொலைகளும் இம்சைகளும் இத்தகைய விஷமத்தனமான வன்முறையியல்பின் காரணமாக நிகழ்வனவே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் ஏனைய விலங்குகள் போலன்றி கற்பனைத்திறன் பொருந்தியவன். இது அவனை வன்முறைத்தன்மைக்கு தூண்டும். பெரும்பாலும் மனிதன் இல்லாத ஆபத்துக்களைக் கற்பனையால் காண்கிறான். இருக்கும் ஆபத்துக்களை அளவுக்கு மீறிக் காண்கிறான். இதன் விளைவாக அவன் போராடத் தூண்டப்படுகிறான். இந்த அடிப்படையில் போராட்டத்துக்கு ஊக்குவிக்கப்படாது தவிர்த்துக் கொள்ள வேண்டுமாயின் எந்தவொரு ஆபத்தும் அல்லது பயமுறுத்தலும் இல்லாது முழுமையான பாதுகாப்பும் சுதந்திரமும் கொண்ட சமூகம் நிர்மாணிக்கப்பட வேண்டும். அங்கு நபர்களைத் துன்புறுத்தும் அல்லது சுரண்டும் எந்தவொரு அதிகார சக்தியும் இருக்கக்கூடாது. எனினும் தற்போது உலகம் பூராவும் மானிடச் சமூகம் இருக்கும் நிலையை நோக்கின், இந்நிலையை அடைய நீண்ட காலம் செல்லும். எனினும் இதற்காக முயலாமல் இருக்கவும் முடியாது.

எரிக் புரொம் இங்கு சமூக அமைப்பில் வன்முறை இயல்பு இருக்கும் வரை தனிநபர் வன்முறைத்தன்மையையும் அகற்றவியலாது என்று கூறுகிறார். அமைப்பாகக் கைக்கொண்ட வன்முறை இயல்பு ஒரு நிறுவனம் அல்லது சமூகம் ஒழுங்கு செய்துள்ள வன்முறை அமைப்புகளாகும். எடுத்துக்காட்டாக ஒரு சமூகத்தில் காணப்படும் வகுப்பு பேதம் அல்லது இருப்போர், இல்லாதோர் ஏற்றத்தாழ்வுக்குள் வன்முறை இயல்பு அமைப்பாகக் காணப்படுகிறது. முழுச் சமூகமும் வன்முறை இயல்புக் கோட்பாடுகளின் மீது கட்டியெழுப்பப் பட்டு இருக்கையில் அங்கு வாழும் மக்களைச் சமாதானமாக வாழுமாறு பிரசங்கம் பண்ணுவதால் குறிப்பிடத்தக்க பயன் ஏற்படாது. இருப்பினும் நடைமுறைச் சமூகத்தில் வன்முறை அமைப்புக் காரணமாக அங்கே சமாதானம் பற்றிக் கதைத்தல் ஆகாது என்பது இதன் கருத்தல்ல. பாரிய அளவில் நிகழ்த்த முடியாவிடினும் சிறிய அளவிலாவது நபர்கள் வன்முறையைக் கையாளக் காரணமான சமூகக்காரணிகள் பலவற்றை நீக்க இயலும் என்பதை நாம் இங்கு மறத்தல் ஆகாது.

விஷமத்தனமான வன்முறை பற்றி விளக்கும் எரிக் புரொம் ''அது இயல்பூக்கம் அல்ல; எல்லா மனித உயிர்களிலும் ஆழமாக உருவாகி அடக்கப்பட்டுக் காணப்படும் உள்ளார்ந்த ஆற்றல் என்று கூறுகிறார். இது மனிதனது நிகழ்கால வாழ்வின் அடிப்படைத்தன்மை காரணமாகவே உருவாகியுள்ளது. அதாவது இயற்கைத் தர்மத்தின் ஊடே முழுமையான திருப்தியோடு வாழமுடியாத ஒரே விலங்கு மனிதனே. தமது வாழ்க்கையையே தமக்குப் பிரச்சினையாக ஆக்கிக் கொண்டுள்ள ஒரே விலங்கும் மனிதனே. வாழ்க்கை தொடர்பான இந்த உள்ளத்தில் தாங்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளும் வரை விஷம வன்முறை வித்து அவனை விட்டு நீங்காது.

இப் பிரவேசம் பௌத்த தர்மத் தத்துவத்தை மிகவும் ஒத்தது. எரிக் புரொம் கூறும் விஷம வன்முறை இயல்பு பௌத்த தத்துவத்தில் காணப்படும் துவேசத்துக்குச் சமமானது. அது இரு பக்கங்களைக் கொண்டது. அவை மோகம், மாயை என்பன. மாயை, துவேசம், மோகம் காரணமாக மனிதனது மொத்த வாழ்வும் ஒரே சிக்கலாக அமைந்திருக்கிறது. அங்கு ''திருப்தியற்றுப் பிறக்கும் மனிதன் திருப்தியற்றவனாகவே இறக்கிறான்''. ஒருவன் ஆத்ம ஞானத்தோடு பெறும் பிரஞ்ஞை காரணமாக. அவனது துவேசம் முற்றாகவே உள்ளத்தேயிருந்து நழுவி விடும். அச் சமயத்தில் இருந்து இயற்கை தர்மத்தை ஏற்று வாழத்தக்க முழுமையான திருப்தியை அடைந்த மனங் கொண்ட மனிதனாகிறான். தோல்வி மனப்பான்மை ஒரு நபரை வன்முறைக்கு ஆளாக்குமா?

சமூகத்தில் சில கூட்டத்தார் பயங்கரவாதம் உட்படப் பல்வேறு அழிவைக் கொண்ட வன்முறை செயல்களுக்குத் தூண்டப்படுவதற்கான காரணம் அவர்களுடைய வாழ்க்கை எதிர்பார்ப்புகள் தோல்வியுறுவதால் அச் சமூகத்தின் மீது தோன்றும் துவேசமே எனப் பிரபல்யமான கருத்தொன்று உண்டு. டொல்லாட் என்பவரும் எனையோரும் (1939) இதற்கு உடன்படுகின்றனர். தோல்வி மனப்பாங்கு ஒரு நபரை வன்முறையாளனாக்கும். எனவே ஒரு கூட்டத்தார் தோல்வி மனப்பான்மைக்கு ஆளாவதைத் தவிர்க்க இயலுமாயின் அவர்கள் வன்முறையாளராகும் அவசியம் தோன்றாது. இந் நிலைமையை இவ்வாறு குறிப்பிட்டுக் காட்டலாம்.




குறிப்பு : 2 தோல்வி மனப்பான்மையும், வன்முறைத்தன்மையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் விளக்கத்தை ஆய்வுக்கு உட்படுத்திய லெனார்ட் பர்கொவிட்ஸ் என்பவரும் ஏனையோரும் (1962, 1969, 1979) தோல்வி மனப்பான்மை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நபரை வன்முறையாளராக்க நேரடியாகக் காரணமாக அமைவதில்லை என எடுத்துக் காட்டினர். அது நபரில் கோபத்தை ஏற்படுத்தும். அத்தகைய சினம் சுற்றாடலில் அல்லது சந்தர்ப்பத்தில் வன்முறையை ஊக்குவிக்கும் ஏதாவதொரு சைகை அல்லது சந்தர்ப்பத்தில் வன்முறையை ஊக்குவிக்கும் ஏதாவதொரு சைகை அல்லது சாதனம் காணப்படுமாயின் நபரை வன்முறைச் செயல்களுக்குத் தூண்டத்தக்க சாத்தியம் உண்டு. அத் திருத்தப்பட்ட கோட்பாட்டை இவ்வாறு குறிப்பிடலாம்.




உருவம் : 3 பர்கொவிட்ஸ் இன் திருத்தப்பட்ட தோல்வி மனப்பான்மை வன்முறைத்தன்மை பற்றிய விளக்கம்.

ஒருவர் சினங் கொண்டபோது சுற்றாடலில் வன்முறைக்கான சைகை அல்லது தூண்டல் காணப்படுவது அந் நபரை வன்முறை நடத்தைக்கு ஊக்குவிக்கும். இத்தகைய சைகைக்கு உதாரணமாகத் துப்பாக்கி அல்லது றிவோல்வர் போன்ற ஆயுதமொன்று காணப்படுவதைக் குறிப்பிடலாம். கொலை புரியப் பயன்படுத்தும் ஆயுதமொன்று சுற்றாடலில் காணப்படுவது கூட நபர்களை ஒரு பிரச்சினையை நோக்கும் விதத்தில் வன்முறையை சாரச் செய்யும் என்பதை டொல்லாட் பல நபர்களைக் கொண்டு செய்த ஆய்வுகளால் நிரூபித்துக் காட்டினார். இக் கோட்பாடு ஆக்கபூர்வ நோக்குள்ள கட்சியாளரும் கைக்கொள்ளத்தக்கதாக இருத்தல் வேண்டும். அதாவது சமாதானம், ஒத்துழைப்பு, தோழமை, மகிழ்ச்சியை உணர்த்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைகைகள், குறியீடுகள், சாதனங்கள் என்பன ஒரு சுற்றாடலில் காணப் படுவது அங்கே உள்ள நபர்களை ஆக்கபூர்வ நடத்தை பால் ஊக்குவிக்கும் என்பதை இதனால் அனுமானிக்கலாம்.

**சமூகக் கற்றல் கோட்பாடு**

மனிதன் ஒருவன் தான் பரிணாமத்தின் வழியாகக் கொண்ட இயல் பூக்கங்கள் காரணமாகக் வன்முறையாக நடந்து கொள்கிறானா என்பது நடைமுறைப் பெறுமதி அற்ற ஒரு பிரச்சினையாகக் கருதும் உளவியலாளரே அல்பர்ட் பந்துறா என்பவர். வன்முறை இயல்பு இயல்பூக்கமாக இருப்பினும் அல்லாவிடினும் நபர்கள் தாம் வன்முறையை பின்பற்ற வேண்டுமா? எம் முறைகளால், எவர் மீது, எச் சந்தர்ப்பத்தில் வன்முறையை மேற்கொள்ள வேண்டும் போன்ற விதிகளைத் தாம் வாழும் சமூகத்தில் காண்பன ஊடாகவும் கேட்பன ஊடாகவுமே கற்றுக் கொள்கிறான் என அவர் கூறுகிறார். இது சமூகக் கற்றல்வாதம் எனப்படுகிறது.

இதன்படி சமாதானம், ஒத்துழைப்பு, கலந்துரையாடல் மூல மாகப் பிரச்சினைகளைத் தீர்த்தல் என்பனவற்றைக் கற்பித்தலாலும் உயர்வு படுத்தலாலும் உணர்த்தலாலும் சமாதானமான சமூகத்தை உருவாக்க முடியும். அத்தகைய சமாதானமான வாழ்வுக்கு ஊக்கமளிக்கும் வன்முறையை எல்லா வழிகளாலும் பின்வாங்கச் செய்யும் கலாசாரங்கள் உண்மையாகவே உலகில் உண்டு.

ஒருவர் வன்முறைச் செயல்களில் ஈடுபடும் தடவைகளின் எண்ணிக்கை அதனால் பெறும் விளைவுகளின் அளவுக்கு விகிதாசாரமாக அதிகரிக்கும் என பந்துறாவும் வொல்டர்ஸ்ம் (1963) ஆய்வுகள் வாயிலாக நிறுவினர். ஒருவர் புரியும் என்முறைச் செயல்களை அச் சமூகம் மதிக்குமாயின் அங்கீகரிக்குமாயின் அது மீளவலியுறுத்தலாகும். அவ்வாறே தாம் புரிந்த வன்முறைச் செயலால் தாம் எதிர்பார்த்த பலன் கிடைக்குமாயின் அப்போதும் அது மீளவலியுறுத்தலாக அமையும். சிறுவர் குற்றவாளியர் குழுவினர் மீது வெளிக்களக் கற்கை ஒன்றை மேற்கொண்ட யப்லொன்ஸ்கி (1962) எந்தவொரு குற்றத்தையும் பொறுமையாகவும் ''அடக்கமாகவும்'' ஆற்றத்தக்க உறுப்பினருக்கு அச் சமூகத்தில் உயர்ந்த இடம் கிடைத்துள்ளதைக் கண்டார். உறுப்பினரான இளைஞர் ஒருவர் இவ்வாறு கூறினார். ''என்னிடத்தில் அவ்வேளையில் கத்தி ஒன்று இருந்திருப்பின் நான் அவனைக் குத்தியிருப்பேன். அதனால் எனக்கு நல்ல பெயர் ஒன்றும் கிடைத்திருக்கக்கூடும். அதனைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திருப்பின் மனிதர்கள் என்னை மதித்து, என்னைச் சுட்டிக்காட்டி ''அதோ சாதுவான கொலையாளி போகிறார்'' என்று கூறியிருப்பார்கள்.''



சித்திரம் : 1 ''அதோ 'சாதுவான' கொலையாளி போகிறார்''.

மனிதர் ஏனையோரது வன்முறை நடத்தைகளை அவதானித்துத் தாமே வன்முறையாளராகும் முறையைக் கற்றுக் கொள்கிறார்கள் என அல்பர்ட் பந்துறா பிள்ளைகளைக் கொண்டு நடத்திய ஆய்வுகளினால் நிறுவிக் காட்டினார். வயது வந்த ஒருவரின் வன்முறைச் செயலொன்றைத் திரைப்படம் வாயிலாகக் காணச் சந்தர்ப்பம் கிடைத்த பிள்ளைகள் அதற்குச் சமமான சூழ்நிலையில் இடப்பட்டபோது அத்திரைப்படத்தைப் பார்க்காத பிள்ளைகளை விடக் கூடுதலான வன்முறைச் செயல்களில் ஈடுபட்டனர். திரைப்படங்களினதும் தொலைக்காட்சியினதும் தாக்கம் பற்றி இத்தகைய ஆய்வுகள் நூற்றுக்கணக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ் வெல்லாவற்றின் ஊடாகவும் திரைப்பட, தொலைக்காட்சி வழங்கிய வன்முறைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிகளைக் கண்ட பின்னர் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் அதிக அளவிலான வன்முறை நடத்தைக்குத் தூண்டப்படுதல் நிரூபிக்கப்பட்டது. அதிகமான வன்முறைக் காட்சிகளைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் வழமையாகக் கண்ட நூற்றுக்கணக்கான மூன்றாம் வகுப்பு சிறுவர்களை பற்றிய கற்கையில் ஈடுபட்ட லெப்கொவிட்ஸ் (1972) அதற்குப் பத்து வருடங்களின் பின்னர் பாடசாலைகளுக்குச் சென்று அப் பிள்ளைகளை ஏனையவரோடு பட்டியல்படுத்திக் கூடுதல் வன்முறைத் தன்மையின் அடிப்படையில் மதிப்பிடுமாறு கேட்டுக் கொண்டபோது அவ்வாசிரியர்கள், குறிப்பிட்ட அந்த மாணவர்களே அதிக வன்முறைச் செயல்களைப் புரிந்துள்னர் எனக் கண்டு கொண்டார்கள். இதனால் தொலைக்காட்சியில் வன்முறை சார்ந்த நிகழ்ச்சி களை பார்த்த பின்னர் சில பிள்ளைகள் உண்மையாகவே மனிதரைக் கொலை செய்யத் தூண்டப்பட்ட சந்தர்ப்பங்கள் பல பத்திரிகைகளில் இடம் பெற்றன. இத்தகைய ஆய்வுகளில் அதிகளவு கல்விப் பெறுமானம் உண்டு.

**கோபம் என்றால் என்ன?**

நாம் இதுவரை சரியாகப் புரிந்து கொள்ளாத நிகழ்ச்சியே கோபம். இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. கோபத்தின் தன்மையை விஞ்ஞான ரீதியாக விளங்கிக் கொள்வதைவிட அதனை ஒழுக்கவியல் ரீதியாகக் ''கூடாதது'' எனத் தீர்ப்பளிக்க நாம் அவசரப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கோபத்தைப் பற்றி மூன்று விதமாக நாம், ஒழுக்கவியல் கண்ணோட்டங்களால் பார்ப்பதைக் காணலாம்.

1. கோபம் கூடாதது. கோபத்தை வெளிப்படுத்தல் மரியாதை யானதல்ல. எனவே அதனை இயன்றவரை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

2. கோபம் நன்மையானதோ தீமையானதோ அல்ல. அது நபரொருவரது தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளலுக்கு மாறாகத் தடையாக விளங்குவதன் மீது ஏற்படும் இயல்பான மனவெழுச்சிகளின் பிரதிபலிப்பாகும்.

3. கோபம் நல்லது. நபரொருவர் அநியாயத்துக்கு எதிராக எழத் தூண்டும் எழுச்சியே கோபமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே குறிப்பிட்ட கண்ணோட்டங்களில் இரண்டாவதான அதாவது கோபம் இயல்பான மனவெழுச்சிப் பிரதிபலிப்பு என்பது உயிரியல் ரீதியில் உண்மை எனத் தெரிகிறது. கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வது உள ரீதியாக பொருத்தமற்றதென்பது வைத்தியக் கருத்தாகும் (G. Bach and H. Goorers 1974). சில நபர்கள் இயல்பாகவே கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாதவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஒருவகையில் அடிக்கடி கோபத்தைக் கட்டுப் படுத்திக் கொள்வார்களே ஆயின் இலகுவாகவே மாரடைப்பு போன்ற நோய்களுக்கு ஆளாவார்கள்.

கோபமாவது ஒருவர் மீது மற்றொருவரால் நிகழ்த்தப்பட்ட உள அல்லது உடல் வேதனைக்கு எதிராக எழும் மனவெழுச்சிப் பிரதி பலிப்பாகும். அவ் வேதனையை அகற்ற அந் நபரைச் செயற்படச் செய்யும் வலுவைக் கோபமானது தோற்றுவிக்கும். இவ்வாறான கோபம் சந்தர்ப்பத்துக்கு மட்டுமே வரையறையானது. எனினும் அது நினைவுகளிலிருந்து நீக்கப்படாது மனதிலே நிலைநிறுத்திக் கொள்ளும்போது விரோதம் ஆகும். அது நபரை விஷமத்தனமான வன்முறைச் செயல்களுக்குத் தூண்டும்.

சந்தர்ப்பத்துக்கு ஏற்ப ஒருவரில் சினம் ஏற்படல் இயல்பானது என்ற விளக்கம் காரணமாகவே அந்த நபரோடு மோத முனைவது அவசியமற்றதாகத் தெரிகிறது. தேவைப்படுமிடத்துச் சினம் கொள்ளவும் அதனை வெளிப்படுத்தவும் எல்லா நபர்களுக்கும் சமூகத்தில் உரிமை உண்டு என்பதை நாம் ஏற்க வேண்டும்.

அடுத்து நம்மில் தோன்றும் கோபத்தை வெளிப்படுத்தும் விதத்தையும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் அடுத்தவரை இழிவுபடுத்தும் விதத்தில் எமது கோபத்தை வெளியிடல் கூடாது. நபர் மீது மென்மையாகவும், ஆனால் அவரது தவறு மீது கடினமாகவும் கதைக்கலாம்; அல்லது அவர் அவ்வாறு செயற்பட்டதால் தாம் அடைந்துள்ள இன்னலையும் உளவியல் நிலையையும் வெளிப்படுத்தலாம். அதாவது பிரச்சினையைத் தம் தரப்பால் எடுத்துக்காட்டலாம்; அல்லது பிரச்சினைக்குக் காரணமாகவுள்ள அடுத்தவரது செயல் பற்றித் தமது வெறுப்பை, எதிர்ப்பை நேரடியாக எடுத்துக் கூற முடியும்.

கோபத்தை ஆவேச நிலைக்குச் செல்லவிடாது கையாளத்தக்க மற்றுமொரு செயற்பாடானது தமது நிலைப்பாட்டை உறுதியாக வெளிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தி அதிலே நிலைத்து நிற்றலாகும். அப்போது அடுத்தவர் எத்தகைய ஆத்திரமூட்டும் செயலைப் புரிவாராயினும் தாம் நிலை தவறாது நிற்பதற்கான சக்தியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**சமாதானக் கல்வியும் ஆசிரியரும்.**

இன்று முன்னர் எக் காலத்தையும் விடப் பிள்ளைகளை வன்முறையில் ஊக்குவிக்கும் காரணிகளை நாம் பார்க்கிறோம்; கேட்கிறோம். அவர்கள் அவ்வாறு கேட்பனவற்றையும் காண்பன-வற்றையும் அறிந்தோ அறியாமலோ கற்கிறார்கள். சமூகத்தில் அதிகரித்து வரும் வன்முறை அலையின்பால் சிறார்கள் ஈர்க்கப்பட இடமளித்துக் கல்வியால் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கவியலாது. சமாதானம் என்பது ஒரு நாட்டில் தானாகவே தோன்றுவதல்ல. அது அங்குள்ள பிரஜைகளால் கற்கப்பட வேண்டிய நடத்தைக் கோலங்கள் ஆகும். பிள்ளைகளுக்குச் சமாதானம் கற்பிக்கப்பட வேண்டிய அவசியம் இன்று பல நாடுகளால் உணரப்பட்டுள்ளமை அந் நாடுகளின் கல்விச் சீர்திருத்தங்களால் புலனாகின்றது. சமாதானக்கல்வி பல்வேறு நாடுகளில் பலவாறான முறைகளால் நடைமுறைப் படுத்தப்படுகிறது. அது மானிடவாதக் கல்வி, உலகளாவியகல்வி, விழுமியக் கல்வி, பிணக்குகளுக்குத் தீர்வுகாணல் ஆகிய பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

சமாதானக் கல்வியின் அபிலாஷையானது சிறார்கள் வன்முறையின் பால் சார்வதைத் தவிர்த்து, அவர்கள் அமைதியான, உற்சாகமான நல்ல மனிதர்களாக வளர்ச்சி பெற வழிகாட்டலே ஆகும். இதற்காக அவர்களது மனிதாபிமான உணர்வுகளையும் பண்புகளையும் வெளிக் கொணர அது முயற்சி செய்கிறது. வாழ்வின்பால் நன்மதிப்பைத் தோற்றுவிப்பதன் வாயிலாக மானிட உரிமைகளையும் பொறுப்பு களையும் உணர்ந்து கொள்ளல் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு, நம்பிக்கை என்பவற்றைத் தோற்றுவித்துக் கொள்ளல் மேலும் மானிட நற்பண்புகள், அஹிம்சை, பிணக்குகளைத் தீர்த்தல் போன்றனவற்றைக் கற்றல் மூலம் சிறப்பான மனிதத்துவம் பெறல் என்பனவே எதிர்பார்ப்புகள் ஆகும். சமாதானக் கல்வியில் இவை வெறும் கற்பனை உருவங்களாக வரையறுக்கப்படாததோடு அச் சந்தர்ப்பத்துக்கு நிகரானதும் உசிதமானதுமான மேடைசார்ந்த நடிப்பு, குழு முயற்சி, சிந்தனைக்கிளர்வு, ஆய்வு, பிரச்சினைகளைத் தீர்த்தல், ஆக்கமுயற்சிகள் போன்ற நடவடிக்கை முறைகள் வாயிலாக மாணவர்கள் அதனைப் புரிந்து கொள்ள இடமளிக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளைச் சிறந்த நபர்களாக்குவதன் பொருட்டு அவர்களிடையே தன்மானத்தை உருவாக்குவதற்காக, தம்மையும் ஏனையோரையும் உள்ளார்ந்து நோக்கவும் சுயவிளக்கதின் வாயிலாக ஆழ்ந்த விவேகத்தை வெளிக்கொணரவும் மனோவமைதியை ஏற்படுத்திக் கொள்ளவும் சமாதானக் கல்வி வழி காட்டும்.

பல சமூகப் பிணக்குகள் தோன்றுவதற்கு மற்றுமொரு ஏதுவாக அமைவது நபர்களது குறுகிய நோக்கே ஆகும். வர்க்கவாதம், மதவாதம், பிரதேசவாதம் என்பன அத்தகைய குறுகிய நோக்குகளுக்கான எடுத்துக் காட்டுகள். சமாதானக் கல்வி மாணவர்களது கண்ணோட்டம் விரிவானதாக அமைய உதவுகின்றது. குறுகிய வேறுபாடுகளைத் தாண்டி ஒரே மனிதக் குடும்ப உறுப்பினர்களாக ஏனைய மனிதரை நோக்கவும், மானிடர் இடையேயான பல்வகை வேறுபாடுகளைச் சகித்துக் கொள்ளவும், ஏனையோரது கலாச்சாரங்களுக்கும் மதங்களுக்கும் மதிப்பளிக்கவும் அது உடந்தையாக அமையும்.

இவ்வாறாக நோக்குகையில் உண்மையாகவே சமாதானக் கல்வி, அறிவு சார்ந்த பாடம் என்பதைவிடக் கல்வி நுழைவு ஒன்றெனக் குறிப்பிடல் நியாயமானது எனலாம். அதன் சிறப்பு அங்கு மேற்கொள்ளப்படும் கல்வி முறையியலிலேதான் தங்கியுள்ளது. அதனை உருவாக்கிக் கொள்ள ஆதாரமாக அமைந்தவை வருமாறு:

- ஜோன்டூயியின் அனுபவக்கல்விக் கோட்பாடுகள்.
- இரு கருத்து மோதல் முறை.
- இந்தியாவிலும் தீபெத்திலும் தோன்றிய பல்வேறு யோகாசன முறைகள்.
- பௌத்த தத்துவம் உட்பட அனைத்து மதங்களினதும் மரபுகளில் காணப்படும் விவேகத்தைத் தட்டியெழுப்பும் தியானம் போன்றவை.
- இந்தியாவின் அஹிம்சை ரீதியிலான போராட்ட முறை.
- ஜப்பானிலும் சீனாவிலும் தோன்றிய ஜுடோ போன்ற சமர் முறைகள்.
- சங்கீதம் நாட்டியம் உள்ளடங்கிய கலை சார்ந்த கல்வி.
- மக்கள் தொடர்பு சாதனங்கள்
- உளவியற் சிகிச்சை முறைகள்.
- மேற்கத்திய உளவியலாலும் சமூகவியலாலும் ஊட்டம் பெற்ற பிணக்குத் தீர்வு முறைகள்.
- முகாமைத்துவ நுட்ப முறைகள்.

*(பியறேவெயில் 1990)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானக் கல்விக்காகக் கையாளத் தக்க விடயங்களை எந்தவொரு பாடத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறே எந்தவொரு பாடத்தையும் சமாதானக்கல்வி நுழைவினால் கற்பிக்கவும் இயலும். நீர் என்ன கூறுகிறீர் என்பதை விட அதனை எவ்வாறு கூறுகிறீர் என்பதே பிரதானமானது என ஒரு வாசகம் உண்டு. அதனையே பின்பற்றிக் 'கற்பிக்கும் விடயத்தைவிட முக்கியமாவது அதனைக் கற்பிக்கும் முறையே' எனத் தீர்மானிக்கலாம். சமாதானக் கல்விப் பிரவேசத்தின்போது விசேடமாகப் பாடவிடயத்தைக் கற்பிக்கும் பாங்கு அதனால்தான் வலியுறுத்தப்படுகிறது. அவ்விதமாகக் கற்பிக்கும் முறை மானிடக் கற்பித்தல் (Human teaching) என எளிதாக அறிமுகஞ் செய்யலாம்.

ஓர் ஆசிரியரில் பிள்ளைகள் காணும் நடத்தை இயல்பு, அவர் கற்பிக்கும் பாடத்தைக் கற்றலில் நேரடித் தாக்கத்தை விளைவிக்கும் என்பது திண்ணம். ஆசிரியரை விரும்பும் காரணத்தாலேயே சிறார்கள் அவர் கற்பிக்கும் பாடத்திலும் நாட்டம் கொள்வதை நாம் பாடசாலைகளில் பெரிதும் காணலாம். நேர்மாறாகச் செயற்படும் சந்தர்ப்பங்களையும் அவ்வாறே நாம் காணலாம்.

ஒருவர் சமாதானத்தைக் கற்பிப்பதாயின் அவர் தம் தோற்றத்தாலும் அன்றாடப் பிரச்சினைகளில் அவர் செயற்படும் விதத்தாலும் அது புலனாக வேண்டும். அவ்வாறு நிகழாவிடின் அவர் இரட்டைத் தன்மையானவர் எனப் பிள்ளைகள் இனங்காண நீண்ட காலம் ஆகாது. ஆசிரியரது நடத்தை வாயிலாக வெளியிடப்படும் சாமாதான முன்மாதிரி உண்மையாகவே உறுதியான கற்றல் அடிப்படைகள் எனலாம். சமாதானத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரில் மிளிர வேண்டிய நடத்தைப் பண்புகள் எவையென நோக்குவோம்.

- **அவர் கற்பிப்பவரை விட கற்றலுக்கு உதவுபவர்.**

  நேரடியான பாடவிடயம், மனப்பாங்குகள், சிறப்புகள் என்பவற்றைக் கற்பித்தலுக்குப் பதில் அவற்றைப் பிள்ளைகளில் இருந்து தோற்றுவித்துக் கொள்ளப் பல்வேறு செயற்பாடுகளைக் கருவியாகக் கொள்ளலும் சுதந்திரமான நிலைமையை ஏற்படுத்தலும் அவர்களது கருத்துக்களையும் அறிவையும் ஒழுங்குபடுத்திக் கொள்ளலும் பாடங்களை வளர்ச்சியாக்கலும் இவ்வாசிரிய மாதிரியின் பண்புகள் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**★ அவர் ஜனநாயகவாதி ஆவார்.**

பிள்ளைகள் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள் ஆசிரியரால் எடுக்கப்படின் அது சர்வாதிகார வகுப்பறை முகாமைத்துவத்தின் அடிப்படைப் பண்பாகும். சுதந்திரமான கருத்துக்களைப் பிள்ளைகள் வெளிப்படுத்தவும் அதிகமானோர் விருப்பத்துக்கமைய முடிவுகளை மேற்கொள்ளவும் இடமளிக்கப்படும். அவர் ஒரு விடயம் தொடர்பாக உரையாடும்போது பல்வேறு கோணங்களில் அதனை நோக்க பிள்ளைகளை ஊக்குவிப்பார். அவர்களது கருத்துக்களையும் பதில் அபிப்பிராயங்களையும் மதிக்கிறார்.

**★ அவர் பிள்ளைகளது கற்றல் திறன்களை நம்பிக்கையோடு நோக்குபவர்.**

பிள்ளைகள் அவதானித்தல், தரிசித்து நோக்கல், பரிசோதித்தல் என்பவற்றின் வாயிலாகக் கற்க விரும்புகிறார்கள் என்பதை நம்புபவர். பிள்ளைகள் வெற்றுப் பாத்திரங்கள் அல்லர். பொருத்தமான ஆர்வத்தை உருவாக்கினால் அவர்கள் சுயமாகவேத் தூண்டப்பட்டுக் கற்பர். ஆசிரியர் செய்ய வேண்டியன ஆர்வத்தைத் தூண்டல், அதன் வழி கற்றலுக்கு வழிகாட்டல், அவர்கள் கற்றனவற்றை ஒழுங்குபடுத்திக் கொள்ள உதவுதல் என்பனவே.

**★ அவர் உலகளாவிய கண்ணோட்டத்துடன் மானிடப் பிரச்சினைகளை நோக்குபவர்.**

சமாதான ஆசிரியர் உலகளாவிய மானிடரை, அவர்களின் குறுகிய தன்மைகள், கோத்திரங்கள், இனங்கள் என்பனவற்றை மறந்து மானிட வர்க்கத்தையே ஒரு குடும்பமெனவும் சகோதரர்கள் எனவும் கருதி ஒன்றுபட வேண்டும் என்ற செய்தியை பிள்ளைகளுக்கு எடுத்துச் செல்லும் உன்னத பணியில் ஈடுபட்டிருப்பவர். அவர் மனிதனோடு அண்மிக்கச் செய்பவர். நாம் எச் சந்தர்ப்பத்திலும் மனிதர் என்ற அடிப்படையில் ஒருங்கு சேர முடியும். மிகப் பிரதானமாக அமைவது இனங்களின் வகைகளோ அன்றி இனமோ அல்ல. அது மனித வர்க்கமே; மனித குடும்பமே. அவர் தாம் வாழும் சமூகத்தின் பிரச்சினைகளைப் பரந்துபட்ட கண்ணோட்டத்தோடு நோக்குகிறார். இவர் இதன் மூலம் ஏனையோரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரங்களைப் புரிந்து கொள்ளவும் மதிப்பளிக்கவும் தூண்டப்படுகிறார். வெவ்வேறு வகையான கலாசாரங்கள் மனித ஒற்றுமைக்குத் தடையானவை அல்ல. நாம் எம்மைச் சார்ந்த கலாசாரம், நம்பிக்கைகள், நற்பண்புத்தொகுதி என்பனவற்றை மதிப்பதோடு அவற்றைத் தாண்டி உலகளாவிய ரீதியில் எமது பிரச்சினைகளை நோக்கப் பயில்வோம்.

சமாதான ஆசிரியர் உலகளாவிய தொடர்பைத் தாம் கற்பிக்கும் எந்தவொரு பாடத்தின் வாயிலாகவும் வெளிப்படுத்திக் காண்பிக்கும் திறன் படைத்தவர். இவ்வாறு பாடத்தைக் கற்பித்தல் உலகளாவிய கண்ணோட்டத்தில் அமைவதால் பிள்ளைகளை குறுகிய வர்க்கம், மொழி, இனம் போன்ற வேறுபாடுகளுக்கு ஆளாகாது தடுக்க முடியும்.

**★ அவர் தனிநபர் அபிவிருத்தியாளர்.**

தனிநபர் அபிவிருத்தி என்பதன் அர்த்தம் பற்றிய எண்ணக்கருவைக் கட்டியெழுப்புவதும் அதன் வாயிலாகத் தெளிவான தனித்துவத்தை உருவாக்கிக் கொள்வதும் அதனோடு சார்ந்த தமது வெகுசனத் தொடர்பு நிலைப்பாடு, விமரிசனப்பாங்கு ஆகிய தனிநபர் திறன்களை கூர்மையாக்கிக் கொள்வதும் எனலாம். கல்வியில் ஒருங்கிணைக்கப்பட்ட ஆளுமை எனப் படுவது இவ்வெண்ணக்கருவேயாகும். சமாதான ஆசிரியர் பிள்ளைகளிடம் தம்மைப் பற்றிய தன்மதிப்பை கட்டியெழுப்பவும் பல்வேறு வகுப்பறை முயற்சிகளின் வாயிலான அவர்களது சமூகத்திறன்களை விருத்தி செய்து கொள்ளவும் வாய்ப்பளிக்கிறார். இங்கு விசேடமாகப் பிள்ளைகளின் ஒழுக்கப் பிரச்சினைகளையும் அவர்களது தனியாள் விருத்தித் தேவைகளையும் இனங் காணவும், அவற்றின் வழியாக கற்றல் வாய்ப்புகளைக் கட்டியெழுப்பிக் கொள்ளவும் ஆசிரியர் பயன்படுத்திக் கொள்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்போடு வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கைச் சுற்றாடலின் வனப்பைக் காணல்.

பாடம் : 1.1

நேரம் : 40 நிமிடங்கள்

**அடிப்படை மனக்கோலங்கள்:**

1. நாம் அடிப்படையில் இயற்கையை அண்மிப்போம்.
2. மனம் அமைதியடையும்போது வாழ்வு சுகமானதாகும்.
3. இயற்கைச் சூழல் அழகானது.

**குறிக்கோள்கள் :**

1. மனதைத் தெளிந்த நிலையில் வைத்திருக்குந் திறனைப் பெறல்.
2. இயற்கைச் சுற்றாடலின் அழகை நுகர்தல்
3. வாழ்வு பற்றிய ஆக்கபூர்வமான மனப்பாங்கைக் கட்டி எழுப்புதல்.

**செயற்பாருகள்:**

வகுப்பை வெளியிடத்தில் அமைதியான இயற்கைச் சூழலுக்குக் கொண்டு செல்லவும். அது எவ்விதத் தொல்லைகளும் அற்ற இடமாக இருத்தல் அவசியம்.

**ஆலோசனைகள்**

நீங்கள் இவ்வழகிய சூழலில் மரநிழலின் கீழ் அமருங்கள். இங்கிருந்து உங்களைச் சூழவுள்ள அயலை இரசித்து, நீங்கள் உள்ளத்தால் இயற்கையை அண்மிக்க முயலுங்கள்.

உள்ளத்தை சலனமற்றதாக்கிக் கொண்டு மரங்களின் தோற்றம், நிறம், தென்றலினால் தாவரங்களின் இலைகள் அசையும் விதம், ஆகாயத்தின் நீலநிறம் என்றவாறு இச் சூழலின் வனப்பைக் காணுங்கள்.

தென்றலின் தண்மை, புதுமை, வெய்யோன் கதிர்களின் சுகம் என்பனவற்றை அனுபவியுங்கள். சற்றுநேரம் உங்களது ஏனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகள், சிரமங்கள் என்பவற்றை மறந்து இந்த நிகழ்காலக் கணத்தில் வாழும் சுகத்தையும் இன்பத்தையும் நுகர்ந்து அனுபவிக்க முயலுங்கள்.

நாமெல்லோரும் அரை மணித்தியாலம் இவ்வாறு இருந்து ஓய்வு எடுப்போம். அடுத்தவரோடு இங்கே கதைப்பதால் உங்கள் மனவமைதி சிதைந்து விடுமாகையால் அதனைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.



சித்திரம் 2
வியப்பூட்டும் இயற்கை எழில்

**கலந்துரையாடல்:**

உரிய நேரங் கடந்த பின்னர் பிள்ளைகளை வட்டமாக அமர்த்தி ஓய்வாக அவர்களது அனுபவங்களை வினவி உரையாடவும்.

★ நீங்கள் இவ்விதமாக அமர்ந்திருக்கையில் உணர்ந்தவை எவை?

★ அது சுகமான அனுபவமாக அமைந்ததா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இதன் வாயிலாக இயற்கைக்குத் தாம் மேலும் அண்மித்ததாக நினைப்போர் கரங்களை உயர்த்துங்கள்.

★ உயிர் வாழுதல் சுகமானதென உணர்ந்தோர் கைகளை உயர்த்துங்கள்.

★ வாழ்தல் சுவையற்றதாக்கப்படக் காரணிகள் எவை?

★ இச் செயற்பாடுகளால் நீங்கள் ஒவ்வொருவரும் கற்றுக் கொண்ட மிகவும் பயனுள்ளவற்றைக் கூறுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு என்றால் என்ன? (1)

பாடம் : 1.2

நேரம் : 40 நிமிடங்கள்

**குறிக்கோள்கள் :**

1. அன்பு என்ற சொல்லுக்குச் சமமான வேறு சொற்களைக் குறிப்பிடுதல்.
2. அன்பைப் பற்றிய உணர்வை ஏற்படுத்திக் கொள்ளல்.
3. அன்பினால் பூரணத்துவமான மனிதனாக உருவாகக் கூடிய விதத்தைக் காண்பித்தல்.

**நுழைவு :**

''அன்பு'' என்ற பதத்தை நீங்கள் முன்னர் கேட்டிருப்பீர்கள். இன்று நாம் அன்பு என்பதன் பொருளை விளங்கிக் கொள்ள முனைவோம்.

**செயற்பாடுகள் : சிந்தனைக்கிளர்வு**

அன்பு என்ற சொல்லுக்குரிய ஒத்த சொற்களும் அதனை வினவும் போது உமது மனதில் எழும் எண்ணங்கள், உணர்வுகள், கருத்துக்கள் என்பனவும் எவை?

பிள்ளைகளிடத்தில் தோன்றும் துலங்கல்களை எந்தவித விமரிசனங்களும் இன்றி அவற்றை உள்ளபடியே கரும் பலகையில் எழுதவும்.

பிள்ளைகளின் துலங்கல்களுக்கான உதாரணங்கள்:

கருணை

பரிவு

நேசித்தல்

நட்பு

தோழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரக்கம்

பிறருக்காக துக்கம் கொள்ளல்.

மகிழ்ச்சி

தியாகம்

போதியளவு கிடைத்த பின்னர் அவற்றை அடிப்படை வகையாகப் பகுத்து, முக்கியமானவை எனக் கருதப்படுவனவற்றின் பொருளை விளக்குவதற்காகச் சுருக்கமான கலந்துரையாடலில் ஈடுபடவும்.

*(8 நிமிடங்கள்)*

**செயற்பாடுகள் : 2 உருவகம்**

'உங்களது தாயார் உங்களுக்கு அன்பு காட்டிய சந்தர்ப்பங்களை இயன்றவரை நினைவூட்டிக் கொண்டு அவ்வேளையில் உங்களது மனதில் தோன்றிய களிப்பை ஞாபகத்தில் கொள்ளுங்கள்' எனக் கூறிப் பிள்ளைகள் தமது கண்களை 02 நிமிடங்கள் மூடிக் கொண்டு அமைதியான நினைவுமீட்டலில் ஈடுபடச் செய்யவும். இறுதியில், 'உங்களில் தாயாரின் அன்பு நன்கு மனதில் தோன்றியவர்கள் கைகளை உயர்த்தவும். அதனால் நீங்கள் மகிழ்ச்சியடைந்தீர்களா? 'அன்னையார் அன்பின் குறியீடே' என்ற கருத்து வெளிப் பாட்டை நீங்கள் செவிமடுத்திருப்பீர்கள். அக் கூற்று உண்மை என ஏற்றுக் கொள்வோர் கரங்களை உயர்த்தவும். அதற்கான ஏதுக்கள் எவை?' என்றவாறான வினாக்களை வினவவும்.

**செயற்பாடு : 3**

வகுப்பில் பிள்ளைகள் தாம் விரும்பும் ஒருவரைத் தெரிவு செய்து கைகோர்த்து இருவரிருவராக எதிர்நோக்கி இருக்குமாறு கூறவும். வகுப்பறையில் உள்ள தளபாடங்கள் இதற்குத் தடையாக இருந்தால் பிள்ளைகளை இடவசதியுள்ள மரநிழல் அல்லது மண்டபம் ஒன்றுக்கு அழைத்துச் செல்லல் நன்று.

சோடி சேர்ந்த பிள்ளைகளில் முதலாமவர், 'என்னில் அன்பு செலுத்துவோர்' பற்றி இரண்டாம் நபரிடம் 03 நிமிடங்கள் விவரிக்க வேண்டும். பின்னர் இரண்டாமவர் முதலாம் நபரின் இடத்தைப் பெற்று அவ்வாறான விபரத்தைக் கூறவேண்டும்.

*(06 நிமிடங்கள்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு : 4**

பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட இடவசதிக்குள் இங்குமங்குமாக நடமாடும்படி கூறவும். வழியில் சந்திக்கும் நபரிடம், 'நான் அன்பு செலுத்துபவர்' என்ற தலைப்பில் ஒரு நிமிடம் பேச்சொன்றை நிகழ்த்த வேண்டும். இவ்விதமாக ஒவ்வொருவரும் உரையை நிகழ்த்திய பின்னர் கலைந்து சென்று மீண்டும் வேறு நபரைத் தெரிவு செய்ய வேண்டும். இவ் விதமாக எல்லாப் பிள்ளைகளும் ஆகக் குறைந்த அளவில் ஐந்து பேர்களுடனேனும் கதைக்க வேண்டும் எனக் குறிப்பிடவும்.

**செயற்பாடு : 5**

வகுப்பில் வழங்கப்பட்ட இடவசதிக்குள் பிள்ளைகள் இங்குமங்குமாக உலவுகின்றனர். ஒரு பிள்ளை இன்னொரு பிள்ளையைச் சந்தித்தபோது மனதில் மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கும் நட்புறவான சொல்லை/மதிப்பீட்டைக் குறிப்பிடுவதோடு இரண்டாம் நபரும் அவ்வாறே சொல்லொன்றை அல்லது மதிப்பீடொன்றைக் கூற வேண்டும். வகுப்பில் ஒவ்வொரு பிள்ளையும் ஏனைய எல்லாப் பிள்ளைகளையும் சந்திக்கும் வரை இச் செயற்பாடுகளில் ஈடுபடுதல் வேண்டும்.

*(10 நிமிடங்கள்)*

**கலந்துரையாடல் :**

பிள்ளைகளை ஒருங்கு சேர்த்து அவர்கள் மேற்கொண்ட செயற்பாடுகளை மீண்டும் மறுபரிசீலனை செய்து கலந்துரையாடவும். நீங்கள் உங்களது நண்பர்களிடம் கூறிய சிநேகபூர்வமான பதங்கள் உங்களில் உண்டாக்கிய உணர்வுகள் யாவை? அதனை விபரிக்கவும். 'தோழமை, அன்பின் உயர்வான தன்மையாகும்'. இக் கூற்றை ஆரிப்பவர்கள் கரங்களை உயர்த்துங்கள். உமது முடிவுக்கான காரணங்கள் எவை?

*அன்பினால் பூரணத்துவமான மனிதனொருவனாக நாம் எவ்விதம் உருவாகலாம்?*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதவிகள் :**

(1) பரிவற்ற, சினமூட்டும், வன்முறையான உணர்வுகளில் இருந்தும் எண்ணங்களில் இருந்தும் செயல்களிலிருந்தும் விலகி இருப்பதால்

(2) எப்போதும் நட்பான மனத்தோடு இருப்பதால்

(3) எல்லோர் மீதும் நன் நோக்கைக் கொள்ளுதலால்

(4) ஏனையோர் மீது தோழமை, அன்பு, விருப்புணர்வு என்பன உருவாகத் தக்கதாக நடந்து கொள்ளுதலால்.

(5) ஏனையோர் மீது தன்னில் உண்டாகக் கூடிய நட்புணர்வை வெளிப்படுத்தத்தக்க செயல்களைப் புரிதலால்

(6) இயன்றவரை எப்போதும் தமக்குரியதைப் பகிர்ந்து கொள்ளுதலால்

(7) முடிந்தவரை ஏனையோர் மீது பரிவுடன் உதவி புரிய முன் வருவதால்

(8) விலங்குகள், தாவரங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய இயற்கைச் சூழல் மட்டில் சதா அன்புணர்வு கொண்டிருத்தலால்.

**உதாரணங்கள் :**

★ கோபம் உண்டானபோது சிரிப்பதால், நகைச்சுவையை ஏற்படுத்துவதால் அவ்வாறு செய்ய முடியாதபோது அதனை வெளிப்படையாகவே வெளிப்படுத்துவதால்

★ பகைமை உணர்வு உண்டானபோது கருணை உணர்வோடு மீண்டும் நினைத்துப் பார்ப்பதால்

★ சினம் உண்டாகும்போது அந்த இடத்தில் இருந்து வேறிடத்தை அடைவதால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலந்துரையாடல் :**

(1) இப் பாடத்தால் நீர் உண்மையாகவே ஏதாவது கற்றுக் கொண்டீரா? அவ்வாறாயின் அது என்ன?

(2) அவ்வாறு கற்றுக் கொண்டதை அன்றாட வாழ்க்கையில் இனி மேல் எவ்வாறு பயன்படுத்துவீர்?
(எல்லாப் பிள்ளைகளிடத்தில் இருந்தும் கருத்துக்களைப் பெற்றுக் கொள்க.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு என்றால் என்ன? (2)

பாடம் : 1.3

நேரம் : 40 நிமிடங்கள்

நோக்கங்கள் : அன்புக்கான வரைவிலக்கணம்

**ஆயத்தம் :**

*(1)* அலங்கார மரமொன்றாகக் கொள்ளத்தக்க சுமார் 02 அடி உயரங் கொண்ட கிளைகளோடு பொருந்திய உலர்ந்த மரக்கிளைகள் ஐந்து.

*(2)* அக்கிளைகளை நிறுத்தி வைக்கத்தக்கதாக மணலால் நிரப்பப்பட்ட ஐந்து சிறு டின்கள்.

*(3)* சுமார் 4 x 2 அங்குல அளவுள்ள இலைகளின் தோற்றத்தை ஒத்ததாக வெட்டப்பட்ட வெள்ளைக் கடதாசி இலைகள் (ஒரு பிள்ளைக்கு இரண்டு வீதம்)

*(4)* கடதாசி இலைகளை ஒட்டுவதற்கான பசை.

**செயற்பாடுகள் :**

கடந்த பாடத்திற் போலவே இன்றும் அன்பு என்றால் என்ன வென மேலும் விளங்கிக் கொள்ள முயல்வோம்.

*(1)* முதலில் உங்களில் அன்பு தோன்றிய ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தை நினைவு கூருங்கள். அப்போது உங்களது உள்ளத்தே தோன்றிய உணர்வுகள் எவை? (பிள்ளைகளின் பதில்களைக் கரும்பலகையில் குறிதது்க் கொள்ளவும்.)

**எதிர்பார்க்கப்படும் பதில்கள் :**

அப்போது என்னில் :

மிக்க மகிழ்ச்சி ஏற்பட்டது. உயிர் வாழ்வது அழகானதெனத் தோன்றியது. இனிமையான / அலங்காரமான உணர்வைத் தோற்றுவித்தது.

(10 நிமிடங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) வகுப்புப் பிள்ளைகளை ஐந்து குழுக்களாக வகுத்து எல்லாப் பிள்ளைகளுக்கும் கடதாசி உருவங்கள் இவ் விரண்டாக வழங்கவும். குழுக்கள் அவற்றைச் சேகரித்து அன்பு மரமொன்றை நிர்மாணிக்க வேண்டும். அக் கடதாசித் துண்டுகளில் 'அன்பு என்றால் என்ன' எனக் கூறும் கவர்ச்சிகரமான சிறு வாக்கியங்களை எழுதி, அவற்றை இலைகளாகக் கிளைகளில் ஒட்டி அவற்றை மணலால் நிரம்பிய டின்னில் பொருத்துவதால் மரத்தை ஆக்கிக் கொள்ளலாம். பின்னர் அந்த 'அன்பு மரம்' வகுப்பில் காட்சிக்காக வைக்கப்பட வேண்டும்.

(20 நிமிடங்கள்)

**கலந்துரையாடல் :**

கண்காட்சியைத் தரிசித்த பின்னர் பிள்ளைகள் எழுதிய பெறுமதியான வாக்கியங்களின் பொருள்களை விளக்குவதற்காக அவர்களுக்கு வாய்ப்பை வழங்கி, அன்பு என்றால் என்னவென்ற நிரூபித்தலுக்குத் தொடர்ந்தும் கொண்டு செல்க.

**ஒப்படைப்புகள் :**

(1) அன்பு தொடர்பான சான்றோர் வாக்குகள் / மணிமொழிகள் போன்றவற்றைப் புத்தகங்கள். நாளிதழ்கள் வாயிலாகச் சேகரித்துக் கொள்ளவும்.

(2) நீங்கள் தேடிக் கொண்ட அப் பெறுமதியான தொடர்களை அழகாக எழுதி வகுப்பு விளம்பரப் பலகையில் ஒட்டவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் பொருள்

பாடம் : 1.4

நேரம் : 45 நிமிடங்கள்

அடிப்படை எண்ணக்கருக்கள் :

அன்பின் பல்வேறு தோற்றங்களை சிநேகம், பிரியம், இரக்கம் ஆகிய மூன்று வகை மட்டங்களின் அடிப்படையில் பாகுபடுத்திக் கொள்ளலாம்.

**நோக்கங்கள் :**

*(1)* அன்பின் பல்வேறு உருவகங்களைக் குறிப்பிடுவர்.

*(2)* சிநேகம், பிரியம், இரக்கம் போன்ற எண்ணக்கருக்களை விளக்குவர்.

**நுழைவு :**

அன்பானது எமது வாழ்வை அர்த்தமுள்ளதாக்கும் மிகப் பெறுமதியான பண்பென நாம் முன்னைய பாடங்களில் கற்றுக் கொண்டோம். எனினும் இங்கு ஒருவகையான சிக்கல் காணப்படுகிறது. அதாவது பலரும் அன்பு என்பதற்குப் பலவாறான கருத்தைக் கொண்டிருப்பதே. நாம் அன்பெனப் பலரும் கருதுவதை விளங்கிக் கொள்ள முனைவோம்.

**செயற்பாடுகள் :**

சிந்தனைக்கிளர்வு

அன்பு எனக் கருதப்படுவது எது?

உமது மனத்தில் எழும் எண்ணங்களைக் குறிப்பிடவும்.

பிள்ளைகளின் பதில் களைக் கரும்பலகையில் குறித்துக் கொண்டு அவர்கள் தம் கருத்துக்களை வெளிப்படுத்த ஊக்குவிக்கவும். எதிர்பார்க்கப்படும் பதில்களுக்கான எடுத்துக்காட்டுகள் வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தாய் - பிள்ளைப் பாசம்
- இரக்கம்
- ஒரு பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையே தோன்றும் காதல்
- அடுத்தவரில் ஏற்படும் மன ஒற்றுமை
- மானிடப்பிரிவு
- ஜீவகாருண்யம் (விலங்குகள் மட்டில் கருணை கொள்ளல்.)
- நட்பு

பிள்ளைகளது பதில் கருத்துக்கள் முடிவடைந்த பின்னர் கரும்பலகையில் குறித்துக் கொண்ட கருத்துக்களை வகைப்படுத்தவும்.

**அக்கருத்துக்களை,**

(1) சிநேகம்

(2) பிரியம்

(3) இரக்கம்

என்றவாறு வகைப்படுத்த இயலுமா என நோக்கவும்.

(15 நிமிடங்கள்)

**விளக்கமளித்தல் :**

(1) பாசம் என்பது ஒரு நபரில் அடுத்தவரையிட்டுத் தோன்றும் உள்ளார்ந்த பற்று, மனப்பூர்வமான அக்கறை அன்ற கருத்துக்கள் எனலாம். அது இதயத்தோடு தொடர்புபட்டது.

**உதாரணங்கள் :**

தாய் - குழந்தைப்பாசம்

ஆண் - பெண் காதல்

சகோதர உணர்வு

தனியாள் ஈடுபாடு

(2) விருப்பு என்பதாக கருதப்படுவன இரு நபர்களுக்கு இடையே நிலவும். அன்பு, விரும்பிப்பழகல், தோழமை என்பனவே. அது உள்ளத்தோடு தொடர்புபட்ட விருப்ப உணர்வே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) நட்பு எனப்படுவது தனிநபர் சார்பையும் சுயநலத்தையும் கடந்து முழு வையகத்தினதும் உயிர்கள், ஜடங்கள் (உயிரற்றவை) யாவற்றின் மீதும் கொண்ட உண்மையான கருணையே ஆகும். அது உள்ளாரத் தோன்றிய சுதந்திரமான புனிதமான மனத்தன்மையாகும். அது அஹிம்சை, மானிடக்கருணை, ஜீவகாருண்யம், இயற்கைச் சூழலை உணருந்திறன் என்றவாறு வெளியிடப்படும்.

*(20 நிமிடங்கள்)*

**கலந்துரையாடல் :**

(1) அன்பைப் பற்றி நாம் உரையாடிய மூன்று தரங்களிலும் அதிகமாக உங்களைக் கவர்ந்தது எது? அதற்கான காரணங்கள் எவை?

(2) 'மனிதத்தன்மையின் ஆரம்பம் அன்பே' இக்கூற்றை உங்கள் சொற்களால் விபரிக்கவும்.

(3) இப் பாடத்தின் வாயிலாக உங்கள் கருத்துகள், மனப்பாங்குகள், விருப்புகள் ஆகியவற்றில் மாற்றங்கள் நிகழ்ந்தனவா? அவ்வாறாயின் அது எது?

*(10 நிமிடங்கள்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிட சகோதரத்துவம்

பாடம் : 1.5

நேரம் : 45 நிமிடங்கள்

**நோக்கங்கள் :**

*(1)* எல்லா அடிப்படை மனித சுதந்திரங்களினதும் மூலாதாரத்தை இனங்காணல்.

*(2)* மானிட சகோதரத்துவப்படி செயற்படும் முறையை விபரித்தல்.

**அறிமுகம் :**

மனிதர்கள் என்ற ரீதியில் நாம் ஏனைய மனிதரை எவ்வாறு நோக்க வேண்டும்? அடுத்தவரையிட்டு நாம் எவ்வாறு செயற்பட வேண்டும் என்ற வினாக்கள் மிகப் பிரதானமானவை. எல்லா மனிதரும் உயிர்வாழவும், சுதந்திரமாக நடமாடவும் தாம் விரும்பிய கருத்தைக் கொண்டிருக்கவும், அதனை வெளிப்படுத்தவும் தேவையான உரிமைகளை இனங்காணவும் வேண்டியதோடு அவற்றுக்கு மதிப்பளிக்கவும் வேண்டும். அவ்வெல்லா மனித வுரிமைகளுக்கும் அடிப்படையானது மானிட சகோதரத்துவமே. அதனை இவ்வாறான வாக்கியத்தால் வெளிப்படுத்தலாம்.

**செயற்பாடுகள் : படி-1**

எல்லா மனிதரும் ஒருவருக்கொருவர் உடன் பிறந்தோர் போன்று கருதிச் செயற்பட வேண்டியவர்கள். மேற்குறிப்பிட்ட வாக்கியத்தைக் கரும்பலகையில் எல்லாப் பிள்ளைகளுக்கும் தெரியும் படி எழுதவும். பிள்ளைகள் அதனை வாசித்துப் புரிந்து கொள்ளச் சில நிமிடங்களை வழங்கி, அக் கூற்றுக்கு உடன்படுவோர் யாவர் எனக் கைகளை உயர்த்தி அறிவிக்கும்படி கூறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பை மூன்று குழுக்களாகப் பிரித்துக் கீழ்வரும் ஒப்படைகளை அளிக்கவும்.

*1.* கரும்பலகையில் தரப்பட்ட கூற்றின் பொருளை வேறு சொற்களில் இயன்ற வரை குறிப்பிடவும்.

*2.* மனிதர் ஒருவர் மீது ஒருவர் சகோதர உணர்வுடன் செயற்பட வேண்டியது ஏன்? இயன்றவரை காரணிகளைக் கண்டுபிடித்துக் குறிப்பிடவும்.

*3.* மனிதர் ஒருவருக்கொருவர் சகோதர மனப்பான்மையோடு செயற்படக்கூடிய பல்வேறு முறைகளை முடிந்தவரை குறிப்பிடவும்.

*(20 நிமிடங்கள்)*

**கலந்துரையாடல் :**

குழு முயற்சி முற்றுப் பெற்ற பின்னர் வகுப்பை ஒருங்கு சேர்த்து, ஒவ்வொரு குழுவுக்கும் தம் கருத்துக்களை எடுத்தியம்ப வாய்ப்பளிக்கவும். அங்கு மேலோங்கும் முக்கியமான கருத்துக்களுக்கு மதிப்பளித்து கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

*(20 நிமிடங்கள்)*

**பிற் செயற்பாடுகள் :**

மானிட சகோதரத்துவத்தை வெளிப்படுத்தும் மானிட உயர்வைப் பேணும் முயற்சியைத் தெரிவு செய்து, அதனைத் திட்டமிட்டு, பொருத்தமான தினத்தைத் தேர்ந்தெடுத்து அமுலாக்கவும்.

உதாரணங்கள் :

★ நோய்வாய்ப்பட்டோருக்குப் பணிவிடை செய்தல்.

★ அனாதைச் சிறார்கள் உள்ள இல்லத்துக்கு ஒருவேளை உணவு விநியோகம்.

★ ஆதாரவற்றோருக்கான ஏதாவது ஒரு புகல் வழங்கும் பணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்வகை வேறுபாடுகளைச் சகித்தல்.

பாடம் : 1.6

நேரம் : 40 நிமிடங்கள்

**குறிக்கோள்கள்:**

எதிரான அல்லது மாறுபட்ட கருத்துக்களைச் சகிக்கும் அனுபவம்.

**எண்ணக்கரு ஆய்வு : ஆசிரியர் அறிவு**

*(1)* பல்வகை வேறுபாடுகளைச் சகித்தல் எனப்படுவது வர்க்க, மத, கலாச்சார, தனிப்பட்ட வேறுபாடுகள் மட்டில் மோதலைத் தவிர்த்தல், நடுநிலை வகித்தல், பொறுமையைக் கடைப் பிடித்தல் ஆகிய கருத்துக்கள் ஆகும்.

*(2)* ஏனையோரது பல்வகை வேறுபாடான தன்மைகளைச் சகிப்பதற்கு இயலாமை காரணமாக மானிடச் சமூகத்தில் எண்ணிலடங்கா மோதல்கள் நிகழுவதை நாம் தினமும் காணலாம். பல்வகை வேறுபாடுகளைச் சகித்துக் கொள்ளும் திறனைப் பிள்ளைகள் வளர்த்துக் கொள்ளல் சமாதானமான எதிர்காலச் சமூகத்துக்குக் காரணமாக அமையும் என்பது திண்ணம்.

*(3)* பெரும்பாலான பிள்ளைகள் வளர்வது ஓரின, ஒரு கலாசார, ஒரு சமய, குடும்ப மற்றும் சமூகச் சூழலிலேயாகும். பிள்ளைகள் அதிகமாகக் கல்வியைப் பெறுவதும் ஒரேஇன, ஒரே கலாசார, ஒரே சமய மாதிரியை மேலும் உறுதிப் படுத்தும் ஓரினப் பாடசாலைகளிலேதான். சிறு வயதிலேயே இத்தகைய சுயவின நோக்கில் பிள்ளைகள் உருவாக்கப் பட்டபோதும் வளர்ந்த பின்பு அவர்கள் வாழ நேரிடுவதோ பல்லின, பல்மத, தனிநபர் முரண்பாடுகள் நிரம்பிய, சிக்கலானதும் பரந்ததுமான சமூகத்திலேயே ஆகும். இக் காரணத்தினால் பலர் தமது குறுகிய இனரீதியான கலாசார சட்டக அமைப்பைக் கடந்து விடயங்களை விளங்கிக் கொள்ளவும் பண்படவும் இயலாதவர் ஆகின்றனர். வர்க்கவாதம், இனவாதம், மதவாதம், தீண்டாமை என்பன சமூகத்தில் மலிந்துவிட்டன. அவை எடுத்துக்காட்டுவது அவர்கள் தம் சுயதேசிய பார்வைக் கப்பால் உள்ள உலகைக் காணமுடியாதவர்கள் என்பதையேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) பிள்ளை பாடசாலையில் பெறும் கல்வியின் வாயிலாக அவனது கண்ணோட்டம் எல்லா வாதபேதங்களையும் கடந்து பரவிச் செல்லத் திறந்து விடுதல் அவசியம். எதிரானதும் வேறுபாடானதுமான கருத்துக்களைச் செவிமடுக்கும் அனுபவத்தைப் பெறச் செய்வதன் மூலம் பிள்ளைகளது பார்வையை விரிவுபடச் செய்தல் இப்பாடத்தால் எதிர்பார்க்கப்படுகிறது.

**ஆயத்தம் :**

உமது வகுப்புப் பிள்ளைகள் பயனுள்ளது எனக் கருதும் ஒரு தலைப்பை தெரிவு செய்க.

**உதாரணம் :**

| தலைப்பு | அம்சங்கள் |
|---|---|
| இனரீதியாக | சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் |
| மதரீதியில் | பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் |
| தொழில் அடிப்படையில் | கமக்காரர், தொழிலாளர், எழுதுவினைஞர், ஆசிரியர், வைத்தியர் |
| மனப்பாங்கின்படி / நம்பிக்கையின்படி | அசைவ உணவு சைவ உணவு |

இத் தலைப்பை ஏற்பவர், ஏற்காதவர்

**இடம் :** பிள்ளைகள் தடைகள் இன்றி இங்கும் அங்குமாக உலவவும் கலக்கவும் ஏற்றதாகப் பெரிய வட்டமாக அல்லது சிறு வட்டங்களாகக் கதிரைகளை வைத்திருக்கத்தக்கதாக எத் தடைகளும் அற்ற இடமே இதற்குப் பொருத்தமானது.

**உதாரணம் :**
மரநிழல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு : படி 1**

குழுக்களின் கலந்துரையாடல் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்பின் பல்வகை எண்ணிக்கையின்படி வகுப்பு பிள்ளைகளைக் குழுக்களாக அமைக்கவும். அவர்கள் தாம் பெற்ற வகையின் பெயரைத் துலக்கமாகக் கடதாசித் துண்டிலே எழுதி அதனைத் தாம் அணிந்து கொள்ள வேண்டும். பின்னர் குழுக்கள் ஒன்று சேர்ந்து தமக்குக் கிடைத்த வகையைப் பற்றிக் கலந்துரையாடல் வாயிலாக இயன்றவரையில் விடயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

*(10 நிமிடங்கள்)*

**படி 2 - பாத்திர நடிப்பு**

இரண்டாம் கட்டத்தில் குழுக்களின் பிள்ளைகள் சுதந்திரமாக இங்கும் அங்குமாக நடமாடிக் கலக்க வேண்டும். ஆசிரியர் சைகை செய்த பின்பு ஒவ்வொரு பிள்ளையும் தம் அருகில் உள்ள வேறு வகையைச் சேர்ந்த நண்பனோடு சோடி சேர வேண்டும்.

உதாரணம் :

சிங்கள-தமிழ்; பௌத்த-கிறிஸ்தவ; மாமிச உணவு உண்பவர்-தாவர உணவு உண்பவர்.

முதலாமவர் தமது வகையைப் பற்றி விபரிக்கிறார். இரண்டாமவர் அவதானமாகச் செவிமடுக்க வேண்டும். தேவைப் படும் சந்தர்ப்பங்களில் மேலதிகமாக வினவி விடயத்தை விளங்கிக் கொள்ள முடியும். எனினும் விவாதித்துக் கொள்ளத் தேவையில்லை. முதலாமவரது விபரித்தல் முடிவடைந்த பின்னர், இரண்டாமவர் தாம் சார்ந்த வகையைப் பற்றித் தாம் அறிந்து கொண்ட பிரதானமான பகுதிகள் சிலவற்றைக் குறிப்பிட்டு அவற்றைச் சிறப்பிக்க வேண்டும்.

அதன் பின்னர் இரண்டாமவர் தாம் சார்ந்த வகையை விபரிக்க வேண்டும். முதலாவமவர் அதனைக் கோட்டுப் பின்னர் மதிப்பளிக்க வேண்டும்.

*(ஒரு பிள்ளைக்கு 04 நிமிடங்கள் வீதம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு எல்லாப் பிள்ளைகளையும் பாடத்துக்காகத் தேர்ந்தெடுத்த களத்தின் எல்லா வகைகளுக்கும் செவிசாய்த்த பின்பு, செயற்பாட்டை நிறுத்தி, வகுப்பாக அவர்களை ஒருங்கு சேர்க்கவும்.

(15 நிமிடங்கள்)

**கலந்துரையாடல் :**

ஈடுபட்ட செயற்பாட்டை மீளத் திருப்பி நோக்கிக் கீழ்வரும் வினாக்களின் ஊடாகப் பாடத்தின் குறிக்கோள்களை அடையும்படி கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

(1) அச் செயற்பாட்டால் நீங்கள் மகிழ்வு கொண்டீர்களா?

(2) தனது கருத்தைவிட வேறு கருத்துக்குச் செவிசாய்க்கும் போது நீர் பெற்ற உணர்வு யாது?

(3) அடுத்தவர் முற்றுமே பிழையானவர் எனக் கருதிய பிள்ளைகள் கரங்களை உயர்த்துங்கள். உமது முடிவு சரியானதா?

(4) மற்றுமொரு கருத்துக்குச் செவிசாய்க்கும்போது உமது மனம் அமைதியின்மை அடைந்ததா? (பதிலைப் பெற வழிகாட்டல்) தன் கருத்தை விட வேறு கருத்துக்குச் செவி சாய்க்கும்போது மனதில் அமைதியின்மை உண்டாவது இயற்கையே. எனினும் அதனையிட்டுச் சினந்து அடுத்தவரோடு மோத எத்தனிப்பது நாகரீகம் பொருந்திய செயலல்ல.)

(5) தன்னில் ஏற்பட்ட அமைதியின்மையைக் கற்றலுக்கான வாய்ப்பாக ஆக்கிக் கொள்ள இயலுமா?

**பதிலைப் பெற வழிகாட்டுதல்.**

நான் உண்மையாகவே சரியானவனா? அவர் கூறும் விடயத்தில் உண்மை உண்டா? என்றவாறு வினவி, அது தொடர்பாக மேலும் விடயங்களைக் கற்க அதனைப் பயன்படுத்த முடியும். அடுத்தவர் கூறுவதைத் தம்மால் ஏற்க முடியாவிடினும் அவர் தமது மனச்சான்றின் படி எந்தவொரு நம்பிக்கையையும் கருத்தையும் கொண்டிருக்க அடிப்படை மனிதவுரிமை உடையவர். நாம் அம் மனிதவுரிமையைப் பேண வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) நாட்டு மக்கள் பல்வேறு இனப் பகுப்புகளை பல்வேறு மதப் பிரிவுகளைக் கொண்ட வர்களாக இருப்பினும் அனைவரும் ஒரே குலமாக ஒன்றுபட்டு அபிவிருத்தியை நோக்கிச் செல்ல அவை தடைகளல்ல. இக் கருத்தை வினவவும்.

(15 நிமிடங்கள்)

**மதிப்பீடு :**

எல்லாப் பிள்ளைகளுக்கும் கடதாசித் துணிக்கை ஒவ்வொன்றாக வழங்கிக் கீழ்க் காணும் இரு வினாக்களுக்கும் பதில்களைப் பெற்றுக் கொள்க.

(05 நிமிடங்கள்)

(1) இப் பாடத்தால் உண்மையாகவே நீர் எதாவது கற்றுக் கொண்டீரா?
ஆம் / இல்லை (பொருத்தமற்ற சொல்லைக் கீறிவிடவும்)

(2) நீர் ஏதாவது கற்றுக் கொண்டிருப்பின் அது என்ன?
..................................................................
..................................................................
(பெயரை எழுதவேண்டிய அவசியமில்லை)
(பிள்ளைகளின் பதில்களைப் பெற்றுக் கொண்டு அவற்றை வகுப்பில் வாசிப்பதன் வாயிலாகக் கௌரவிக்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் : 1.7

நேரம் : 45 நிமிடங்கள்

**குறிக்கோள்கள் :**

*(1)* வாழ்க்கையை வெற்றிகரமாக்கிக் கொள்ள ஏனைய ஆட்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் திறன்கள் அவசியமாகின்றன.

*(2)* சமூகம் தனியாட்களுக்கிடையிலான தொடர்புகளால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

*(3)* எந்த ஒருவரும் சமூகத்தில் தனித்து வாழ முடியாது என்பதை ஏற்றுக் கொள்ளல்.

*(4)* ஏனையோருடன் கொள்ளத்தக்க சிறந்த தொடர்புகளை ஆய்வு செய்தல்.

*(5)* ஒவ்வொருவரோடும் நட்புறவோடு கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளல்.

**நுழைவு :** எந்த ஒருவரும் இவ்வுலகில் தனித்து ஏனையோரில் இருந்து பிரிந்து உயிர்வாழவியலாது. எம் அயலில் தம் வாழ்வை வெற்றிகரமானதாக ஆக்கிக் கொண்ட யாரை எடுத்து நோக்கினாலும் அதனை நீங்கள் புரிந்து கொள்ளலாம். அவர்களது முன்னேற்றத்தின் ஓர் இரகசியமாக அமைவது நபர்களோடு கொண்டுள்ள தொடர்பும் நபர்களோடு பழகுவதில் அன்னார் பெறறுள்ள திறன்களும் என இப் பாடத்தின் வாயிலாகத் தேடிப் பார்ப்போம். இச் சமூகஇசை வாக்கத்தை எவ்வாறு விருத்தி செய்து கொள்ளலாம் என நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு 1**

நீங்கள் இப்போது ஒரு கடதாசியை எடுத்து உங்களுக்கு அறிமுகமான நபர்களின் பெயர்களை எழுதவும்.
(பெயரைச் சுருக்கமாக எழுதுதல் போதுமானது)

(03 நிமிடங்கள்)

**கலந்துரையாடல் :**

(1) ஒவ்வொரு பிள்ளையும் எழுதிய பெயர்களின் எண்ணிக்கையைக் கேட்கவும்.

(2) மேலும் பெயர்கள் எழுதப்படவுள்ளனவா? (மேலும் பெயர்கள் எழுதப்பட இருப்பதாக அவர்கள் கூறக் கூடும்)

(3) நன்று; இதில் இருந்து நாம் எதனை விளங்கிக் கொள்ளலாம்?
(எதிர்பார்க்கப்படும் பதில் வருமாறு:
நாம் ஒவ்வொருவரும் நினைவில் கொள்வதை விடக் கூடுதலான நபர்களை அடக்கிய கூட்டத்தாரோடு தொடர்பு கொண்டிருத்தல் என்பதே அதுவாகும்.)

(03 நிமிடங்கள்)

**செயற்பாடு : 2 சிந்தனைக் கிளர்வு**

ஒருவரோடு சிறந்த தொடர்பு / சிறந்தநடத்தை உண்டென்பதைக் காட்டும் சுட்டி எது?
(பிள்ளைகளின் பதில்களை வெளிக் கொணரவும்.)

எதிர்பார்க்கப்படுவன:

- ஒருவரோடு ஒருவர் பழகிக் கொள்வதில் உள்ள பிரியம்.
- எந்தவொரு விடயத்திலும் மோதல் எதுவுமின்றி ஒருவரோடு ஒருவர் செயல்லாற்ற முடியும் என்பது/ நல்லுறவு/பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்துக் கொள்ள இயலும் என்பது.
- ஒருவருக்கொருவர் நம்பிக்கை கொள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பதிலுக்காக நன்மை எதுவும் பெறும் நோக்கமின்றி உதவுதல், பரிசளித்தல், உபசரித்தல்.

- தாம் அறிந்த பயனுள்ள தகவல்களை மறைக்காது பரிமாறிக் கொள்ளல்.

**கலந்துரையாடல் :**

(1) பிள்ளைகளிடத்தில் தோன்றிய விடயங்களை மையமாகக் கொண்டு சிறு கலந்துரையாடலை நடத்தவும்.

(2) அங்கு ஒருவருக்கு ஒருவர் மிக நட்புடைய நண்பர்களான இரண்டுபேரைப் பிள்ளைகளிடம் வினவி அறிந்து அவ்விருவரையும் முன்னே அழைத்து பேட்டி ஒன்றை நடத்தவும்.

**வினாக்கள் :**

(1) நீங்கள் இருவரும் ஒருவரோடு ஒருவர் எவ்விதமாக அறிமுகமானீர்கள்?

(2) உமது நட்பு எவ்விதமாக வளர்ச்சி பெற்றது?

(3) உமது தோழன் உமக்கு செய்த உதவிகள் எவை? அவர் உமக்கு அளித்துள்ளவை எவை?

(4) நீர் அவரில் காணும் நற்பண்புகள் எவை? (தேவை எனக் கருதுமிடத்து மேலும் இரு பிள்ளை களிடம் தகவல்களைக் கேட்டுப் பெறவும்)

(5) நாம் மேற்கொண்ட பேட்டியினால் சிறந்த தொடர்பைக் கட்டியெழுப்பிக் கொள்ள நீங்கள் கற்றுக் கொண்டவை எவை?

(20 நிமிடங்கள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பைத் தொல்லையற்ற இடமொன்றுக்குக் கொண்டு செல்லவும். அங்கே பிள்ளைகளுக்கு அளிக்கப்பட்ட வரையறையான இடவசதிக்குள் கலைந்து அங்கும் இங்குமாக நடமாட விடவும். அங்கே தாம் சந்திக்கும் பிள்ளையுடன் நின்று ஒருவருக்கொருவர் தகவல்களை (அதாவது குடும்பத் தகவல்கள், பொழுது போக்குகள், விருப்பு வெறுப்புகள் என்பன) வினவ வகை செய்து கொண்ட பின்னர், அவ்வாறான தகவல்களைப் பெற்றுக் கொண்டு அடுத்தவரில் கண்டு கொண்ட, விரும்பத்தக்க குணவியல்புகளைக் குறிப்பிட்டு மகிழ்ச்சியை வெளிப் படுத்தும்படி இயம்பவும்.

இவ்விதமாக ஒரு பிள்ளை ஆகக் குறைந்தது மூன்று பேரோடேனும் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளச் செய்யவும். ஒரு சோடிக்கு 06 நிமிடங்கள் போதுமானது)

(20 நிமிடங்கள்)

**கலந்துரையாடல் :**

(1) இச் செயற்பாட்டால் மகிழ்வுற்றோர் கைகளை உயர்த்தவும்.

(2) நீர் நிகழ்த்திய அக் கலந்துரையாடல் மூலம் அப்பிள்ளை-களோடு உமது நட்பு அதிகரித்தது எனக் கருதுவோர். கரங்களை உயர்த்தவும்.

(3) ஒருவரோடான தொடர்பு, அந்நபரது தகவல்களை அறிந்து கொள்வதை மையமாகக் கொண்டே உருவாகிறது எனக் கூற முடியுமா?

(4) எத் தராதரத்திலான நபராக இருப்பினும் என்றோ ஒரு நாள் அவர் எமக்கு தேவைப்படுபவர் ஆவார். இக் கூற்றை நீர் ஏற்கிறீரா? உதாரணங்களை உம்மால் குறிப்பிட முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியாதைப் பண்புடைமை

பாடம் : 1.8

நேரம் : 40 நிமிடங்கள்

**எண்ணக்கரு ஆய்வு :**

மரியாதை மனப்பான்மை எனப்படுவது ஏனையோர் முன்னிலையில் ஏற்கப்பட்ட மிகச் சிறந்த முறையில் நடந்து கொள்வதே ஆகும்.

**குறிக்கோள்கள் :**

*(1)* மரியாதைப் பண்புடைமை என்பதன் பொருளை விளக்குதல்.

*(2)* மரியாதையைக் கைக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களும் விதங்களும்.

*(3)* மரியாதை பண்புடைமையின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளல்.

**நுழைவு:**

மரியாதையான நடத்தை என்பதைக் கரும்பலகையில் எழுதவும். இதனை நீங்கள் கேட்டிருக்கக் கூடும். இன்று நாம் இதன் கருத்தைத் தேடுவோம்.

**செயற்பாடு : 1 சிந்தனைக் கிளர்வு**

*(1)* 'மரியாதை காட்டல்' என்பதால் நீங்கள் உணர்வது என்ன? என வகுப்பில் வினவி மாணவர் பதில்களைக் கரும்பலகையில் எழுதவும்.

**எதிர்பார்க்கப்படும் பதில்களுக்கு உதாரணங்கள்:**

- சமூகப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றல்

- அந்த அந்தச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு அங்கீகரிக்கப்பட்ட சிறந்த முறையில் நடந்து கொள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கவரக்கூடிய விதமாக நடந்து கொள்ளல் (கதைத்தல், செயலாற்றல்)

- ஏனையோரை மதித்து நடத்தல். (மரியாதை காட்டும் செயல்கள்)

(2) கூறப்பட்ட பதில்கள் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து மதிப்பிடவும். விடப்பட்ட விடயங்கள் ஏதாவது இருப்பின் பூரணப்படுத்தவும்.

(3) கூறப்பட்ட பதில்களை ஆதாரமாகக் கொண்டு மரியாதை தொடர்பான வரைவிலக்கணத்தைப் பிள்ளைகளோடு கலந்துரையாடி அமைத்துக் கொள்ளவும்.

(உதாரணமொன்று:

- மரியாதை மனப்பான்மை என்பது ஏனையோர் முன்னிலையில் ஏற்கப்பட்ட சிறந்த கவர்ச்சிகரமான நடத்தையாகும்)

(10 நிமிடங்கள்)

**செயற்பாடு : 2 - குழு வேலை**

வகுப்பை 4 குழுக்களாக வகுத்து குழுவொன்றுக்கு ஒவ்வொன்று வீதம் கீழே தரப்பட்டுள்ள தலைப்புகளை அளிக்கவும்.

(1) மரியாதையான சொற்களும் அவற்றுக்குப் பொருத்தமான சந்தர்ப்பங்களும்
(மரியாதைகள்:
காலை வணக்கம் - காலையில் முதலாவதாக ஒருவரை சந்திக்கும்போது

**உதாரணங்கள்:**

- விகாரையில், கோயிலில்
- செல்லும் வழியில்
- பாடசாலையில்
- வகுப்பில்
- வீட்டுக்கு விருந்தாளி ஒருவர் வந்தபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) ந்த அந்த நபருக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டிய முறைகள்:

- பெற்றோர்
- மதகுருமார்
- ஆசிரியர்கள்
- முதியோர்
- அனாதைகள்

(4) ஏனையோருக்குத் தொல்லை உண்டாக்கத்தக்கதும் வெறுப்பை அளிக்கத்தக்கதுமான நாம் தவிர்த்துக் கொள்ள வேண்டிய நடத்தைகள். (சந்தர்ப்பங்களையும் உள்ளடக்கியதாக)

(உதாரணங்கள் :

- உழைப்பில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஒருவருக்கருகில் சோம்பேறியாய்த் தரித்திருத்தல்.

- அடுத்தவரது தொழிலுக்கு இடைஞ்சல் நிகழத்தக்கதாக நடந்து கொள்ளல்.

- ஓடும் பஸ் வண்டியின் உள்ளே புகைபிடித்தல்)

தாம் பெற்றுக் கொண்ட தலைப்புக்கு இணங்க குழு ஒன்று சேர்ந்து உரையாடி அட்டவணை ஒன்றை உருவாக்கல்.

**கலந்துரையாடல்:**

(1) ஒவ்வொரு குழுவும் தயாரித்த நற்பண்புத் தொகுதியை வகுப்பில் கையளிக்கச் செய்தல்.

(2) ஒவ்வொரு குழுவும் விடயங்களை அறியத்தந்த பின்னர் அதனை வளப்படுத்தவும் பேணவும் கருதிக் கலந்துரையாடலை நடத்தவும்.

**குறிப்பு :** ஒவ்வொரு குழுவும் செய்து முடித்த மரியாதை மனப்பான்மை சார்ந்த விதிகளைத் திருத்தியமைத்து அழகான எழுத்துக்களால் 'பிறிஸ்டல் போட்' களில் எழுதி, வகுப்பறையில் காட்சிக்கு வைக்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் : 1.9

நேரம் : 45 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கருக்கள் :**

*(1)* சிந்தனையை அடையாளங் காணல்

*(2)* மனதை ஒருமுகப்படுத்துவதால் மனவமைதிச் சுகத்தை அனுபவித்தல்.

*(3)* அமைதியான மனதின் வாயிலாகத் தமது வாழ்க்கைப் பிரச்சினைகளை மிகச் சரியாகக் காண இயலும்.

**குறிக்கோள்கள் :**

*(1)* மனதை ஒருமுகப்படுத்தலால் சிந்தனையையும் அமைதியையும் அனுபவித்தல். அவ்வனுபவங்களை விபரித்தல்.

*(2)* அமைதியான மனத்தால் விளங்கிக் கொள்ளல், தெளிவுபடுத்தல்.

**ஆயத்தம் :** வகுப்பை வெளியிடத்தில் எத் தொல்லைகளும் அற்ற இட மொன்றுக்குக் கொண்டு செல்க. கதிரைகளை வட்டமாக வைத்து பிள்ளைகளை அமரச் செய்யவும். கீழ்க் காணும் ஆலோசனைகளை வழங்கி அவர்களைத் தியானத்துக்கு வழிப் படுத்தவும்.

**செயற்பாடு :** **ஆலோசனைகள்**

நீங்கள் தியானம் பற்றி அறிந்திருப்பீர்கள். அது நாமெல்லோரும் கற்றுக் கொள்ள வேண்டிய, பயின்று கொள்ளத்தக்க மிகப் பெறுமதியான செயலொன்று. இப்போது நாம் தியானம் பண்ணும் முறையை கற்றுக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் கட்டமாக உடலை அசைவின்றி வைத்திருக்க-வும். முதுகுத்தண்டை நேராக வைத்து அசையாமல் அமரவும். பார்வை வேறுபக்கம் செல்வதைத் தவிர்த்துக் கொள்க. கண்களை மூடிக் கொள்க. இப்போது சற்று நேரம் உடலும் உள்ளமும் ஓய்வைப் பெற இடமளிக்கவும்.

*(03 நிமிட காலத்தை வழங்கவும்)*

உங்களது உடல் இப்போது அமைதியாக உள்ளது; நன்கு ஓய்வு அடைந்திருக்கிறது. இவ்வாறாக அமைதி பெற்ற மனதால் தமது தேகத்தின் முச்சு மேலாகவும் கீழாகவும் செலுத்தப் படுவதைப் உணரவும். வேண்டுமென்றே மூச்சு வாங்குதல் அவசியமில்லை. இயல்பாகவே நிகழும் உட்சுவாசம் வெளிச் சுவாசம் என்பன நிகழ இடமளித்து அது தொடர்பாக மனதை ஒருமுகப்படுத்துக.

மூக்கு நுனியில் உட்சுவாச - வெளிச்சுவாச வளி தொடும் இடத்தின் மீது கவனஞ் செலுத்தவும்.

உட்சுவாசத்தின் மீது பூரணமான சிந்தையைச் செலுத்துக. வெளிச்சுவாசத்தின் மீது முழுமையான சிந்தையைச் செலத்துக.

உட்சுவாசத்தினதும் வெளிச்சுவாசத்தினதும் ஆரம்பம், மையம், இறுதி என்பன மீது ஒரேவிதமாக மனதை ஒருமுகப்படுத்தவும்.

*(பிள்ளைகளுக்கு இவ்விதமாக மனத்தினை ஒருமுகப்படுத்திக் கொள்ளப் 10 நிமிடங்கள் வரையான காலத்தை வழங்கவும்.)*

*(10 நிமிடங்களின் பின்னர்)*

''நன்றி; இப்போது மிக மெதுவாகக் கண்களைத் திறக்கவும்''. *(சிறிது ஓய்வை விழங்கவும்.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மீளநோக்கல்:**

நாம் புரிந்த தியானத்தை மீண்டும் திரும்பி நோக்குவோம். அது எத்தகைய அனுபவம்?

★ எந்த அளவு திருப்திகரமாக மனதை ஒருமுகப்படுத்திக் கொள்ள முடிந்ததெனக் கருதுபவர்கள் தம் கரங்களை உயர்த்துங்கள்.

★ மனத்தை ஒருமுகப்படுத்தல் எவ்விதமான நிகழ்ச்சி?

★ மனம் ஒருமுகப்படுத்தப்படும் போது அகத்தில் அமைதி ஏற்படுகிறது என்பது உண்மையா?

★ இப் பயிற்சியின் வாயிலாக தம் மனதில் உண்டான தென உணர்ந்தோர் தமது கைகளை உயர்த்துக.

★ கலங்கிய மனதினாலா அன்றிக் குறைந்த சிந்தனை-களைக் கொண்ட மனதினாலா நாம் சுகம் பெறலாம்?

★ மனோவமைதி சௌகரியமானது, சுகமானது எனக் கருதுதல் சரியானதா?

**செயற்பாடு : 2**

மீண்டும் நாம் 05 நிமிடம் வரையிலான சிறியதோர் காலத்தால் அம் மனஅமைதியை அனுபவிப்போம். (மீண்டும் பிள்ளைகளைத் தியானத்தில் ஈடுபடுத்தவும்.) (கால இறுதியில்) ''நன்று இப்போது உங்கள் உள்ளத்திலோ அமைதி, கண்களைத் திறவுங்கள். அம் மனவமைதியை அவ்வாறே காத்துகொள்ள இயலுமா எனப் பாருங்கள்.''

**செயற்பாடு : 3**

அமைதி கொண்ட இம் மனத்தால் இப்போது உங்கள் வாழ்வை நினைவு கூருங்கள். எந்தவொரு நபருடனேனும் உங்களுக்கு பிரச்சினை, ஆத்திரம், பகைமை இருப்பதாயின் இவ்வமைதி கொண்ட மனத்தால் அதனை நோக்குங்கள்.

(02 நிமிட நேரம் வழங்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய மனத்தால் எமது வாழ்க்கைப் பிரச்சினைகளை நோக்கும்போது,

- ★ சினம் தோன்றுகிறதா?
- ★ பயம் உண்டாகிறதா?
- ★ பிரச்சினை அதிகரிக்கிறதா? குறைகிறதா?
- ★ பிரச்சினை மிகத்துல்லியமாகத் தோற்றமளிக்கிறதா?
- ★ பிரச்சினை பிரமாண்டமாகத் தெரிகிறதா? எளிதாகத் தோன்றுகிறதா?

'இப் பாடத்தின் வாயிலாக நீங்கள் கற்றக் கொண்டவை எவை?' எனப் பிள்ளைகளை வினவி, பதில்களைப் பெற்றுக் கொண்டு அவற்றுக்கு மதிப்பளிக்கவும்.



சித்திரம் 3 : தியானம் உயரிய செயற்பாடாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் : 1.10

நேரம் : 40 நிமிடங்கள்

**எண்ணக்கரு ஆய்வு:**

(1) மனிதனில் தோன்றக்கூடிய பகைமை உடல் ரீதியாக வும், உள ரீதியாகவும் தீங்கானது.

(2) இரக்கத்தில் உயிர்த்துடிப்பான பலம் உண்டு.

**நோக்கங்கள் :**

(1) மனிதரைப் படுகொலை செய்வதால் சமூகப் பிரச் சினைகளைத் தீர்க்கவியலாது என்பதைக் கூறல்.

(2) பகைமையைக் கைக் கொள்வதால் அவரில் நிகழக் கூடிய உடல் ரீதியானதும் உள ரீதியானதுமான தீங்குகளைக் குறிப்பிடல்.

(3) இங்கு இடம் பெறும் உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு நட்பு பலம் வாய்ந்தது ஒன்று என்பதை விபரிப்பர்.

(4) நட்பைக் கைக்கொண்டு தமது வாழ்வை உருவாக்கிக் கொள்ளும் விதத்தைத் தீர்மானித்தல்.

**நுழைவு :**

இரண்டாம் உலகப் போரின்போது யுத்தப் பாசறை ஒன்றில் நிகழ்ந்த உண்மைச் சம்பவம் ஒன்றை நான் இன்று உங்கள் முன்னிலையில் வைக்கப் போகிறேன். நீங்கள் அதனைச் செவிமடுத்த பின்னர் நாம் அது பற்றிக் கலந்துரை யாடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1933ல் ஜேர்மனியில் பதவிக்கு வந்த நாசிசவாதியான ஹிட்லர் தமது நாட்டில் சிறுபான்மையோராக இருந்த யூதரைப் படுகொலை செய்யப் பாரிய திட்டமொன்றை ஆரம்பித்ததை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இலட்சக் கணக்கான யூதர்களைப் பிடித்துப் பிரமாண்டமான பாசறைகளில் அடைத்துக் கொடூரமான உழைப்பில் ஈடுபடுத்தி, அவர்களுக்குக் குறைந்தளவு உணவை வழங்கிப் படிப்படியாக அவர்களை போஷாக்கின்மை நோய்கள் என்ற நிலைமைகளுக்கு உட்படுத்தி மரணத்தில் வீழ்த்துவதே அத்திட்டமாகும். மேலும் ஆயிரக் கணக்கானோர் தினமும் விஷவாயு கொண்ட அறைகளில் அடைத்து வைக்கப்பட்டு கொல்லப்பட்டனர். இவ்வாறு ஹிட்லரால் அழிக்கப்பட்ட யூதரின் தொகை அறுபது இலட்சம் வரையாகும்.

இவ்வாறு அடைக்கப்பட்ட பாசறைகளின் நிலைமையோ மிகப் பரிதாபமாக இருந்தது. அவை உண்மையாகவே சித்திரவதைக் கூடங்களாக இருந்ததோடு அடைப்பட்டிருந்தோர் சொற்ப காலத்திலேயே உடல் நலிவுகளுக்கு ஆளாகி நடமாடும் எலும்புக்கூடுகளாக மாறியதோடு உளரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

ஈற்றில் 1945ல் நேச நாடுகளின் இராணுவம் ஜேர்மனிக்குள் நுழைந்தபோது நாஸி ஆட்சி வீழ்ச்சியடைந்தது. பின்னர் அடைக்கப்பட்டதால் நலிவுற்றிருந்த கைதிகளுக்கு உணவு வசதி, வைத்திய வசதி போன்றவற்றை வழங்கி அவர்களுக்குப் புனர் வாழ்வளித்துத் திருப்பி அனுப்ப வேண்டிய பொறுப்பினை நாகரிக உலகம் ஏற்கவேண்டி நேரிட்டது.

ஜேர்மனியில் உப்பனெல் என்னும் இடத்தில் இருந்த 123 இலக்கங் கொண்ட இவெக் அலகு என்னும் முகாமில் இருந்த நலிவுற்றோரை நலமாக்கும் பணி, அமெரிக்க இளம் வைத்தியரான ஜோர்ஜ் றிச்சீயிடம் ஒப்படைக்கப்பட்டது. இராணுவ வைத்திய சேவையின் போது எவ்வளவோ படுகாய முற்றோரை அவர் முன்னர் கண்டிருந்தபோதும் இம் முகாமில் அவர் கண்ட பரிதாபம் அவரால் தாங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதிருந்தது. தகுந்த உணவின்றிப் பல வருடங்களாக இருந்தமையால் உடற்றசைகள் மறைந்து காணப் பட்ட பிணியாளர் புதிதாகப் போஷாக்கான உணவுகள் வழங்கப்பட்டபோதும் அவை சமிபாடு அடையாமல் இருந்ததோடு அப் பாதிப்புகளால் தினமும் பலர் மடிந்தனர். முகாம் வாசிகளின் பரிதாப நிலையை இட்டு யாது செய்யலாம் என நினைத்தவாறு வைத்தியர் ஒருநாள் நலிவுற்றோரைக் கவனித்துக் கொண்டு வருகையில் ஓர் அசாதாரணமான திட காத்திரமும் நிமிர்ந்த உடலும் பிரகாசமான கண்களும் உயிர்த்துடிப்பும் கொண்ட ஒரு நபரைக் கண்டார். இவர் சமீபத்தில் பிடிக்கப்பட்டவராக இருக்கக்கூடும் என வைத்தியர் தமக்குள்ளே நினைத்துக் கொண்டார்.

அந்த நபரோ தமது பெயரை வைத்தியர் வினவியபோது அமெரிக்கர் ஒருவரால் எளிதில் நினைவுபடுத்திக் கொள்ள வியலாத போலந்துப் பெயரைக் குறிப்பிட்டார். பின்னர் விசாரித்தபோது அவர் ஆங்கிலம், ஜெர்மன், இரஷ்ய, பிரெஞ்சு, போலந்து ஆகிய மொழிகளில் சிறந்த பேச்சாற்றலைக் கொண்டிருந்தமை புலனாகியது.

முகாமில் இருந்த ஆயிரக் கணக்கானோரை விசாரித்து அவர்களது பெயர், ஊர் முதலிய விபரங்களை அறிந்து கொள்ள அந்த நபரது உதவி பெறப்பட்டது. அமெரிக்கர்கள் அவருக்கு 'வைல்ட் பில்' என இலகுவான பெயரைச் சூட்டினர். முகாமிலிருந்தோருக்கு உதவி புரிவதன் பொருட்டுத் தனக்கு அளிக்கப்பட்ட புதிய பணியை அவர் எத்தகைய களைப்பையும் காட்டிக் கொள்ளாது தினமும் 16 மணித்தியாலங்கள் வரை தொடர்ந்து செய்துவந்தார். வைத்தியர் றிச்சீ தமது பதிவேட்டில் அவரைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார். 'இவர் தம் சகோதரக் கைதிகள் மட்டில் கொண்டிருந்த நட்பு அவர் முகத்தில் பிரகாசித்தது'.

ஒருநாள் வைத்தியர் கைதிகளின் விபரங்கள் அடங்கிய அறிக்கையைப் பார்வையிடும்போது 'வைல்ட் பில்' லின் விபரங்களைப் படித்து அதிசயித்தார். அவர் ஆறு வருடங்களுக்கு முன்னர் முகாமில் சேர்த்துக் கொள்ளப்-பட்டவர். இக் காலப் பகுதிக்குள் அவர் எந்தவித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலுகைகளையும் பெற்றிலர். ஏனைய கைதிகள் பெற்றுக் கொண்ட அளவு உணவையே அவரும் பெற்றிருந்தார். அவர் தங்கியிருந்த சிற்றறையும் அசுத்தமான இடவசதி அற்ற துர்நாற்றம் வீசிய இடமே. அவரும் கடினமான வேலைகளைத்தான் செய்திருக்கிறார். அவ்வாறாயின் இவர் மட்டும் சிறந்த உடல், உள நலத்தை எவ்வாறு பேணிக் கொண்டார்?

வைத்தியர் 'வைல்ட் பில்' லைத் தம் அறைக்கு அழைத்து, மிக அக்கறையோடு அவரது வாழ்க்கை விபரங்களை விசாரித்தார். தன்னைப் பற்றி அதிகமாகக் குறிப்பிடாத அவர் இப்போது தம் கடந்த காலத்தை இவ்வாறு கூறத் தொடங்கினார்.

''நான் 'வர்சோ' வில் யூதர் வாழும் பகுதியிலேதான் வாழ்ந்து வந்தேன். அங்கு என்னோடு எனது மனைவி, இரண்டு புதல்வியர், மூன்று புதல்வர் ஆகியோரும் இருந்தனர். ஒரு நாள் ஜேர்மனியப் படைவீரர் எமது வீட்டை முற்றுகையிட்டு அயலவர்களை வெளியேற்றி வீட்டுச் சுவர்களில் வரிசையாக நிற்கச் செய்கையில் நான் என்னையும் அவ்வாறே நிற்க வைத்துக் கொன்று விடும் படி மன்றாடிக் கேட்டுக் கொண்டபோதும் அவர்கள் அதனைச் செவிமடுக்கவில்லை. என் கண் எதிரிலேயே அவர்கள் எனது மனைவியையும் ஐந்து பிள்ளைகளையும் கொன்றுவிட்டார்கள். என்னை அவர்கள் கொல்லாமல் விட்ட காரணம், ஜேர்மன் மொழியை என்னால் பேச இயன்றமையால் என்னைக் கொண்டு முகாமில் ஏதாவது வேலைகள் செய்விக்கலாம் என்பதே ஆகும். 1939 ல் (அதாவது ஆறு வருடங்களுக்கு முன்னர்) அவர்கள் என்னை முகாமில் கொண்டு வந்து விட்டு விட்டனர். அடுத்து நான் என்ன செய்ய வேண்டும், எவ்வாறு வாழ வேண்டும், எனப் பலவாறு சிந்திக்கலானேன். எனது குடும்பத்தாரை ஈவிரக்கமின்றிக் கொலை செய்த ஜேர்மன் வீரர் மீது ஏனைய கைதிகளைப் போன்று பகைமை காட்டியவாறு இறந்து விடுவதா? அது மிக எளிதாக மேற்கொள்ளத்தக்க தீர்மானமாக இருந்தது. நான் தொழிலால் ஒரு சட்டத்தரணி. பகைமை கொண்டோர் உள்ளத்தாலும் உடலாலும் எத்தகைய நிலைமைக்கு ஆளாகிறார்கள் என்பதை நான் கண்டிருக்கிறேன். பகைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடூரமானது. அது இவ்வுலகில் எனது விலைமதிக்க முடியாத செல்வமாக இருந்த என் அன்புக்குரிய குடும்பத்தை அழித்துவிட்டது. சிலவேளை நான் உயிர்வாழப் போவதோ இன்னும் சில தினங்களாக இருக்கக்கூடும். அல்லாவிடின் சில வருடங்களாகவும் இருக்கலாம். இனிமேல் உள்ளத்தாலேனும் ஒருவரைப் பகைக்காது சந்திக்கும் சகலருடனும் நட்புள்ளத்தோடு நடந்து கொள்ள முடிவு செய்தேன். அதிலிருந்து இம் முகாமில் அப்பாவிக் கைதிகளுக்கு என்னால் இயன்ற சகல உதவிகளையும் செய்து கொண்டு எல்லோரினதும் நண்பனாக, பணிவிடை புரிவோனாக செயற்பட்டு வருகிறேன்''.

**கலந்துரையாடல் :**

(1) ஹிட்லர் தம் நாட்டுச் சிறுபான்மையோர் பற்றிய பிரச்சினையைத் தீர்க்க எம் முறையைக் கையாண்டார்.

(2) நீர் ஜெர்மனியில் மனிதரைத் தடுத்து வைத்துச் சித்திரவதை செய்த கூடங்களைப் பற்றி விஷ வாயுக் கொலைக் கூடங்களை இட்டு முன்னர் கேட்டவை, தொலைக்காட்சியில் கண்டவை எவை?
(முடியுமாயின் அத்தகைய முகாம்களின் நிலைமையைக காட்டும் புகைப்படங்கள் சிலவற்றை மாணவரிடம் காண்பிக்கவும்.)

(3) மனிதப் படுகொலைகள் வாயிலாகச் சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியுமா? உங்களது முடிவுகளுக்கான காரணங்களைக் குறிப்பிடுங்கள்.

(4) வைத்தியர் றிச்சீ முகாமில் இருந்தவர்களது தோற்றத்தையிட்டு ஏன் கவலை கொண்டார்?

(5) அவர் சந்தித்த அசாதாரண நபர் யார்? அந் நபர் ஏனையோரில் நின்றும் எவ்வாறு வேறுபட்டார் ?

(6) வைத்தியர் வைல்ட் பில்லின் தோற்றத்தை எவ்வாறு விபரிக்கிறார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7) வைல்ட் பில் பற்றி வைத்தியரில் தோன்றிய ஆர்வம் என்ன?

(8) வைல்ட் பில்லின் கதை யாது?

(9) அவர் எவ்வாறு ஆறு வருடங்கள் தமது உடல் உளச் சுகத்தைப் பேணிக் கொண்டு வாழ்ந்தார்?

(10) அவர் தம் வாழ்க்கையை எப்படிக் கொண்டு செல்ல வேண்டும் எனக் கருதினார்?

(11) இப் பாடத்தால் நீர் எதனைக் கற்றுக் கொண்டீர்?

(12) நட்பு என்பதன் பொருள் என்ன?

(15 நிமிடங்கள்)

**ஒப்படைகள் :**

(1) ஒவ்வொரு பிள்ளையும் இப் பாடத்தின் மூலம் கற்றுக் கொண்டதைத் தம் வாழ்க்கையை வெற்றிகரமானதாக ஆக்கிக் கொள்ள எவ்விதம் கைக் கொள்ளலாம் என ஒரு கடதாசித் துண்டில் எழுதும்படி கூறவும்.

(05 நிமிடங்கள்)

(2) ஒவ்வொருவரும் எழுதியதை வகுப்பில் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்கவும்.

(10 நிமிடங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாவற்றினதும் நன்மையான பக்கத்தை நோக்குவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாவற்றினதும் நன்மையான பக்கத்தை நோக்குவோம்

பாடம் : 2.1

நேரம் : 40 நிமிடங்கள்

அடிப்படை எண்ணக்கரு : நன்னோக்கோடு நோக்கல்.

**எண்ணக்கரு ஆய்வு :**

*(1)* ஒரே நிகழ்ச்சியை நன்னோக்கோடும் எதிர்மறை நோக்கோடும் நாம் பார்க்க இயலும்.

*(2)* கூடுதலான பலனளிக்கத்தக்கது நன்னோக்கே ஆகும்.

*(3)* எதிர்மறையான கண்ணோட்டம் ஒரு நபரில் பெரும்பாலும் தீங்கை விளைவிக்கவல்லது.

*(4)* எல்லாவற்றினதும் நன்மையான பக்கத்தைப் பார்க்கவே நாம் பயின்று கொள்ள வேண்டும்.

**குறிக்கோள்கள் :**

*(1)* வாழ்க்கைச் சம்பவங்களை இட்டு நன்னோக்கோடும் எதிர்மறை நோக்கோடும் பார்க்கவியலும் என்பதை உதாரணங்களோடு குறிப்பிடல்.

*(2)* நன்னோக்கான கண்ணோட்டம் பயனுள்ள / சாதகமான பலன்களைத் தருவதாகக் குறிப்பிடல்.

*(3)* எதிர்மறையான கண்ணோட்டம் சாதகமற்ற / தீங்கானதாக அமையும் எனக் குறிப்பிடுவர்.

*(4)* எந்தவொரு வாழ்க்கைச் சம்பவத்திலும் பிரகாசமான பகுதியைக் கண்டுகொள்ளல்.

**ஆயத்தம் :**

ஒரே அளவைக் கொண்ட பத்துச் சிறு கடதாசித் துண்டுகளை வெட்டி எடுத்துக் கொள்வோம். அவற்றில் கீழ்வரும் பத்துத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்புகளை ஒவ்வொன்றாக எழுதிச் சுருட்டி வைத்துக் கொள்ளவும். (படி 3 - உடனடிப் பேச்சுகளுக்காக)

**தலைப்புகள் :**

(1) நான் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானால்,

(2) ஒலிம்பிக் விளையாட்டு வீரனாக விருப்பம். எனினும் காலில் சுகவீனம்.

(3) அபிவிருத்தியற்ற கிராமப் புறத்தில் எனக்கு ஒரு தொழில் கிடைத்தால்,

(4) வேறு மொழியைப் பேசும் இனத்தவரோடு நான் செயலாற்ற வேண்டியுள்ளது.

(5) நான் நுவரெலியாவில் குடியிருக்கச் செல்ல வேண்டியுள்ளது.

(6) இன்று பஸ் இல்லை. ஒரு மைல் தூரத்தை நடக்க வேண்டி இருக்கின்றது.

(7) நான் கறுப்பு நிறத்தவன்.

(8) ஆற்றுக்குப் பக்கத்தில் எனது வீடு.

(9) எவரும் என்னோடு நட்புக் கொள்ள விரும்புகிறார்கள் இல்லை.

(10) நான் ஒரு கடை நடத்தினேன். மூன்று மாதத்தில் கடை வங்குரோத்து அடைந்தது.

**படி : 1**

1.1 ஒரே சம்பவம் அல்லது சந்தர்ப்பம் மீது நாம் அடிப்படை-யாகக் கொள்ளத்தக்க கண்ணோட்டங்கள் இரண்டு உண்டு. ஒன்று நன்நோக்குடன் பார்ப்பது. அடுத்ததோ எதிர்மறைக் கண்ணோட்டத்தோடு பார்த்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னோக்கோடு பார்த்தல் என்பது எதிர்பார்ப்புகளோடும் உற்சாகத்தோடும் ஆக்கபூர்வமாகவும் பார்த்தல் ஆகும். வேறு வகையாகக் கூறுவதாயின் ஒன்றினது பிரகாசமான வேறு வகையாகக் கூறுவதாயின் ஒன்றினது பிரகாசமான பக்கத்தை நோக்குதல். அதற்கு எதிரானது எதிர்மறை நோக்கு என்பது எதிர்மறை நோக்கோடு, எதிர்பார்ப்புகள் அற்ற விரக்தியோடு பார்த்தலே ஆகும். அதாவது ஒன்றினது இருளான பக்கத்தை நோக்கல்.



சித்திரம் 4 : எல்லாவற்றினதும் நல்ல பக்கத்தை நோக்குவோம்

1.2 ஒரே நிகழ்ச்சியை இவ்விரண்டு விதங்களாலும் நாம் நோக்குவோம். முதலாவதாக மழை பெய்யும் நிகழ்ச்சியை நன்னோக்கோடு பார்ப்போம்.
(பிள்ளைகளிடத்தில் இருந்து பதில்களைப் பெறவும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதாரணங்கள் :**

- மழை மரஞ்செடி கொடிகளுக்கு நல்லது.
- குளிர்ச்சியைத் தருகிறது.
- வளிமண்டலம் சுத்தமடையும்.
- சுற்றாடல் சுத்தமாகிறது.
- கிணறுகள் நீரினால் நிரம்புகின்றன.

*1.3* அடுத்து நாம் அதே மழையை எதிர்மறை நோக்கோடு பார்ப்போம்.
(பிள்ளைகளிடத்தில் பதில்களைப் பெறவும்.)

**உதாரணங்கள் :**

- வெளியே செல்ல முடியாது.
- மழை தொல்லை தருகிறது.
- குளிராக இருக்கிறது.
- வீதியில் நீர் நிறைந்து விடுகிறது. பயணம் பண்ணுவது கடினம்.

*1.4* ஒன்றைப் பற்றி நாம் அதிகமாகப் பயின்று கொள்ள வேண்டியது இவற்றில் எந்தக் கண்ணோட்டப்படி எனக் கூறுங்கள்? அதற்கான காரணங்கள் எவை?

**கலந்துரையாடலுக்குப் பயன் தரத்தக்க விடயங்கள் :**

★ நாம் ஒன்றைப் பார்க்கும் கண்ணோட்டத்தின் படியே அது எமக்கும் தெரியும். 'நல்ல' தென ஒன்றை நோக்கினதால் அது நல்லதாகவே தெரியும்.

★ அவ்வாறே ஒருவரை நாம் நோக்குவதன் படியே அவரும் நடந்துகொள்ள ஊக்குவிக்கப்படுவார். உதாரணம் : நீங்கள் ஒருவரை நம்பும்போது அவரும் உங்கள் மீது நம்பிக்கை கொள்ள ஊக்கு விக்கப்படுவார்.

★ நாம் மேலும் அத்தகைய சந்தர்ப்பங்களுக்கு உதாரணங்களைத் தேடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பிள்ளைகளிடம் பதில்களைப் பெறுக.)

**உதாரணங்கள் :**

- நாம் ஒருவரில் இரக்கம் கொள்ளும்போது அவரும் எம்மீது இரக்கம் கொள்ளத் தூண்டப்படுவார்.

- நாம் ஒருவரில் தோழமை கொள்ளும் போது அந் நபரும் எம்மில் தோழமை கொள்வார்.

- வெகுமதிகளை அளிக்கும்போது பதிலாக வெகுமதிகள் கிடைக்கும்.

- கௌரவப்படுத்துகையில் பதிலாகக் கௌரவம் கிடைக்கும்.

**படி : 2**

அதிக பயனைத் தருவது எக் கண்ணோட்டம்?

2.1 எதிர்மறை நோக்கினால் பெற்றுக் கொள்ளத்தக்க பெறுபேறுகள் எவை?
(பிள்ளைகளிடத்தில் பதில்களை வெளிக்கொணர்க.

**உதாரணங்கள் :**

- மனவெறுப்பு / உற்சாகமிழப்பு
- தோல்வி மனப்பான்மை
- சற்றுக் கோபம்
- பொறாமை
- மனவேதனை / விரக்தி
- ஏனையோரால் புறக்கணிக்கப்படல்.

2.2 நன்நோக்கினால் பெறத்தக்க பெறுபேறுகள் எவை?

**உதாரணங்கள் :**

- எதிர்பார்ப்புகள் உண்டாதல்.
- செயலாற்றல் தோன்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புத்துணர்ச்சி
- உற்சாகம்
- சமூகத்தில் தலைமைத்துவம் கிடைத்தல்.

2.3 மேலே இடம் பெற்ற கலந்துரையாடலால் நாம் எடுக்கத்தக்க முடிவுகள் எவை?
*(பிள்ளைகளைச் சிந்திக்கத் தூண்டுக.)*

**உதார்ணங்கள் :**

- எதிர்மறை நோக்கோடு வாழ்க்கையை நோக்கினால் உண்மையாகவே ஒருவர் தோல்வி அடையலாம்.

- அக் கண்ணோட்டம் மனதுக்குத் தீங்கை விளைவிக்கும்.

- அது சோகம், தவிப்பு, உறவின்மை, பற்றியும் நன்னோக்கைக் கைக்கொள்ள இயலும்.

**படி : 5**

எத்தகைய துரதிஷ்டமானதாகவும் பரிதாபத்துக்குரியதாகவும் மேல்வாரியாகத் தெரியும் எந்தவொரு நிகழ்ச்சியிலும் ஒரு வகையான பிரகாசமான பக்கத்தையும் நாம் காணலாம். வெளிப்படையாகத் தெரியும் அந்த நிலையால் மனதை மாசுபடுத்திக் கொள்ளாது அங்குள்ள பிரகாசமான பக்கத்தை நோக்க எம் உள்ளத்தைப் பயிற்றுவித்துக் கொள்வோம்.

''நான் இப்போது உங்களுக்குச் சந்தர்ப்பத்தை வழங்குகிறேன். ஒரு நிமிடத் திடீர்ப் பேச்சொன்றை நிகழ்த்தவும்''.

முன்கூட்டியே தயாரித்த பேச்சுக்கான தலைப்புகளைக் கொண்டு சுருட்டப்பட்ட கடதாசித்துண்டுகளை மேசை மீது வைக்கவும்.

இவற்றில் ஒன்றை எடுத்து, ஒரு நிமிடப் பேச்சை நிகழ்த்துக. இவை மேலோட்டமாகத் துர்ப்பாக்கியமான தாகத் தெரியக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய சம்பவங்கள், நீர் அதில் பொதிந்துள்ள பிரகாசமான பக்கத்தை எடுத்துக் காட்டி எதிர்பார்ப்புகளைக் கொண்டதான பேச்சை நிகழ்த்துதல் வேண்டும்.
*(10 பிள்ளைகள் வரை மட்டுமே பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கவும். ஒரு பிள்ளை பேச்சை நிகழ்த்திய பின்னர் ஏனைய பிள்ளைகளைக் கைதட்டிப் பாராட்ட ஊக்குவிக்கவும்.)*

**கலந்துரையாடல் :**

★ இப் பாடத்தின் வாயிலாக நீங்கள் என்ன கற்றீர்கள்?

★ வாழ்வில் துரதிஷ்டமானதாக மேல்வாரியாகத் தெரியும் நிகழ்ச்சியைத் தனது அதிஷ்டத்துக்காகப் பயன்படுத்திக் கொண்ட ஒரு நபரைத் தேடிப் பார்க்கவும்.

★ நன்னோக்குடன் வாழ்க்கையை நோக்குவதில் உள்ள பயன்கள் எவை?

★ 'எதிர்மறைக் கண்ணோட்டம் உள்ளத்தை நோயாக்கும்' இக் கூற்று எந்த அளவு உண்மை எனக் குறிப்பிடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பத்திலிருந்து இன்பத்தை நோக்கி.......

பாடம் : 2.2

நேரம் : 45 நிமிடங்கள்

அடிப்படை எண்ணக்கரு : நன்னோக்கு

**எண்ணக்கரு ஆய்வு :**

நன்னோக்குடன் பார்ப்பதால் துன்பத்தையும் இன்பமாக மாற்றிக் கொள்ள முடியும்.

**குறிக்கோள்கள் :**

*(1)* நன்னோக்கான மனப்பாங்குகளை உயர்வுபடுத்தல்.

*(2)* தமக்கு ஏற்படும் பிரச்சினைகளை நன்னோக்கோடு பார்க்கத் தூண்டப்படல்.

**நுழைவு :**

முன்னைய பாடங்களில் நாம் எந்தவொரு நிகழ்ச்சியையும் நன்நோக்கோடு அல்லது வேறுவிதமாகக் கூறுவதானால் ஆக்கபூர்வமான கண்ணோட்டத்தோடு பார்க்க முடியும் என்பதைக் கற்றுக் கொண்டோம்.

அவற்றுள் மிகப் பயன் தரத்தக்கது நன்நோக்கோடு அல்லது சுப நோக்கோடு எதிர்பார்ப்போடு ஒன்றினது பிரகாசமான பக்கத்தைப் பார்ப்பதே என விளங்கிக் கொண்டோம். இப் போது நாம் பிரச்சினையொன்றை நன்நோக்கோடு பார்த்த ஒருவரது கதையைக் கேட்போம்.

**செயற்பாடு :**

கீழ்வரும் சம்பவத்தைப் பிள்ளைகளுக்குக் கதையாகப் படிப்படியாகக் கூறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ரமேஷின் கதை**

ரமேஷ் உயர்தரம் (வர்த்தகம்) சித்தியடைந்தபோதும் பல்கலைக்கழகம் செல்வதற்கு தேவையான புள்ளிகளைப் பெறவில்லை. அவன் மீண்டும் ஒருமுறை முயற்சித்த போதும் பெறுபேறு முன்னர் போலவே ஆயிற்று. பல்கலைக்கழகம் சென்று உயர்ந்த கணக்காளராக அல்லது வர்த்தகத்துறை முகாமையாளராக வரவேண்டும் என அவன் நினைத்திருந்தான்.

அவன் ஒரு வருடம் வரை பல்வேறு தொழில்களுக்காக விண்ணப்பித்தும் எந்தவொரு தொழிலும் கிடைக்கவில்லை. இதனால் அவன் மிகுந்த விரக்திக்கும் எதிர்காலம் பற்றிய நிச்சயமற்ற தன்மைக்கும் உள்ளானான்.

தான் அடைந்துள்ள நிலைமையையிட்டு அடுத்தவரை அல்லது சமூகத்தை நொந்து கொள்வதால் எந்தவிதமான பயனும் இல்லை என்பதை அவன் உணர்ந்தான். அதற்கான பொறுப்பைத்தானே ஏற்க வேண்டும் என்பதையும் ஏற்றுக் கொண்டான்.

'வாழ்க்கையை வெற்றி கொள்ள ஒருவர் பல்கலைக்கழகம் செல்லத்தான் வேண்டுமா?

அவன் இவ்வாறு சிந்திக்கலானான்.
'நான் ஒரு கணக்காளன் ஆகத்தான் வேண்டுமா? இல்லையாயின் நான் என்ன செய்ய வேண்டும்?

உண்மையாகவே இவ்வாறான நிலைமையில் இருக்கும் நான் இப்போது செய்ய வேண்டியது என்ன? இத்தருணம் தொடக்கம் செய்யத்தக்கது யாது?

ஏதாவது ஒரு சுயதொழில் ஆரம்பிக்க அவன் நினைத்தான். தம் வீட்டுக்கு அண்மையில் இருந்த ஆற்றில் இருந்து மணலைக் கொண்டு வந்து சீமெந்துப் பூச்சாடிகளையும், கொங்கீரீட் கிறில்களையும் தயாரிக்க முடியும் என்பதைப் புரிந்து கொண்டான். அவன் அது தொடர்பான விடயங்களைத் தேடினான். அத் தொழிலில் நிபுணர்களைச் சந்தித்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீமெந்துத் தொழில் பற்றித் தேவையானவற்றைக் கற்றுக் கொண்டான். அத்தகையோரது ஆலோசனைகளின்படி சில பொருட்களைப் பரீட்சார்த்தமாகத் தயாரித்துப் பார்த்தான். அவற்றை விற்பனைக்கு விடும் முறைகள் பற்றியும் விசாரித்துப் பார்த்தான்.

மிகச் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட அவனது உற்பத்தித் திட்டம் படிப்படியாக முன்னேறியது. இப்போது அவன் அப் பிரதேசத்தில் வளர்ந்து வரும் இளம் வர்த்தகன். ஏனையோரின் கீழ் தொழில் செய்வதிலும் பார்க்கச் சுய தொழிலில் ஈடுபடல் எத்தகைய சிறப்புடையது என அவன் இப்போது நினைத்துப் பார்க்கிறான்.

**படி : 2**

(1) ரமேஷ் பல்கலைக்கழகம் செல்ல முடியாமல் போனதால் அல்லது தொழில் வாய்ப்பைப் பெறவியலாது போனதால் மனவெறுப்படைந்து எதிர்மறை நோக்கோடு இருந்திருப்பின் அவனுக்கு யாது நேர்ந்திருக்கும் என மாணவரை வினவி விடைகளைப் பெற்றுக் கொள்ளவும்.
(மாதிரி விடைகள் :

- குடிப் பழக்கத்துக்கு ஆளாகியிருக்கக்கூடும்.
- சமூகத்தின் மீது பகைமை கொண்டவனாக இருந்திருப்பான்.
- சட்ட விரோதமான வழிகளால் பணந் தேடத் தலைப் பட்டிருப்பான்.
- பயனற்றவனாக / ஏனையோரில் தங்கியிருப்பவனாக மாறி யிருக்கக்கூடும்.
- விரக்தி காரணமாகத் தற்கொலை செய்து கொண்டிருக்கக் கூடும்.)

(2) ரமெஷ் தனது பிரச்சினையை எவ்வாறு தீர்த்துக் கொண்டான்?
(மாதிரி விடைகள் :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வாழ்வை எதிர்பார்ப்புகளோடு நினைத்துப் பார்த்தான்.

- அத் தருணந்தொடக்கம் அவன் என்ன செய்யலாம் என எண்ணினான்.

- எதிர்கொண்ட நிலைமைக்கு ஏற்பத் தனது எண்ணங்களையும் ஆர்வங்களையும் மாற்றிக் கொண்டான். இக் கலந்துரையாடலின்போது தோன்றிய விடயங்களைப் பயன்படுத்திக் கொண்டு நன்னோக்காய்ச் சிந்திக்கப் பிள்ளைகளை வழிப்படுத்தவும்.

**படி : 3**

நாளிதழ்களிலும் சஞ்சிகைகளிலும் ஆலோசனை வழங்கும் பக்கங்கள் இருப்பதை நீங்கள் அவதானித்து இருப்பீர்கள். அங்கு பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியிருப்பவர்கள் தம் பிரச்சினைகளைக் குறிப்பிட்டு அவற்றுக்கான தீர்வுகளைப் பத்திரிகை ஆசிரியரிடம் ஆலோசனையாக எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிடுகிறார்கள். இவ்வாறான விடயங்களை நீங்கள் வாசித்தும் இருப்பீர்கள்.

இப்போது ஒரு கடதாசியை எடுத்து நீங்கள் இன்னல் ஒன்றுக்கு ஆளாகி இருப்பதாகக் கற்பனை பண்ணிக் கொண்டு அத்தகைய ஒரு சிக்கலை எழுதுங்கள்.

**உதாரணம் :**

''நான் பத்தாம் ஆண்டில் படிக்கும் ஒரு மாணவன். ஆறு மாதங்களுக்கு முன்பு எனது தந்தையார் தமது தொழிலை இழந்தார். இப்போது எமது குடும்பம் பொருளாதார ரீதியில் மிகக் கஷ்டமான நிலைக்கு உள்ளாகியிருக்கிறது. என்னால் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலைமை தோன்றியுள்ளது. நான் செய்யத்தக்கது என்ன?''

பிள்ளைகள் இத்தகைய பிரச்சினைகளைப் பற்றிச் சிந்தித்து எழுதுவதற்கு 4 நிமிடங்கள் வரையான நேரத்தை வழங்கவும். எழுதப்பட்ட கடதாசித்துண்டுகளைச் சேகரித்து மேசை மீது வைக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடிப் பேச்சு

தானாகவே முன்வரும் ஒவ்வொரு பிள்ளையும் சுருட்டப்பட்ட கடதாசித்துண்டை எடுத்து, அதில் குறிக்கப்பட்டுள்ள பிரச்சினையை வகுப்புப் பிள்ளைகள் கேட்கத்தக்கதாக வாசிக்கும் படி பணிக்கவும். பின்னர் அப் பிரச்சினைக்கு ஆளாகியிருக்கும் நபர் தாமே எனக் கற்பனை பண்ணிக் கொண்டு அது தொடர்பாகச் செய்யப்போவது என்ன என வகுப்பில் வெளிப்படுத்த வேண்டும்.

*(ஒரு பிள்ளைக்கு 02 நிமிட அவகாசம் கொடுக்கவும். ஆறு பேர் வரை மட்டும் சந்தர்ப்பங்களைப் பெறுவது போதுமானது.)*

**கலந்துரையாடல் :**

*(1)* இப் பாடத்தின் வாயிலாக நீர் எதனைக் கற்றுக் கொண்டீர்?

*(2)* தனக்கு நேரிடக்கூடிய சேதம். நட்டம், இன்னல் ஆகிய சம்பவங்களை இட்டு நன்னோக்காகப் பார்க்க வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டோர் கரங்களை உயர்த்தவும்.

*(3)* நீங்கள் கற்றுக் கொண்ட இப் பாடத்தின்படி 'வல்லவன்' என்றால் அவன் எத்தகையவன் என வரைவிலக்கணங் கூறுக. ஒருவன் எத்தகைய பண்புகளால் வல்லவன் ஆகிறான்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் : 2.3
நேரம் : 45 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கரு :**

ஒருவர் நன்னோக்கை ஏற்காத அல்லது வேறுவிதமாகக் கூறுவதானால் எதிர்மறைநோக்கான கருத்தை அல்லது உணர்வை வெளிப்படுத்தினால் அதனை ஊக்குவித்தல் அவருக்கு தீங்கை விளைவிப்பதாக அமையும்.

**எண்ணக்கரு ஆய்வு :**

(1) வெறுப்புக்கு வெறுப்பு, சினத்துக்குச் சினம் வேதனைக்கு வேதனை, ஏமாற்றுக்கு ஏமாற்று என்றவாறான எதிர்மறை பிரதி பலிப்புகளை தவிர்த்தல் நன்று

(2) எதிர்மறைச் சிந்தனை விஷச் சக்கரமாகும். அங்கு ஒவ்வொருவரும் தம்மைத்தாமே அவ் விஷச் சிந்தனையால் ஊட்டப்படுத்திக் கொள்கின்றனர்.

(3) இதனைத் தகர்க்க வேண்டுமெனில் ஒருவர் எதிர்மறை நோக்கை வெளிப்படுத்துகையில் அதற்கு நன்னோக்கான பிரதிபலிப்பை வெளிப்படுத்தலே பொருத்தமாகும்.

**குறிக்கோள்கள்:**

(1) எதிர்மறை நோக்கான கருத்து வெளிப்பாடுகளுக்கு ஊக்க மளித்தல் பிழையானது என்பதை எடுத்துக் காட்டுவர்.

(2) எதிர்மறை நோக்கான வெளிப்பாடுகளுக்கு நன்னோக்கான பிரதிபலிப்புகளைக் குறிப்பிடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நுழைவு :**

எதிர்மறை நோக்குடன் வாழ்வை நோக்குவதைத் தவிர்த்துக் கொள்வதன் முக்கியத்துவத்தை நாம் முன்னர் கலந்துரையாடினோம். எந்தவொரு நபரும் எதிர்மறை எண்ணங்களைத் தவிர்த்துக் கொள்வதுடன் ஏனையோரையும் அத்தகைய எண்ணத்தில் இருந்து விடுவித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இப் பாடத்தின் வாயிலாக நாம் ஏனையோரை இவ்விதமான எண்ணத்தில் நின்றும் விடுவித்துக் கொள்ள எவ்வகையில் உதவலாம் என்பதைக் கற்போம்.

**படி : 1**

கீழே காணப்படுவது கலைஞர்கள் இருவரிடையே நிகழ்ந்த உரையாடலாகும் (கற்பனையே)

| | | |
|---|---|---|
| முதலாம் நபர் | : | இந்த கலைஞர்களுக்கு இடம் இல்லை. |
| இரண்டாம் நபர் | : | அது உண்மை. இந்த நாட்டில் கலையில் ஈடுபட்டு முன்னேறியோர் யார்? |
| முதலாம் நபர் | : | சித்திரம் வரைவதை விட்டு விட்டுக் கருவாட்டுக் கடை வைக்கலாம் என நான் நினைக்கிறேன். |
| இரண்டாம் நபர் | : | நானும் நீண்ட நாட்களாக அவ்வாறு நினைக்கிறேன். இந்த நாட்டு மக்கள் கலையை விளக்கிக் கொள்கிறார்கள் இல்லை. |

நீங்களும் இவ்விதமான சம்பாஷணைகளைக் கேட்டிருக்கிறீர்களா? மேலே குறிப்பிடப்பட்ட உரையாடலில் காணக்கூடிய பண்புகள் எவை?

1ம் நபர் ⇄ 2ம் நபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் நபர் இரண்டாம் தமது எதிர்மறை நோக்கான உணர்வை ஏமாற்றத்தை, வேதனையை, கோபத்தை, கவலையை, விரக்தியைக் கூறுகிறார். இரண்டாம் நபர் அதற்குப் பிரதிபலிப்பாகத் தம் எதிர்மறை நோக்கான உணர்வை வெளியிடுகிறார்.

இத்தகைய உரையாடலின் விளைவு என்னவாக இருக்கும்?

முதலாம் நபருடைய விரக்திக்கு இரண்டாம் நபரது விரக்தி சேர்க்கப்பட்ட தால் அது மேலும் வன்மையடைகிறது. அடுத்தவரது விரக்தி, கோபம், உளச்சிக்கல் துளிர்விட ஊக்குவித்தல் அவருக்குப் புரியும் உதவி ஆகுமா?

அடுத்த எடுத்துக்காட்டைக் கவனியுங்கள்.

| | | |
|---|---|---|
| முதலாம் நபர் | : | எனக்கு உயிர் வாழ்வதிலே வெறுப்பு. |
| இரண்டாம் நபர் | : | அது உண்மைதான். வாழ்க்கை அர்த்தமில்லாதது. |

இரண்டாம் நபரின் அப் பதில் முதலாம் நபரது வெறுப்பை இரட்டிப்பாக்கும். அதன் பெறுபேறாக ஒருவேளை முதலாம் நபர் தற்கொலை செய்து கொள்ள நேரிடின் இரண்டாம் நபரும் அதற்குப் பொறுப்பு ஏற்கவேண்டும் அல்லவா?

சிலவேளை முதலாம் நபர் 'எனக்கு உயிர் வாழ்வதிலே வெறுப்பு' என இரண்டாம் நபரிடம் கூறக் காரணம் தற்கொலை செய்து கொள்ள முன்னர் ஒருவரிடம் வினவிப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் காரணமாக இருக்கலாம். இரண்டாமவரின் வார்த்தைகள் காரணமாக அவரது தற்கொலை முடிவு தவிர்க்கப்பட முடியாதது ஆகலாம்.

இதன்படி ஒருவர் 'நான் அவனைக் கொல்ல நினைத்திருக்கிறேன்' என ஆத்திரத்தோடு கூற, முதலாம் நபரின் நண்பரும், 'செய்ய வேண்டியது அதுதான்' என்று கூறுவாராயின் என்ன சம்பவிக்கும்? எனவே அடுத்தவரது எதிர்மறை மனப்பாங்குகளை விருத்தியாக்கத் தக்க பேச்சுக்கள் தீங்கானவை என நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்தவர் எதிர்மறை நோக்கோடு கதைக்கும் முறைகளை இனங்காணல் மிகப் பிரதானமாகும். அவற்றின் பண்புகள் எவை? (பிள்ளைகளிடத்தில் பதில்களைப் பெறுக.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாதிரி விடைகள் :**

★ விரக்தி
★ அனுதாபம் / சோகம் / மனவேதனை
★ கோபம் / பழிவாங்கும் இயல்பு / பொறாமை
★ நாசகார எண்ணங்கள்
★ சுய அனுதாபம்
★ கையறுநிலை
★ பயம்
★ உளச்சிக்கல் / அமைதியின்மை
★ ஏமாற்றம்

**படி : 2**

ஒருவரது எதிர்மறை மனப்பாங்குகளை அடுத்தவர் விருத்தியாக்கும் பாணியில் கதைக்கும் கோலங்களை நாம் மேலே கண்டு கொண்டோம். ஒருவர் அத்தகைய எதிர்மறை நோக்குடனான கருத்தை அல்லது உணர்வை வெளிப்படுத்தும் போது அவரை அதில் இருந்து விடுவித்துக் கொள்ள நாம் எவ்வாறு உதவலாம் என இப்போது பார்ப்போம்.

**இம் மாதிரிகளைப் பாருங்கள்:**

முதலாம் நபர் : இந்த நாட்டில் கலைஞர்களுக்கு இடம் இல்லை.

இரண்டாம் நபர் : (சற்று நேரம் மௌனமாக இருந்து) என்னால் விளங்கிக் கொள்ள முடியும். நீங்கள் ஒரு கலைஞர் என்ற வகையில் வேதனைப்படுவதை உணர்கிறேன். இருப்பினும் உண்மையான கலைஞருக்கு என்றோ ஒரு நாள் நாட்டில் இடம் கிடைப்பது திண்ணம். எனவே தைரியத்தை இழக்காமல் நாம் பணிபுரிவோம்.

முதலாம் நபர் : தலை நரைக்கும் வரை சித்திரம் வரைந்தது போதும் என்றாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் நபர் : உங்களால் இந்த நாட்டுச் சித்திரக்கலைக்கு ஆற்றப்பட்ட சேவை எவ்வளவு என்பதை நான் அறிவேன். நீங்கள் துணிவை இழக்காது மேலும் வேலை செய்தால் உங்களுக்கு ஓர் இடம் கிடைக்கும்.

இவ்வுரையாடலின் பண்புகள் எவை?

*(1)* முதலாம் நபர் எதிர்மறை நோக்கான கருத்தை / உணர்வை வெளிப்படுத்தல்.

*(2)* இரண்டாம் நபர் அதனைப் புரிந்து கொள்ளலோடு தோழமையுடன் செவிமடுத்து, அவரிடம் நன்னோக்கான பிரதிபலிப்பை வெளிப்படுத்துதல். இதனை இவ்வாறு குறித்துக் கொள்ளலாம்.

முதலாம் நபர் —— − ——→ இரண்டாம் நபர்
←—— + ——

இங்கே இரண்டாம் நபரின் பிரதிபலிப்பில் இரு பகுதிகள் உண்டு.

*(1)* புரிந்து கொள்ளலை உணர்த்தல் (அதாவது : அடுத்தவரது உணர்வுகளை விளங்கிக் கொள்ளலுடன் கிரகித்து,

★ 'ஆம்; என்னால் விளங்கிக் கொள்ள முடியும். நீங்கள் ஒருவிதமான விரக்தியோடு பேசுகிறீர்கள்.

★ 'ஆம். சித்திரக்கலைக்கு எவ்வளவோ சேவை செய்திருந்த போதும் இந்த நாட்டில் உங்களுக்கு ஓர் இடம் கிடைக்காததை இட்டு நீங்கள் வேதனையோடு இருக்கிறீர்கள்'.

★ 'வேறு விதமாகக் கூறுவதாயின், 'நீங்கள் கூறுவது' என்ற வகையில் புரிந்து கொள்ளல், நட்புணர்வு, வரவேற்பளித்தல்)

*(2)* பின்பு அடுத்தவரது எதிர்மறை உணர்வை நிவர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு நன்னோக்கான விடயத்தைச் சுட்டிக் காட்டல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) இரு மாணவர்களை வகுப்பின் முன்னிலைக்கு அழைத்து, ஒருவரைக் கற்றலை வெறுப்பவராகவும் மற்றவரை அக்கருத்துக்கு நன்னோக்கான கருத்தைக் கொண்டவராகவும் இருக்கத்தக்கதாக நடிக்குமாறு செய்விக்கவும்.

**உதாரணம் :**

முதலாமவர் : ராஜன் எனக்கு இப்போது படிப்பில் வெறுப்பு.

இரண்டாமவர் : *(அமைதியாக இருந்து)*

மோகன் உமக்கு ஏதாவதொரு மனவேதனை தரும் பிரச்சினை இருக்கும். இருப்பினும் அப்படியான நிகழ்ச்சி காரணமாக உமது பெறுமதியான படிப்பை நிறுத்துதல் சரியானதா?

(2) மேலும் இரண்டு மாணவர்களை அழைத்து ஒருவர் மற்றவர் தமக்கு இழைத்த தவறுக்காகக் கோபித்து அவரைத் தாக்க முற்படுபவராகவும், அடுத்தவரோ அதற்காக நன்னோக்குக் கொண்ட பிரதிபலிப்பைக் காட்டுபவராகவும் நடிக்கும்படி செய்தல்.

முதலாம் நபர் :

இன்றைக்கும் குமார் எனக்கு அந்தப் பட்டப்பெயரைச் சொல்லிப் பிள்ளைகளோடு சேர்ந்து கேலி பண்ணினான். பாடசாலை விட்ட பின்னர் வீடு செல்லும்போது நான் இன்று குமாரை அடிப்பேன்.

இரண்டாம் நபர் :

*(மௌனமாக இருந்து)* கமல், நீர் ஆத்திரத்தோடு கதைக்கிறீர். உமது வேதனையை என்னால் உணர முடியும். இருப்பினும் பிள்ளைகளின் கேலிக்குப் பதிலாக கேலி பண்ணுவது தானே நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாத்திர நடிப்பு :**

பிள்ளைகள் இருவர் இருவராகச் சோடி சேரும்படி செய்து, முதலாமவர் வெளியிடும் எதிர்மறைக் கருத்துக்கு இரண்டாமவர் நன்னோக்கான பதிலைத் தருபவராகப் பயிற்சியைப் பெற்று முறையே வகுப்பில் ஈடுபடுமாறு செய்க.

**சில மாதிரிகள் :**

- தன்னைப் பற்றி ஏமாற்றமாகப் பேசுதல்.
- தொழில் ஒன்றினைப் பற்றிச் சோம்பல் கொண்டு அதில் இருந்து விலகிக் கொள்ள ஆலோசனை கூறுதல்.
- ஒருவரைப் பற்றிப் பகைமையோடு கதைத்தல்.
- நாட்டைப் பற்றி வெறுப்போடு கதைத்தல்.
- 'களவொன்று செய்வோம்' என்ற விதமாக ஒருவர் தவறான திட்டமொன்றை முன் வைத்தல்.

**கலந்துரையாடல் :**

*(1)* ஒருவர் விரக்தியுடன் / தப்பபிப்பிராயத்துடன் பேசும்போது அதனை ஊக்குவித்தல் என்பதன் கருத்து என்ன?

*(2)* அவ்வாறு தவறான வழிக்குத் தூண்ட ஏனையோரை ஊக்கு வித்தலால் நிகழக்கூடிய தீங்குகள் எவை?

*(3)* நீங்கள் பார்த்த தொலைக்காட்சி நாடகமொன்றில் இருந்து அத்தகைய காட்சி ஒன்றை நடித்துக் காட்டுங்கள்.

*(4)* ஏனையோரை உணர்த்தல் என்பது யாது?

*(5)* எதிர்மறை நோக்கை / உணர்வை வெளிப்படுத்திய ஒருவருக்கு அடுத்தவர் நன்னோக்கான பதிலை அளிக்கும்போது அவரில் என்ன உணரப்படும் என நீங்கள் நினைக்கிறீர்கள் ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) உமது சமயத்தில் இடம் பெறும் உயர்ந்த கதாபாத்திரமான ஒருவரிடம் எதிர்மறை நோக்குடன் வெளிப்படுத்தப்பட் கருத்துக்கு அன்னார் எவ்விதத்தில் நன்நோக்காகப் பதில் அளித்தார் என்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தைக் குறிப்பிடவும்.

உதாரணம் : புத்தர் வரலாற்றிலிருந்து,

(1) அங்குலிமாலாவைக் கட்டுப்படுத்திய சந்தர்ப்பத்தின்போது,

(2) கிசாகோதமி, இறந்த குழந்தையோடு புத்தரை காணச் சென்றபோது,

யேசுநாதர் பாத்திரத்தில் :

பாவம் செய்த காரணத்துக்காக ஒரு பெண்ணை யூதர்கள் கல்லெறிந்து கொல்ல எத்தனித்தபோது,

(3) இன்று நாம் கற்றுக் கொண்ட நன்னோக்கான பிரதிபலிப்பை நம் அன்றாட வாழ்வில் பயின்று கொள்ள விரும்பும் பிள்ளைகள் கரங்களை உயர்த்துங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்குகள் மீது கருணை காட்டுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்கும் விலங்குகளுக்கும் இடையே இருக்கத்தக்க தொடர்புகள்.

பாடம் : 3.1

நேரம் : 50 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கருக்கள் :**

(1) அடிப்படையில் விலங்குகள் பெரும்பாலும் எமக்குச் சமமாகவே இருக்கின்றன.

(2) மனிதனும் விலங்குதான்.

(3) இவ்வுலகில் வாழும் உரிமையை விலங்குகள் கொண்டிருக்கின்றன. நாம் அவ்வுரிமைக்கு மதிப்பளிக்க வேண்டும்.

(4) இம்சிக்கும் வகையில் விலங்குகளைக் கொல்லாமல் சில விலங்குகளால் ஏற்படக் கூடிய தீமைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

(5) நாம் காத்துக் கொள்ள வேண்டிய பெறுமதியான இயற்கை வளமே விலங்குகள்.

**குறிக்கோள்கள் :**

(1) எமக்கும் விலங்குகளுக்கும் இடையே உள்ள அடிப்படை ஒற்றுமைகளைக் குறிப்பிடல்.

(2) எமக்குத் தொல்லை தரும் விலங்குகளை விலங்கியல் ரீதியாகக் கட்டுப்படுத்தக் கூடியமைக்கான உதாரணங்களைக் குறிப்பிடல்.

(3) விலங்குகள் எம்மால் பாதுகாக்கப்பட வேண்டிய இயற்கை வளம் என்பதைப் புரிந்து கொள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நுழைவு:**

'மானிடராகிய எமக்கும் விலங்குகளுக்கும் இடையே இருக்க வேண்டிய தொடர்பை விளங்கிக் கொள்ள நாம் முயல்வோம். இவ்வாய்வினை நீங்கள் மிகவும் விரும்பும் விலங்கு வகை எதுவெனப் பார்ப்பதன் மூலம் ஆரம்பிப்போம்'.

*(பிள்ளைகள் தம் சொந்த விருப்பின்படி குறிப்பிடும் விலங்குகளின் பெயர்களைப் பெற்று அவற்றைக் கரும்பலகையில் எழுதவும்.)*

**பாடவிடயத்தைச் சமர்ப்பித்தல்** *(03 நிமிடங்கள்)*

**படி : 1**

*(1)* எமக்கும் விலங்குகளுக்கும் இடையே உள்ள ஒற்றுமைகள் எவை?
*(பிள்ளைகளிடம் விடைகளைப் பெற்றுக் கொண்டு கரும்பலகையில் எழுதுக.)*

எதிர்பார்க்கப்படும் பதில்கள் :

★ மனிதர் உயிர்வாழ விரும்புகிறார்கள். விலங்குகளும் உயிர்வாழ விரும்புகின்றன.

★ நாம் வேதனையை உணர்கிறோம். விலங்குகளும் வேதனையை உணர்கின்றன.

★ பசி என்பது மனிதருக்கும் விலங்குகளுக்கும் பொதுவானது.

★ மனிதரைப் போன்று விலங்குகளும் நோய்வாய்ப்படு-கின்றன.

★ மானிடப் பெற்றோரைப் போன்று விலங்குகளும் தம் பிள்ளைகள் மீது அன்பு செலுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விலங்கியல் சார்ந்த பொதுப் பண்புகள் :**

சுவாசம், உணவு கொள்ளல், வளர்ச்சி போன்ற இயல்புகளைக் கலந்துரையாடலில் சேர்த்துக் கொள்ளலாம். இவ்வாறு கலந்துரையாடிய விடயங்களில் இருந்து,

- ★ மனிதர் கூட விலங்குகள்தான். எனவே விலங்குகள் எம் தூரத்து உறவினர்.
- ★ விலங்குகள் அற்ற பூமி பாழடைந்ததாகும்.
- ★ விலங்குகளுக்குள் வல்லமை உடையவன் மனிதனே. ஆதலால் வல்லமை அற்றதான விலங்குகளைக் காப்பது அவனது கடமையாகும்.
- ★ நாம் விலங்கு வாழ்வை மதிக்க வேண்டும்.
- ★ மனிதனைப் போலவே விலங்கும் இப் புவியில் வாழும் உரிமையை இயற்கையாகப் பெற்றிருக்கிறது.

போன்ற முடிவுகளுக்கு வரத்தக்க முயற்சிகளை மேற்கொள்ளவும்.

*(10 நிமிடங்கள்)*

**படி : 2**

மனிதனுக்கு தீங்கு விளைவிக்கும் விலங்குகள் பற்றிய பிரச்சினையை அடுத்ததாக நாம் கலந்துரையாடுவோம்.

(நுளம்பு, ஈ, விஷப்பாம்பு, கறையான், எலி, பயிர்களைச் சேதப்படுத்தும் பூச்சி புழுக்கள் ஆகிய மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கும் உயிரினங்களின் பெயர்களைப் பிள்ளைகள் வாயிலாகப் பெற்றுக் கொள்ளவும்.)

இவற்றைப் பற்றி நாம் செய்ய வேண்டுவன எவை? அவ்விதமான விலங்குகளைக் கொன்று விடுவதால் மட்டும் அத் தொல்லைகளை தீர்த்து விட முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய உயிரினங்களை அழித்து விடுவதற்குப் பதில் அவற்றின் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம். பெரும்பாலும் அவை அளவுக்கதிகமாகப் பெருகக் காரணம் மனிதன் சுற்றாடலை மாசுபடுத்துவதே ஆகும். உதாரணங்கள் : சேறு கொண்ட குழிகள், நீர்க்குட்டைகள், நீர் நிரம்பிய சிரட்டைகள் போன்றவை காரணமாகவே நுளம்புகள் பெருகுகின்றன. சமையலறையில் கண்டபடி உணவுப் பண்டங்களைப் போட்டுவிடுவதால் ஈக்களும், எலிகளும் பல்கிப் பெருகும். ஒருவரையறைக்குள் அத்தகைய உயிரினங்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் உரிமை மனிதனுக்கு உண்டு.



சித்திரம் 5

விலங்குகளற்ற உலகம் சூனியமாகிவிடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் விலங்குகளால் பெறும் பயன்களை அடுத்து நோக்குவோம். பிள்ளைகளிடமிருந்து எதிர்பார்க்க வேண்டிய பதில்கள்:

★ பசுக்களின் பால்

★ செம்மறியாடுகளின் உரோமம்

★ தேனீக்களின் தேன்

இத்தகைய பொருளியல் அல்லது பௌதீகப் பயன்களை விட விலங்குகளால் உள்ள வேறு பயன்கள் மீது பிள்ளைகளது கவனத்தைச் செலுத்து விக்கவும்.

உதாரணங்கள் :

- வனவிலங்குகள், பறவைகள், வண்ணத்துப்பூச்சிகள் போன்றவைகளால் சுற்றாடல் அழகுறல்.

- விலங்குகள் மூலம் கிடைக்கும் பிரியமான தொடர்புகள். உதாரணங்கள்: நாய், பூனை, செல்லமாக வளர்க்கப்படும் மீன்கள்.

- விலங்குகளது பழக்க வழக்கங்களை அவதானிப்பதால் மனிதன் தன்னைப் பற்றி பெறக்கூடிய சுயவிளக்கம்.

- விலங்குகளைப் பார்ப்பதால் மனிதன் இயற்கையை மேலும் அண்மிக்க இயலும் என்பது.

- செல்லப் பிராணிகளைக் காண்பதும் அவற்றோடு பழகுதலும், மனத்தில் தோன்றும் களைப்பு, கவலை என்பவற்றை போக்க உதவும்.

இக் கலந்துரையாடல் வாயிலாக,

மனிதனால் விலங்குகள் பாதுகாக்கப்பட்ட வேண்டிய பெறுமதிமிக்க இயற்கை வளமே என்ற முடிவுக்கு வருக.

(15 நிமிடங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மதிப்பீடு :**

இப்பாடத்தின் வாயிலாக நீங்கள் கற்றுக் கொண்ட மிகப் பிரதானமான விடயத்தை ஒரு கடதாசித்துண்டிலே உங்கள் பெயரையும் குறிப்பிட்டு எழுதுங்கள் எனக் கூறுக. பிள்ளைகளால் எழுதப்பட்ட கடதாசித்துண்டுகளைச் சேகரித்து, எல்லோரும் கேட்கத்தக்கதாக வாசித்துப் பாராட்டவும்.

*(10 நிமிடங்கள்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்குகளை இம்சித்தல்.

பாடம் : 3.2

நேரம் : 40 நிமிடங்கள்

**குறிக்கோள்கள் :**

*(1)* மனிதனால் விலங்குகளுக்கு ஏற்படுத்தப்படும் துன்புறுத்தல்களை அறிமுகஞ் செய்தல்.

*(2)* அத்தகைய இம்சித்தல்களின் தன்மை தொடர்பாக கவனத்தைச் செலுத்துவித்தல்.

*(3)* அத்தகைய இம்சித்தல்களைத் தவிர்த்துக் கொள்ளலில் தமது பங்களிப்பை இனங் காணத் தூண்டுதல்.

**நுழைவு :**

மனிதனது கொடூரத்தினால் தினமும் இலட்சக்கணக்கிலான அப்பாவிப் பிராணிகள் பலியாகின்றன. மனிதனது இக் கொடூரத் தன்மையை நாம் இனங் காண வேண்டும். அவன் பல்வேறு வழிகளால் பலவிதமான நோக்கங்களுக்காக விலங்குகளைத் துன்புறுத்தல்களுக்கும் கொலைக்கும் உட்படுத்துகிறான்.

**பாட விடயம்**

**படி : 1**

மனிதன் விலங்குகளை இம்சிக்கும் பல்வேறு முறைகளை நாம் இனங்கண்டு கொண்டோம்.
(பிள்ளைகளோடு இணைந்து ஒரு பட்டியலைக் கரும்பலகையில் உருவாக்கவும்.)

உதாரணங்கள் :

★ உணவுக்காகக் கொல்லல்.
உதா: மாடு, ஆடு, கோழி, மீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ தோல், கொம்பு, இறகு போன்ற உடற் பகுதிகளைப் பெற்றுக் கொள்ளுவதற்காகக் கொல்லுதல்.
உதாரணம் :- மான், புலி, காண்டாமிருகம், மயில்

★ விஞ்ஞானப் பரிசோதனைகளுக்காக இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலும், கொல்லுதலும்.
உம் :- தவளை, குரங்கு, முயல், எலி.

★ பயிர்ச்செய்கையைக் காத்துக் கொள்வதற்காகக் கொல்லுதல்.
உதா :- யானை

★ பொழுதுபோக்கின் பொருட்டுக் கொல்லல்.
உம்:- வனவிலங்குகள்

★ உயிரைக் காத்துக் கொள்வதற்காகக் கொல்லுதல்.
உம் :- பாம்புகள்

★ சுகாதாரத் தேவைகளுக்காகக் கொல்லல்.
உம் :- நாய்கள்.

★ கைவிட்டுவிடல்.
உம் : ஒரு வீட்டை விட்டுச் செல்லும்போது நாய்களையும் பூனைகளையும் விட்டுச் செல்லல். நாய், பூனைக்குட்டிகளை தெருவோரங்களில் கைவிட்டு விடல்.

★ வேலையில் ஈடுபடும் பிராணிகளின் தாகம், பசி போன்ற தேவைகளைக் கவனியாது இருத்தலும் துன்புறுத்தலும்.

★ பலி கொடுத்தலுக்காகக் கொல்லுதல்.

(05 நிமிடங்கள்)

**படி : 2**

மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விலங்குகள் தொடர்பான இம்சைப் படுத்தல் முறைகள் பற்றிக் கலந்துரையாடவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ உணவுக்காக விலங்குகளைக் கொல்லல்.

- இலட்சக்கணக்கில் தினமும் மாடுகள், ஆடுகள், கோழிகள், செம்மறியாடுகள், மீன்கள் கொல்லப்படுகின்றன.

- கொல்லும்போது பிராணிகளின் வேதனையைக் குறைப்பதற்காகச் சில நாடுகளில் ஊசியேற்றல் மூலம் அறிவிழக்கச் செய்து கொல்லும் முறை கையாளப்படுகிறது. இவ்வாறாக வேதனை-யைக் குறைத்துக் கொல்லுதல் மனிதாபிமானக் கொல்லல் எனப்படுகிறது.

- இலங்கையில் மாடுகளைக் கொல்லும்போது கழுத்தின் அரைவாசிப் பகுதியை முதலில் வெட்டிக் குருதியை வெளியேறச் செய்து பின்னர் மீதிப் பகுதியை வெட்டலே கையாளப்படு-கிறது. இதுமிக வேதனையான கொடூரமான கொலை முறையே.

- எமது நாட்டில் கோழிகள் கூடக் கொடூரமான முறையிலே தான் கொல்லப்படுகின்றன. கழுத்துத் துண்டிக்கப்பட்ட கோழியின் உயிர் பிரியும் முன்னரே அது கொதிநீர் கடாரத்துக்குள் போடப்படும். இவ்வாறு செய்வதால் அதன் இறகுகளைச் சுலபமாக அகற்றலாம்.

- இறைச்சிக்காகக் கோழிகளைச் சந்தைப்படுத்தக் கொண்டு செல்லும்போதும் கூடுகளில் அடைக்கப்படும் போதும் மிகக் கவனமற்ற முறையே கையாளப்படுகிறது.

- மீன்களைப் பிடிக்கும் போது சினை கொண்ட மீன்களும் பிடிபடுகின்றன.

விஞ்ஞானப் பரிசோதனைகளின்போது விலங்குகளுக்கு நேரிடும் இம்சைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மருந்துகளைப் பரீட்சித்துப் பார்க்க பல்வேறு இரசாயனப் பொருட்களை ஊசியேற்றல்.

- வாசனைப் பொருட்கள், கிறீம் வகை போன்ற வற்றை உற்பத்தி செய்யும்போது அவற்றைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காகவும் விஷத்தன் மையை அறிவதற்கும், முயல்களின் கண்களில் விட்டு கண்கள் குருடாகின்றனவா எனப் பார்ப்பர்.

- பல்வேறு உயிரியல் பரிசோதனைகளுக்காகப் பிராணிகளின் மூளையின் பகுதிகளையும் உடல் உறுப்புகளையும் அகற்றுதல்.

- பாடசாலைகளில் உயிரியல் பாடத்தைக் கற்ப தற்காகத் தவளைகளையும் எலிகளையும் கொல்லுதல்.

- குரங்குகளைத் திடீர் விபத்துகளுக்கு உட்படுத் தித் திடீர் மரணங்கள் தொடர்பாகக் கற்றல்.

உடல் உறுப்புகளைப் பெற்றுக் கொள்ளப் பிராணிகளைக் கொல்லுதல்.

- காண்டாமிருகத்தின் கொம்புகளைப் பெறும் பொருட்டு அவற்றை வேட்டையாடல். இதனால் அவை அழிந்துவிடும் நிலைமை தோன்றியுள்ளமை.

- யானைத் தந்தங்களைப் பெற்றுக் கொள்வதற் காக யானைகளைக் கொல்லல். சில நாடுகள் யானைகளின் அழிவைத் தடுப்பதற்காக யானைத் தந்தங்களினால் செய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதியையும், வியாபாரத் தையும் சட்டங்களால் தடுத்திருக்கின்றன.

விளைநிலங்களைப் பாதுகாத்துக் கொள்ள விலங்குகளைக் கொல்லுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விசேடமாக எமது நாட்டில் விளைநிலங்களைக் காத்துக் கொள்வதன் பொருட்டே யானைகள் கொல்லப்படுகின்றன. அத்தகைய கிராமப் புறங்களுக்கு அண்மையில் நடமாடும் யானைகளை புகலரண்களை நோக்கிக் கொண்டு செல்லல், புதிய புகலரண்களைத் தோற்றுவித்தல் போன்ற வழிகளால் இப் பிரச்சினைக்கான தீர்வைக் காணலாம்.

பொழுதுபோக்குக்கான விலங்கு வேட்டை.

- முன்பு பிரபல்யமாக இருந்த விலங்கு வேட்டை அதிஷ்ட வசமாகத் தற்போது நம் நாட்டில் பெரும்பாலும் குறைந்திருக்கிறது.

- இலங்கையில் பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் யானை வேட்டை ஆங்கிலேய ஆட்சியாளரின் பிரபல்யமான பொழுது போக்காக இருந்தது. அக் காலத்தில் ஒரு வருடத்தில் 3500 யானைகள் வரை இவ்வாறு கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

உயிரைக் காத்துக் கொள்ளும் பொருட்டுப் பிராணிகளைக் கொல்லல்.

- இவ்வகையில் பெரும்பாலும் பாம்புகளே பலியாகின்றன. சிலர் தம் வீடுகளுக்கு வரும் விஷப்பாம்புகளைப் பிடித்து மனித நடமாட்டம் அற்ற இடங்களுக்குக் கொண்டு சென்று விட்டு விடும் அளவுக்குக் கருணை கொண்டவர்களாக இருக்கிறார்கள். பெரும்பாலும் மனிதர்களால் கொல்லப்படுவன விஷமற்ற பாம்புகளே. இது பரிதாபத்துக்கு உரியதொன்றாகும்.

சுகாதாரத் தேவைகளுக்காக விங்குகளைக் கொல்லுதல்.

- நாய்களால் தோற்றும் விசர் நோயைத் தடுப்பதற்காக வீதிகளில் அலையும் நாய்களைப் பிடித்து விஷ வாயுவைக் கொண்டு கொலை செய்கிறார்கள். கொழும்பு நகரில் மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடமொன்றில் மூவாயிரம் தொடக்கம் நாலாயிரம் வரையிலான நாய்கள் இவ்விதமாகக் கொல்லப்படுகின்றன. விலங்கியல் துறை விஞ்ஞானிகள் இம் முறையால் நாய்கள் மிக வேதனைக்கு உள்ளாகின்றன எனக் கருதுகிறார்கள். பெண் நாய்களுக்குக் கருத்தடை, ஆண்நாய்களுக்குக் விசர் நோய்த்தடுப்பு ஊசியேற்றல், தெரு நாய்களுக்குப் புகலிடங்களை அமைத்தல் போன்ற வழிகளால் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

செல்லப் பிராணிகளை கைவிட்டுச் செல்லல்.

- மனிதர் தம் வீடுகளை விட்டுச் செல்கையில் செல்லமாக வளர்த்த நாய், பூனை போன்ற பிராணிகளை இரக்க மின்றி விட்டுச் செல்கிறார்கள். இதனால் வீட்டு விலங்காக வாழ்ந்து பழகிய அவை பெரிதும் பாதிக்கப்படுகின்றன.
- நாய்க்குட்டிகளையும் பூனைக்குட்டிகளையும் பிறர் வீடுகளுக்கு அருகில், வழிபாட்டுத் தலங்களுக்கு அண்மையில், மற்றும் வீதிகளில் விட்டுச் செல்லல் என்பன பெரும்பாலும் நடைபெறுகின்றன.
- கருத்தடை விலங்கில்லங்கள் அமைத்தல் போன்றவற்றின் வாயிலாக இதனைத் தீர்த்துக் கொள்ளலாம்.

பலியிடுவதற்காக விலங்குகளைக் கொல்லல்.

- எல்லா மதத் தாபகர்களும் ஜீவகாருண்யத்தைப் உயர்வுபடுத்தி இருக்கையில் பலியின் பொருட்டுப் பிராணிகளைக் கொல்வது பரிதாபத்துக் குரியதொன்று. இருப்பினும் இச் செயல் தற்போது பெரும்பாலும் குறைந்திருக்கிறது.

(30 நிமிடங்கள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி : 3

**செயற்பாடு :**

எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒவ்வொரு தாளை அளித்து, 'மனிதர்களால் விலங்குகளுக்கு இழைக்கப்படும் துன்புறத்தல்களைத் தடுப்பதற்கு நான் ஒரு மனிதன் என்ற அடிப்படையில் என்ன செய்ய என்ன செய்ய முடியும் 'என்ற தலைப்பைக் கரும்பலகையில் எழுதித் தங்களால் இயன்ற வரை செய்யக்கூடிய செயல்களை எழுதும்படி ஆலோசனை வழங்கவும்.

(05 நிமிடங்கள்)

**மதிப்பீடு :**

தாம் எழுதியவற்றை ஒவ்வொரு பிள்ளையாக உரத்து வாசிக்கச் செய்யவும்.

(10 நிமிடங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதங்கள் கற்பிக்கும் ஜீவகாருண்யம்

பாடம் : 3.3

நேரம் : 60

**அடிப்படை எண்ணக்கரு :**

ஜீவகாருண்யம் பௌத்தம், கிறிஸ்தவம், இந்து, இஸ்லாம் ஆகிய எல்லா மதங்களிலும் போற்றப்படும் தருமமாகும்.

**குறிக்கோள்கள் :**

*(1)* பௌத்த, கிறிஸ்தவ, இந்து, இஸ்லாம் சமயங்களில் விலங்குகள் மீதான பரிவு பற்றிக் கற்பிக்கப்படுவன தொடர்பாகக் கலந்துரையாடல்.

*(2)* விலங்குகளுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படையான உயிர்வாழும் உரிமையைக் குறிப்பிடுதல்.

*(3)* விலங்குகளை இம்சித்தல் குற்றம் என்பதைத் தர்க்க ரீதியாக குறிப்பிடுதல்.

**நுழைவு :**

விலங்குகளை இம்சிப்பதைத் தவிர்த்துக் கொள்ளலும், அவற்றுக்கு கருணை காட்டலும் பற்றிப் பல்வேறு சமய தாபகர்கள் கற்பித்துள்ள போதனைகளை நாம் கற்போம்.

**பாடவிடயம் : பௌத்த சமயமும், ஜீவகாருண்யமும்**

'பாணாதிபாதா வேரமணி சிக்காபதங் சமாதியாமி' என்பது பௌத்த வாழ்க்கை முறையின் முதலாம் கட்டளை. இதன் விளக்கம் : உயிர்களை அகாலத்தில் துண்டிப்பதில் / கொலை செய்வதில் நின்றும் விலகி நிற்பதாகவும் அதனைப் பேணுவதாகவும் உறுதியளிப்பதாகும். மனிதனதும் ஏனைய உயிர்களினதும் வாழ்வுக்கு மதிப்பளிக்கவும் அவ்வெல்லா உயிர்களினதும் வாழும் உரிமையை ஏற்கவும் காக்கவும் அதன் வாயிலாக பௌத்தன் இணங்குகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விலங்கு வியாபாரம், இறைச்சி வியாபாரம் ஆகியன பௌத்தன்தவிர்த்துக் கொள்ள வேண்டிய அறமற்ற ஐந்துவகை வியாபாரங்களில் ஒன்று.

- ஒரு தாய் தன் ஒரே மகளை எவ்வாறு தன் உயிர் போல் காத்துக் கொள்கிறாளோ அவ்வாறே எல்லா உயிரினங்கள் மீதும் அளவற்ற அன்பைக் காட்டுதல் வேண்டும் என்பது கரணீயமெத்த சூத்திரத்தில் வரும் புத்தர் வாக்காகும்.

மேலும்,

*''எல்லா உயிர்களும் சுகங் காணுக!*

*பயமின்றித் திகழ்க!*

*மகிழ்ச்சி கொண்டோர் ஆகுக!*

*பயப்படும் அல்லது பயப்படாத சகல உயிர்களும் நீளமான அல்லது பருமனான அல்லது மத்திய உடலுள்ள உயிர்களும், நடுத்தர அளவிலான அல்லது குறுகிய அல்லது சிறியதான சகலவிதமான உயிர்களும் புலனாகும் அல்லது புலனாகாத சகல உயிர்களும் பிறந்த அல்லது பிறக்காத சகல உயிர்களும் சுகம் பெறுக!''*, என்பதும் கரணீயமெத்த சூத்திரத்தில் வரும் பிரார்த்தனைச் சுலோகமாகும்.

இலங்கைக்கு பௌத்த சமயத்தைக் கொண்டு வந்த மகிந்த பிக்கு அவர்கள் தேவநம்பியதீச மன்னனுக்கு இவ்வாறு உரைத்ததாக மகா வம்சத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது:

'மன்னரே, உங்களைப் போலவே இந் நாட்டில் உள்ள மனிதருக்கும் மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் விரும்பிய இடத்தில் வாழவும் விரும்பிய இடத்துக்குச் சென்று வரவும் சமமான உரிமை உண்டு. நீங்கள் அவர்களுக்குப் பொறுப்பாளி மட்டுமே.

இந்தியாவில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த அசோக சக்கரவர்த்தி தம் கல்வெட்டு ஒன்றில் இவ்வாறு குறிப்பிடுகிறார் :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அபிஷேகத்தின் இருபத்தாறாம் ஆண்டில் என்னால் மேற் குறிப்பிடப்படும் விலங்குகளைக் கொல்லல் விலக்கப்படு-கிறது. கிளி, நாகணவாய், அருணப்பட்சி, சக்வாலிஹினி, அன்னம், எருது, கோலாடன், வெளவால், எறும்புகளின் அரசி, தண்டிமீன், அனஷ்திக மச்சம், நதி நண்டு, சமுலமச்சம், ஆமை, முள்ளம் பன்றி, அணில், சிமலன், புள்ளிமான், மாடப்புறா, நாட்டு மாடப்புறா பயன்பெற அன்றி உணவுக்காகப் பெறத் தகாத அனைத்து விலங்குகளும் இவையே.

மேலும் கர்ப்பந் தரித்தனவும் (சேய்களுக்குப்) பாலூட்டு-வனவும் ஆன பசுக்களையும் பன்றிகளையும் கொல்லல் ஆகாது. ஆறு மாதங்களிலும் குறைந்த வயதினை உடைய கன்றுகளை அல்லது குட்டிகளைக் கொல்லுதல் விலக்கப்-படுகிறது. சேவல்களைக் கொல்லுதல் கூடாது. உயிரினங்கள் உள்ள காடுகளை எரித்தல் ஆகாது. பயனற்றதாக அல்லது விலங்குகளைக் கொல்லும் நோக்கத்துக்காகக் காட்டுத் தீயை ஏற்படுத்துதல் கூடாது. ஒரு விலங்கு மற்றொரு விலங்கில் தங்கி வாழ்தல் விலக்கப்படுகிறது. பூரணை தினங்களில் மீன் பிடித்தல், விற்பனை செய்தல் என்பன விலக்கப்படுகின்றன. *(கற்றூண் 5)*

### கிறிஸ்தவ சமயமும் ஜீவகாருண்யமும்

புனித பைபிளில் தோற்றம் பற்றிய பகுதி (1.20 - 23)

அதன் பின்னர் ஆண்டவர், நீரை எண்ணிலடங்கா வாழும் உயிரினங்களால் மலிந்து விடத்தக்கதாகுக எனவும் பறவைகள் புவியின் உயரத்தே வானத்தின் ஊடே பறந்து செல்வதாகுக எனவும் மொழிந்தார். அவ்வாறே ஆயிற்று. இவ்விதமாக ஆண்டவர் பாரிய திமிங்கலங்களையும் அங்கு மிங்குமாக நீந்திச் செல்லும் எண்ணிலடங்கா நீர் வாழ் விலங்குகளையும் எண்ணிலடங்காத பறவைகளையும் படைத்தார். அது வனப்பானது என்பதை ஆண்டவர் கண்டார். மேலும் ஆண்டவர் அவற்றை ஆசீர்வதித்து அவை பல்கிப் பெருகி வளர்ச்சி அடைந்து கடல்நீர் பூராவும் பரவும் படியும் பறவைகள் பாரில் பெருகக் கடவது எனவும் கூறினார். மாலை மறைந்து காலை உதித்தது. அது ஐந்தாம் நாளாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1.28 - 31) கடவுள் அவர்களை ஆசீர்வதித்து நீங்கள் உடலழகினைப் பெற்று மேலும் வளர்ச்சியடைந்து புவி முழுதும் பரந்து அதனை ஆக்கிரமித்துக் கொள்ளுங்கள். நீரில் மீன்கள் மட்டிலும் வானில் பறவைகள் மட்டிலும் தரையிலே நடமாடும் எல்லா மிருகங்கள் மட்டிலும் உங்களது ஆதிக்கத்தைச் செலுத்துங்கள் என ஆண்டவர் கூறினார். மேலும் அவர் நிலம் பூராவும் தானியத்தை வழங்கத்தக்க புல் பூண்டுகளும் வித்துக்களைக் கொண்ட பலன் தரும் மரங்களும் உங்களுக்காகவே ஆகுக! எனினும் புவியில் உள்ள எல்லா மிருகங்களுக்கும் வான்பறவைகளுக்கும் ஊர்வனவுக்கும் மற்றும் எல்லா வாழும் விலங்குகளுக்கும் உணவாகும் பொருட்டுப் பசுமையான கீரை வகைகளை அளிக்கிறேன்.'' என்றார். அவ்வாறே ஆயிற்று. ஆண்டவர் தாம் படைத்து அருளிய யாவற்றையும் இரசித்து அவை மிக அழகானவை எனக் கண்டார். மாலை ஆயிற்று. காலை பிறந்தது. அது ஆறாவது நாளாகவிருந்தது.

(புனித லூக்கா சுவிசேஷம் 12 - 24) காகங்களை எண்ணிப் பாருங்கள். அவை விதைப்பதும் இல்லை. அறுவடை செய்வதுமில்லை. அவற்றுக்குக் களஞ்சியங்களும் இல்லை. பண்டகசாலைகளும் இல்லை, எனினும் ஆண்டவர் அவற்றைப் போஷிக்கிறார். நீங்களோ பறவைகளை விடவும் எவ்வளவு மேலானவர்கள்?

விலங்குகள் மீது மிகுந்த அன்பைக் காட்டிய படியால் புனிதர் ஆனவரே பிரன்சிஸ் அசிசி என்பவர். கத்தோலிக்க மதத்தின் ஜீவகாருண்யத்தை முன்மாதிரி காட்டிய உத்தமர் அவரே. விலங்குகளைத் தம் சகோதரராகக் கருதிய அவர் அவற்றின் மீது கௌரவத்தையும் அன்பையும் காட்டினார்.

## இஸ்லாம் மதமும் ஜீவகாருண்யமும்

புனித குர் - ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முகமது நபி அவர்கள் விலங்குகள் மீது கருணை காட்டுதல் தொடர்பாக வெளியிட்ட சில கருத்துக்கள் :

★ பேசவியலாத விலங்குகளைக் கவனிக்கும் போது ஆண்டவன் மீது பயங்கொள்வார்களாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ''விலங்குகளுக்கு நன்மை புரிவதாலும் அவை பருக நீர் வழங்குவதாலும் எமக்கு அருள் கிடைக்குமா?'' என வினவைப்பட்ட வினாவுக்கு, ''உண்மையாகவே கூறுகிறேன். வாழும் எந்தவொரு விலங்குக்கும் புரியும் கருணையான செயலுக்கு ஆண்டவனது அருள் கிடைக்கும்'' என நபி அவர்கள் கூறினார்கள்.

★ உண்மையாகவே ஆண்டவனிடத்தில் நூறு அன்புகள் உண்டு. அவற்றில் ஒன்றை அவர் மனிதரிலும் மிருகங்களிலும் இத் தரையின் மீது நடமாடும் எல்லா விங்குகளிலும் அருளியுள்ளார். அதன் வாயிலாக அவர்கள் ஒருவரில் ஒருவர் கருணை கொண்டும் ஒருவர் தவறை ஒருவர் மன்னிப்பவர்களாகவும் விளங்குகிறார்கள். காட்டு விலங்குகளும் அதனாலேதான் அவற்றின் குட்டிகளிடத்தில் கருணை கொண்டு இருக்கின்றன. இறுதித் தீர்ப்பு நாளில் தம்மால் படைக்கப்பட்ட எல்லா விலங்குகள் மீதும் கருணை கிடைக்கும் பொருட்டுத் தொண்ணூற்றி ஒன்பது அன்புகளைத் தம்மில் தங்க வைத்துக் கொண்டுள்ளார்.

★ மனித வாழ்வைப் போன்றே விலங்கு வாழ்வும் ஆண்டவன் முன்பாக ஒரே மட்டத்தில் அமையும். மானிட வர்க்கத்தோடு ஒத்ததான விலங்குகள் புவியிலேனும் பறந்து திரியும் பறவைகளான வானிலேனும் இல்லை. உங்களைப் போலவே அவ் விலங்குகளும் ஆண்டவனை நோக்கி மீண்டும் செல்லும்.

**இந்துமதமும் ஜீவகாருண்யமும்**

★ நிலத்தில், வானத்தில் அல்லது நீரில் வாழும் எந்தவொரு உயிருக்கேனும் இம்சை புரியாதீர்.

- யசுர்வேதம்

★ இரு கால்களைக் கொண்ட, நான்கு கால்களைக் கொண்ட எந்த வகையிலான விலங்குகளையும் அவற்றின் உணவு, நீர் ஆகியவற்றையும் காத்தருள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை எம்மோடு அளவிலும் பலத்திலும் வளர்க! கடவுளே எவர்க்கேனும் இம்சை புரிவதில் நின்றும் எம்மைத் தவிர்த்துக் கொள்ளும்.

- இருக்கு வேத சம்ஹிதா
*10.37.11*

★ தியானம் புரியும் உத்தம யோகியரும் எல்லா உயிர்கள் மீதும் அக்கறை கொண்டு வாழ்ந்து அவற்றைக் காப்போரே.

- அதர்வ வேத சம்ஹிதா

★ கடவுள் உங்களுக்கு அருளிய உடலைக் கடவுள் படைத்த விலங்குகளைக் கொல்லப் பயன்படுத்தா-தீர்கள்.

- யசுர்வேதம்

★ சுவர்க்கத்தில் சாந்தி நிலவுக! ஆகாயத்தில் சாந்தி நிலவுக! பூமியில் சாந்தி நிலவுக! தாவரங்கள் ஆகிய வற்றிலும் சாந்தி நிலவுக! கடவுளிடத்தில் சாந்தி நிலவுக! பிராமணரில் சாந்தி நிலவுக! எல்லோரும் என் மீது தோழமையோடு பார்வையைச் செலுத்துவார்க ளாக! நானும் எல்லோரையும் தோழமைக் கண்க ளோடு பார்ப்பேனாக! நாமெல்லோரும் ஒருவரை ஒருவர் தோழமைக் கண்களோடு பார்ப்போமாக!

- தக்லயசுர் வேத சம்ஹிதா

★ இப் புவியினில் எந்தவொரு விலங்கும் வேதனையை அனுபவிக்காது இருப்பதாகுக!

★ அஹிம்சை என்பது எந்தவொரு உயிருக்கும் எச் சந் தர்ப்பத்திலேனும் தம் மனத்தால், சொல்லால், உடலால் எந்தவொரு வேதனையையும் அளிப்பதைத் தவிர்த்துக் கொள்தலே ஆகும்.

- சந்தில்ய உபநிசத்

★ கருணை என்பது எம் இதயங்களை எல்லோர் மீதும் இளகச் செய்கிறது.

- திருக்குறள் - 74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ தமது ஊனைப் பெருக்குதற்காக பிறரது ஊனைப் புசிப்பவரில் எவ்விதம் உண்மையான பரிவு தோன்றும்?

- திருக்குறள் - 2.51

★ ஊன் சுவையை நாடும் ஒருவரது இதயம் எஃகினால் ஆன இதயம் போன்றது. அதனைக் கடவுள் மீது வழிப்படுத்த இயலாது.

- திருக்குறள் 2.53

★ விலங்குகளைக் கொல்லல் இதயத்தைக் கரடுமுரடாக்கும்.

- திருக்குறள் 2.54

★ விலங்கொன்றைக் கொல்லும்போது அவ் விலங்கு அனுபவிக்கும் கடும் வேதனையை நினைக்க இயலுமாயின் ஒருவர் மாமிசம் உண்ண முயல மாட்டார்.

- திருக்குறள் 26.257

★ கொல்லுதலையும் ஊன் உண்ணுதலையும் விலக்கல் ஆயிரம் பூசைகள் நடத்தவதிலும் மேலானது.

- திருக்குறள் 259

★ அடுத்தவரது வேதனையைத் தம் வேதனையாக உணர்ந்து அதனைத் தவிர்த்துக் கொள்ள நினைக்க முடியாத விவேகத்தால் ஒருவர் பெறத்தக்க பயன் யாது?

- திருக்குறள் 315

★ உயர்ந்த பண்பு கொல்லாமையே. வாய்மை, அதற்கு அடுத்ததே.

- திருக்குறள் 323

★ இந்துக்கள் விலங்குகள் மீது காட்டும் மதிப்புக்குச் சிறந்த உதாரணம் எல்லாத் தெய்வங்களுக்கும் வாகன மாக விலங்கொன்றைக் கொண்டிருப்பதாகும். ஒருவர் தெய்வத்தை வணங்கும் போது அவ் விலங்கையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்குகிறார். சைவசமயத்தின் அனைத்து ஞானத்தையும் குறியீடாகக் கொண்ட தெய்வமாகிய கணபதி (கணேசர்) யானையின் சிரசு கொண்டவராகவே சித்தரிக்கப்படுகிறார்.

★ எல்லா இந்துப் பக்தர்களும் தமது உணவின் முதலாவது கவளத்தைத் தனியே எடுத்து, விலங்குகள் அதனை உண்ணுவதன் பொருட்டு ஒதுக்கி வைத்து அதன் பின்னரே உணவு உண்பர்.

**செயற்பாடு :**

வகுப்பை நான்கு குழுக்களாகப் பகுத்துக் கீழ்வரும் ஒப்படைகளை ஒரு குழுவுக்கு ஒவ்வொன்று வீதம் அளிக்கவும்.

*(1)* விலங்குகள் பெறவேண்டிய வாழும் உரிமைகளை இனங் காணுங்கள்.

*(2)* விலங்குகள் மனிதர்களால் அடையும் கொடூரங்களைத் தடுக்க மக்கள் கல்வி, பிரச்சாரச் செயல் ஒழுங்குகளைத் திட்டமிடவும்.

*(3)* ஒரு நபர் என்ற வகையில் தாம் விலங்குகளை இம்சித்தலை விலக்கி வாழத்தக்க முறைகளை இயன்றவரை அடையாளங் காண்க.

*(4)* எமது நாட்டிலே அருகிக் கொண்டிருக்கும் சில விலங்குகளை இனங் கண்டு அவ்விலங்குகளைக் காப்பதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை இனங் காண்க.

*(20 நிமிடங்கள்)*

**கலந்துரையாடல் :**

ஒவ்வொரு குழுவினதும் அறிக்கையை வாய்மொழியாக வகுப்பில் சமர்ப்பித்தலும், ஒவ்வொரு அறிக்கை பற்றியும் குறுகிய கலந்துரையாடலை நடத்துதலும் அதன் வாயிலாக அக்கருத்துக்களை மேலும் விருத்தி செய்தலும்.

*(20 நிமிடங்கள்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்சையின் தன்மையை விளங்கிக் கொள்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்சித்தல் என்றால் என்ன?

பாடம் : 4.1

நேரம் : 60 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கருக்கள் :**

(1) ஒருவரது விருப்பத்துக்கு மாறாக அந் நபரை வேதனைக்கு அல்லது மரணத்துக்கு உட்படுத்தலை இம்சித்தல் என அறிமுகஞ் செய்யலாம்.

(2) நாம் வாழும் சமூகத்தில் இம்சித்தல் பல்வேறு தோற்றங் களிலும் அளவுகளிலும் காணப்படுகிறது.

(3) இம்சித்தலை அவற்றின் கடுந் தன்மையை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்த முடியும்.

**குறிக்கோள்கள் :**

(1) இம்சித்தலுக்கான வரைவிலக்கணத்தை அளிப்பர்.

(2) இம்சித்தல்களுக்கான உதாரணங்களைத் தருவர்.

(3) இம்சித்தலின் கொடுமையை விபரிப்பர்.

**நுழைவு :**

''உங்கள் வகுப்பில் பயிலும் மாணவர் ஒருவர் உங்களில் ஆத்திரங்கொண்டு தாக்கி அல்லது, பிடித்துத் தள்ளி அல்லது ஆயுதத்தால் காயப்படுத்தித் துன்புறுத்திய சந்தர்ப்பங்கள் உண்டா? அவ்வாறாயின் அத்தகைய சம்பவங்கள் சிலவற்றை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்'' எனக் கூறவும். அத்தகைய சந்தர்ப்பங்களை ஞாபகப் படுத்திக் கொள்ளத்தக்க பிள்ளைகளிடம் அவற்றைச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்ளவும்.

(2) 'அத்தகைய செயல்களை அறிமுகப்படுத்த நாம் எப் பதங்களைக் கையாளலாம்'' எனப் பிள்ளைகளிடம் கேட்டுப் பெற்று அவற்றைக் கரும்பலகையில் எழுதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதாரணங்கள் :**

- ★ தொல்லை கொடுத்தல்
- ★ தாக்குதல்
- ★ வேதனையை ஏற்படுத்தல்

''நாம் இத்தகைய செயல்களை இம்சித்தல் எனக் குறிப்பிடுவோம்?'' எனக் கூறவும். இப்போது இம்சித்தல் எனப்படுவது எவை எனப் பார்ப்போம் எனக் கூறிப் பிள்ளைகளிடம் பல்வேறு வரைவிலக்கணங்களைப் பெற்றுக் கொண்ட அவற்றைக் கரும்பலகையில் எழுதுக. பிள்ளைகள் குறிப்பிடும் வரைவிலக்கணங்களைப் பாராட்டி அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்ள உதவும். தர்க்க ரீதியாக விளங்கிக் கொள்ளும் அறிவுத்திறனை விருத்தி செய்து கொள்ள உதவும் வண்ணம் கலந்துரையாடலை நடத்தவும்.

*(10 நிமிடங்கள்)*

**செயற்பாடு : 1**

வகுப்பில் பிள்ளைகளை எழுந்து நிற்கச் செய்து இரண்டு பேராகச் சோடி சேர்த்துத் தான் எப்போதாவது கண்ட அல்லது கேட்ட ஒருவருக்கு இன்னொருவராலும் புரியப்பட்ட இம்சித்தலை, கடுமையான செயலை நண்பரிடத்தே கூறும்படி செய்யவும். இரண்டாமவர் கவனமாகச் செவிமடுக்க வேண்டும். அதன் பின்னர் இரண்டாம் நபர் கதைக்க முதலாம் நபர் கவனமாகக் கேட்க வேண்டும். இவ்வாறு ஒரு பிள்ளை ஆகக் குறைந்தது இருவருக்கேனும் செவிசாய்க்க வேண்டும்.

*(15 நிமிடங்கள்)*

அதன் பின்னர் பிள்ளைகளை வகுப்பில் ஒருங்கு சேரச் செய்து அவர்கள் கேட்ட சம்பவங்களை வினவிக் கரும்பலகையில் இம்சித்தற் செயல்களைப் பட்டியல் படுத்தவும்.

**உதாரணங்கள் :**

*கையால் தாக்குதல்*
*கவனிக்காது விடல்*
*கல்லால் எறிதல்*
*சுட்டுக் கொல்லுதல்*

*15 இம்சித்தற் செயல்களைக் கொண்ட பட்டியல் போதுமானது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

(1) வகுப்பை ஐந்து பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்கவும்.

(2) ஒவ்வொரு குழுவுக்கும் ஒரே அளவிலான சிறு கடதாசித் துண்டுகள் 15 வீதம் கொடுத்துக் கரும்பலகையில் எழுதப்பட்ட இம்சித்தற் செயல்களைக் கடதாசி ஒவ்வொன்றிலும் ஒவ்வொன்று வீதம் தொடரிலக்க முறையாக எழுதும்படி ஆலோசனை வழங்கவும்.

(3) பின்னர் கடுந்தன்மை குறைந்த இம்சித்தற் செயலில் இருந்து கடுந்தன்மை கூடிய இம்சித்தற் செயல் வரை முறையே தொடக்கம் 15 வரை இலக்கமிடும்படி பணிக்கவும். (சிறிய சம்பவம் இலக்கம் 1ஐக் கொண்டதாகவும் பாரதூரமான சம்பவம் இலக்கம் 15ஐக் கொண்டதாகவும்) பிள்ளைகள் குழுக்களாகக் கலந்துரையாடிச் சம்பவங்களை அவற்றின் பாரதூரமான தன்மையை அடிப்படையாகக் கொண்டு வரிசைப்படுத்தல் வேண்டும்.

(10 நிமிடங்கள்)

(4) ஒவ்வொரு குழுவினதும் தொடரிலக்கங்களைக் குறிப்பிடும்படி கூறிக் கரும்பலகைப் பட்டியலில் உள்ள அந்தந்தச் சம்பவத்துக்கு எதிரே அதன் இடப் பெறுமானத்தை எழுதவும். இச் செயற்பாட்டின் குறிக்கோள் இம்சித்தல்களின் பாரதூரமான விளைவுகளை ஒப்பிட்டு நோக்கிப் பிள்ளைகள் விளங்கிக் கொள்ள உதவுதலே ஆகும். குழு ஏதாவது ஒரு சம்பவத்துக்கு அத்தகைய முக்கியத்துவத்தை அளிப்பதற்கான காரணம் என்னவென இடையிடயே வினவவும்.

**உதாரணம் :**

கல் எறிவது ஏன் தடியால் அடிப்பதை விடப் பாரதூரமானது என உங்கள் குழு கருதுகிறது?

(10 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மதிப்பீடு :**

(1) இம்சித்தல் என்றால் என்ன?

(2) ஓர் இம்சித்தற் செயல் ஏனைய வற்றை விட எக் காரணங்களால் பாரதூரமாகிறது?

(3) நீங்கள் இப்பாடத்தின் வாயிலாகக் கற்றுக் கொண்டவை எவை?
(''இப் பாடத்தால் நான் கற்றுக் கொண்டேன்'' என்றவாறு ஆரம்பித்துக் கற்றுக் கொண்ட பிரதானமான விடயத்தைக் கூறுவதற்காக எல்லா மாணவருக்கும் சந்தர்ப்பம் வழங்கவும்.)

**முடிவு :** ''இன்றைய பாடத்தால் இம்சித்தல் பற்றி நாம் கற்றுக் கொண்டோம். இம்சித்தலில் இருந்து விலகி வாழும் முறையைப் பற்றி நாம் எதிர்வரும் பாடங்களின் மூலம் கற்றுக் கொள்வோம்'' எனப் பாடத்தை முற்றுப் பெறச் செய்யவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்சித்தல் என்றால் என்ன?

பாடம் : 4.2

நேரம் : 45 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கரு :**

(1) இம்சித்தல், துரிதமாக வளரும் பாரிய சமூகப் பிரச்சினையாகும்.

(2) மனிதன் மனிதனை இம்சித்தல் மானிடத்துக்கு முரணான கவலையளிக்கும் செயலொன்றாகும்.

**குறிக்கோள்கள் :**

(1) இம்சித்தல் சமூகப் பிரச்சினை என எடுத்துக் காட்டுவர்.

(2) இம்சித்தல் செயல்கள் பற்றித் தங்களது கவலையை வெளிப்படுத்துவர்.

(3) இம்சித்தலின் பல்வேறு தன்மைகளைக் குறிப்பிடுவர்.

**நுழைவு :**

அண்மையில் (மாகாணம் / நாடு) ............ல் (செய்தி) நீங்கள் கேள்விப்பட்டீர்களா? எனச் சமீபத்தில் இடம் பெற்ற இம்சித்தலை / கொடுமையை நினைவூட்டிப் பாடத்தில் பிரவேசிக்கவும்.

**விளக்கம் :**

முன்னர் ஒருபோதும் நாம் கேட்டிராதபடி இப்படியான இம் சித்தற் செயல்கள் இன்று குறைவின்றிக் கேட்கத்தக்கதாக இருக்கின்றன. இந்நாட்டில் மட்டுமல்ல உலகம் பூராவும் மனிதர் கொடியவராகிக் கொண்டு வருவதை நாம் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளிதழ் ஒன்றை எடுத்துப் பார்த்தால் மனிதன் மனிதனை எதிர்த்துப் புரியும் கொடுமைகள் / குற்றங்கள் பற்றி எவ்வளவோ தகவல்கள் இருக்கின்றன? ஏன் மனிதன் இவ்வாறு கொடூரமாகிக் கொண்டு வருகிறான்? ஏன் மனிதரிடையே பரிவு, கருணை, ஏனையோரைக் கௌரவித்தல் போன்ற பண்புகள் குன்றி வருகின்றன? நாம் இப் பாடத்தின் வாயிலாக அது பற்றித் தேடிப் பார்க்க முனைவோம்.

**செயற்பாடு : 1**

(1) பிள்ளைகளை மூவர் கொண்ட குழுக்களாக்கி ஒவ்வொருவருக்கும் நான் கேள்விப்பட்ட மிக மோசமான குற்றம் / இம்சித்தல் என்ற தலைப்பின் கீழ் உண்மைச் சம்பவம் ஒன்றை 03 நிமிட நேரத்தில் ஏனையோரிடம் விளக்கும்படி கூறவும்.

(2) மீண்டும் வகுப்பை ஒருங்கு சேர்த்து 'இத்தகைய இம்சித்தல் செயல்களைக் கேட்கும்போது ஏற்படும் உணர்வுகள் எவை? என வினவி பிள்ளைகளிடத்தில் முடிந்த வரை விடைகளைப் பெறவும். எதிர்பார்க்கப்படும் விடைகளுக்கான மாதிரிகள்.

- இத்தகைய சம்பவங்களைக் கேட்கும் போது என் உள்ளத்தில் ஆழ்ந்த கவலை உண்டாகிறது.

- மனிதன் மனிதன் மீது ஏன் இவ்வளவு கொடூரமாக நடந்து கொள்கிறான் என நினைக்கிறேன்.

- மனிதனது இத்தன்மையை பற்றி என்னில் மிக வேதனை உண்டாகிறது.

- எம் மத்தியில் மிகக் கீழ்த்தரமான மனிதர்கள் வாழ்கிறார்கள்.

சோக உணர்வை வெளிப்படுத்தத் தக்க சூழ்நிலையை உருவாக்கவும். ஒரேவிதமான வெளிப்பாடுகளுக்குப் பதில் பல்வேறு ஆக்கபூர்வமான வெளிப் பாடுகளுக்காக ஊக்குவிக்கவும்.

(05 நிமிடங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனால் தன்னைப் போன்ற வேறு மனிதருக்கு இழைக்கப்படும் பல்வேறு இம்சைகள் எவையென வகுப்பிலே வினவி விடைகளைக் கரும்பலகையில் பட்டியலாக அமைக்கவும்.

**உதாரணம் :**

★ படுகொலை

★ கை கால்களை வெட்டிவிடல்

★ உடல் ரீதியாக வேதனைப்படுத்தல்

★ கடத்திச் செல்லல்

★ தடுத்து வைத்தல்

★ பலாத்காரமாக வேலையில் ஈடுபடுத்தல்.

★ உடைமைகளை அழித்தல்

★ கொள்ளையிடல்

★ களவெடுத்தல்

★ அவமரியாதை செய்தல்

★ பிள்ளைகளைக் கைவிட்டுச் செல்லல்

★ பிள்ளைகளைக் கவனியாது விடல்.

*(05 நிமிடங்கள்)*

(2) இத்தகைய செயல்களை மனிதர் என்ற வகையில் தன்னைப் போன்ற ஏனையோருக்கு ஏன் புரியக்கூடாது என்ற வினாவை வினவிப் பெற்ற விடைகளைக் கரும்பலகையில் குறிப்பிடவும்.
(விடைகளுக்கான மாதிரிகள்

★ இவை மானிடத்தன்மைக்குப் பொருத்தமற்றவை.

★ இவ்விதமான செயல்களால் மனித சமூகம் மனிதன் வாழப் பொருத்தமற்ற இடமாக மாறும்.

★ இச் செயல்களால் மானிட சமூகம் நடத்திச் செல்ல இயலாததாக மாறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இதனால் மனித வர்க்கம் ஒழிந்து விடும்.

★ நாம் மீண்டும் மிலேச்சத்தனமான நிலைக்கு கொண்டு செல்லப்படுவோம்.

★ வாழ்வதற்குப் பாதுகாப்பு இருக்க வேண்டும்.)

பிள்ளைகளது பதில்களின் தரம் குறைவாகக் காணப்படின் அதனை விருத்தி செய்து கொள்ள உதவுக.

(07 நிமடங்கள்)

**கலந்துரையாடல் :**

(1) நீங்கள் இப் பாடத்தால் கற்றுக் கொண்டவை எவை?

(2) அதிகரித்து வரும் இம்சைகளைச் சமூகப் பிரச்சினையாக ஏன் கருத வேண்டும்?

(3) தாம் இம்சித்தலைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வு இப் பாடத்தை நடத்திக் கொண்டு செல்லும்போது தோன்றியிருந்தால் அப் பிள்ளைகள் கைகளை உயர்த்தவும். உங்களில் ஏன் அத்தகைய உணர்வு தோன்றியது? அவர்களது உணர்வுகளைப் பாராட்டவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்சித்தல் இயற்கையானதா?

பாடம் : 4.3

நேரம் : 45 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கருக்கள் :**

(1) விலங்குகளிடையே காணப்படும் சண்டையிடுதல் என்பது பரிணாமத்தால் அவை இயற்கையாகவே பெற்றுக் கொண்டதாகும். அவை நிலைத்து வாழ அத்தன்மை அவசியம்.

(2) மனிதன் கூட வன்முறை இயல்பைத் தன்னில் இயற்கையாகவே கொண்டிருக்கிறான். தனது அல்லது தன் வர்க்கத்தினது நிலைப் பாட்டுக்காக - உயிர் காக்கும் பொருட்டுப் போரிடல் அல்லது தப்பித்துச் செல்லல் என்பனவே அவை. அது இம்சித்தல் அல்ல.

(3) இம்சித்தல் என்பது உளச் சமநிலையின்மை காரணமாகத் தோன்றுகிறது. தனதும் தன் வர்க்கத்தினதும் நிலைப்பாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கும் அழிவைத் தன்னகத்தே கொண்ட நடத்தைக் கோல வகையாகும்.

**குறிக்கோள்கள் :**

(1) விலங்குகளது சண்டையிடும் வழக்கம் அவற்றின் நிலைப்பாட்டுக்கு அவசியமான செயல் வகை எனக் குறிப்பிடுவர்.

(2) இம்சித்தல் மனிதனது இயற்கைக்கு மாறான நோய் கொண்ட நடத்தையே எனத் தர்க்க ரீதியாக எடுத்துக் காட்டுவர்.

(3) தனது உள்ளத்தை இம்சித்தல் என்ற விஷமத்தனமான நிலைக்கு உள்ளாக்காது தவிர்த்துக் கொண்டு சுகமாக வைத்திருக்க வேண்டியமை நம்மெல்லோரதும் கடமையே என்பதை ஏற்றுக் கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனில் விலங்குப் பரிணாமத்தின் வாயிலாக இயற்கையாகவே இம்சித்தல் தங்கியிருப்பதாக ஒரு கருத்து நிலவுகிறது. இது எந்த அளவுக்கு உண்மையென நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

பரிணாமத்தின் ஒரு பகுதியாக விலங்குகள் சண்டையிடுதலை இயற்கை யாகவே கொண்டிருப்பதை நாம் தெளிவாகக் காணலாம். விலங்குகள் ஒன்றோடு ஒன்று போராடுவதை நீங்கள் கண்டிருப்பீர்கள். பிராணிகளிடையே நிகழும் போரானது அடிப்படையில் இரண்டு வகையாகும். அவை வருமாறு :

*(1)* இரண்டு வகையைச் சேர்ந்த விலங்குகளிடையே

*(2)* ஒரே வகையைச் சார்ந்த விலங்குகளிடையே

பெரும்பாலும் இரண்டு வகையைச் சேர்ந்த விலங்குகளுக்கு இடையே போர் நிகழக் காரணமாக அமைவது ஒரு வகையைச் சேர்ந்த விலங்கு மற்றொரு வகையைச் சேர்ந்த விலங்கை இரையாகக் கொள்ள முனையும் போதேயாகும். சிறுத்தை மானை இரையாக்கிக் கொள்ள அதன் மீது பாயும். பூனை எலிகளைப் பிடிக்கும். இது உணவுக்காகவே நிகழுகிறது. இது இயற்கை நியதியே. ஒரே விலங்கினம் சுதந்திரமாக வளர்ச்சி அடைய இடமளிக்கப்படின் அது ஏனைய இனங்களை அடக்கிப் பெருகி முழுப் புவியையுமே ஆட்கொண்டு விடும். மேலும் ஒரு பிரதேசத்தில் காணப்படும் வரையறையான உணவும் இடவசதியும் ஓர் இனத்தைச் சேர்ந்த விலங்குகள் பல்கிப் பெருகுவதனால் அந்த இனமே அழிந்து விடக் கூடும். எனவே ஒரு விலங்கினப் பெருக்கம் மற்றொரு விலங்கினத்தால் கட்டுப்படுத்தப்படும் நிலைமை உலகில் இயற்கையாகவே அமைந்திருக்கிறது. அடுத்து நாம் ஒரே வகையைச் சேர்ந்த விலங்குகளிடையே நிகழும் போரைப் பார்ப்போம். அத்தகைய போர்களின் நோக்கங்களாக அமைவன :

★ அடுத்த பிராணியிடம் இருந்து தனது இரையைக் காத்துக் கொள்ளல்.

★ மற்றைய பிராணியைத் தனது உறைவிடத்தில் அல்லது பிரதேசத்தில் இருந்து விரட்டுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ குழுவினது தலைமைத்துவத்தைப் பெறுதல்.

★ இனப் பெருக்கத்துக்காகப் பெண்பிராணியொன்றை அடையும் நோக்கத்துக்காகப் போட்டியிடல்.

என்பவையாகும்.

இவ்வெல்லாச் செயல்களும் ஒரே இன விலங்குகளின் நிலைப்பாட்டுக்குத் தேவையானவை என்பது ஆராயும்போது புலனாகின்றது.

★ தனது இரையைக் காத்துக் கொள்ள விலங்கு போராடிய போதும் அது பசியைத் தீர்த்துக் கொண்ட பின்பு மிகுதியான உணவை ஏனையவை உண்பதற்காக விட்டுச் செல்லும்.

★ ஒருவிலங்கு அதே இனத்தைச் சார்ந்த மற்றொரு விலங்கைத் தனது உறைவிடத்தில் இருந்து அல்லது பிரதேசத்தில் இருந்து அப்பால் விரட்டுதல் அவ்வினத்தின் பெருக்கத்துக்குக் காரணமாக அமையும்.

★ தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நடத்தும் சமரில் குழுவுக்குப் பாதுகாப்பு வழங்கத்தக்க உச்ச பலங்கொண்ட விலங்கே தெரிவு செய்யப்படும். இது அவ்வினத்தின் இருப்புக்கு காரணமாக அமையும்.

★ பெண் விலங்கு ஒன்றை அடைவதற்காக ஆண் விலங்குகளிடையே நடைபெறும் போரில் திடகாத்திரமான விலங்கே வெற்றி கொள்வதால் அதன் மூலம் பெண் விலங்கு பலமும் ஆரோக்கியமும் கொண்ட குட்டிகளைப் பெறும்.

ஒரே இனஞ்சார் பிராணிகளிடையே நிகழும் போரின் நோக்கம் எதிரியைக் கொல்வதல்ல என்பது விளக்கமானது. அவ்வாறு நிகழுமாயின் அது தற்செயலானதே. அன்றித் தாக்கும் பிராணி நோய் காரணமாக இயல்புக்கு மாறாக நடந்து கொள்வதால் ஆகலாம். இங்கு மனிதனை நோக்கினால் தனது வர்க்க உறுப்பினர்களையே அழிக்கும் விலங்கு அவனை விட்டால் வேறில்லை எனலாம். இக் கொடூரத்தன்மை மனிதனது உண்மையான பண்பாகுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய விலங்குகளைப் போன்று மனிதனிலும் ஓரளவு சண்டையிடும் தன்மை காணப்படுகிறது. இயற்கையான இப் பண்பு விலங்கு வர்க்க மொன்றின் இருப்புக்கு அவசியம் என்பதை முன்னர் கண்டோம். அவ்வாறாயின் மனிதனது சண்டையிடும் இயல்பு என்ன? அது அவனது இருப்புக்கு எவ்வாறு காரணமாகின்றது?

மனிதனது இப் பண்பு ஆபத்தின் போது போராட அல்லது தப்பிச் செல்லத் தூண்டும் இயல்பூக்கமே. அது அவசியமான உயிர் காத்தலுக்குரிய துலங்கலே. என்னும் எம்மைச் சூழ அடிக்கடி நிகழும் படுகொலை, துன்புறுத்தல், யுத்தம், கலகம் என்பன உயிர்-காப்புக்காக மனிதர்கள் மேற்கொள்வன அல்ல. அப்படியாயின் அவை இயற்கையான சண்டையிடுதல் என்ற வகையைச் சாராது.

இந்நிலையை விபரிக்கும் சில உளவியலாளர்கள் இது இயற்கை-யான போராடும் தன்மையல்ல வென்றும் நோய்வாய்ப்பட்ட போராடும் தன்மையே என்றும் கருதுகின்றனர். அவர்கள் இதனை விஷமத் தனமான போரிடும் இயல்பு எனக் குறிப்பிடுகின்றனர். இம்சித்தல் எனும் பதத்தை நாம் கையாளுவது அதனை அறி-முகப்படுத்துவதற்கே ஆகும். எனவே இம்சித்தல் மனிதன் இயல்பாகவே தன்னில் கொண்ட பண்பல்லவென முடிவு செய்யலாம்.

இம்சித்தல் இயற்கைக்கு ஒவ்வாதது. தவறான கற்றல், சிக்கலான மனம், தவறாக வாழ்க்கை முறை, பிழையான சமூகச் சூழல் ஆகிய வற்றால் ஆக்கப்பட்ட மானிட வர்க்கத்தின் இருப்புக்கு தீமை பயக்கும் நிலைமையாகும். இம்சித்தலை நாம் தெரிந்தும் தெரியாமலும் கற்றுக் கொள்கிறோம். மேலும் நாம் பழகும் இம்சையான எண்ணங்களைக் கொண்ட நபர்களால் அது நோய் போன்று எம்மையும் பீடிக்கும்.

சமர்ப்பித்தல்!

மேலே குறிப்பிட்டபாடத்தை இரு முறைகளில் எடுத்தாளலாம்.

(1) விரிவுரையாக (30 நிமிடங்கள் வரையான)

(2) பிள்ளைகளிடத்தில் கருத்துக்கள் தோன்றச் செய்து நிகழ்த்தும் கலந்துரையாடலாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 'இம்சை என்பது ஏனையோரிடம் கற்றுக் கொள்வதொன்று' இக்கூற்றின் உண்மையை ஆராய்க.

- நீர் வன்முறை மனப்பாங்கைக் கற்றுக் கொண்ட சந்தர்பம் ஒன்றை நினைவுபடுத்தி அதனை விபரிக்கவும்.

- எதிர்காலத்தில் ஏதோ ஒரு வகையில் உலகப் போருக்குக் காரணமாக அமையக் கூடிய தற்போது எம் மனதில் உள்ள வன்முறைக் கருத்துக்கள் எவை?

(பதில்களைக் கரும்பலகையில் எழுதுக. எதிர்பார்க்கப்படும் மாதிரிகள்:)

★ இனவாதம் / வர்க்கவாதம்

★ ஏனையோரைத் தோற்கடித்துத் தாம் வெற்றிகொள்ள வேண்டும் என்ற கருத்து

★ அதிகார வெறி

★ பண ஆசை

★ தன்னலம்

★ மதவெறி

★ (எனது சமயம் மட்டுமே உண்மையானது. ஏனைய சமயங்களோ மூடத்தனமான நோக்குடையவை என்ற கருத்து)

இவ்விதமான விடைகள் 30 வரை கரும்பலகையில் எழுதவும். அவ்வாறு கரும்பலகையில் எழுதப்பட்ட தீமையான கருத்துக்களில் இருந்து இன்று தொடக்கம் தன்னால் அகற்றிக் கொள்ளக்கூடிய கருத்தொன்றைத் தேடி அதனைக் கீறிவிடுமாறு பிள்ளைகளிடம் கேட்கவும்.

இவ்வாறு தன்னகத்தே இருந்து நீக்கிக் கொள்ளத்தக்க தீமை தரும் கருத்தொன்றை/மனப்பாங்கை இனங்கண்டு கொண்டு கரும்பலகையில் உள்ள பட்டியலில் அதனைச் சுண்ணாம்புக் கட்டியால் கீறிவிடுவதற்காக வகுப்புப் பிள்ளைகள் தாமாகவே முன் வருவார்கள். (ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொன்றாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தையாவின் கதை

பாடம் : 4.4

நேரம் : 40 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கருக்கள் :**

(1) எல்லா நபர்களினதும் வாழ்க்கை அந் நபரைப் போலவே சமூகத்துக்கும் பெறுமதியானது.

(2) வன்முறை அழிவைத் தருவதான வெறி பிடித்த செயலொன்றே.

**குறிக்கோள்கள் :**

(1) எல்லா நபர்களினதும் வாழ்வு பெறுமதியானதெனக் குறிப்பிடுவர்.

(2) கொலையை வெறுத்து ஒதுக்குவர்.

**விடய ஆய்வு : கந்தையாவின் கதை**

கந்தையா பாரிய தொழிற்சாலை ஒன்றின் சிற்றூழியன். விவாகமான அவனுக்கு இரு புதவர்களும் புதவியும் இருக்கிறார்கள். மனைவி தொழில் புரிவதில்லை.

மூத்த மகன் ஜீவன் பதினெட்டு வயது நிரம்பியவன். க. பொ. த. உயர்தரம் (கணிதத்துறை) முதலாம் ஆண்டு மாணவன் என்றாவது ஒரு நாள் பல்கலைக்கழகம் சென்று பொறியியலாளர் ஆகவேண்டும் என்பதே அவன் இலட்சியம்.

இரண்டாவது பிள்ளையான லதா சிறுவயதில் பீடித்த நோயினால் மூளையில் உண்டான கோளாறு காரணமாக அறிவு குன்றிய நிலையில் உள்ள பதினைந்து வயதுச் சிறுமி, அவளது சகல தேவைகளும் அவள் தாயாரால் நிறை வேற்றப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாமவனான கருணாகரன் எட்டாம் ஆண்டில் கற்கும் விளையாட்டுச் சிறுவன்.

கந்தையாவின் வயோதிபத் தந்தையும் அவர்களுடன் வாழ்கிறார். அவர்கள் வாழ்வதோ வாடகை வீடு. கந்தையா பெறும் மாதாந்தச் சொற்ப வேதனத்தால் குடும்பத்தை நடத்திச் செல்வது சிரமமாக இருந்தது. சமீபத்தில் ஜீவன் டியூசன் வகுப்புக்கான கட்டணமும் சேர்க்கப்பட்டதால் ஏதாவதொன்றை உண்டு உயிரைக் காத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமே தற்போது அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு இருக்க தொழிற்சாலையில் பாரிய வேலைநிறுத்தம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. சம்பள அதிகரிப்பைக் கருதி கந்தையாவும் அதில் கலந்து கொண்டான். வேலைநிறுத்தம் 30 நாட்கள் வரை நீடித்தபோதும் அதனால் எவ்வித பயனும் நிகழவில்லை.

கந்தையாவின் குடும்பத்தவர் பசிக்கொடுமை காரணமாக மிகப் பரிதாப நிலையை எய்தினர். கடன் பெறத்தக்க சகலரிடத்திலும் அவர்கள் கடன் வாங்கியிருந்தனர். ஊரில் இருந்த முதலாளி மேலும் பொருட்களைக் கடனுக்கு வழங்க முடியாது என அறிவித்தார். ஜீவனின் ரியூசனும் தடைப்பட்டது.

தொழிற்சாலை நிர்வாகிகள் குழு ஒரு வார காலத்துக்குள் வேலைக்குச் சமூகமளிக்காதுவிடின் வேலையில் இருந்து நீக்கப்படுவதாக அறிவித்தது. வேலை நிறுத்தின் ஆரம்பக் குறிக்கோள் தற்போது மாறி அது அரசியல் போராட்டமாகி விட்டது. தொழிற் சங்கத் தலைவர்கள் தம்மை ஏமாற்றிவிட்டதாக கந்தையாவும் மற்றும் சிலரும் கருதினர். தொழிற்சங்கத் தலைவர்களது எதிர்ப்பைப் பொருட்படுத்தாது கந்தையா சிலரோடு மீண்டும் வேலையில் சேர்ந்தான். இம் முடிவை அவன் எடுக்கக் காரணமாக அமைந்தது அவனது மனைவி மக்கள் அடைந்திருந்த பரிதாப நிலைமையே ஆகும்.

கந்தையா வேலைக்குச் சென்ற தினமாகிய அன்று இரவு வெகு நேரமாகியும் அவன் வீடு வந்து சேரவில்லை. குடும்பத்தார் கலங்கி வழிபார்த்திருந்தனர். திடீரென அவனது நண்பனொருவன் அவசரமாக ஓடி வந்து கந்தையா வேலை முடிந்து வரும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டர்கள் குழு ஒன்று அவனையும் கூட்டத்தாரையும் திடீரெனத் தாக்கியிருக்கிறார்கள். கண்கள் மட்டுமே தெரியத்தக்கதாக கறுப்புத் துணிகளால் முகத்தை மறைத்துக் கொண்டிருந்த முரடர்கள் அவர்களை இரும்புச் சங்கிலிகளால் தாக்கிவிட்டு ஓடி மறைந்திருக்கிறார்கள். அறிவிழந்த நிலையில் இருந்த கந்தையாவை நாங்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றோம். அங்கே அவர் காலமானார், எனக் கவலையுடன் அறிவிக்கலானான்.

**சமர்ப்பித்தல் :**

படிப்படியாகத் தகவலை வாய்மொழியாக வகுப்பில் வெளிப்படுத்தவும்.

**செயற்பாடு :**

வகுப்பில் பிள்ளைகளுக்கு முறையே 1,2,3,4 என இலக்கங்களை அளித்து ஒவ்வொரு இலக்கத்துக்கும் கீழ்வரும் பேச்சுக்களை வழங்கவும்.

(1) சம்பவத்தைக் கந்தையாவின் மனைவி கூறுவதாக.

(2) நீங்கள் ஜீவன் எனக் கருதிக் கொண்டு தம் தந்தையின் மரணத்தால் தான் ஆளாகியிருக்கும் நிலைமையை விபரித்தல்.

(3) கந்தையாவின் வயோதிபத் தந்தை கூறுவதாகச் சம்பவத்தை விபரித்தல்.

(4) கந்தையாவின் குடும்பத்தாரின் எதிர்காலம் எவ்வாறு அமையக்கூடும் என விபரித்தல்.

ஆயத்தமாகும் பொருட்டு 04 நிமிடங்கள் வரை அளித்து தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பிள்ளையும் தம் பேச்சை வகுப்பில் சோகம் ததும்பிய உணர்வுபூர்வமான மொழியில் வெளிப்படுத்துவதற்கு வகை செய்யவும்.

(25 நிமிடங்கள்)

**வேறொரு விதமாக :**

பேச்சுக்குப் பதில் எழுதிக் காட்டல். எழுதியதை வகுப்பு முன்னிலையில் வாசித்துக் காட்டுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மதிப்பீடு :**

கலந்துரையாடலை மேற்கொள்வதற்கான வினாக்கள்:

(1) நீங்கள் இச் செயற்பாட்டால் / பாடத்தால் கற்றுக் கொண்டது எது?

(2) இப் பாடத்தை நடத்திச் செல்கையில் உங்கள் மனதில் தோன்றிய எண்ணங்களும் உணர்வுகளும் எவை?

(3) இதனை ஒத்த சம்பவங்களை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? அவை எவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்சையைத் தவிர்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்தம் அவசியமா ?

பாடம் : 5.1

நேரம் : 90 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கரு :**

ஏனையோருடன் ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளும் முகமாக கொலை செய்தல் மனிதருக்கு எவ்வகையிலேனும் பொருத்தமான செயல் அல்ல.

**குறிக்கோள் :**

(1) யுத்தம் பற்றி வரைவிலக்கணம் கூறுவர்.

(2) யுத்தம் அவசியமானது என நிறுவியதற்கு சமர்ப்பிக்கப்படும் அடிப்படைத் தர்க்கங்களை நிராகரிப்பர்.

(3) யுத்தத்தினால் நிகழும் அனர்த்தங்களை விபரிப்பர்.

**உபகரணங்கள் :**

சித்திரம் வரைவதற்கான டிமை கடதாசிகள் ஆறு, பஸ்டல்.

**நுழைவு :** நாம் தினமும் கேட்கும் சொல்லே யுத்தம் என்பது, நாடோறும் உலகில் எங்காவது ஓர் இடத்தில் எப் பரிமாணத்திலேனும் யுத்தம் நடைபெறுகிறது. யுத்தம் என்றால் என்ன? நாம் அவற்றின் அடிப்படை இயல்புகளை நோக்குவோம். பிள்ளைகளிடம் பதில்களைப் பெற்றுக் கொள்ளவும். எதிர்பார்க்-கத்தக்க துலங்கல்களுக்கு உதாரணங்கள்:

- தத்தமக்கிடையே உள்ள பிரச்சினையைத் தீர்த்தக் கொள்வதற்காகப் பாரிய அளவில் ஒருவரை ஒருவர் கொலை செய்து கொள்ளல்.
- இம்சித்தலை / முரட்டுத்தனத்தைக் அடிப்படையாகக் கொண்டு இனவாரியாக அல்லது குழுவாரியாக இருசாரருக்கு இடையே தோன்றிய பிரச்சினையைத் தீர்க்க முற்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திட்டமிட்ட பாரிய அளவிலான மனிதக் கொலைகளும் சொத்துச் சேதமும்.

- மறுசாராரைப் பயமுறுத்தி அவர்களுக்குத் தீங்கை விளைவித்து, அவர்களை அடிப்படுத்தி ஏதோவொரு பிரச்சினையைத் தீர்க்க முனைதல்.

**படி : 1 செயற்பாடு : 1**

மனிதனுக்கு யுத்தம் அவசியமா?
யுத்தம் அவசியம் எனப் பலராலும் சமர்ப்பிக்கப்படும் வாதங்கள் எவை?
(பிள்ளைகளோடு கலந்துரையாடிக் கீழ்வரும் அம்சங்களைப் பெறுதல்)

★ அதிகரிக்கும் சனத்தொகை கட்டுப்படுத்தப்படும்.

★ ஏதோ ஒரு இனத்துக்கு / மானிட வர்க்கத்துக்கு எதிராக நடைபெறும் அநியாயங்களைத் ஒழிக்க யுத்தம் அவசியம்.

★ நாடுகள் தம் யுத்த பலத்தை விருத்தி செய்துகொள்ள நடவடிக்கை எடுப்பதால் நாடுகளுக்கு இடையே வலுச் சமநிலை ஏற்பட்டு உலக சமாதானம் உருவாகும்.

★ யுத்த பலம் கட்டி எழுப்பப்படும் அளவின் அடிப்படையில் அந்த நாட்டுக்குப் பாதுகாப்புக் கிடைக்கும்.
(07 நிமிடங்கள்)

**படி : 2**

பிள்ளைகளை நான்கு குழுக்களாகப் பகுத்து ஒவ்வொரு குழுவுக்கும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள வாதங்களில் ஒவ்வொன்று வீதம் வழங்கி, அது எந்த அளவில் உண்மையென ஆராயும்படி செய்யவும். (நேரம் 15 நிமிடங்கள்.) வழங்கப்பட்ட நேரத்தின் இறுதியில் ஒவ்வொரு குழுவினதும் கருத்துக்களை வகுப்பில் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்கிக் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாதம் : 1**

அதிகரிக்கும் சனத்தொகை யுத்தத்தால் கட்டுப்படுத்தப்படும். மேலெழுந்தவாரியாக நோக்கின் இதில் உண்மை உண்டு. எல்லா யுத்தங்களினதும் நிச்சயமான பெறுபேறு பாரிய அளவிலான மனித அழிவுகளே. எனினும் விவேகமுள்ள மனிதன் ஏனையோரைக் கொலை புரியும் காட்டுமிராண்டித் தனத்துக்கு ஆளாகாது தம் சனத்தொகையைக் கட்டப்படுத்தத் தக்க வேறு முறைகளைத் தேடிக் கொள்ள இயலாதவனா?

**வாதம் : 2**

ஏதோ ஒரு இனத்துக்கு எதிராக நடைபெறும் அநியாயங்களை ஒழிக்க யுத்தம் அவசியம்.

சமூக அநியாயங்களை ஒழிக்க வேண்டியது அவசியம் என்பதில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. அது தொடர்பாகப் போராட வேண்டியது அவசியம். யுத்தம் மட்டுமே போராட்டத்துக்கான ஒரு வழி அல்ல. அஹிம்சை வழிப் போராட்டங்கள் பலவுண்டு.

**வாதம் : 3**

நாடுகள் தம் யுத்த பலத்தை விருத்தி செய்து கொள்ள நடவடிக்கை எடுப்பதால் நாடுகளுக்கு இடையே வலுச் சமநிலை ஏற்பட்டு உலக சமாதானம் உருவாகும்.

★ வெளிப்பார்வையில் இது உண்மையாகத் தெரியும். எனினும் ஒருவருக்கொருவர் பயப்படுவதால் ஏற்படும் சமாதானம் பெரும்பாலும் தற்காலிகமாகவே இருக்கும்.

★ நாடுகள் தம் யுத்த பலத்தை விருத்தி செய்து கொள்ளத் தொடர்ந்தும் செயற்படுவதால் விஞ்ஞான அறிவு மானிட வர்க்கத்தின் அழிவுக்காகவே கையாளப்படும். அது தீங்கானது.

★ மேலும் போட்டியான ஆயுத உற்பத்தி காரணமாக பெரிய அளவில் முதல், மனித வளங்கள் விரயமாவதால் அபிவிருத்தி குன்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ முதலாம், இரண்டாம் உலகப் போர்கள் நடைபெறக் காரணமாக அமைந்தது மேற்கத்திய நாடுகள் தமக்கிடையே கொண்டிருந்த ஐயம், பயம் என்பன காரணமாகத் தத்தமது பலத்தை விருத்தியாக்கச் செயற்பட்டதே ஆகும்.

**வாதம் : 4**

யுத்த பலம் கட்டி எழுப்பப்படும் அளவின் அடிப்படையில் அந் நாட்டுக்குப் பாதுகாப்புக் கிடைக்கும்.

★ கடந்த காலத்தில் பலம்வாய்ந்த அரசுகள் நலிந்த அயல் நாடுகளை யுத்த ரீதியில் ஆக்கிரமித்து அடிப்படுத்த பெரிதும் முயன்றி இருக்கின்றன. எனினும் தற்போது அத்தகைய நிலைகள் அபூர்வமாகவே காணப்படுகின்றன. எனவே முன்னர் போன்று பாரிய அளவில் யுத்த பலத்தை ஏற்படுத்திக் கொள்ளல் ஊழியத்தையும் வளங்களையும் விரயமாக்குதலாகும்.

★ நாடுகள் தனித்தனியே போர்ப்பலத்தைப் போட்டி ரீதியில் உருவாக்கிக் கொள்வதற்குப் பதிலாக ஐக்கிய நாடுகள் சங்கம், சார்க் அமைப்பு போன்ற சர்வதேச ஒத்துழைப்புத் திட்டங்கள் வாயிலாகத் தமது பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளல் உகந்ததாகும்.

★ யுத்தத்தை முற்றாகவே தவிர்க்கும் நோக்குடன் இராணுவத்தைக் கலைத்து விடும் அளவுக்கு இன்னும் மனித நாகரீகம் முன்னேறவில்லை என்பதை நாம் ஏற்கத்தான் வேண்டும். (உண்மையாகவே மானிட வர்க்கத்தை அத்தகைய நிலைமைக்கு வளர்ச்சி அடையச் செய்ய நாமெல்லோரும் செயற்பட வேண்டும். அது வரை நாடுகள் தம் பாதுகாப்புக்காக இறுதி நடவடிக்கையாகப் போர் புரிய நேரிடும்.)

★ போர்ப் பலத்தைக் கட்டி எழுப்பிக் கொள்ள முயலாமல் கூட ஒரு நாடு முன்னேற முடியும் என்பதற்கு ஜப்பான் எடுத்துக்காட்டாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரினால் ஒரு நாட்டுக்கும், மக்களுக்கும், சமூகத்துக்கும் நிகழக்கூடிய தீங்குகள் எவை?
(சிந்தனைக் கிளர்வு ஒன்றின் வாயிலாகப் பிள்ளைகளின் விடைகளைப் பெற்றுக் கொண்டு அவற்றைக் கரும்பலகையில் குறிக்குக.)

எதிர்பார்க்கப்படும் பதில்களுக்கு உதாரணங்கள் :

- பெறுமதியான மனித உயிர்கள் பாரிய அளவில் அகாலத்தில் அழிந்து விடல்.
- அதன் வாயிலாகச் சமூகத்தில், குடும்பங்களில், நபர்களில், தங்கியிருப்போரில் ஏற்படத்தக்க தீங்கு, நட்டம், பரிதாபநிலை, மக்களது அன்றாட வாழ்வில் பிரச்சினை ஏற்படல்.
- யுத்தத்தினால் பெருந்தொகையானோர் வலது குறைத் தோராதல்.
- மக்கள் வசதிக்காகச் செலவிட வேண்டிய பெருந் தொகைப் பணம் அழிந்துவிடல்.
- மனிதக் கொலைகள் காரணமாக வன்மையான மனங் கொண்டோர் கூட்டம் சமூகத்தில் கலந்து விடுவதால் உண்டாகும் பிரச்சினைகள்.
- பொருளாதாரம் வீழ்ச்சி அடைதல்.
- கலாசாரத்திலும் நற்பண்புகளிலும் நிகழத்தக்க பின்னடைவு.
- யுத்த நிலைமை காரணமாக சமூகத்தில் ஏற்படும் நிரந்தரமற்ற நிலை.
- சர்வாதிகாரத் தலைவர்கள் உருவாதல், ஜனநாயகம் வீழ்ச்சியுறல்.
- யுத்தம் காரணமாகப் பெரும்பாலும் பொதுமக்கள் மரணமடைதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) நான்கு மாணவரைக் கொண்ட குழுக்களாக வகுப்பைப் பிரிக்கவும்.

(1) யுத்தத்தின் கொடூரம்

(2) யுத்தத்தின் துன்பம்

உணர்த்தும் காட்சிகளைச் சித்திரத்தின் வாயிலாக வெளிப் படுத்தச் செய்யவும். மாணவர்கள் சித்திரங்களை வரைந்து முடித்த பின்னர் வகுப்பில் சித்திரக் கண்காட்சி ஒன்றை நடத்துக.

(20 நிமிடங்கள்)

**குறிப்பு :**

யுத்தத்தின் அடிப்படையான அழிவை விளங்கிக் கொள்ள மாணவருக்கு வழிகாட்டும் பாடமே இது. யுத்தம் நியாயமானது என்ற விசேட காரணங்களை இச் சந்தர்ப்பத்தில் கலந்துரையாடல் உசிதமல்ல.



சித்திரம் : 6

நாம் மனிதரைக் கொன்றொழித்த பின்னர் யாருடன் வாழப் போகிறோம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத உபாயங்கள்

பாடம் : 5.2

நேரம் : 60 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கருக்கள் :**

வன்முறை என்பது சமூகப் போராட்டத்துக்கான உபாயம் என நியாயப்படுத்த இயலாது.

**நோக்கங்கள் :**

(1) வன்முறையை சமூகப் போராட்டத்துக்கான உபாயமாகக் கைக்கொள்ளும் சந்தர்ப்பங்களை அடையாளங் காணல்.

(2) எவ்வகையிலான போராட்ட நோக்குகளை அடைவதற்காக வன்முறை கைக்கொள்ளப்படுகின்றது எனக் குறிப்பிடுவர்.

(3) பயங்கரவாத / வன்முறை இயக்கங்களின் பண்புகளை விளக்குவர்.

(4) பயங்கரவாத உத்திகளை எடுத்துக் காட்டுவர்.

**நுழைவு :**

இந் நாட்டில் மட்டுமல்லாது முழு உலகம் பூராவும் மனித சமூகத்தில் வன்முறை பிரச்சினையாகி வளர்கிறது. நாளிதழ் ஒன்றைப் பார்த்தால் எவ்வளவோ கொடூரமான செயல்கள் இடம் பெறுவதைக் காணலாம்? இம்சை எனப்படுவதாவது ஆத்திரத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாமல் மனிதர் புரியும் தாக்குதல், கத்தியால் குத்துதல், துப்பாக்கியால் சுடல் மட்டுமல்ல. வன்முறை சமூகப் பிரச்சினையாக அமையப் பிரதான காரணியாக அமைவது அதனைப் போராட்ட உபாயமாகக் கைக்கொள்ள பலம் பொருந்திய நபர்கள் முனைவதே ஆகும். நபர்களுக்கு இடையே, குழுக்களுக்கிடையே, இனங்களுக்கிடையே, இனப் பிரிவுகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையே, நபர்களுக்கும் அரசாங்கத்துக்கும் அல்லது வேறு இயக்கங்களுக்கும் இடையே தோன்றும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வன்முறை கையாளப்படுகிறது.

**பாடம் :**

வன்முறை போராட்ட உத்தியாகக் கைக்கொள்ளப்படல் எவருக்கெதிராக என நாம் நோக்கின் பெரும்பாலும் அது பின்வரும் வழிகளிலாகும்.

- தொழிலாளர் உரிமைகளை / கோரிக்கைகளை வென்றெடுக்க முதலாளிகளுக்கு எதிராக,
- அரசியல் உரிமைகளை / கோரிக்கைகளை வென்றெடுக்க அரசாங்கத்துக்கு எதிராக,
- இனக் குழுவொன்றை அடக்குவதற்காக அதன் அங்கத்தினருக்கு எதிராக,
- தேர்தலில் வெற்றி கொள்வதற்காக மாற்றுக் கட்சியினருக்கு எதிராக,
- ஒரு குடும்பத்துக்குச் சொந்தமான சொத்துக்களை / காணியை தவறான வழியில் அடைவதற்காக அவர்களுக்கு எதிராக,
- நபர்களது முன்னேற்றத்துக்கு எதிராக,
- ஒரு கட்சியில் அல்லது சங்கத்தில் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காகத் தம்மோடு போட்டியிடுவோருக்கு எதிராக,

இத்தகைய சந்தர்ப்பங்களில் வன்முறையை எவ்வாறு கையாள்கிறார்கள்?

- சொத்துக்களை அழிப்பதால்
- எதிராளிகளைப் பகிரங்கமாக அல்லது இரகசியமாகக் கொலை செய்வதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மக்களைப் பீதி கொள்ளச் செய்வதால் அல்லது பெருந் தொகையானோரைக் கொலை புரிவதால் (பகிரங்க இடங்களில் குண்டு வெடிக்கச் செய்தல், நிராயுதபாணிகளான பிரஜைகளைக் கொலை செய்தல் போன்றன வாயிலாக)

- பிரஜைகளைக் கடத்திச் செல்லுதல் வாயிலாக

- மறைந்திருந்து, நபர்களை, பொலீசாரை, சாதாரண மக்களை, உத்தியோகத்தரை, தலைவர்களைச் சுடுதலால் அல்லது குண்டெறிதலால்

ஆயுதந் தாங்கிப் போராடுவதால் சமூகப் போராட்டங் களுக்காக வன்முறையைக் கையாளல் எந்த அளவுக்கு நியாயமானது எனக் கூற முடியுமா?

- அதனால் பாரிய அளவில் மரணங்களுக்கு, காயங்களுக்கு, சொத்துச் சேதங்களுக்கு ஆளாவது அப்பாவிப் பொது மக்களே.

- அதனால் நாட்டில் பீதி நிலை தோன்றல், சட்டம் சீர் குலைதல் காரணமாக மக்கள் சொல்லொணாக் கஷ்டங்களுக்கும், கவலைகளுக்கும் ஆளாவர்.

- நாட்டின் அபிவிருத்திக்காகச் செலவிடப்பட இருந்த தேசிய செல்வம் போருக்காகச் செலவிட வேண்டி நேரிடும்.

- மனித சமூகம் மனிதனுக்குத் தீமை பயக்கும் இடமாக மாறும்.

- மனித வாழ்வின் மதிப்புக் குறையும். மனித வாழ்வு பெறுமதி அற்றது, அற்பத்தனமானது என்ற கருத்து சமூகத்தில் தோன்றும்.

- பீதியான நிலைமையின் கீழ் ஜனநாயகம் வீழ்ச்சியடைவதோடு தான்தோன்றித்தனமாக நடந்து கொள்ளும் அதிகார வெறி கொண்ட தலைவர்கள் தோன்றுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய காரணங்களால் அதனை நியாயப்படுத்தல் கடினமாகும். இவ்வாறு போராட்ட உபாயமாக வன்முறையைக் கையாளுவதன் குறிக்கோள்கள் வருமாறு:

- மக்களைப் பயங் கொள்ளச் செய்து தம் போராட்டம் மீது கவனத்தை ஈர்த்தல்.

- மக்களுக்கு இன்னல்களையும் தடைகளையும் ஏற்படுத்தி நாட்டில் சிவில் நிர்வாகத்தைச் சீர்குலைத்தல்.

- மக்களுக்கு இன்னல்களை ஏற்படுத்துவதன் வாயிலாக அவர்களை அரசாங்கத்தின் மீது வெறுப்படையச் செய்து அரசாங்கத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழத் தூண்டல்.

- மக்களையும் அரசாங்கத்தையும் அச்சமூட்டி எச்சரித்துத் தமது கோரிக்கைகளைப் பெற்றுக் கொள்ளல்.

- சிவில் நிர்வாகத்தையும் அன்றாட நடவடிக்கைகளையும் குழப்பிச் சமூகக் கட்டமைப்பைச் சிதைத்துப் பதவிக்கு வருதல்.

பெரும்பாலான அரசியல் வன்முறை சார்ந்த பயங்கரவாத இயக்கங்களுக்குச் சேர்த்துக் கொள்ளப்படுபவர் இளைஞரே. இதற்கான காரணம் என்ன? (பிள்ளைகளைச் சிந்திக்க / ஆராயச் செய்யவும். அவர்களிடம் இருந்து துலங்கல்களைப் பெறவும். எதிர்பார்க்கப் படுவன:

- இளைஞரிடம் புதிய உலகை உருவாக்கவும் அநியாயங்களைக் களைந்தெறியவும் உள்ள ஆவல்.
- இளைஞரை ஊக்குவித்தல் இலகுவாய் இருத்தல்.
- முன் வருவதில் உள்ள விருப்பும் துணிவும்
- கண்ணியம்
- அர்ப்பணிப்பு
- தீரச் செயல்கள் மீது கொண்ட ஆவல்
- துடிதுடிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞரைப் பயங்கரவாதத்துக்கு ஆட்படுத்திக் கொள்ளக் கைக் கொள்ளும் உத்திகள் பல. அவற்றில் சில வருமாறு:

- நடைமுறைச் சமூகத்தில் காணப்படும் அநியாயங்களையும் குறைபாடுகளையும் எழுச்சியோடு சுட்டிக் காட்டி நியாயமான சமுதாயத்தைத் தோற்றுவிக்கத் தம்மை அர்ப்பணிக்க வருமாறு இரந்து கேட்டல்.
- முற்றிலும் நியாயமான சமுதாயம் பற்றிய ஒளி மிகுந்த எதிர்பார்ப்புகளை அளித்தல்.
- பிரச்சினையின் ஒரு பக்கத்தை மட்டுமே காட்டுதல்.
- வரலாற்றைத் திரித்துக் காட்டுதல்.
- ஒரு பக்கஞ் சார்ந்த தர்க்க முறை.
- நாட்டுப் பற்று, வர்க்கவாதம் போன்ற மனவெழுச்சிகளை வெளிக்கொணரத்தக்கதான மொழியில் பேசி விவேகத்துடன் கவருதல்.
- தம்மை அர்ப்பணித்துக் கொள்ளுமாறு இளைஞரிடம் மீண்டும் மீண்டும் கோரிக்கை விடல்.
- ஒரு நபர் என்ற அடிப்படையில் சுயாதீனமாகச் சிந்தனை செய்வதைப் பின்னடையச் செய்து, பதிலாக இயக்கத்துக்காகச் சிந்தனை செய்யத் தூண்டுதல்.
- சட்ட விரோதமான நடவடிக்கைகளை ஊக்குவித்து அதன் மூலம் தம் இயக்கத்துக்கு அவர்களை ஆட்கொள்ளல்.
- இயக்கத்தில் இருந்து விலகிச் செல்லும் நபர்களைக் கொலை செய்தல் / அச்சமூட்டல்.
- அதிகாரங்களையும் சலுகைகளையும் வழங்கல்.
- கொலையையும் அழிவையும் நியாயப்படுத்திக் காட்டல்.
- பகைவனை / பகைவர் கூட்டத்தைப் உருவகித்துக் காட்டுதல் வாயிலாகப் பகைமையை உருவாக்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமர்ப்பித்தல் :**

25 நிமிட விரிவுரையை மேற்கொள்ளலாம். எனினும் இயன்றவரை எல்லாக் கட்டங்களிலும் பிள்ளைகளைக் கலந்துரையாடலில் ஈடுபடச் செய்து அவர்களது கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளல் நன்று.

**செயற்பாடு :**

வகுப்பை நான்கு குழுக்களாக வகுத்து ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடியும் மதிப்பீடு செய்தும் விடயங்களைக் குறிப்பிடத்தக்கதாகக் கீழ்வரும் தலைப்புகளைக் குழுவுக்கு ஒன்றாக வழங்கவும்.

*(1)* பயங்கரவாதத்தால் ஆட் கொள்ளப்பட்ட இளைஞரது எதிர்காலம் எவ்வாறு இருக்கும்?

*(2)* பொது மக்களைக் கொலை செய்தலை நியாயப்படுத்தப் பயங்கரவாதிகள் சமர்ப்பிக்கும் வாதங்கள் எவை?

*(3)* ஒரு சமூக இயக்கம் பயங்கரவாதத்தை நோக்கிச் சாரும் பண்புகள் எவை?

*(4)* ஒரு நாட்டில் / சமூகத்தில் மக்கள் / இளைஞர் பயங்கரவாதத்தின் மீது ஊக்குவிக்கப்பட ஏதுக்களாக உள்ளவை எவை? அறைற்றை எவ்வாறு களையலாம்?

(கலந்துரையாடலுக்கு 20 நிமிடங்களும் பிள்ளைகள் விடயங்களைச் சமர்ப்பிக்கக் குழுவொன்றுக்கு 05 நிமிடங்களும் அளித்தல் போதுமானது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் : 5.3

நேரம் : 90 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கருக்கள் :**

வன்முறையில் ஈடுபடுவதற்கு முன்னர் நபர்கள் தம் உள்ளங்களை உணர்வற்றதாக ஆக்கிக் கொள்ளப் பலவாறான உளவியல் உபாயங்களைக் கையாளுகிறார்கள்.

**குறிக்கோள்கள் :**

(1) மனிதாபிமானம் அற்ற விடயங்கள் பற்றி விபரிப்பர்.

(2) மனிதாபிமானம்அற்றோராகமாறக்குற்றவாவாளிகள் கடைப்பிடிக்கும்உளவியல்உத்திகளைக்குறிப்பிடுவர்.

(3) குற்றவாளியின் மனத்தை அடையாளங் காணுவதால் தாம் அதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டிய சுயவிளக்கத்தைப் பெறுவர்.

**நுழைவு :** ஓர் உண்மைச் சம்பவத்தை உங்கள் முன் சமர்ப்பிப்பதன் மூலம் இப் பாடத்தை ஆரம்பிக்க விரும்கிறேன்

அது முன்பு அமெரிக்கப் பத்திரிகை ஒன்றில் வெளியான சம்பவம். சிக்காகோ நகர வீதியொன்றில் காணப்பட்ட சிறிய எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் ஒருநாள் இரவு கொள்ளையர் கூட்டம் ஒன்று நுழைந்தது. அவர்கள் அங்கிருந்த இரு ஊழியர்களையும் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்திக் கைகால்களை வரித்துக் கட்டிச் சேர்ந்திருந்த எல்லாப் பணத்தையும் அபகரித்துச் சென்றனர்.

சிறிது நேரத்தின் பின்னர் பெற்றோல் பெற்றுக் கொள்ள ஒரு மோட்டார் வண்டி வந்து சேர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது அந்த ஊழியர்கள் இருவரும் தமக்கு உதவுமாறு சாரதியைக் கேட்டனர். ஆனால் சாரதி என்ன செய்தான் தெரியுமா? அந்தச் சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாக்கிப் போதுமான அளவு தனது வண்டிக்குப் பெற்றோலை நிரப்பிக் கொண்டு பணத்தைச் செலுத்தாது புறப்பட்டுச் சென்றான். அதிலிருந்து இரண்டு மணித்தியாலங்கள் வரை அங்கு வந்த எல்லாச் சாரதிகளும் அதனையே செய்தனர். இறுதியாக வந்த சாரதி எவ்வாறாயினும் அவர்களை விடுவித்துப் பொலீசுக்கு அறிவித்தார்.

**படி : 1**

மேலே குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றி கலந்துரையாடவும். உதவியாகக் கொள்ளத்தக்க வினாக்கள் :

(1) இச் சம்பவத்தைக் கேட்டவுடன் உங்கள் மனதில் தோன்றிய உணர்வுகள் எவை?

(2) அங்கு எரிபொருள் நிலையத்தை அடைந்த இறுதிச் சாரதி நீங்கலாக ஏனையோர் நடந்து கொண்ட விதம் பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

(3) அந்த நடத்தையை எத்தகைய சொற்களால் விபரிக்க இயலும்?

(4) ஊழியர் அடைந்திருந்த பரிதாப நிலையால் பயன்பெற்ற சாரதிகள் அச் சந்தர்ப்பத்தில் எவ்வாறு எண்ணியிருக்கக் கூடும் என நீங்கள் கருதுகிறீர்கள்?

**விடய அமைப்பு :**

இச் சம்பவத்தின் மூலம் மனிதன் தனது மனிதாபிமான இயல்பில் இருந்து விலகிக் கொள்வது தொடர்பாக உங்கள் கவனத்தைச் செலுத்துங்கள். இதனை மனிதாபிமானமின்மை என இனங் காண்க. இத்தகைய நடத்தையில் காணப்படும் அடிப்படைப் பண்புகள் மூன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) கருணை, பரிவு, இரக்கம் போன்ற இயற்கை மானிடப் பண்புகள் மறைந்த மனதைப் புலப்படுத்தல்.

(2) ஏனைய மனிதன் அல்லது மனிதர் மட்டில் புரிந்துணரல் அல்லது கௌரவம் இல்லாமை.

(3) ஏனைய மனிதன் அல்லது மனிதர் தனது அபிலாஷையை அடைந்து கொள்வதற்கான சாதனம் அல்லது பண்டம் எனக் கருதுதல்.

**கலந்துரையாடல் :**

மனிதாபிமானம் அற்றதாக நடந்து கொண்ட சந்தர்ப்பங்கள் சிலவற்றை உதாரணமாகக் கொண்டு மேலே குறிப்பிட்ட பண்புகளை விளக்குக. நாளிதழ்களில் இருந்து தேர்ந்தெடுத்த கொள்ளை, களவு, கற்பழிப்பு போன்ற குற்றச் செயல்கள் வாயிலாக இதனை உணர்த்தலாம்.

**விடய அமைப்பு : 2**

மனிதர் கொடிய / கோரமான / குரூரச் செயல்களை எவ்வாறு புரிகிறார்கள்?

- சன நெருக்கடியான இடங்களில் குண்டுகளை வெடிக்கச் செய்து நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களை அழித்தல்.

- கிராமங்களுக்குள் நுழைந்து அப்பாவி மனிதரை வெட்டிப் போடுதல்.

- அப்பாவி மனிதரைக் கடத்திச் சென்று அவர்களைச் சிறை வைத்தல்.

- குழந்தைகளைத் தாய்மாரிடம் இருந்து பறித்தெடுத்து நிலத்தில் எறிந்து கொல்லல்.

எமது நாட்டில் இச் செயல்கள் அடிக்கடி பலரால் அரசாங்கத்துக்குத் தம் எதிர்ப்பைக் காட்டுவதற்காகவும் மக்களை அச்சுறுத்துவதற்காகவும் புரியப்பட்டவை. எமது கேள்வி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானது மனிதாபிமான உணர்வு உள்ள ஒருவர் இத்தகைய செயல்களைச் செய்வது எவ்வாறு என்பதேயாகும். மனிதாபிமான உணர்வு உள்ள ஒருவர் உண்மையாகவே ஒரு எறும்பையேனும் கொல்லல் எளிதல்ல.

இத்தகைய கொரூரச் செயல்களைப் புரிபவர்கள் அதன் பொருட்டுத் தம் உள்ளங்களை அவற்றுக்குத் தக்கவாறு அமைத்துக் கொள்ளக் கையாளும் பல்வேறு உத்திகள் உள. சிலவற்றை நாம் அடையாளங் காண்போம்.

*(1)* மனவெழுச்சிகளை உதாசீனஞ் செய்து விடல்.

தான் புரியப் போகும் குற்றத்தைப் பற்றித் தொடர்ந்தும் நினைக்கத் தொடங்கித் தன் மனச்சாட்சியும் மனிதாபிமான உணர்வுகளும் அதற்கு மாறாக எழுவதால் விகாரமானதும் சிக்கலானதுமான மனநிலை தோன்றும்.

இதனை யறிந்த குற்றம் புரிபவன் தான் செய்ய விருக்கும் செயலை பற்றி மனவெழுச்சி / உணர்வு அடிப்படையில் எண்ணுவதைத் தவிர்த்துக் கொள்வான். பதிலாகப் புரியவிருக்கும் செயல் பற்றி மட்டுமே விடயம் சார்ந்த திட்டத்தோடு எண்ணுவான்.

*(2)* மட்டமான பெயர் சூட்டல்.

வேறு சில குற்றம் புரிவோர் தம் மனதைத் தேற்றிக் கொள்வதன் பொருட்டுக் கையாளும் உபாயமாவது எது வெனில் தன்னால் அழிக்கப்படவிருக்கும் மனிதனுக்கு யாதுமொரு உதவாக்கரைப் பெயரைச் சூடல் ஆகும்.
(உதாரணங்கள்: போராட்டத்தைக் காட்டிக் கொடுப்பவன், சமூகத்துரோகி, ஒற்றன், பயங்கரவாதி) இவ்வாறாகப் பெயர் சூடப்படுபவரும் தன்னைப் போன்றே மற்றொரு மனிதன் என்பதை மறத்தல் அப்போது இலகுவாக இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) இங்கு கொடூரச் செயல் கோட்பாட்டுக்கு ஏற்புடைய தெனத் தமக்கும் ஏனையோருக்கும் உணர்த்தல் ஆகும். எல்லாப் பயங்கரவாதச் செயல்களுக்கும் அடியில் ஏதோவொரு தத்துவம் / கோட்பாடு இருப்பதை நாம் காணக்கூடியதாக இருப்பது இதன் காரணமாகவே. இவ்விதம் கோட்பாட்டுடன் எண்ணும்போது தம்முள் தோன்றும் சுயமான மனிதவுணர்வுகளை ஒதுக்கி வைத்துச் செயற்படவியலும்.

(4) சம்பவத்தை விசேடமாகக் கருதுதல்.

இதுவும் அபாண்டமான குற்றச் செயலை நியாயப்படுத்திக் கொள்ளக் கையாளும் தர்க்க முறையாகும். இங்கே பொதுவாக நபர்கள் இவ்விதமாகவே சிந்திக்கிறார்கள்.

''மனிதக் கொலை கூடாதது. எனினும் இச் சந்தர்ப்பம் விசேடமானது''.
''இது கொள்ளை அல்ல. இது எமது இயக்கத்துக்குப் பணந் தேடிக் கொள்ளல் மட்டுமே''.
''குற்றம் புரிதல் இதன் நோக்கமல்ல. இது ஆணவங் கொண்ட பெண்ணுக்கு வழங்கும் தண்டனை மட்டுமே''.

(5) ''செயல் கூடாதது எனினும் குறிக்கோள் நல்லது'' என நிலைத்தல். செயல் எத்தகையது எனினும் அதன் நோக்கம் நல்லதெனின் அச் செயல் நியாயமானது எனப் பலர் கருதுகின்றனர். பயங்கரவாதிகள் பலர் அவ்வாறு எண்ணுகின்றனர்.

**உதாரணங்கள் :**
''நாம் கொலை புரிவது மனிதரை வாழச் செய்யவே''
''நாம் உமது தந்தையைக் கொலை செய்வது உம்மில் கொண்ட அன்பினாலேயே''

இவ்வாறாக நடவடிக்கையைப் பிரதிபலனில் நின்றும் வேறுபடுத்திச் சிந்தித்தல் பிழையானது. ஒரு பிரதிபலன் என்பது அந் நடவடிக்கையின் உற்பத்தியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தயாரிப்பு) ஆகும். ''நீர் ஊற்றும் விதை எவ்வாறோ அதனால் பெறும் பலனும் அவ்வாறே அமையும். புல்லை விதைத்து நீர் ரோசா மலரைப் பெற முடியாது'' என அமைரிக்கத் தத்துவஞானி ஒருவர் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார். பயங்கரவாதத்தின் மூலம் அமைதியான சமுதாயத்தைத் தோற்றுவிக்க இயலாது.

(6) பொறுப்பை ஏனையோர் மீது சுமத்துதல்.

அடுத்தவரது பிழை காரணமாகவே தன்னால் இச் செயல் புரியப்பட்டது அல்லது புரியப்படுகிறது எனத் தர்க்கித்தல். எளிதில் குற்றஞ் சாட்டக்கூடியது. 'பதவியில் இருக்கும் அரசாங்கத்தை' இல்லை எனில் 'நடைமுறையில் உள்ள சமூக பொருளியல் அமைப்பை'. ''எம்மை ஆயுதம் ஏந்தத் தூண்டி யுள்ள்வர்கள் நீங்களே'' என்பதும், ''அடுத்தவரும் அதே தவறைச் செய்திருக்கிறார்'' என்பதும் அவ்வாறே தம் பொறுப்பைப் பிறர் மீது சுமத்தலும் ஏனைய தர்க்கங்கள் ஆகும்.

மேலே குறிப்பிடப்பட்ட உபாயங்கள் ஏனையோரைக் குற்றங்களுக்கு ஊக்குவிக்கும் முறையாகவும் கைக்கொள்ளப்படுகிறது.

**சமர்ப்பித்தல் :**

பொருத்தமான சந்தர்ப்பங்களில் பிள்ளைகளையும் கலந்துரையாடலில் ஈடுபடுத்திக் கொண்டு 30 நிமிடங்கள் வரை விடயங்களைச் சமர்ப்பிக்கவும். முக்கியமான தலைப்புகளையும் விடயங்களையும் கரும் பலகையில் குறித்தல் அவசியம்.

**செயற்பாடு :**

பாத்திர நடிப்பு
வகுப்பை 6 குழுக்களாக வகுப்புப் பாடத்தில் இடம் பெற்ற குற்றவாளிகள் தம் மனதைத் தேற்றிக் கொள்ளும் முறை-களைக் குழுவுக்கு ஒன்றாக அளிக்கவும். அவர்கள் அதில் இருந்து பாத்திர நடிப்பைத் தயாரித்து வகுப்பில் சமர்ப்பித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதாரணம் : ஒரு நேர்முகப் பரீட்சை**

நேர்முகப் பரீட்சையாளர் கோரச் செயல்கள் புரிந்த குற்றவாளி ஒருவரிடம் விடயங்களை வினவுகிறார். குற்றவாளி தனது செயல்களை நியாயப்படுத்திக் கொண்ட முறையைக் குறிப்பிட்டு விலகிச் செல்ல எத்தனிக்கிறார். தயாராகப் 10 நிமிடங்களும் ஒன்றைச் சமர்ப்பிக்க 04 நிமிடங்கள் வீதமும் ஆக 24 நிமிடங்கள்.

**மதிப்பீடு :**

(1) நீங்கள் இப் பாட வாயிலாகக் கற்றுக் கொண்ட மிகப் பெறுமதியான விடயம் எது? (ஒவ்வொரு பிள்ளையும் எழுந்து நின்று வெளிப்படுத்துவர்)

(2) நீங்களும் எப்போதாவது வன்முறை செயலைப் புரிய மேற் குறிப்பிட்டவாறு மனதைத் தேற்றிக் கொள்ளும் முறையைக் கைக்கொண்டதுண்டா? அவ்வாறாயின் அதனை விபரிக்கவும்.

(3) மனிதனது மானிடத்தன்மை அற்றுப் போதல் சமூகப் பிரச்சினையாக கருதப்பட வேண்டியது ஏன்? அதற்கான ஏதுக்களைத் தருக.

(4) மனிதாபிமானம் அற்ற நிலையைத் தவிர்த்துக் கொள்ளவும் நற்பண்புகளைக் கூடுதலாக விருத்தி செய்து கொள்ளவும் ஒரு மனிதன் என்ற அடிப்படையில் யாது செய்யலாம்? (செயல்களை அடக்கிய பட்டியல் ஒன்றினைத் தயாரிக்கவும்.)

(5) ஒரு சமூகத்தில் மனிதர்களது மனிதப் பண்புகளை வளர்க்கத் தக்க செயல்கள் எவை?

(15 நிமிடங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் : 5.4

நேரம் : 60 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கருக்கள் :**

இம்சையின் தவறை உணர்ந்து கொண்ட அசோக மன்னன் அஹிம்சையை முதன்மையாகக் கொண்டு தம் வாழ்வை மீண்டும் வெற்றிகரமாக அமைத்துக் கொண்ட விதம் முன்மாதிரியானது.

**குறிக்கோள்கள் :**

(1) அசோக மன்னன் வாயிலாகச் சிறப்புமிக்க அஹிம்சையான பாத்திரம் ஒன்றைக் கற்றுக் கொள்ளல்.

(2) அவ்வரசனது வாழ்க்கை நடத்தை வாயிலாகத் தமது நடத்தை விருத்திக்காகப் பெற்றுக் கொள்ளத்தக்க முன்மாதிரிகளை எடுத்துக் காட்டுவர். விபரிப்பர்.

**நுழைவு :**

இன்று நாம் உலக வரலாற்றில் சிறப்பான இடத்தை வகித்த ஒரு மனிதரைப் பற்றிக் கற்போம். நீங்கள் இற்றைக்கு இரண்டாயிரத்து இருநூற்று ஐம்பது வருடங்களுக்கு முன்னர் இந்தியாவில் இருந்த அசோகச் சக்கரவர்த்தியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவர் உலகில் இருந்த சிறப்புமிக்க அரசன் எனச் சில வரலாற்றாசிரியர்கள் கருதுகிறார்கள். அவர் மனிதனாகச் சிறந்த முன்மாதிரியைக் காட்டியவர். நாம் அவரது கதையைக் கற்போம்.

**பாடம் :**

புராதன இந்தியாவில் மௌரியப் பேரரசு சிறப்புற்று விளங்கியது. அவ்வரசு அயல் நாடுகளைப் போர்ப்பலத்தால் அடிமைப்படுத்தித் தம் மரசோடு இணைத்துப் பேரரசாவதைக் கொள்கையாகக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிந்துசார மன்னனின் பின்பு அவன் மைந்தனான அசோகன் பதவிக்கு வந்தான். அசோகனின் தமையன் அதனை எதிர்த்ததால் அசோகன் அவனைக் கொலை செய்தான். கொல்லப்பட்டவனுக்கு ஆதரவு வழங்கிய காரணத்தால் மேலும் பல தன் உடன் பிறப்புகளை அசோகன் கொன்றொழித்தான். இக் காரணத்தால் அவன் 'கொடிய அசோகன்' என மக்களால் அழைக்கப்பட்டான்.

மகத நாட்டில் பாடலிபுரம் என்ற நகரை இராசதானியாகக் கொண்டு ஆண்டு வந்த அசோகன் நாடுகளைக் கைப்பற்றும் நோக்குடன் பாரிய படையைத் திரட்டினான்.

அவனது முதற்குறியாக அமைந்தது தற்போதைய வங்காளமாகிய அப்போதைய கலிங்கதேசமே. இலட்சக்கணக்கான வீரரைக் கொண்ட படையோடு கலிங்கத்துக்குள் நுழைந்த அசோகன் அந்த நாட்டுக்கு எதிராகக் கடுந் தாக்குதலை மேற்கொண்டான். இறுதியில் அவன் வெற்றி கொண்டு கலிங்கத்தை அடிப்படுத்திக் கொண்டான்.

வெற்றிக் களிப்பினால் அசோக மன்னன் குதிரை மீதேறிப் போர்க்களங் காணப் புறப்பட்டான். வழியில் செத்துமடிந்த ஆயிரக்கணக்கான வீரரது சடலங்கள், அச் சடலங்களுக்கருகே கதறும் பிள்ளைகள், பெண்கள், உறவினர்கள் போன்ற காட்சிகளால் அவன் பெருங்கவலைக்கு உள்ளானான். அப் போரினால் இறந்தவர்களது எண்ணிக்கை ஒரு இலட்சம் வரையாகும். காயமுற்றோர் எண்ணிக்கை அதனிலும் பன்மடங்காகும். கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்களது எண்ணிக்கை ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் வரையிலாகும். இம் மனிதப் படுகொலைக்குத் தானே பொறுப்பினை ஏற்க வேண்டும் என்ற உணர்வினால் மன்னன் பெரும் வேதனைக்கு ஆளாயினான். இச் சந்தர்ப்பத்தில் பௌத்த மதவழியிலான அஹிம்சையை 'நிக்ரோத' என்ற பிக்கு வாயிலாகக் கேட்டுத் தெளிந்த அசோகன் அன்று தொட்டு முற்றிலும் அஹிம்சையாளனாகத் தம் வாழ்வை மாற்றியமைத்துக் கொள்ளத் தீர்மானித்தான்.

'யுத்தத்தினால் / வன்முறையால் மட்டுமே மனிதரை வெல்ல முடியும் என்பதல்ல. நன்மையாலும் அதாவது தர்மத்தாலும் மனிதரை வெல்ல முடியும்' என்பதை அவர் உணர்ந்தார். இதன் பின்னர் போரினால் நாடுகளை வெல்வதற்குப் பதிலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறத்தினால் நாடுகளை வெல்ல வேண்டும் என்ற இலட்சியத்தைக் கைக்கொண்ட அவர் உலகோர் சுகம் பெறவும் அவர்கள் இலட்சியத்தைக் கைக்கொண்ட அவர் உலகோர் சுகம் பெறவும் அவர்கள் நல்வழியிலான வாழ்வை மேற்கொள்ளவும் தம் வாழ்வையே அர்ப்பணித்துக் கொண்டார்.

அசோக மன்னர் தம் பேரரசில் மக்களுக்கு அறிவிக்கும் பொருட்டு ஆங்காங்கே நிறுவியிருந்த கல்வெட்டுக்கள் வாயிலாக அவர் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளலாம். இக் கல்வெட்டுக்கள் அவரது சிந்தனைகள், எதிர்பார்ப்புகள், செயற்பாடுகள் என்பவற்றை வெளிப் படுத்துகின்றன. நாம் அவற்றை நோக்குவோம்.

**மனிதக்கருணை :**

''எல்லா மனிதரும் எனது குழந்தைகளே. நான் எவ்வாறு எனது குழந்தைகளது இவ்வுலக மறுவுலக சுகங்களை விரும்புகிறேனோ அவ்வாறே எல்லா மனிதரதும் சுகங்களை விரும்புகிறேன்''.

*(கலிங்க க. வெ. 1)*

''அனைத்து மாந்தரதும் நன்மையின் பொருட்டுப் பணி புரிய வேண்டும் என என்னால் சிந்திக்கப்பட்டது'' ............ அனைவரதும் நன்மை கருதிய பணிபுரிதல் அன்றி வேறு பணி எனக்கில்லை''.

*(கல்வெட்டு 1)*

*(அசோக மன்னர் தாம் 'தேவானம்பிய பியதர்ஷி' என்ற கௌரவப் பட்டத்தால் அழைக்கப்படுதலை விரும்பினார். அதன் பொருள் 'தெய்வத்துக்குப் பிரியமான தரிசனன்' என்பதாகும். தமக்குரிய இக் கௌரவப் பட்டத்தை அவர் தம்மோடு தொடர்பு கொண்டிருந்த ஏனைய அயல் நாட்டு அரசர்களுக்கும் அளித்தார்.)*

மன்னரது அரசின் எல்லா இடங்களிலும் அண்டை நாடுகளான சேர, சோழ, பாண்டிய, தாம்பிரபர்ணி (இலங்கை) ஆகியவற்றிலும் கிரேக்க தேசத்திலும் சாமந்த இளவரசர்களது தேசத்திலும் ஆக எல்லா இடங்களிலும் மனிதருக்கான சிகிச்சை நிலையங்களையும் விலங்குகளுக்கான சிகிச்சை நிலையங்களையும் தாபித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.......... விலங்குகளதும் மக்களதும் பயன் கருதி வீதிகளில் மரங்கள் நடப்பட்டன. கிணறுகள் வெட்டப்பட்டன.

*(கல்வெட்டு 2)*

(உலக வரலாற்றில் முதன் முதலாக பொதுமக்களுக்காகவும் விலங்குகளுக்காகவும் ஆஸ்பத்திரிகளை நிறுவியமை இங்குதான் கேட்கத்தக்கதாக இருக்கிறது.)

நன்மை புரிதல் கடினமானது. ஒருவர் நன்மை புரிகிறார் எனில் அவர் சிரமமானதைச் செய்கிறார். என்னால் பல நன்மைகள் புரியப் பட்டிருக்கின்றன. என்போன்று எனது பிள்ளைகள், பேரர்கள், அவர்கள் வழித் தோன்றல்கள் ஆகியோரும் அவ்வாறே பின்பற்றினால் அவர்கள் நன்மை புரிவோர் ஆவர். சிறிதளவேனும் எவராவது தளர்ச்சி கொள்வாரெனில் அவர்கள் தீமையைப் புரிவர். தீமையைப் பரவச் செய்தல் எளிது.

*(கல்வெட்டு 5)*

**ஜீவகாருண்யம் :**

''இவ்விடத்தில் எவ்விலங்கையேனும் கொல்லுதல் ஆகாது. முன்னர் அரசரது சமையலறையில் ஆயிரக்கணக்கில் விலங்குகள் உணவுக்காகக் கொல்லப்பட்டன. எனினும் தற்போது இவ்வறக் குறிப்பு எழுதப்படுகின்ற போது மூன்று பிராணிகள் மட்டுமே கொல்லப்படும். இதன் பின்னர் இம் மூன்றும் கொல்லப்படா.

*(கல்வெட்டு 1)*

அரசரது கருணை விலங்குகள் மீதும் செலுத்தப்பட்டது. விலங்குகளது உயிர் வாழும் உரிமையைப் பேணல் அரசாங்கத்தின் பொறுப்பு எனக் கருதியமை மனித நாகரிகத்தின் வளர்ச்சி கருதி இடப்பட்ட முதற்கட்டம். அரசர் அசோகன் சொல்லால் மட்டுமன்றிச் செயலாலும் முன் மாதிரி காட்டியவர் என்பதற்கு இம் மடல் சான்றாகும்.

மேலும் கல்வெட்டாலான மடலொன்றில் (கற்றூண் மடல் 5) மனிதரோடு பழகத்தக்க பிராணிகளான கிளி, நாகணவாய் (பூவை) வெளவால் போன்ற பறவைகளையும் சில வகை மீன்களையும் ஆமை, முள்ளம்பன்றி. அணில், மான், கால்நடைகள் போன்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருகங்களையும் கொல்லுவதைத் தடை செய்து ஆணை பிறப்பித்தார். அதில் இவ்வாறு குறிப்பிடப்படுகின்றது.

மேலும் நலிவடைந்தனவும் குட்டிகளுக்குப் பாலூட்டிக் கொண்டிருப்பனவும் ஆன ஆடுகளையும் பன்றிகளையும் கொல்லல் ஆகாது. ஆறு மாதங்களிலும் குறைந்த வயதினை உடைய குட்டிகளையும் கொல்லுதல் கூடாது. கோழிகளை அறுத்தல் ஆகாது. காரணமின்றி அல்லது விலங்குகளைக் கொல்லும் நோக்கில் காடுகளை எரித்தல் கூடாது. பூரணை தினங்களில் மீன்பிடித்தல், விற்பனை செய்தல் என்பன விலக்கப் படுதல் வேண்டும்.

கல்வெட்டுக்கள் பல விலங்குகளுக்கு நீர் வசதி அளிக்கப்-பட்டமையைக் காட்டுகின்றன.

### தார்மீக ஆட்சி

நாட்டு மக்களது உடல் ரீதியிலான வாழ்வுக்குத் தேவையான-வற்றை ஒழுங்கு செய்து விநியோகிப்பது மட்டுமே தமது அரசாங்கத்தின் கடமை என அவர் கருதவில்லை. அவர்களது அறவழியிலான வாழ்வுக்கு வழி காட்டலும் வசதிகளை வழங்கலும் தம் கடமை என எண்ணிய அரசர் அது தொடர்பாகப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

தமது பிரஜைகள் சிறந்த வாழும் வழியைக் கைக்கொள்ளும் பொருட்டு 'தர்மமாத்ர' என்ற பெயிரில் உயர் அதிகாரிகளை நியமித்தார். மத வேறுபாடுகள் இன்றி அறத்தை நிறுவுதல் அறத்தை வளர்த்தல், அறத்தில் ஈடுபடுவோரது மனநலம் பேணல், அறப்பணியில் ஈடுபடும் மதக்குரவர் பிரச்சினைகளைத் தீர்த்தல், பிராமணர், அநாதைகள், முதியோர் நலம் பேணல் முதலியவை அவ் வதிகாரிகளின் கடமைகளாக விளங்கின.

நாட்டில் சட்டத்தைக் காப்பதற்காக நீதிபதிகள் நியமிக்கப்-பட்டனர். மன்னர் அவர்களது விவகாரங்களை மேற்பார்வை செய்தார். அவர்களால் அல்லது வேறும் அரச உத்தியோகத்தரால் தமக்கு அநீதிகள் இழைக்கப்படின் குடிகள் நேரடியாகவே தம்மிடம் முறையிடத்தக்கதான சுதந்திரம் வழங்கப்பட்டது. (நான் அந்தப்புரத்தில் அல்லது பூஞ் சோலையில் அல்லது வேறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கிருப்பினும் எச் சந்தர்ப்பத்திலேனும் அதிகாரிகள் மக்களது அலுவல்களை எனக்கு அறியத் தருவார்களாக. எல்லா இடங்களிலும் நான் மக்களுக்குத் தேவையான விடயங்களைப் புரிவேன்.)

(கல்வெட்டு மடல் 6)

மன்னரும் தம் அரசின் பல்வேறு பிரதேசங்களுக்கும் சென்று அறம், பொருள் தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கி மக்களது வசதிகளைத் தேடிப் பார்த்தார். இவை 'தர்ம யாத்திரை' எனப்பட்டது.

மக்கள் பெற்றோர், பிராமணர், ஆசிரியர், வயோதிபர், மூத்தோர், உறவினர், நண்பர் ஆகியோரை உபசரித்தல், மத ஒற்றுமை சிக்கனமாகச் செலவு செய்தல், குறைந்தளவு உடைமைகளை வைத்திருத்தல், பணியாளரைக் கவனித்தல், உயிர்க் கொலையை விலக்கல். உண்மை பேசல், பரிவு காட்டல். பாவங்களைத் தவிர்த்தல், அறவழி வாழ்தல் போன்ற இயல்புகளை வளர்க்க முயன்றார். நாட்டின் அபிவிருத்தியாக அவர் கருதியது மக்களது மானிடப் பண்புகளின் விருத்தியையே.

சாந்தி நெறியைத் தமக்கு வெளிப்படுத்திய பௌத்த மதத்தின் மீது மிகப் பக்தியோடு செயற்பட்ட அரசர் அயல் நாடுகளிலும் அதனை அறிமுகப்படுத்தத் தர்ம தூதர்களை அனுப்பி வைத்தார். இந்த அடிப்படையில் மகிந்த மகா பிக்கு இலங்கையை அடைந்து மிக வெற்றிகரமாக பௌத்த தர்மத்தை மக்களிடத்தே அறிமுகஞ் செய்தார். பௌத்த நாகரீகம் அவ்வாறே நம் நாட்டில் ஆரம்பமாயிற்று. இதனோடு நின்றுவிடாத அரசர் அக்கால இந்தியாவில் உயர்ந்த நிலையை எய்தியிருந்த கட்டடவியல் போன்ற கலைகளையும் அறிமுகப்படுத்துவதற்காக நிபுணர்களை எம் நாட்டுக்கு அனுப்பி வைத்தார். இந்தியாவில் இருந்து வந்த பௌத்த பிக்குமார் மூலம் அசோப எழுத்து வடிவ விதானத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் எழுதும் முறை ஆரம்பிக்கப்பட்டது. இதன்படி பணிகள் மிகச் சிறந்தவை. ஒரு கல்வெட்டின் வாயிலாக அவர் இவ்வாறு இயம்புகிறார்.

எல்லா இடங்களிலும் பெறப்படும் வெற்றி மகிழ்ச்சியானதேயாகும். அது நன்மையைப் புரியுமிடத்து அல்லது வேறுவிதமாகக் கூறுவதானால் தர்ம வெற்றியாக அமையுமிடத்து ஆழ்ந்ததாகும். எனினும் இம் மகிழ்ச்சியும் சிறியதே. மறுவுலகம் பற்றிய செயல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆன்மீக வளர்ச்சி கருதிப் புரியும் செயல்) தேவா நம்பிய பியதர்ஷி (அசோக மன்னர் சிறப்புப் பெயர்) அவர்கள் கருதுகிறார்கள். ............. எம் பிள்ளைகளும் பேரர்களும் எனது இப் புதிய வெற்றி கொள்ளும் முறையைக் கேட்டு நாடுகளை (போரினால்) வெல்வதை நினைக்கமாட்டார்கள் ஆகுக! தர்ம வெற்றியே உண்மையான வெற்றி எனக் கருதுவார்களாக!

(கல்வெட்டு 13)

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்களின்படி நோக்கும்போது அசோக மன்னர் இருந்த பேரரசர்களிலும் மாறுபட்ட முற்றிலுமே புரட்சி கரமான புதிய நோக்கைக் கொண்டவர் என்பது தெரிய வருகிறது. தாம் கைக்கொண்ட புதிய நெறியில் செல்கையில் அவர் எண்ணற்ற தடைகளை எதிர்நோக்க நேரிட்டதென்பதில் சந்தேகமில்லை. எவ்வாறேனும் தம் வழியில் அளவற்ற தன்னம்பிக்கையுடனும் மனத்துணிவுடனும் பயணம் பண்ணியமை தெரிகிறது. பாரிய பேரரசு ஒன்றை இவ்விதமான மானிடவாத முறையில் எவ்விதம் நிருவகிக்க இயலும் என எம்மில் வியப்புக் கூடத் தோன்றுகிறது. மன்னரது ஆட்சிக் காலம் மனிதக் கொலைகள், அதிகார வெறியால் உருவாகும் பலப் பரீட்சைகள், ஆட்சியாளரது தான் தோன்றித்தனங்கள் நிறைந்த இருண்ட மனித வரலாற்றில் திடீரெனத் தோன்றிய மின்னொளி போன்று பிரகாசித்த குறுகியதொரு காலப் பகுதியே என ஒரு வரலாற்றாசிரியர் கூறுகிறார்.

**சமர்ப்பித்தல் :**

மேலே உள்ள பாடத்தை 25 நிமிடங்கள் வரையிலான விரிவுரை மூலம் சமர்ப்பிக்கலாம்.

**கலந்துரையாடல் :**

எமது நடத்தை விருத்திக்கு அசோக மன்னரது நடத்தையால் பெறத் தக்க முன்மாதிரிகள் எவை? ஒவ்வொரு பிள்ளையினதும் விடைகளைக் கரும்பலகையில் எழுதுக. (எதிர்பார்க்கப்படும் பதில்களுக்கு உதாரணங்கள்:)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தம் மனச்சான்றுக்கு ஏற்பத் தமது வாழ்வை மாற்றியமைத்துக் கொள்ளல்.

- தம் உள்ளத்தில் தோன்றிய பச்சாத்தாபத்தால் வாழ்க்கையைப் புதிய பாதையில் திசைதிருப்பிக் கொள்ளல்.

- தன்னலம் அற்றதான பிறர் நலம்.

- மக்கள் சேவையே வாழ்வின் பிரதான குறிக்கோள்களாகக் கொண்டு அதன் வழி செயற்படல்.

- தம்மால் நிகழ்ந்த தவறுகளைத் திருத்திக் கொள்ளத் தாமதமின்றிச் செயற்பட்டமை.

- தவறை ஏற்றல்

- பணிவு

- உயிர்கள் மீது கருணை

- விடாமுயற்சி / தைரியம்

- தமது அனுபவங்களை நம்பிச் செயற்பட்டமை (ஏனையோர் விமர்சனங்களைப் பொருட்படுத்தாமை)

- உயர்ந்த இலட்சியத்தை முன் வைத்து வாழ்ந்தமை.

- நன்மை அல்லது தர்மத்தின் மீது நம்பிக்கை கொண்டு செயற்படல்.

- தமது வலுவான நடத்தை

- ஒருவர் அவசியம் எனக் கருதின் தம் வாழ்வை நன்மையின் பால் மாற்றியமைத்துக் கொள்ள முடியும் என்பது.

பெறப்பட்ட பதில்களைப் பிள்ளைகளது நடத்தை விருத்திக்கு உதவத் தக்கதாக ஆய்வுக்கு / கலந்துரையாடலுக்குப் பயன்படுத்திக் கொள்ளவும்.

(15 நிமிடங்கள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு :**

மேலே விபரிக்கப்பட்ட அசோக மன்னரின் நடத்தை மூலம் நீங்கள் கற்றுக்கொண்ட ஒன்றினைத் தெரிவு செய்து அதனை விபரிக்கவும்.

வகுப்பை நான்கு பேர் கொண்ட குழுக்களாகப் பிரித்து, சிறிய வட்டமாக அமையுமாறு கதிரைகளை வைத்து, ஏனையோரால் தடைகள் நிகழாதவாறு இட வசதி கொண்டதாக அவர்கள் அமரும்படி செய்து, ஒவ்வொரு பிள்ளையும் தமது விபரத்தை எதிரே உள்ளோர் முன்னிலையில் சமர்ப்பிக்கச் செய்யவும். ஒரு பிள்ளைக்கு 04 நிமிடங்கள் வரையான நேரம் போதுமானது.

*(20 நிமிடங்கள்)*

**குறிப்பு :** அஹிம்சையை வெறுமனே எண்ணக்கருவாகச் சமர்ப்பிப்பதால் மாணவர் தகுந்த பயனைப் பெற மாட்டார்கள்.

இங்கு அசோகனது பாத்திரம் அஹிம்சையானது. நடைமுறைக் கொள்கையாகவும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பிரவேச மாகவும் கைக்கொண்ட ஒரு மனிதனின் முன்மாதிரியேயது. எனவே தான் அது மாணவருக்காகத் தெரிவு செய்யப்படுகிறது.

அஹிம்சை பற்றிப் பலரிடையே நிலவும் பொதுவான எண்ணக் கருவாவது அது நபரை மந்தமாக்கும் வாழ்க்கைப் பிரச்சினைகளை விட்டுத் தப்பியோடத் தூண்டும் நடைமுறைப் பெறுமதி அற்ற ஒன்றே என்பதாகும். இப் பாடவிதானம் அஹிம்சையின் நடைமுறைப் பெறுமதியை உணர்த்த விசேடமாக முயல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஹிம்சை என்றால் என்ன?

பாடம் : 5.5

நேரம் : 45 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கரு :**

அஹிம்சையானது பயனுள்ள வாழும் கொள்கை.

**குறிக்கோள்கள் :**

*(1)* அஹிம்சைக்கான வரைவிலக்கணங் கூறுவர்.

*(2)* அஹிம்சைக் கொள்கையின் பண்புகளைக் குறிப்பிடுவர்; விபரிப்பர்.

*(3)* அஹிம்சைக் கொள்கை தொடர்பாகத் திறனாய்வோடு விடயங்களைக் குறிப்பிடுவர்.

**நுழைவு :**

நாம் முன்னர் வன்முறையின் தன்மை பற்றி உரையாடியதை நீங்கள் நினைவில் கொண்டிருப்பீர்கள். இப்போது நாம் வன்முறையின் தன்மையை விளங்கிக் கொள்ள முனைவோம்.

**படி : 1 சிந்தனைக் கிளர்வு : அஹிம்சைக்கான வரைவிலக்கணம்.**

அஹிம்சை என்ற சொல்லை நீங்கள் பல தடவை கேட்டிருப்பீர்கள். இப்போது நாம் அதன் பொருளை புரிந்து கொள்ள முயல்வோம். அஹிம்சை என்ற சொல்லைக் கேட்கையில் உங்களது உள்ளத்தே எழும் எண்ணங்கள் / உணர்வுகள் எவை?

பிள்ளைகளிடம் துலங்கல்களை முடிந்த வரை பெற்றுக் கொண்டு அவற்றைக் கரும்பலகையில் எழுதுக. அவர்களது கருத்துக்களுக்கு மதிப்பளித்து, எந்தவொரு உணர்வையும் வெளிப்பாடு செய்யத்தக்க சூழ்நிலையைத் தோற்றுவிக்கவும். எதிர்பார்க்கத்தக்க பிரதிபலிப்புக்களுக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணங்கள் :

- வன்முறையைத் தவிர்த்தல்.
- அடுத்தவரை துன்புறுத்தாமை / கொலை புரியாமை
- சகலருக்கும் நட்பு / அன்பு / பரிவு காட்டி வாழல்.
- சமாதானத்தால் / பேச்சுவார்த்தையால் பிரச்சினை-களைத் தீர்த்துக் கொள்ளல்.

பிள்ளைகளது பதில்களை வகைப்படுத்தி அஹிம்சையின் அடிப்படைப் பண்புகளை அடையாளங் காணுக.

(05 நிமிடங்கள்)

**படி : 2**

அஹிம்சையின் பண்புகளை அடையாளங் காணல்.

பிள்ளைகளது பதில்களில் இருந்து பெற்றுக் கொண்ட அஹிம்சையின் பண்புகளையும் கீழ்க் காணும் பண்பு-களையும் ஆதாரமாகக் கொண்டு அஹிம்சையை அறிமுகஞ் செய்யவும்.

- அஹிம்சை எனப்படுவது ஏனையோரை நோகச் செய்தலை / கொலை புரிதலை விலக்கல் (தவிர்த்தல்).
- அஹிம்சையாவது, நபர்கள் / குழுக்கள் / இனங்கள் இடையே தோன்றும் மோதல்களைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்ளல்.
- அஹிம்சையாளன் எல்லா மனித உயிர்களுக்கும் மதிப்பளிக்கிறான்.
- (நாம் மனிதரைக் கொல்வோமாயின் அதன் பின்னர் ''நாம் யாருடன் வாழப் போகிறோம்?'' என வியட்னாம் இனத்தவரான கவிஞர் கிச் நாட்ஹன் கேட்டிருக்கிறார்.)
- அஹிம்சையாளன் அன்பை / பரிவை முக்கியமாகக் கொண்டு செயற்படுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அஹிம்சையாளன் பகைமையை நட்பாலும் பொய்யை வாய்மையாலும் தீமையை நன்மையாலும் வெற்றி கொள்ளச் செயற்படுவான்.

- அஹிம்சையாளன் கொள்கைப் பற்றுடையோன். அஹிம்சையை வாழும் கொள்கையாகக் கொள்பவன்.

**படி : 5 விவாதம்**

வகுப்பை இரண்டாக வகுத்து விவாதமொன்றை நடத்தவும். அஹிம்சையால் நாம் எப்பொழுதும் அலுவல்களைப் புரிய முடியும் என ஒருசாரார் கூறுவர்.

அஹிம்சையால் நாம் எப்போதும் அலுவல்களைப் புரிய முடியாது என மறு சாரார் கூறுவர்.

இங்கு முன்கூட்டியே தயார் படுத்திக் கொண்ட முறையான விவாதம் எதிர்பார்க்கப்படமாட்டாது. இரண்டாகப் பிரிந்த இரு கட்சியாரும் தலைப்புக்குச் சாதகமாக அல்லது பாதகமாக ஒரு பிள்ளை ஒரு கருத்தை இயம்புதல் அல்லது வாதம் தவறு என நிரூபித்தல் போதுமானது.

எவ்வாறு இருப்பினும் பிள்ளைகளது சிந்தனையில் எழுச்சியும் வேகமும் கொண்டதான சூடான விவாதம் அவசியம். பிள்ளைகள் எடுத்துக் காட்டும் விடயங்களை - சார்பானவை சார்பற்றவை - எனக் கரும் பலகையில் குறிப்பிடுதல் நன்று.

*(30 நிமிடங்கள்)*

**குறிப்பு :**

பிள்ளைகள் இடையே அஹிம்சை மீதான விவேகம் பொருந்திய விறுவிறுப்பையும் தொடர்ந்து ஆராய்ந்து பார்க்கத்தக்க புத்துணர்வையும் தோற்றுவித்தலே இவ் விவாதத்தின் குறிக்கோளாகும். எனவே இதனை எந்த முடிவு அற்றதாகத் திறந்ததாக முற்றுப் பெறச் செய்தல் பொருத்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஹிம்சையை ஆதரிக்காதமாற்றுக் கட்சியினரில் நிகழ்காலச் சமூகத்தில் பிள்ளைகள் கற்ற வன்முறையை நியாயப்படுத்தும் கருத்துக்கள் தோன்றலாம். எமது சமூகத்தின் மூலம் பிள்ளைகள் கற்றுக் கொண்ட வன்முறையை நியாயப்படுத்தும் அத்தகைய கருத்துக்களை சமாதானத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் இனங்காணல் பயனுடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கிடையே உள்ள பிணக்குகளை ஒத்துழைப்பு மூலம் தீர்த்துக் கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணக்கு என்றால் என்ன?

பாடம் : 6.1

நேரம் : 45 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கருக்கள் :**

*(1)* நாம் வாழ்க்கையில் பலரோடு பல்வேறு விதத்தில் பிணக்குகளைச் சந்திக்க நேரிடும்.

*(2)* ஆரம்பத்திலேயே அவற்றைச் சரியாகத் தீர்த்துக் கொள்ளாதுவிடின் அவை பாரிய பிரச்சினைகளாகி விடும்.

**குறிக்கோள்கள் :**

*(1)* பிணக்கு என்றால் என்னவென அடையாளங்காண்பர்.

*(2)* பிணக்குகளின் பாரதூரமான தன்மையை அடிப்படை-யாகக் கொண்டு ஒப்பிட்டு நோக்குவர்.

*(3)* பிணக்குத் தீர்வு பற்றிக் கற்றலின் அவசியத்தை விளக்குவர்.

**நுழைவு :** நாம் வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் பல்வேறு நபர்களோடு பல்வேறு பிணக்குகளைச் சந்திக்க நேரிடும். இவற்றைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளத்தக்க முறைகளை நாம் கற்றல் வேண்டும்.

**படி : 1 பிணக்கு என்பதன் ஒப்புச் சொற்கள் எவை?**

வேண்டப்படும் துலங்கல்கள் :

- போராட்டம்
- சண்டை
- கருத்து வேற்றுமை
- சச்சரவு
- போர்
- கைகலப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றின் அடிப்படையில் பிணக்கு என்பதன் வரைவிலக்கணத்தைக் காண்போம்.

பிணக்கு என்பது நபர்கள் அல்லது குழுக்கள் இரண்டுக்கு மிடையே அல்லது அதனிலும் கூடுதலான தொகையினருக்கு இடையே தோன்றிய கருத்து வேறுபாட்டின் பெறுபேறு காரணமாக உண்டான சிக்கலான நிலைமையாகும்.

வாழ்வில் பல்வேறு நபர்களோடு எமக்கு பிணக்கு உருவாகலாம். தமக்கும் நண்பர்களுக்கும் இடையே, தமக்கும் அயலவருக்கும் இடையே தமக்கும் தமது சகோதரருக்கு / சகோதரியருக்கு மிடையே, இன ரீதியான குழுக்களுக்கு இடையே போன்றவாறு மக்கள் குழுக்களுக்கு இடையே பிணக்கு உருவாகும்.

*(05 நிமிடங்கள்)*

**பாத்திர நடிப்பு :**

**செயற்பாடு : 1**

வகுப்பை ஐந்து பேர் கொண்ட குழுக்களாகப் பிரித்து, ஏதாவதொரு பிணக்கினைத் தெரிவு செய்து அதனை நடிக்கும்படி செய்க. (பயிற்சி செய்ய 05 நிமிடங்களும் சமர்ப்பிக்க 04 நிமிடங்களும் வழங்குதல் போதுமானது)

*(25 நிமிடங்கள்)*

**செயற்பாடு : 2**

பிணக்குகளின் பாரதூரத் தன்மையை ஒப்பு நோக்கல்.

பிள்ளைகள் இனங்கண்ட பிணக்குகளை அவற்றினது பாரதூரத்தன்மையின் அளவுகளுக்கு ஏற்ப வகுப்பில் ஓர் அந்தத்தில் இருந்து மறு அந்தம் வரை வரையப்பட்ட கோட்டின் மீது வைக்கவும். அதாவது மிகச் சிறிய பிணங்கினைத் தாங்கிய குழுவினர் கோட்டின் அந்தத்தில் நிற்க வேண்டும். அதற்கு அடுத்த பாரதூர தன்மையைக் கொண்ட பிணக்கினைத் தாங்கிய குழுவினர் அடுத்ததாக நிற்க வேண்டும். மிகப் பாரதூரமான பிணக்கு கோட்டின் மறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத்தில் இடம் பெற வேண்டும். பிணக்கினைச் சமர்ப்பித்த குழுவினர் கலந்துரையாடித் தமக்கு உரிய இடங்களை முடிவு செய்து கொள்ள வாய்ப்பளிக்கவும்.

அவ்வாறு அவர்கள் பரிமாணத்தின்படி இடங்களைப் பெற்ற பின்னர் அவர்கள் அவ்விடங்களைப் பெற்றமைக்கான காரணங்களை விளக்குமாறு கூறவும்.

**கலந்துரையாடல் :**

★ இதன் வாயிலாக நீங்கள் கற்றுக் கொண்டது என்ன? பிணக்குகள் வெவ்வேறு பரிமாணங்களைக் கொள்கின்றன என்பதை விளங்கிக் கொள்கிறீர்களா?

ஆரம்பத்திலேயே பிணக்குகளை உரியவாறு தீர்த்துக் கொள்ளாவிடின் யாது நிகழக் கூடும்?

*(அது படிப்படியாகத் தீர்வு காண முடியாத கடினமான பாரிய பிரச்சினையாக மாறும்.*

*(10 நிமிடங்கள்)*

**மதிப்பீடு :**

''இன்று நாம் கற்றுக் கொண்டது என்ன?'' எனப் பிள்ளைகளை வினவிப் பிள்ளைகளது விடைகளின்படி பாடச் சுருக்கத்தைக் கரும்பலகையில் எழுதவும்.

**முடிவு :**

பிணக்குகளும் அவற்றுக்கான பல்வேறு தீர்வுகளும் பற்றி எதிர்வரும் பாடங்களில் கற்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணக்குகளை ஆக்கபூர்வமாகத் தீர்த்துக் கொள்வதன் முக்கியத்துவம்.

பாடம் : 6.2

காலம் : 45 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கருக்கள் :**

(1) பிணக்குகள் நடைமுறை வாழ்க்கையின் ஒரு பகுதியே யாகும்.

(2) பிணக்கு கசப்பானதெனினும் ஆக்கபூர்வமாகக் கையாளுவதால் அதனை தனியாள் விருத்தி அனுபவமொன்றாக மாற்றிக் கொள்ள இயலும்.

**குறிக்கோள்கள் :**

(1) பிணக்குகளை ஆக்கபூர்வமாகக் கையாளலின் முக்கியத்துவத்தை விபரிப்பர்.

(2) ஆக்கபூர்வமாகப் பிணக்கு ஒன்றினை மேற்கொள்கையில் காணத்தக்க பண்புகளைக் குறிப்பிடுவர்.

**நுழைவு :** வாழ்வில் நாமெல்லோரும் ஒரு சில பிணக்குகளைச் சந்தித்திருக்கிறோம்.

பிணக்குகளைச் சந்திக்கும் சந்தர்ப்பத்தில் எம்மில் எத்தகைய உணர்வு தோன்றும்? நீங்கள் பிணக்கொன்றுக்கு உட்பட்ட சந்தர்ப்பத்தை நினைவூட்டிக் கொண்டு விடை தருக.

(எதிர்பார்க்கத்தக்க பதில்கள் :

- மன அதிர்ச்சி
- ஆத்திரம்
- விரக்தி
- சோகம்
- ஏமாற்றம்
- பரபரப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) இதன்படி பிணக்கைச் சந்தித்தல் இனிமையான, கவர்ச்சியான அனுபவம் அல்ல என்பது தெரிகிறது. எனினும் பிணக்குகளில் இருந்து விலகி ஓடுதல் இயலாதது. மனிதர் எங்கு இருக்கிறார்களோ அங்கே பிணக்குகள் உண்டாவது இயற்கையே. அதற்கான காரணம் நபர்கள்/குழுக்கள் சிந்திக்கும் விதம் ஒருவருக்கு ஒருவர் எல்லா வகையிலும் ஒத்திருக்காமையே. நபர்கள் வெவ்வேறு வகையானவர்கள். பிணக்கு வாழ்வில் யதார்த்தமான பகுதியொன்றே.

(2) முடிந்த வரை நாம் பிணக்குகள் உருவாவதை முன் கூட்டியே தீர்க்கதரிசனமாக நோக்கித் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். ஒருவேளை பிணக்கு ஏற்படின் அதனைப் பயனுள்ளவாறு தீர்த்துக் கொள்ளல் வேண்டும்.

(3) பயனுள்ளவாறு பிணக்கினைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமாயின் ஆரம்பத்தில் இருந்தே அதனை ஆக்கபூர்வமாகக் கையாள வேண்டும். அதற்கு முன்னர் நாம் மனிதர் பிணக்கினை அழிவு நோக்கிக் கையாளும் முறைகளை நோக்குவோம். நீங்கள் அத்தகைய உதாரணங்களைக் கூறுவீர்களா?

(எதிர்பார்க்கத்தக்க பதில்கள் :

- அடுத்த சாராரை ஏசுதல் / ஏளனஞ் செய்தல்.
- ஆத்திரங் கொண்டு செயற்படல்.
- ஆராயாது முடிவுகளை மேற்கொள்ளல்.
- சொத்துக்களை அழித்தல்
- எச்சரிக்கை செய்தல்
- போராட அறைகூவல்
- பிரச்சினையைக் கைவிட்டு விடல்
- தொடர்புகளைத் துண்டித்துக் கொள்ளல்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) இவ்வாறு செயற்படுவதால் ஏற்படத்தக்க பெறுபேறுகள் எவை?

(எதிர்பார்க்கப்படும் பதில்கள் :

- அடுத்த நபரை விரோதியாக முடிவு செய்து கொள்ளல்.
- ஒருவரை ஒருவர் பகைத்துக் கொள்ளும் நிலைமையைத் தோற்றுவித்துக் கொள்ளல்.
- பிணக்கைத் தீர்த்துக் கொள்ளலை மேலும் சிரமமாக்கிக் கொள்ளல்.
- பச்சாத்தாபம்
- விரக்தி
- முயற்சியில் தளர்வு.)

(5) அடுத்ததாகப் பிணக்கினை ஆக்கபூர்வமாகத் தீர்த்துக் கொள்ளலில் காணத்தக்க பண்புகள் எவை?

- மாற்றுக் கட்சியாளருக்குச் செவி சாய்த்தல்.
- விடயங்களை உரியவாறு புரிந்து கொள்ள முயலல்.
- ஒருவருக்கொருவர் மதிப்பளித்தல்.
- கலந்துரையாடல் / வெளிப்படையாகக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளல்.
- பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள இருசாராரும் ஒத்துழைப்போடு செயற்படல்.
- ஆக்கபூர்வமான தீர்வுகளைத் தேடல்.
- நியாயத்தோடு விடயங்களைச் சமர்ப்பித்தல்.
- நியாயமான விடயங்களை ஏற்றுக் கொள்ளல்.
- சிறந்த தீர்மானங்களை மேற்கொள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) பிணக்கினை ஆக்கபூர்வமாகத் தீர்த்துக் கொள்வதன் பெறு பேறுகள் வருமாறு :

- பெறப்பட்ட தீர்வின் மட்டில் திருப்தி
- மகிழ்ச்சி
- இருசாராரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளல் / நெருங்குதல்.
- நட்புறவு விருத்தியடைதல்
- தன்னம்பிக்கையில் வளர்ச்சி
- பெற்றுக் கொண்ட அனுபவத்தின் வாயிலாகத் தாம் வளர்ச்சியடைந்தோம் என்ற உணர்வு.
- தம் தகுதியின் மீது திருப்தி
- அனுபவம் மூலம் கற்றல்.

(20 நிமிடங்கள்)

**செயற்பாடு : அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளல்.**

வகுப்பை ஐந்து மாணவர்களைக் கொண்ட குழுக்களாகப் பிரித்து, அவர்கள் வட்டமாகக் கதிரைகளில் அமரும்படி செய்து தாம் ஒருவரோடு உண்டான பிணக்கினை ஆக்கபூர்வமாகத் தீர்த்துக் கொண்ட அனுபவத்தை ஒவ்வொருவரும் வெளிப்படுத்தும்படி கூறவும். அத்தகைய அனுபவங்களைப் பெறாதோர் தாம் கேள்வியுற்ற அல்லது வாசித்துள்ள தொலைக்காட்சியில் கண்டுள்ள அத்தகைய சம்பவம் ஒன்றைக் கூறலாம். ஒருவருக்கு 04 நிமிடங்கள் போதுமானது.

(20 நிமிடங்கள்)

**மதிப்பீடு :**

கீழ்வரும் பத்திரத்தைப் பூர்த்தியாக்கவும்.
பிணக்கினை அழிவுப் பாதையில் தீர்த்துக் கொள்ள முனைவதிலும் ஆக்கபூர்வமாகத் தீர்த்துக் கொள்ள முனைவதிலும் உள்ள இயல்புகளைக் குறிப்பிடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணக்குத் தீர்வு

| அழிவு நோக்கிய அணுகுமுறை | ஆக்கபூர்வமான அணுகுமுறை |
|---|---|
| 1. மனவெழுச்சியோடு செயற்படல். | 1. உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்திக் கொண்ட நடத்தை / பொறுத்தல். |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

பிள்ளைகளைக் குழுக்களாக்கி ஒப்படைப்பாக வழங்கவும். பூரணப் படுத்திய பத்திரங்களைக் காட்சிக்காக வைத்துக் கலந்துரையாடலை நிகழ்த்தவும்.

மாதிரி (ஆசிரியரது பயன்பாட்டுக்காக)

பிணக்குத் தீர்வு

| அழிவு நோக்கிய அணுகுமுறை | ஆக்கபூர்வமான அணுகுமுறை |
|---|---|
| 1. உணர்ச்சி வசப்பட்டுச் செயற்படல். | 1. உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்ட நடத்தை / பொறுத்தல். |
| 2. அவசரப்படல்/குறிப்பிட்ட சந்தர்ப்பத்தை மட்டுமே கருதிச் செயற்படல் / அவசரமான முடிவு. | 2. ஆராய்ந்து விளைவுகளைக் கருத்தில் கொண்டு செயற்படல். தீர்மானத்தை மேற்கொள்ளும் முன்னர் பல தடவைகள் சிந்தித்தல். |
| 3. அடுத்தவர் மனம் புண்படும் படி செயற்படல். | 3. அடுத்தவர் தமது பக்கஞ் சாரத்தக்கதாக நடந்து கொள்ளல். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 4. எச்சரித்தல்/தொடர்புகளைத் துண்டித்துக் கொள்ளல். | 4. தகவல் தொடர்பு/அடுத்தவர் கருத்துக்களை வினவல்/ தொடர்புகளைத் தீர்த்துக் கொள்ள முனைதல். |
| 5. தம் கருத்தில் விடாப் பிடியாக இருத்தல். | 5. தக்க காரணத்தோடு சமர்ப்பிக்கும் விடயங்களை ஏற்றலும் அதன்படி தமது நிலைப் பாட்டை மாற்றிக் கொள்ள வளைந்து கொடுத்தலும் (விட்டுக் கொடுத்தல்) |
| 6. எதிர்மறை நோக்கான பிரவேசம் | 6. ஆக்கபூர்வமான பிரவேசம். |
| 7. ஆக்கிரமிப்பு ரீதியான அல்லது பணிந்து விடும் தன்மையான நிலை. | 7. நிரந்தரமான நிலை |
| 8. அடுத்தவருக்குச் செவிசாய்க்காமை. | 8. ஆர்வமான செவிசாய்ப்பு. |
| 9. பிரச்சினையில் தன்னை மையமாகக் கொண்டு செயற்படல். | 9. பிரச்சினை இருசாரார்க்கும் உரியதெனக் கருதி ஒத்துழைப்போடு தீர்க்க முயலல். |
| 10. 'உள்ளது ஒரே தீர்வு மட்டுமே' என்ற மனப்பாங்கு. | 10. முடிந்தவரை மாற்றுத் தீர்வுகளையும் தேடல். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரச்சினைகளுக்கான தீர்வு

பாடம் : 6.3

நேரம் : 60 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கரு :**

இருசாரருக்கிடையே உள்ள ஏதாவதொரு பிரச்சினை மட்டில் எதிராளிகளாக மோதிக் கொள்வதற்குப் பதிலாக ஒத்துழைப்போடு அதனைத் தீர்த்துக் கொள்ள முடியும்.

**நோக்கங்கள் :**

*(1)* ஒத்துழைப்போடு தீர்த்துக் கொள்ளத்தக்கதான பிரச்சினைகளை அடையாளம் காண்பர்.

*(2)* பிரச்சினைத் தீர்வு நடவடிக்கைகளைப் படிமுறை-யாகக் குறிப்பிடுவர்.

*(3)* பிரச்சினைத் தீர்வுத் திறன்களை வளர்த்துக் கொள்வர்.

**நுழைவு :**

நபர்கள், இனக் குழுக்கள், இனங்களுக்கிடையே பிணக்குத் தோன்றுவதற்கான காரணம் அவர்களுக்கிடையே நிலவிய ஏதாவதொரு பிரச்சினை தீர்க்கப்படாமையே ஆகும். நபர்களுக்கிடையில் தோன்றத் தக்க பிணக்குகளுக்கான எடுத்துக் காட்டுகள் :

*(1)* இரு காணிகளுக்கு மத்தியில் உள்ள வேலியில் நடப்-பட்ட மரத்தின் உரிமை தொடர்பான தீர்மானம் / அறுவடையைப் பகிர்ந்து கொள்ளல்.

*(2)* தொழிற்சாலையில் பணியில் ஈடுபட்டிருக்கையில் நிகழ்ந்த விபத்துக் காரணமாகத் தன் காலைத் தொழிலாளி இழக்கிறான். அத் தொழிலாளிக்கும் தொழிற்சாலை உரிமையாளனுக்கும் இடையே நஷ்டஈடு தொடர்பாகவும் வேலை வாய்ப்புத் தொடர்-பாகவும் தீர்மானத்தை மேற்கொள்ள முற்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) வகுப்பில் குறிப்பிட்ட ஒரு பாடத்தைக் கற்பதற்காக மாணவர் வாசிக்க வேண்டிய ஒரு புத்தகத்தை ஆசிரியர் குறிப்பிடுகிறார். பாடசாலை நூலத்தில் ஒரு புத்தகம் மட்டுமே உண்டு. அதன் வேறு பிரதிகளைப் பெறுதலும் இயலாத நிலை. எனவே உள்ள ஒரே புத்தகத்தை இரண்டு மாதங்களில் எல்லாப் பிள்ளை-களும் பகிர்ந்து கொண்டு எவ்வாறு வாசிக்கலாம் என்பதைத் தீர்மானித்தல்.

*(20 நிமிடங்கள்)*

**செயற்பாடு : பாத்திர நடிப்பு**

நாம் அத்தகைய சந்தர்ப்பங்களில் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளல் தொடர்பாக உதாரணம் ஒன்றைப் பார்ப்போம். மேலே கூறப்பட்ட மூன்றாம் பிரச்சினையான அதாவது புத்தகத்தைப் பகிர்ந்து கொண்டு வாசித்தல் - அதனைத் தீர்த்துக் கொள்ளும் முறையை நோக்குவோம். நீங்கள் அவ் வகுப்பில் இருப்பதாக ஊகித்துக் கொள்ளுங்கள். இப்போது வகுப்புத் தலைவர் இங்கு வந்து கலந்துரையாடலை மேற்கொண்டு ஒரு இணக்கத்துக்கு வரத் தக்கதாக முயற்சி செய்யவும். (நீங்கள் ஆசிரியர் என்ற வகையில் எத்தகைய பலவந்தங்களையும் புரியாது மௌனமாக அவதானிக்கவும்.

*(10 நிமிடங்கள்)*

**கலந்துரையாடல் :**

★ நீங்கள் ஒரு குழுவென்ற வகையில் ஒரு பிரச்சினையத் தீர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பம் ஒன்றை இப்போது கண்டீர்கள்.

★ உங்களது பிரச்சினை தீர்க்கும் கலந்துரையாடல் எதுவரை வெற்றியளித்தது?

★ இறுதியாக அங்கீகரிக்கப்பட்ட தீர்வைக் கொண்ட ஆலோசனை திருப்திகரமானது / ஏற்கத் தக்கது எனக் கருதுவோர் கரங்களை உயர்த்துங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ அதனிலுஞ் சிறந்த தீர்வொன்றை அடையத்தக்கதாக இருந்திருக்கும் என நினைப்போர் கைகளை உயர்த்துக.

★ அதைவிடச் சிறந்த தீர்வைச் சமர்ப்பிக்கக் கூடியவர்கள் கரங்களை உயர்த்தவும்.
உங்கள் தீர்வு எது?

(05 நிமிடங்கள்)

**பாட விடயங்கள் :**

அவ்விதமான பிரச்சினைத் தீர்வுச் செயல்முறை வெற்றிகரமாக அமையப் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் எவையெனக் கற்போம்.

**படி : 1**

பிரச்சினையை ஒவ்வொரு கட்சிக்காரரினதும் தேவைகளின்படி வரைவிலக்கணப்படுத்துக.

அதாவது :

முதலாவது கட்சிக்காரர் கருத்துப்படி பிரச்சினை எதுவென அவர்களது தேவையுணர்வுகள், அபிலாஷைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு விபரிக்கவும். அடுத்து இரண்டாவது கட்சிக்காரரின் கருத்துப்படி அவ்வாறே பிரச்சினையை விபரிக்கவும்.

**படி : 2**

பிரச்சினையை இரு சாராரினதும் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் வரைவிலக்கணப் படுத்துக.

**படி : 3**

இருசாராரும் இணைந்து இயன்றவரை மாற்றுத் தீர்வுகளைத் தேடவும். ஒரேவிதமாகத் தான் பிரச்சினையைத் தீர்க்கவியலும் என எண்ணுதல் மாயையாகும். ஒரு சாராரின் தேவைகளை மறுசாரார் எதிர்ப்பாரேயாயின் அல்லது பொருந்தாது எனக் கருதின் அவ்விரு சாராரினதும் தேவைகள் பூர்த்தியாகத் தக்க முறையிலான வேறு தீர்வொன்றைத் தேடிக் கொள்ள நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுத் தீர்வைத் தேடும் பொருட்டு ஆக்கபூர்வமாகச் சிந்தித்தல் அவசியம்.

**படி : 4**

ஒவ்வொரு மாற்றுத் தீர்வுக்கும் மதிப்பளிக்கவும்.

**படி : 5**

மிகச் சிறந்த மாற்றுத் தீர்வைத் தெரிவு செய்க. அதனைச் செயற்படுத்துவதற்கான திட்டத்தைத் தயாரிக்கவும்.

**படி : 6**

தீர்வு செயற்படுகையில் அதற்கு மதிப்பு வழங்கவும். (பாராட்டுதல்) எதிர்பாராத விதமாகத் தெரிவு செய்த மாற்றுத் தீர்வு உண்மையான தீர்வு அல்லாதவிடத்து மீண்டும் முதலாவது படியை நோக்கிச் செல்க.

இப் பிரச்சினைத் தீர்வுச் செயல் முறையின் மாதிரிகையை இவ்வாறு குறிப்பிட இயலும்.

*(தோல்வி அடையுமாயின் மீண்டும் ஆரம்பம் நோக்கிச் செல்க)*

1. ஒவ்வொரு சாராரினதும் தேவைக்கு ஏற்ப வரை விலக்கணம் செய்க.
2. இரு சாராரினதும் தேவைக்கு ஏற்பப் பிரச் சினையை மீண்டும் வரை விலக்கணப்படுத்தவும்.
3. இரு சாராரும் இணைந்து முடிந்தவரை மாற்றுத் தீர்வைத் தேடவும்.
4. ஒவ்வொரு மாற்றுத் திட்டத்தையும் மதிப் பளித்து நோக்கவும்.
5. மிகச் சிறந்த மாற்றுத் திட்டத்தைத் தெரிவு செய்க. அதனைச் செயற்படுத்தும் முறையைத் திட்டமிடுக.
6. தீர்வு செயற்படுகையில் மதிப்பளித்துப் பார்க்கவும்.

*(15 நிமிடங்கள்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினை

இரு மாணவர்களான ரவி, விஜயன் ஆகியோர் ஒரு வீட்டின் அறையை வாடகைக்குப் பெற்றுக் கொண்டு இருந்து வருகிறார்கள். ரவி பல்கலைக்கழக மாணவன். விஜயன் அருகில் உள்ள கவின்கலை நிறுவனத்தில் பட்டப் படிப்புக்காகச் சங்கீதம் பயிலும் வெளிவாரி மாணவன். அவன் மூன்று தினங்கள் பிற்பகல் மூன்று மணி தொடக்கம் ஆறு மணி வரை வகுப்புக்குச் சமுகமளிக்கிறான். அவர்களது பிரச்சினை வருமாறு :

விஜயன் இரவில் தம் அறையில் இரவு நேரத்திலே வயலின் பயிற்சி பெறுதல் ரவியின் கல்விக்குத் தடையாக இருக்கிறது. வயலினை மீட்டுவதால் அவன் தன் மனதை ஒருமுகப்படுத்திக் கொள்ள முடியாது.

**பாத்திர நடிப்பு :**

வகுப்பில் பிள்ளைகள் இருவராக இணைந்து சோடி சேருமாறு செய்து முதலாம் நபர் ரவியாகவும், இரண்டாம் நபர் விஜயனாகவும் சேர்ந்து தம் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள ஒரு கலந்துரையாடலை மேலே கற்றுக் கொண்ட படிமுறையின் வாயிலாக ஒழுங்கு செய்யவும்.

காலம் 10 நிமிடங்கள் வரை

பின்பு வகுப்பாக ஒருங்கு சேர்ந்து அவர்கள் தேர்ந்தெடுத்த தீர்வுகளை வெளியிடச் செய்து மதிப்பீடு செய்யவும்.

**உதவும் வினாக்கள் :**

நீங்கள் இருவரும் பிரச்சினையை எவ்வாறு வரையறை செய்தீர்கள்? விஜயனது தேவைகள் எவை? ரவியின் தேவைகள் யாவை?

நீங்கள் இருவரும் தேடிக் கொண்ட மாற்றுத் தீர்வுகள் எத்தனை? இவ்வாறு கலந்துரையாடும்போது நீங்கள் எதிர்நோக்கிய சிக்கல்கள் எவை?

(10 நிமிடங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சு வார்த்தை

பாடம் : 6.4

நேரம் : 90 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கரு :**

பேச்சுவார்த்தை பலமான பிணக்கு தீர்வு முறையாகும்.

**குறிக்கோள்கள் :**

*(1)* பேச்சுவார்த்தை பற்றிய அடிப்படையான விளக்கத்தைப் பெறுவர் / வரைவிலக்கணம் கூறுவர்.

*(2)* நல்லிணக்கப் பேச்சுவார்த்தைப் பண்புகளைக் குறிப்பிடுவர்.

*(3)* பேச்சுவார்த்தைத் திறன்களை விருத்தி செய்து கொள்வர்.

**நுழைவு :**

நாம் அன்றாட வாழ்வில் பல்வேறு பிரச்சினைகளைப் பல்வேறு நபர்களோடு கலந்துரையாடி ஒருவரோடொருவர் இணங்கித் தீர்வு காண நேரிடும். இத்தகைய சந்தர்ப்பங்களுக்கு மாதிரிகள் :

*(1)* பண்டம் ஒன்றைக் கொள்வனவு செய்கையில் வியாபாரியோடு பேரம் பேசல்.

*(2)* அயல் வீட்டு வானொலி அடிக்கடி உச்ச ஒலியை எழுப்பும் அதனால் ஏற்படும் வசதியீனத்தைக் கூறி, அதன் ஒலி அவர்களுக்கு மட்டுமே கேட்கத்தக்கதாகப் பயன்படுத்துமாறு அவர்களைத் தூண்டல்.

*(3)* உங்களது வீட்டின் ஒரு பகுதியை வேறு குடும்பம் ஒன்றுக்கு வாடகைக்கு விட நீங்கள் தீர்மானித்து இருக்கிறீர்கள். அவர்கள் அதனைப் பயன்படுத்துகை-யில் ஒருவருக்கொருவர் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளைப் பற்றி ஒரு உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள அவர்களோடு கலந்துரையாடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) சமீபத்தில் ஒரு கிராமவாசி கிராமத்தார் நீராடவும் ஆடைகளைத் தோய்க்கவும் ஆற்றுக்குச் செல்லவிருந்த ஒற்றையடிப் பாதையை மூடி அக் காணியைச் சுற்றி வர முட்கம்பி வேலியிட்டுப் பயிர்ச்செய்கையை ஆரம்பித்துள்ளார். கிராம அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினரைக் கொண்ட குழுவொன்று அக் கிராமவாசியைச் சந்தித்து அப்பாதையைத் திறந்து விடுவதற்காகக் கலந்துரையாடலை நடத்துகின்றது.

இத்தகைய பிரச்சினை தொடர்பாக இணக்கமொன்றை ஏற்படுத்திக் கொள்ள இருசாராருக்கும் இடையே நடைபெறும் உரையாடலைப் பேச்சுவார்த்தை என அறிமுகப்படுத்துகிறோம்.

பேச்சுவார்த்தையானது பலம் பொருந்திய பிணக்குத் தீர்வு முறையாகும். இத் திறன்களை நாம் ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**செயற்பாடு :**

(1) பேச்சுவார்த்தை என்றால் என்னவெனப் பிள்ளைகள் அடையாளம் கண்டு கொள்ள மாதிரி ஒன்றாகப் பேச்சுவார்த்தைக்கான செயற்பாட்டுக்கு இருசாராரை ஈடுபடுத்துக.

பயிர்ச் செய்கையாளனது விடாப்பிடியான நிலைப்பாடு :

- அது எனக்குரிய காணி.
- நீண்ட காலம் அதனைக் கவனியாது இருந்தேன். இப்போது அதில் பயிர்ச்செய்கையை ஆரம்பித்து இருக்கிறேன்.
- கிராமவாசிகள் காணியின் ஊடே சென்று வர ஆரம்பித்தாரெனில் எத்தகைய பயிர்ச்செய்கையையும் செய்ய முடியாதிருக்கும்.
- வேலி அமைக்க நேரிட்ட காரணம் மந்தைகளிடம் இருந்து பயிர்களைக் காக்கும் பொருட்டே ஆகும்.
- ஆற்றுக்குச் செல்ல வேறும் ஒரு பாதையைத் தேடிக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களது நிலைப்பாடு :**

- நீண்ட காலமாகத் தாம் பயன்படுத்தி வந்த ஒற்றையடிப் பாதை மூடப்பட்டமையை இட்டு அயலில் உள்ள கிராமவாசிகள் கோப மடைந்துள்ளனர்.
- உங்களது காணியில் நடுவே ஐந்தடி அகலங் கொண்ட நிலப் பகுதி ஒற்றையடிப் பாதைக்குப் போதுமானது.
- இப் பிரச்சினை பொலீசுக்கு அல்லது நீதிமன்றத்துக்குச் செல்ல முன்னர் ஊர் மக்களே தீர்த்துக் கொள்ளல் பொருத்தமாகும்.
- ஆற்றில் இறங்க வேறிடம் தேடுவதாக இருப்பின் ஓரளவு தூரம் செல்ல வேண்டும்.

இரு சாராரையும் தெரிவு செய்து அவர்கள் தாம் கைக்கொள்ள வேண்டிய நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி வகுப்பின் முன்னிலையில் பேச்சு வார்த்தை ஒன்றில் ஈடுபடச் செய்யவும். ஏனைய பிள்ளைகள் மௌனமாகச் செவிமடுக்க வேண்டும்.

இக் கலந்துரையாடல் வாயிலாகப் பேச்சுவார்த்தை என்றால் என்னவெனப் பிள்ளைகளிடம் பதில்களைப் பெற்றுக் கொண்டு மீண்டும் அறிமுகப் படுத்தவும்.

*(15 நிமிடங்கள்)*

**பாட விடயங்கள் :**

பேச்சுவார்த்தை ஒன்று வெற்றிகரமாக அமைய உகந்த ஆயத்தம் அவசியம். அத்தகைய ஆயத்தத்தின் போது நீங்கள் உங்களையே வினவிக் கொள்ள வேண்டிய அடிப்படை வினாக்கள் இவையாகும்.

*(1)* அந்த நபரோடு நான் எதன் பொருட்டுக் கலந்துரையாடச் செல்கிறேன்?
அதன் வாயிலாக நான் எதிர்பார்க்கும் திட்டவட்டமான பெறுபேறு யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அக் கலந்துரையாடலுக்காக நான் எவ்வாறு ஆயத்தமாகலாம்? நான் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?

(3) கலந்துரையாடல் வாயிலாக அடுத்த நபர் எதிர்பார்க்கும் பேறு எது?

★ அவரது குறிக்கோளை அடைந்து கொள்வதற்காக அவர் எத்தகைய வாதங்களைச் சமர்ப்பிக்கக் கூடும்?

★ எனது குறிக்கோளை அடைவதற்கு அவருக்குப் பதிலாக நான் எவ் விடயங்களையும் வாதங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்?

★ எனது தீர்வு ஏற்கப்படுமாயின் அவர் சந்திக்கக் கூடிய நட்டங்களும் இன்னல்களும் எவை?

★ அவற்றைத் தவிர்த்துக் கொள்ளத்தக்கதான அல்லது அவற்றுக்குப் பதிலான வேறும் சன்மானங்களைக் கொண்டதான அல்லது எனது தீர்வினால் அவரும் நியாயம் பெறத்தக்கதான வகையில் எவ்வாறு தயாரித்துக் கொள்ள முடியும்?

★ அவர் ஏற்கத்தக்கவேறு மாற்றுத் தீர்வுகள் எவையாக இருக்கக்கூடும்?

★ இக் கொடுக்கல் வாங்கலின்போது (பரிமாற்றம்) இலகுவாக நான் தியாகம் பண்ணக்கூடியவை எவை?

★ இங்கு அவர் எளிதில் தியாகம் பண்ணக்கூடியவை எவை?

★ பேச்சுவார்த்தை தோல்வியுறுமாயின் நான் அடுத்து மேற்கொள்ள வேண்டியது எது?

மேலே குறிப்பிட்ட வினாக்களைக் கொண்டு சிறந்த பேச்சுவார்த்தையில் இருக்கத்தக்க பண்புகளை அறிமுகஞ் செய்யவும். அவை எவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபர்கள் உறுதியாகத் தமது நிலைப்பாட்டில் தங்கியிருப்பாராயின் அச் சந்தர்ப்பத்தில் பேச்சுவார்த்தையை நிகழ்த்த முடியாது. கலந்துரையாடல் மூலம் இருசாராரும் இணங்கத்தக்க தீர்வைத் தேடிக் கொள்வது நல்ல பேச்சுவார்த்தையின் அடிப்படைப் பண்பாகும். வெற்றிகரமாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபடப் பயனுள்ள ஆலோசனைகள் சில வருமாறு:

*(1)* ஒருவரையொருவர் புரிந்து கொள்ளலை ஆரம்பத்திலேயே உருவாக்கிக் கொள்க.

*(2)* சகிப்புத் தன்மையோடு செவி சாய்க்கவும்.

*(3)* அளவுக்கு மீறின வன்மை அல்லது மென்மை கொள்ளாதீர். அதற்குப் பதில் வெளிப்படையான / ஆணித்தரமான தோற்றத்தோடு பேசவும்.

*(4)* அடுத்தவரைத் தோற்கடித்துத் தாம் வெற்றி கொள்ள முனைவதற்குப் பதிலாக இருவருமே இறுதியில் திருப்தி கொள்ளத்தக்க வெற்றிகரமான தீர்வைத் தேடிக் கொள்ளக் கலந்துரையாடல் வாயிலாக முயலுங்கள்.

*(5)* நீடித்த பேச்சாக இன்றி நேரடியாகவும் சுருக்கமாகவும் உங்களது விடயங்களைக் கூறுங்கள்

*(6)* அவர் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக அவருக்குச் சார்பான விடயங்களைக் குறிப்பிட்டு உமது தீர்வைச் சமர்ப்பிக்கவும்.

*(7)* நீவிர் ஏற்கவியலாத விடயங்களைக் குறிப்பிடுகையில், 'ஏன்'? 'என்ன'? 'எவ்வாறு'? போன்றவாறு காரணங்களையும் நியாயமான விடயங்களையும் அறிந்து கொள்ளும் பொருட்டு வினவவும்.

*(8)* அடுத்த நபர் சினங் கொள்ளத்தக்கதான பதங்களை அல்லது தொடர்களைப் பிரயோகிக்காதீர்கள்.

*(9)* தேவைப்படும் இடத்து தமது நிலைப்பாட்டைத் தகுந்த காரணங்களோடு மாற்றிக் கொள்ள ஆயத்தமாக இருக்கவும்.

*(10)* மொத்தக் கலந்துரையாடல் முழுவதும் கவர்ச்சியாகவும் சில வேளை நகைச்சுவையாகவும் நட்பான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேச்சுவார்த்தையின் போது பயன் தரக்கூடிய தொடர்கள் சில :**

- உமது தேவையை என்னால் புரிந்து கொள்ள முடியும்.
- நாம் இருவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க தீர்வொன்றை நாம் தேடுவோம்.
- இங்கே எனக்குள்ள கஷ்டம் இதுவே.
  இது நியாயமாவது எவ்விதம்?
  எந்த அடிப்படையில்?
- எனது தீர்வை நீர் ஏன் ஏற்கவியலாது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.
- நீர் உண்மையாகவே விரும்புவது என்ன?
- உமது கட்சியை நோக்கும்போது என்னால் காணக் கூடியது ....

பேச்சுவார்த்தையானது குறிப்பிட்ட ஒரு இடத்துக்கு அப்பால் கொண்டு செல்வது கடினமாகி இருசாராரினதும் மனவெழுச்சி உச்ச நிலையை அடைந்த போதும் முடிவினை மேற்கொள்ள மேலும் சிந்திக்க வேண்டியமை புலனாகும் போதும் கலந்துரையாடலை வேறு தடவைக்கு ஒத்திப் போடவும்.

(30 நிமிடங்கள்)

**செயற்பாடு :**

**பாத்திர நடிப்பு (பேச்சுவார்த்தைப் பயிற்சி)**

பிள்ளைகள் தமது பேச்சுவார்த்தைத்திறன் விருத்திக்காக அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களைச் சித்தரிக்கும் பேச்சுவார்த்தைப் பயிற்சிகளில் ஈடுபடல் அவசியம். கீழ்வரும் சந்தர்ப்பங்கள் அத்தகைய பயிற்சிக்கு உகந்தவை.

**காட்சி :** ஒரு குடும்பத்துக்கு வாடகைக்கு விடப்பட்ட வீட்டை மீண்டும் பெறுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரச்சினை :**

நவரத்தினம் தன் வாடகை வீட்டை நாகரத்தினம் குடும்பத்துக்கு இரண்டு வருடங்களுக்கு மட்டுமே வாடகைக்குக் கொடுத்தார். தற்போது இரு வருடங்கள் பூர்த்தியாகி உள்ளபோதும் அவர்கள் வீட்டில் இருந்து வெளியேறுவதைத் தாமதப்படுத்துகிறார்கள்.

1 வது கட்சிக்காரரின் நிலைப்பாடு : நவரத்தினம்

நவரத்தினத்தின் மகள் இன்னும் மூன்று மாதங்களில் விவாகமாக இருப்பதால் அவர்கள் வசிப்பதற்காக வீடு தேவைப்படுகிறது. திருமணத்துக்கு முன்னர் வீடு திருத்தப்பட வேண்டியுள்ளது.

2 வது கட்சிக்காரரின் நிலைப்பாடு : நாகரத்தினம்

நவரத்தினத்தின் வீட்டில் பலாத்காரமாகத் தங்கி இருக்க வேண்டும் என்ற அவசியம் நாகரத்தினத்திடம் இல்லை. எனினும் தற்போது நாகரத்தினத்திடம் மற்றொரு வாடகை வீட்டிற்கு முற்பணம் வழங்குவதற்கான பணம் இன்மையே பெரும் பிரச்சினை. இதுவரை அயலில் வீடு எதுவும் தேடிக் கொள்ள முடியவில்லை. தமது பிள்ளைகள் இருவரும் அண்மையில் உள்ள பாடசாலைக்குச் செல்வதால் அவர்கள் தூர இடத்துக்குச் செல்வதும் கடினம்.

(20 நிமிடங்கள்)

**(2) காட்சி:**

சிகரட் விற்பனையை நிறுத்தும்படி கிராமக் கடைக்காரரைக் கோரி உடன்படச் செய்தல்.

**1 ம் கட்சிக்காரர் :** பாரதி இளைஞர் மன்றத்தின் தலைவரும் செயற்குழு உறுப்பினர்களும்.

சமீபத்தில் அமைக்கப்பட்ட இளைஞர் மன்றக் கூட்டத்தின் போது ஊரில் உள்ள இளைஞர் உட்படப் பலரையும் புகைப்பிடித்தலில் இருந்து மீட்க செயற்றிட்டமொன்றை ஆரம்பிக்க முடிவெடுத்தனர். அத் திட்டத்தின் ஓர் அங்கமாக அமைவது கிராம வர்த்தக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்தில் சிகரட் விற்பனையை நிறுத்துவதற்காக முதலாளியைச் சம்மதிக்கச் செய்வதேயாகும்.

**2ம் கட்சிக்காரர் : ஊர் முதலாளி**

இளைஞரோடு மோதிக் கொள்ளும் அவசியம் முதலாளிக்கு இல்லை. அது தனது வியாபாரத்துக்குப் பெரும் பிரச்சினையாக அமையும் என்பதை அவர் அறிவார். நாளொன்றில் தம் வர்த்தக நிலையத்தில் 100 சிகரட்கள் வரை விற்பனையாவதால் 300 ரூபா வரை அவர் பெற்றுக் கொள்வதோடு நிகர இலாபமாகப் 10% மான 30 ரூபாவைப் பெறுகிறார். அவரது வாதமாவது முதலாவதாகப் புகைபிடிப்போரை அதிலிருந்து மீட்டுக் கொள்ள வேண்டும் என்பதே.

(20 நிமிடங்கள்)

**ஆலோசனைகள் :**

பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்தப்படுவோரைத் தெரிவு செய்து ஒவ்வொரு சாராரும் கைக்கொள்ள வேண்டிய நிலைப்பாடு, அவசியமான கண்ணோட்டம், குறிக்கோள்களும், இடர்களும் மறுசாரார் கேட்காதவாறு விபரிக்கவும்.

இதனைக் கடதாசி அட்டைகள் இரண்டில் எழுதி இரு சாராருக்கும் அளிப்பதால் இலகுவாக நடத்தலாம். இப் பயிற்சிகளின்போது இரு பேச்சுவார்த்தைக் குழுக்களையும் சிறு வட்டமாக இருத்தி அவர்களுக்கு வெளிப் பக்கத்தில் அவதானிக்கும் பிள்ளைகளைப் பெரிய வட்டமாக இருத்துதல் நன்று. (அதாவது சிறிய வட்டத்தை சுற்றிலும் பெரிய வட்டம் அமையத் தக்கதாக)

எல்லாப் பேச்சுவார்த்தைக் கட்டங்களினதும் பின்னர் : அது எந்தளவு வெற்றிகரமாக அமைந்தது? அது எத்தகைய சிறந்த பண்புகளைக் கொண்டிருந்தது? அங்கு எத்தகைய குறைபாடுகள் காணப்பட்டன? என்றவாறு பிள்ளைகள் தம் அவதானத்தை அடிப்படையாகக் கொண்டு மாற்றூட்டத்தைச் சமர்ப்பிக்கச் செய்யவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிப்பு :**

வகுப்புப் பிள்ளைகள் தமக்குப் பொருத்தமான பேச்சுவார்த்தைச் சந்தர்ப்பங்களை / பிரச்சினைகளைப் பெற்றுக் கொள்ள உதவவும். பிள்ளைகள் பேச்சுவார்த்தை தொடர்பான திறன்கள் கொண்ட தரத்தைப் பெறும் வரை பயிற்சியில் ஈடுபடச் செய்வித்தல் அவசியம். இது பிள்ளைகள் மிகச் சிறந்த பயனைப் பெறத்தக்க செயற்பாடாக அமையும் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளிடைத் தொடர்பு

பாடம் : 6.5

நேரம் : 45 நிமிடங்கள்

**எண்ணக்கரு ஆய்வு :**

நபர்களுக்கு இடையேயான விடயமொன்று நபர்களுக்கு இடையே அமையும் தொடர்பு வழியாகவே நிகழும்.

**குறிக்கோள்கள் :**

*(1)* நபர்கள் மத்தியிலான விடயத்தில் நின்றும் நபர்களின் தொடர்பை வேறுபடுத்திக் காண்பிப்பர்.

*(2)* தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டு செல்லத் தேவைப்படும் செயற்பாடுகளைக் கொண்ட பட்டியலைத் தயாரிப்பர்.

**நுழைவு :**

சிறந்த ஆளிடைத் தொடர்பு கட்டியெழுப்பப் பட வேண்டியதன் முக்கியத்துவத்தைப் பற்றி நாம் முன்னைய பாடத்தில் கலந்துரையாடினோம். அவ்வாறு ஏற்படுத்திக் கொண்ட தொடர்புகளை எவ்வாறு மேற்கொள்ளலாம் என இன்று கலந்துரையாடுவோம்.

**சமர்ப்பித்தல் :**

*(1)* நாம் நபர்களோடு பல்வேறு விடயங்களைத் தினமும் புரிகிறோம். இவ் வகுப்பறையில் நபர்களுக்கிடையே நிகழும் விடயங்களைக் கவனிப்போம்.

- நான் உங்களைக் கற்பிக்கிறேன். நீங்கள் கற்கிறீர்கள்.

- நீங்கள் நண்பர்களோடு கருத்துக்களையும் உணர்வு-களையும் பரிமாறிப் புரிந்து கொள்கிறீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) இப்போது நபர்களிடையே நிகழும் விடயங்கள் என்பது புரிகிறதா?
உதாரணங்கள் சில தருக.
(எதிர்பார்க்கத்தக்க பதில்கள் :)

- கொடுக்கல் வாங்கல்
- பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளல்.
- பல்வேறு அலுவல்கள்
- உதவி வழங்கல்

(3) இந் நபர்களிடையேயான விடயங்கள் ஏதோவொரு மனிதாபிமான அடிப்படையில் தான் நடைபெறுகின்றன. அவ்வடிப்படையாவது ஆளிடைத் தொடர்பேயாகும். நாம் இதனை இவ்விதமாக ஒரு விளக்கப்படத்தால் காட்டலாம்.




(4) ஆளிடைத் தொடர்பு புதுப்பித்துக் கொள்ளப்பட வேண்டிய தொன்று என்பதை நீங்கள் இப்போது புரிந்து கொண்டிருப்பீர்கள். (எவ்வாறு இருப்பினும் நாம் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்புகள் எப்போதும் ஒரே விதத்தில் அமைய வேண்டும் என்பது இதன் கருத்தல்ல. பயனற்ற தொடர்புகள் எம்மில் இருந்து நீங்குவதைத் தடுக்க முடியாது. அது பிரத்தியேக விடயம்) இப்போது தொடர்புகளைத் தொடர்ச்சியாக ஏற்படுத்திச் செல்வதற்காக நாம் ஆற்றத்தக்கன யாவை எனத் தேடுவோம்.

(10 நிமிடங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு :**

வகுப்பை 5 குழுக்களாக வகுத்துக் கீழ்க் காணும் ஒப்படைகளை ஒவ்வொன்றாக வழங்குக.

(1) தூரப் பிரதேசத்தில் இருக்கும் உங்களது நண்பரோடு கொண்டுள்ள தொடர்பு.

(2) அன்றாடம் வகுப்பில் சந்திக்கும் நண்பரோடு கொண்ட தொடர்பு.

(3) உங்களது அண்டை வீட்டாரோடு கொண்ட தொடர்பு.

(4) நீங்கள் சிறிய அளவிலான ஒரு ஹோட்டலை நடத்துவதாகப் பாவித்து உங்கள் வாடிக்கையாளரோடு கொண்டுள்ள தொடர்பு.

(5) அயலில் உள்ள ஒருவரோடு உங்கள் காணியின் வேலி தொடர் பாகத் தகராறு ஒன்று உருவாகி இருப்பதாக நினைக்கவும். அந்த நபரோடு நீங்கள் கொண்ட தொடர்பு. (நீங்கள் உங்களை வயது வந்தவராகக் கருதிக் கொள்ளுங்கள்.)

மேலே குறிப்பிட்ட தொடர்புகளை ஏற்படுத்திச் செல்வதற்காக நீங்கள் செய்யத்தக்கனவற்றைக் குழுக் கலந்துரையாடல் வாயிலாக இனங் கண்டு வகுப்பில் சமர்ப்பிக்கவும்.

*(10 நிமிடங்கள்)*

**சமர்ப்பித்தல் :**

தொடர்பை வைத்திருத்தலின் பொருட்டுச் செய்யப்பட வேண்டியன பல உங்களது அறிக்கைகளில் காணப்பட்டன. அவற்றை மீண்டும் சுருக்கமாக்கி நோக்கின்,

- நாள்தோறும் சந்திக்கையில் 'வணக்கம்' கூறல், புன்சிரிப்பைக் காட்டல், சுக துக்கங்களை விசாரித்தல்.

- விவகாரங்களை மேற்கொள்கையில் மரியாதையாக நடந்து கொள்ளல், 'தயவு செய்து', 'நன்றி' போன்ற சொற்களைப் பிரயோகித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கௌரவித்தல்.

- வாழ்த்து மடல்களை அனுப்புதல்
உதாரணம் : பிறந்த நாள் வாழ்த்து

- இடையிடையே ஆயினும் கடிதம் அனுப்புதல்

- பரிசு வழங்கல்

- தம் இல்லத்துக்கு வருமாறு அமைத்தல்

- சந்திக்கையில் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளல் / விசாரித்தல்.

- அவர் பயன் பெறத்தக்க தகவல்கள் கிடைத்தபோது அவற்றை அறிவித்தல்.

- பலரால் புரியப்படும் தவறொன்றை இப்போது பார்ப்போம். நபர் விடயங்களில் பிணக்கு / அபிப்பிராய பேதம் உண்டானபோது அதற்கான தீர்வைக் காண்பதற்குப் பதிலாக நபரோடு கொண்டுள்ள தொடர்பைத் துண்டித்துக் கொள்ளல். உதாரணமொன்றைக் குறிப்பிடுவதாயின் அயல் வீட்டவரோடு வேலி தொடர்பாக அபிப்பிராய பேதம் தோன்றிய போது அவர்களோடு கதைப்பதைக் கைவிடல். இதன் பெறுபேறாக அமைவதாவது கருத்து மோதல் தீர்க்கப்பட முடியாத நிலை உருவாதலே ஆகும். எனவே ஆளிடை விடயத்தை ஆளிடைத் தொடர்போடு பிணைத்து சிக்கலாக்கிக் கொள்ளாது இருக்க வேண்டியமை மிகப் பிரதானமாகும். ஏதாவது ஒரு விடயம் தொடர்பாகப் பிரச்சினை ஏற்படின் ஆளிடைத் தொடர்பைத் தொடர்ந்தும் போற்றல் அவசியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலந்துரையாடல் :**

பாடம் தொடர்பான விடயங்களை மேலும் விளங்கிக் கொள்ளும் பொருட்டு வினாக்களை வினவத் தூண்டிக் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

(1) ஆட்களுக்கிடையிலான பிரச்சினை காரணமாகத் தொடர்பைத் துண்டித்துக் கொண்டதால் தோன்றிய, மாணவர் அறிந்த சம்பவத்தை அல்லது சம்பவங்களைச் சமர்ப்பிக்கும்படி கூறவும்.

(2) ஆட்களுக்கிடையிலான பிரச்சினை இருந்த போதும் தொடர்பைத் தொடர்ந்தும் கொண்டு சென்ற சம்பவத்தை அல்லது சம்பவங்களைக் குறிப்பிடுங்கள்.

(3) பிரச்சினையொன்று இருக்கையில் ஆளிடைத் தொடர்பைக் கொண்டு செல்லும் போது சந்திக்கக்கூடிய சிக்கல்கள் பற்றிக் கலந்துரையாடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தை மாற்றி அமைப்பதில் அஹிம்சை வழிச் செயன் முறைகளைக் கைக்கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாத்காரத்துக்குப் பலாத்காரத்தால் பதில் கூறல்

பாடம் : 7.1

நேரம் : 45 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கருக்கள் :**

*(1)* பலத்துக்கு மாறாகப் பலத்தைப் பிரயோகிக்க நாம் எளிதில் தூண்டப்படுகிறோம்.

*(2)* இம்சைக்கு அஹிம்சையால் பதிலளிக்க இயலும்.

*(3)* அஹிம்சையான பதில் பலம் வாய்ந்தது.

**குறிக்கோள்கள் :**

*(1)* 'பலத்துக்கு எதிராகப் பலத்தைப் பிரயோகித்தல்' என்பதைப் விமர்சிப்பர்.

*(2)* இம்சைக்கு அஹிம்சையால் பதிலளிக்க இயலும் என்பதைப் புரிந்து கொள்வர்.

**செயற்பாடு : படி : 1**

'இன்று நாம் பலத்துக்குப் பதிலளிப்பது தொடர்பாக ஒன்றினைக் கற்றுக் கொள்ள முனைவோம்'.

*(அறிமுகம்)*

வகுப்பை வெளிப்புறமான இடம் ஒன்றுக்குக் கொண்டு சென்ற நிலத்திலே ஒரு கோட்டினை வரைந்து பிள்ளைகள் இருவராக நேருக்கு நேர் இருக்கத்தக்கதாக உள்ளங்கைகள் ஒன்றோடு ஒன்று முன்னோக்கிப் படக்கூடியவாறு ஒருவரோடு ஒருவர் போராட முற்படுவதாகப் பாவனை செய்து கோட்டுக்கு ஒரு புறத்தில் ஒரு மாணவனும் மறு புறத்தில் அடுத்த மாணவனும் நிற்குமாறு செய்யவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கோட்டின் வலது புறத்தில் நிற்கும் பிள்ளைகளுக்கு இக் கட்டளையையிடவும்: நான் இப்போது 1,2,3 என்றவுடன் நீங்கள் உங்கள் உள்ளங்கையால் எதிரே உள்ள நண்பரின் உள்ளங்கையைத் மோதித் தள்ளவும். தயாராகவும். 1,2,3 வலது பக்கப் பிள்ளைகள் தள்ளும் போது இடது பக்கப் பிள்ளைகள் என்ன செய்தனர் என வினவவும். எத்தனை பேர் திருப்பி உள்ளங்கையைத் மோதித் தள்ளினர் எனக் கணக்கிடவும்.

**படி : 2**

வகுப்பை வட்டமாக நிற்கச் செய்து ஒரு பிள்ளையை நடுவில் நிற்குமாறு செய்யவும். அப் பிள்ளை தமது பாதம் ஒன்றைச் சற்று உயர்த்தி உள்ளங்கையை முன்பாக வைத்து நிற்கும்படி செய்து நீங்களும் (ஆசிரியர்) பிள்ளையின் எதிரில் நின்று உள்ளங்கையோடு உள்ளங்கையை வைத்து, ''இப்போது நீர் எனது கரங்களைத் தள்ளுக'' எனக் கூறி அவன் அவ்வாறு அழுத்தும் போது திருப்பி அழுத்தாது பிள்ளை தம் மீது சரியும்படி இடமளித்துத் தழுவிக் கொள்ளவும்.

**கலந்துரையாடல் :**

**படி : 3**

(1) முதலாவது செயற்பாட்டின் போது வலது பக்கப் பிள்ளை அழுத்துகையில் அடுத்த பிள்ளை என்ன செய்தார்?

(2) திருப்பி அழுத்திய பிள்ளைகள் நேர்மையாக கரங்களை உயர்த்தவும். (தொகையைக் கணிக்கவும்)

(3) பெரும்பான்மையோரின் பிரதிபலிப்புகள் எவை? பலத்துக்கு எதிராகப் பலத்தைக் கைக்கொள்ள தாம் பழகியிருக்கிறோம் என்பது உண்மையே என்பது இப் பரிசோதனையால் நிரூபிக்கப்பட்டதா?

(4) இதனால் புலனாவது என்னவென மேலும் அண்மித்து நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பலத்துக்குப் பலத்தால் பதிலளித்தல்.

★ இம்சைக்கு இம்சையால் பதிலளித்தல்.

அதாவது,

- எச்சரித்தலுக்கு எச்சரித்தல்
- தாக்குதலுக்குத் தாக்குதல்
- ஆத்திரத்துக்கு ஆத்திரத்தோடு செயற்படல்.
- பகைமைக்குப் பகைமையோடு செயற்படல் என்பன, இதனால் புலனாகும். இவை நாம் சமூகத்தால் கற்றுக் கொண்டுள்ள முறைகளே யாகும். நாம் எமது இந் நிலைமையை நேர்மையாக ஏற்கத் தான் வேண்டும்.

(5) 'உலக மாந்தரிடையே ஏன் இத்தனை இம்சித்தற் செயல்கள் நடைபெறுகின்றன' என்ற எண்ணம் உங்களில் தோன்றக்கூடும்.

(6) அடுத்து இரண்டாவது செயற்பாட்டை நோக்குவோம்.

அம் மாணவனைக் கலந்துரையாடலில் ஈடுபடுத்திக் கொள்ள அழைக்கவும். ''நீர் எனது கைகளை அழுத்தும் போது என்ன நினைத்தீர்''? எதிர்பார்க்கும் பதில்: நீங்களும் திருப்பித் தள்ளுவீர்கள் என நான் நினைத்தேன்.

ஆசிரியர் : நான் திருப்பித் தள்ளினேனா?

மாணவன் : இல்லை

ஆசிரியர் : நான் திருப்பித் தள்ளாதபடியால் உம்மில் என்ன நிகழ்ந்தது?

மாணவன் : எனது சமநிலை இன்மை காரணமாக நான் முன்னோக்கி விழப் போனேன்.

ஆசிரியர் : (வகுப்பை நோக்கி) அங்கு நான் புரிந்த செயல் எதனை அடையாளப் படுத்துகிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எதிர்பார்க்கத்தக்க பதில் :**

- ★ பகைமைக்கு நட்பால் பிரதிபலிப்பைக் காட்டுதல்.
- ★ இம்சைக்கு அஹிம்சையால் பிரதிபலிப்பைக் காட்டல். பலத்துக்குப் பலத்தால் பிரதி-பலிப்பைக் காட்டாதுவிடல்.
- ★ பலத்தைக் கைவிடல்
- ★ மாற்றுக் கட்சியினரது சமநிலையை வீழ்ச்சி அடையச் செய்தல்.
- ★ ஆக்கபூர்வமான பிரதிபலிப்பு

மேலே குறிப்பிட்ட எண்ணக்கருக்களை வகுப்போடு கலந்துரையாடவும்.

**மதிப்பீடு :**

*(1)* இச் செயற்பாட்டால் நீர் கற்றுக் கொண்டது எது? ஒவ்வொரு பிள்ளையையும் வினவும்.

*(2)* பலத்துக்கு மாறாகப் பலத்தை உபயோகிக்க மாற்றுக் கட்சியாரில் யாது நிகழ்கிறது?

*(3)* பலத்துக்கு எதிராகப் பலத்தை உபயோகிக்க, உபயோ-கிக்க மாற்றுக் கட்சியார் செய்வது என்ன?

*(4)* மேலே நாம் கற்றுக் கொண்டதன்படி அஹிம்சையான பிரதிபலிப்பின் பண்புகள் எவை?

**குறிப்பு :**

'ஜுஜிட்சு' என்ற ஜப்பானியப் போர் முறையில் எதிராளி மீது தாக்குதல் நிகழ்த்தப்படமாட்டாது. பதிலாக எதிராளியின் வேகமான தாக்குதலைத் தவிர்த்துக் கொள்வதால் அவர் கீழே விழும்படி செய்தலே நடைபெறுகிறது. இவ்வெண்ணக்-கருவைக் கலந்துரையாடலின் போது பிள்ளைகளிடம் அறிமுகப் படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்சையைப் பற்றி மேலும்.......

பாடம் : 7.2

நேரம் : 60 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கருக்கள் :**

எல்லா இம்சித்தற் செயல்களிலும் அடிப்படை இயல்பாக அமைவது நபருக்கோ அன்றி அவரது உயிருக்கோ மதிப்பளிக்காமையே.

**குறிக்கோள்கள் :**

*(1)* இம்சையின் பல்வேறு தோற்றங்களை அடையாளங் காண்பர்.

*(2)* எல்லா இம்சித்தல்களினதும் அடிப்படையாக அமைவது நபர்க்கான கௌரவம், மனித உயிர்க்கான கௌரவம் அளிக்கப்படாமையே என விளக்குவர்.

**நுழைவு :**

இம்சை நிறைந்த உலகில் அஹிம்சையோடு எவ்வாறு வாழலாம் என்பதைத் தேடிப் பார்ப்பதே இப்பாட விதானத்தின் முயற்சியாகும்.

இதன் பொருட்டு 'இம்சை'யைக் கண்டவிடத்து அதனை இனங் காணத் தக்கதாக நன்கு புரிந்து கொள்ள வேண்டும். முன்னைய பாடங்களில் நாம் அதனை அடிப்படையில் விளங்கிக் கொண்டோம். எனினும் மேலும் ஆழமாக அதனைப் புரிந்து கொள்ளல் வேண்டும்.

இம்சை என்பது எப்போதாவது கேட்க அல்லது காணத்தக்க தாக்குதல், கொலை, சொத்துக்களை எரித்தல், கொள்ளை-யிடல் போன்ற உடல் ரீதியிலான செயல்களோடு மட்டுப்-படுத்தப்படுவன அல்ல. இம்சை பல தோற்றங்களையும், தரங்களையும் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு : குழுக் கலந்துரையாடல்**

வகுப்பை 06 குழுக்களாக வகுத்துக் கீழ்வரும் தலைப்புகளில் நிகழும் இம்சித்தற் செயல்களை இயன்றவரை இனங் காணச் செய்யவும்.

(1) வாய்மொழி இம்சை என்பது எது? சொல்லால் ஏனையோருக்கு இழைக்கத்தக்க இம்சை.

(2) குடும்பத்தில் நிகழத்தக்க இம்சித்தற் செயல்கள்.

(3) பல்வேறு இயக்கங்கள் / நிறுவனங்கள் உள்ளே நிகழும் இம்சித்தற் செயல்கள்.

(4) அரசியல் உலகில் நிகழும் இம்சித்தற் செயல்கள்.

(5) பொருளியல் உலகில் நிகழும் இம்சைகள்.

(6) மனிதனது பல்வேறு வழிபாடுகள், நம்பிக்கைகள் காரணமாக நிகழ்த்தப்படும் இம்சித்தற் செயல்கள்.

*(20 நிமிடங்கள்)*

**செயற்பாடு : 2 சிந்தனைக் கிளர்வு**

ஒருவரது செயல் தமக்கு இம்சையாகின்றதா என்பதை எதனைக் கொண்டு இனங் காணலாம்? என்ற வினாவின் ஊடே சிந்தனைக் கிளர்வைநிகழ்த்தவும். பிள்ளைகளது மனதில் தோன்றும் எண்ணங்களும் உணர்வுகளும் திறந்ததாக வெளிப்படுத்தப்பட உகந்த சூழ்நிலையை உருவாக்கவும். பிரதிபலிப்புகளைக் கரும்பலகையில் எழுதவும்.

எதிர்பார்க்கப்படும் பதில்களுக்கு உதாரணங்கள் :

- தமது நோவை / வேதனையை உணர்தல்
- மன வேதனை
- கொடூரமாக நடந்து கொள்ளல்
- தாக்குதல்
- எச்சரித்தல்
- ஏளனஞ் செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்க அட்டவணை கிடைத்த பின்னர் அவற்றை வகைப்படுத்திப் பார்க்கவும். அவ் வெல்லா வகைகளுக்கும் பொதுவான அடிப்படைப் பண்புகள் எவையென வினவிப் பதில்களைப் பயன்படுத்திக் கொண்டு கீழ்வரும் வரைவிலக்கணத்துக்கு வரவும்.

**''நபர் என்ற வகையிலும் மனிதன் என்ற வகையிலும் நான் கூறும் அன்றிப் புரியும் விடயம் எவ்வித பயனும் அற்றதெனவும் அது தொடர்பாக நான் ஆற்றத்தக்கது எதுவும் இல்லை எனவும், என்னால் விளங்கிக் கொள்ள முடியாத வகையில் ஒருவர் அல்லது ஒரு குழுவினர் என் மீது செயற்படுதலை நான் இம்சை என உணர்கிறேன்.''**

பிள்ளைகள் முன்னர் இருந்த குழுக்களுக்கு அவர்களை அனுப்பி, இவ்வரைவிலக்கணம் உணர்த்தும் பொருளை வினவிப் பார்க்கச் செய்யவும். *(10 நிமிடங்கள்)*

**மதிப்பீடு :**

குழுக் கலந்துரையாடலால் அடையாளங் கண்டு கொண்ட விடயங்களை வகுப்பில் சமர்ப்பிக்கச் செய்து அதன் வாயிலாகக் கலந்துரையாடலை மேற் கொள்ளவும்.

**துணையாகக்கொள்ளத்தக்க வினாக்கள் :**

(1) இவ் வரைவிலக்கணத்தின்படி இம்சித்தலின் அடிப்படைப் பண்புகள் எவை?
(அடிமை வேலை, பயங்கரவாத உபாயமாக மேற்கொள்ளப்படும் பொதுமக்களைக் கொலை புரிதல், கொள்ளையடித்தல், களவு, கற்பழிப்பு ஆகிய செயல்களில் இப் பண்புகள் உண்டாவெனத் தேடவும்.)

(2) தனிமனித கௌரவம் என்பது எது?

(3) மனித உயிரை மதித்தல் என்பதன் கருத்து யாது?

(4) மேற் குறிப்பிடப்பட்ட வரைவிலக்கணப்படி இம்சித்தற் செயல்களுக்கு உள்ளாகும் ஒருவர் உணரத்தக்க பெரும் வேதனை எது?

(5) நாம் மேலே நடத்திய கலந்துரையாடலின்படி அஹிம்சையின் அடிப்படைப் பண்புகள் எவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஹிம்சாவாதத்தின் கோட்பாடுகள் (1)

பாடம் : 7.3
நேரம் : 45 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கரு :**

அஹிம்சையானது நபர்களை உள்ளடக்கிய சமூகத்தை நன்மார்க்கத்தில் திசை திருப்பப் பயனுள்ளவாறு கைக்கொள்ளத்தக்க எண்ணங்களும் நடவடிக்கைகளும் ஆகும்.

**குறிக்கோள்கள் :**

*(1)* அஹிம்சையின் கோட்பாடுகளைக் குறிப்பிடுவர்.

*(2)* அஹிம்சைப் போராட்டத்தின் அடிப்படை இயல்புகளை எடுத்துக் காட்டுவர்.

*(3)* நபர்கள் அஹிம்சையோடு ஏனையவருடன் கொண்ட பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பங்களை அடையாளங் காண்பர். அவற்றை மதிப்பர்.

**நுழைவு :**

அஹிம்சை என்பது புலனாகாத எண்ணக்கருவாக மட்டும் வரையறுக்கப் பட்டதல்ல. அது தனிப்பட்டதாகவும் கூட்டாகவும் பிணக்குத் தீர்வுக்குப் பயனுள்ளதாகக் கைக்கொள்ளக்கூடிய செயல்முறையொன்றேயாகும்.

**பாடவிடயம் :**

*(1)* அஹிம்சைக்கு அடிப்படையாக அமைவது :

மனிதரை உள்ளக்கிய எல்லா விலங்குகள் மற்றும் இயற்கையின்மீது நட்பையும் கௌரவத்தையும் அளித்துச் செயற்படுதலேயாகும். எல்லா மதங்களும் அஹிம்சாவாதத்தின் கோட்பாடுகளைக் கற்பிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் :

★ 'தீமையை நன்மையால் வெல்க'
(அசாதுங் சாதுணொ ஜினெ)

- புத்தர்

★ 'ஒருவர் உமது இடது கன்னத்தில் அறைவாராயின் உமது வலது கன்னத்தையும் அவருக்குத் திருப்புக' 'உமது பகைவனுக்கும் அன்பு காட்டுக'.

- இயேசுநாதர்

★ 'சாந்தி' அஹிம்சை பற்றிய இந்துசமயக் கருத்துக்கள்.

★ நன்மையின் மட்டில் நான் நன்மையோடு செயற்படு-வேன். தீமையின் மட்டிலும் நான் நன்மையோடு செயற்படுவேன்.

- தாவோமதம்

★ நான் அல்லாஹ்வின் திருத்தூதரை அடைந்தேன். ''நீர் நன்மையைப் பற்றி அறிய வந்தீரா? என அவர்கள் வினவினார்கள். ''ஆம் அவ்வாறே'' என நான் பதிலளித்தேன். அப்போது அவர்கள் இவ்வாறு கூறினார்கள். ''நன்மை என்பது எதுவென உமது இதயத்தை விசாரிக்கவும். அது நன்மையைத் தீர்மானிக்கும் நன்மை என்பது ஆத்மாவுக்கும் இதயத்துக்கும் நிம்மதியைப் பெற்றுக் கொடுக்கும் ஒன்றே''.

- இஸ்லாம்

(2) அஹிம்சையை ஓர் எண்ணமாக மட்டும் வரையறுத்துக் கொள்ள வேண்டாம். அது நடைமுறை வாழ்வில் பயனுள்ளதாகக் கையாளத்தக்கது. இம்சைக்குப் பதிலாக அஹிம்சையைப் பதிலீட்டுச் செயலாகக் கைக்கொள்ளலாம்.

(3) ''அஹிம்சையை முதன்மையாகக் கொண்டு வாழும் நபர், மதம் சார்ந்த விடயங்களில் ஈடுபடுதல் அவசியமற்றது'' எனத் திருக்குறள் என்ற அறவழி நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் பொருள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன? (கலந்துரை யாடவும்.) அதன் பொருள் அஹிம்சை உயர்ந்த மதச் செயல் என்பதே யாகும்.

(4) இம்சைக்குப் பதிலாக அஹிம்சையை மிகப் பயனுள்ளதாகக் கொள்ள இயலுமென நாம் முன்னர் குறிப்பிட்டோம். இதன்படி சமூகத்தில் அநியாயம், ஊழல் போன்ற குற்றங்களை நீக்க இம்சையான போராட்ட முறைக்குப் பதிலாக அஹிம்சையான போராட்ட முறையைக் கையாளலாம். உயர்ந்த மக்கள் தலைவர்கள் சமூகப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய அஹிம்சையான முறைகளை கைக்கொண்ட சந்தர்ப்பங்களுக்கான எடுத்தக் காட்டுகளை எந்தவொரு நாட்டினதும் வரலாற்றில் இருந்து நாம் தேடிக் கொள்ளலாம். இந் நூற்றாண்டுத் தொடக்கத்தில் பிரித்தானிய ஏகாதிபத்தியப் பிடியில் இருந்து இந்தியாவை மீட்டுக் கொள்ளும் பொருட்டு மகாத்மா காந்தி அவர்கள் அஹிம்சை வழி போராட்ட முறையைக் கையாண்டு மிகச் சிறந்த வெற்றியைப் பெற்றுக் கொண்டார்கள்.

(5) அஹிம்சை வழியிலான சமூகப் போராட்டத்தின் அடிப்படைப் பண்புகள் இவை :

★ எல்லாவித இம்சையான செயல்களையும் தவிர்த்துக் கொள்ளல்.

★ பொய், கொள்ளை, பலாத்காரம் போன்ற நன்நடத்தைக்கு எதிரான உபாயங்களைக் கைக்கொள்வதைத் தவிர்த்தல்.

★ மறுசாராரின் விரோதத்தைத் தூண்டுவதைத் தவிர்த்தல்.

★ மறுசாராரின் விரோதத்தைத் தூண்டுவதைத் தவிர்த்தல்.

★ மறுசாரார் எதிரிகள் அல்லர் எனவும், தம்போன்றே நன்மை தீமைகளைப் புரிந்து கொள்ளும் மனச்சான்று உள்ள மனிதரே எனவும் கருதி அவர்களிடையே நியாயம், சத்தியம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிடக் கருணை போன்ற மனித உணர்வு-களைத் தோற்றுவிக்கத்தக்க செயல்களைக் கைக்கொள்ளல்.

★ துணிவு

★ ஆக்கபூர்வமான துலங்கல்.

**சமர்ப்பித்தல் :**

தேவைப்படி பிள்ளைகளும் கலந்து கொள்ளுமாறு செய்து, விரிவுரை, கலந்துரையாடல் வாயிலாகச் சமர்ப்பிக்கவும்.

(20 நிமிடங்கள்)

**செயற்பாடு : விடய ஆய்வு**

நீர் அல்லது தெரிந்த யாரேனும் ஒரு நபர் மற்றொருவரோடு ஏற்படுத்திக் கொண்ட பிரச்சினையை அஹிம்சையாக (அதாவது : நல்ல மனதோடு கலந்துரையாடல் வாயிலாக / ஏற்கத் தக்கதாக விடயங்களைச் சமர்ப்பிப்பதன் வாயிலாக, ஒத்துழைப்பாகப் போன்ற நல்ல முறை மூலம்) தீர்த்துக் கொண்ட சந்தர்ப்பத்தைத் தெரிவு செய்து கொண்டு வகுப்பில் சமர்ப்பிக்கவும். (ஆகக் குறைந்த 6 சம்பவங்களையேனும் சமர்ப்பிக்கச் செய்து அந்த அந்தச் சம்பவத்தில் காணப்பட்ட பண்புகளைச் சுட்டிக் காட்டவும்.)

(25 நிமிடங்கள்)

**துணை ஆலோசனைகள் :**

(1) சமூகத்தில் நபர்கள் தம் மத்தியில் பிரச்சினைகளை அஹிம்சை வழியில் தீர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பங்களை அடையாளங் காணவும், மதிப்பளிக்கவும் அவசியமான திறன்கள் மனப்-பாங்குகள் என்பனவற்றைப் பிள்ளைகள் பெற்றுக் கொள்ளல் சிறப்பானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) பிரச்சினைகளை அஹிம்சையோடு தீர்த்துக் கொண்ட சந்தர்ப்பங்களுக்கு உதாரண நிகழ்ச்சிகளை மாண-வரிடம் பெறமுடியாவிடின் அவர்கள் கேட்டுள்ள சமய இலக்கியத்தில் அல்லது வரலாற்றுக் கதைகளில் அல்லது வீரப் பாத்திரங்களில் அத்தகையவற்றை இனங் காணச் செய்யவும்.

**மேலதிக செயற்பாடுகள் :**

நபரொருவருக்கு வேறொருவரோடு ஏற்பட்ட தகராறை அஹிம்சை வழியில் தீர்த்துக் கொண்ட சந்தர்ப்பத்தைக் குறிப்பிடும் சிறுகதை ஒன்றை / சிறு நாடகமொன்றை எழுதவும்.



சித்திரம் : 7 மகாத்மா காந்தி அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஹிம்சாவாதத்தின் கோட்பாடுகள் (2)

பாடம் : 7.5

நேரம் : 40 நிமிடங்கள்

அடிப்படை எண்ணக்கரு : அஹிம்சையின் பயன்பாடு

**குறிக்கோள்கள் :**

*(1)* அஹிம்சாவாதத்தின் அடிப்படைப் பண்புகளையும் கொள்கைகளையும் திறனாய்வர்.

**நுழைவு :**

இப் பாடத்தின் வாயிலாக அஹிம்சாவாதத்தைச் சமூக வளர்ச்சிக் காகக் கைக்கொள்ளும்போது பின்பற்ற வேண்டிய கோட்பாடுகள் சிலவற்றை விளங்கிக் கொள்ள நாம் முனைவோம்.

**செயற்பாடு : 1 ம் படி : ஆயத்தம்**

நீளவாட்டில் ஆறு கடதாசித்துண்டுகளை வெட்டி எடுத்து, ஒவ்வொரு துண்டிலும் கீழ்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றையும் முறையே எழுதவும்.

*(1)* ''இம்சைக்கு இம்சையால் பதிலளிப்பதை விட இம்சைக்கு அஹிம்சையால் அளிக்கும் பதில் எதிராளியில் நேரடியாகப் படும்''.

- மகாத்மா காந்தி

*(2)* ''எதிரி உம்மில் எதிர்பார்ப்பதைப் பூர்த்தி செய்யத்-தக்கதாக ஒருபோதும் நடந்து கொள்ளாதீர்''.

- நெப்போலியன்

*(3)* ''ஆயுதம் ஏந்துவோர் கோழைகளாவர்''.

- மகாத்மாகாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) ''இம்சையைக் கைக்கொள்வதை விட அஹிம்சை-யைக் கைக்கொள்ளப் பலமான துணிவு அவசியம்''.

- மகாத்மாகாந்தி

(5) ''பரிவிலும் பலமான ஆயுதம் வேறில்லை''.

- மகாத்மாகாந்தி

(6) ''அஹிம்சையாளர் ஒரு போராட்டத்தின் போது இம்-சையாளன் பயன்படுத்துவதிலும் பார்க்க முற்றிலும் மாறுபட்ட ஆயுதங்களையே பயன்படுத்துவர்''.

- மகாத்மாகாந்தி

**2 ம் படி : குழுக் கலந்துரையாடல்**

வகுப்பை ஆறு குழுக்களாகப் பிரிக்கவும். மேலே உள்ள வாக்கியங்களைக் கொண்ட கடதாசித்துண்டுகளை ஒவ்வொன்றாகப் பங்கிடவும். குழு தான் பெற்ற வாக்கியத்தின் பொருளைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். விசேடமாக அநியாயத்துக்கு எதிராகப் போராட்டம் நிகழ்த்துகையில் அக் கோட்பாட்டை எதுவரை கைக்கொள்ள இயலும் என நோக்க வேண்டும். (காலம் 15 நிமிடங்கள்) கலந்துரையாடலின் போது தோன்றும் கருத்துக்களை எழுதிக் கொண்டு தலைவர் பின்னர் அவற்றை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாக வேண்டும்.

**3 ம் படி : வகுப்பில் சமர்ப்பித்தலும், கலந்துரையாடலும்**

காலம் முடிவடைந்த பின்பு முழு வகுப்பாக ஒருங்கு சேரச் செய்து, தம் குழுக் கலந்துரையாடலின் போது குறிப்பிட்ட கருத்துக்களைச் சமர்ப்பிக்கும்படி தலைவர்களிடம் கூறவும். ஒரு குழுவுக்கு 05 நிமிடங்கள் வரையான நேரம் போதுமானது.

குழுவொன்று தம் வாக்கியத்தை விபரித்த பின்னர் ஏனைய எல்லா மாணவர்களும் கருத்துக்களை வெளியிட வகை செய்து கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

(35 நிமிடங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மதிப்பீடு :**

(1) இப்பாடத்தின் வாயிலாக நீங்கள் புதிதாக ஏதாவதொன்றைக் கற்றுக் கொண்டீர்களா? அவ்வாறாயின் அது என்ன?

(2) நீங்கள் முன்னர் எண்ணி இருந்த ஏதாவதொரு கருத்து பிழையானது என இக் கலந்துரையாடலால் புரிந்து கொண்டீர்களா? அது எது?

(3) 'அஹிம்சைவாதியாவதற்குச் சக்திமிக்க நடத்தைப் பலம் இருத்தல் வேண்டும்' நீங்கள் இக் கூற்றை ஏற்கிறீர்களா? உங்களது முடிவுக்கான காரணங்கள் எவை?

(10 நிமிடங்கள்)

**மேலதிக செயற்பாடுகள் :**

யாதேனும் ஒரு போராட்டச் சந்தர்ப்பத்தைச் சித்தரிக்கத் தக்கதாக வகுப்பைக் குழுக்களாக வகுத்து, மேலே குறிப்பிடப்பட்ட கோட்பாடுகளைக் கையாண்டு, அச் சந்தர்ப்பத்தை வெற்றி கொள்ளக் கூடிய மார்க்கங்களைத் தீர்மானிக்கும்படி கூறவும். பின்னர் வகுப்பாக ஒருங்கு சேரச் செய்யவும். குழுக்களின் நடவடிக்கைகளைச் சமர்ப்பிக்கச் செய்து அவற்றைக் கைக் கொண்டு செயற்படத்தக்க வழிகளை மேற் கொள்ள வழிப் படுத்தவும்.

**உதாரணம் :**

உங்கள் குழு பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுச் செல்கிறது. அங்கே மனிதாபிமானம் அற்ற ''பகிடி வதைக்கு'' முதலாம் ஆண்டு மாணவர்கள் உட்படுத்தப்படுகிறார்கள். இந் நிலையை அகற்ற அஹிம்சை வழியிலான நடவடிக்கையை மேற்கொள்ள உங்களது குழு முடிவு செய்கிறது. அந்த நடவடிக்கை எது? மேலே குறிப்பிடப்பட்ட கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டு உங்களது நடவடிக்கைகளைத் தயார்படுத்திக் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்திரம் : 8 ஆயுதம் ஏந்துவோர் கோழைகளேயாவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஹிம்சை வழிச் செயல்கள் - விடயஆய்வு.

பாடம் : 7.5

நேரம் : 45 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கரு :**

*அஹிம்சையான செயல் சமூகத்தை மாற்றுவதில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது.*

**குறிக்கோள்கள் :**

*(1) அஹிம்சாவாதத்தைச் செயற்படுத்தல் தொடர்பான உண்மைச் சம்பவங்களைக் கற்பர்.*

*(2) அத்தகைய போராட்டங்களை மேற்கொள்ளும் நபர்கள் சந்திக்கத்தக்க சவால்கள் / இன்னல்கள், எச்சரிக்கைகள் என்பனவற்றை இனங் காண்பர்.*

*(3) விடய ஆய்வு வாயிலாக அஹிம்சை வழிப் போராட்-டங்களின் இயல்பைப் பற்றிக் கலந்துரையாடுவர்.*

**நுழைவு :**

*அஹிம்சை தொடர்பான எண்ணக்கரு பற்றியும் சமூக அநியாயங்களை நிவர்த்தி செய்யக் கைக்கொள்ளத்தக்க முறை பற்றியும் முன்னைய பாடங்களில் நாம் கற்றுக் கொண்டோம். இன்று நாம் அஹிம்சை வழியான நடவடிக்கைகளால் சமூக அநியாயங்களை ஒழிக்கப் பல்வேறு நபர்கள் செயற்பட்டுள்ள முறைகள் சிலவற்றை உண்மைச் சம்பவங்கள் வாயிலாகக் கற்போம்.*

**விடய ஆய்வு : நவீன சமூக முறையை கட்டியெழுப்பல்.**

*கி.பி. 1830 அளவில் அமெரிக்காவில் காணப்பட்ட அடிமைச் சேவையின் மனிதாபிமானமற்ற தன்மையை உணர்ந்த சில நல்ல வெள்ளை இனத்தார் அக் காலச் சமூகத்தில் நிலவிய நிற பேதத்துக்கு எதிராக நீக்ரோக்கள் தம் நண்பர்களே எனப்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிரங்கமாக அவர்களோடு தொடர்பு கொள்ளும் இயக்கத்தைத் தொடங்கினார்கள். 1838ல் அடிமைச் சேவை எதிர்ப்பு மகளிர் மன்றத்தில் தம் உறுப்பினருக்காகப் பின்வருமாறு பிரேரணையை நிறைவேற்றிக் கொண்டனர்.

''அடிமைச் சேவையை வெறுக்கும் சகலரும் அடிமைகள் என ஒதுக்கப்படும் அமெரிக்கப் பிரஜைகளான நீக்ரோக்-களைச் சமத்துவமாகக் கருத வேண்டும். அவர்களோடு தேவாலயத்தில் ஒன்றாக அமரவேண்டும். பகிரங்கமாக அவர்களோடு சேர்ந்து வீதிகளில் பயணம் பண்ண வேண்டும். கப்பல்களிலும் மேடைகளிலும் அவர்களுக்குச் சமத்துவம் அளிக்கப்பட வேண்டும். மேலும் அவர்களது வீடுகளுக்குச் சென்று வருவதோடு அவர்களையும் தம் இல்லங்களுக்கு அழைக்க வேண்டும். எல்லா விடயங்களிலும் எம் வெள்ளையர் இனச் சகோதரர்களைக் கவனிப்பதைப் போன்றே நீக்ரோ இனத்தவரையும் கவனிக்க வேண்டும்.''

அடிமைப் பணியை எதிர்ப்போர் அமெரிக்க நகர்களில் கறுப்பு இனத்தவரோடு கைகோர்த்துக் கொண்டு ஊர்வலங்களில் சென்றனர். சில மேயர்கள் அவ்வாறு அவர்கள் இணைந்து பயணம் பண்ணுவதை நிறுத்த முயன்றனர். இச் செயல் அடிமைச் சேவையை ஆதரிக்கும் பெரும்பான்மை இன வெள்ளையரில் பெரும் கலக்கத்தை விளைவித்தது.

கறுப்பு இனத்தவரை ஒதுக்கும் சமூக வழக்கங்களைச் சிதைக்கும் நோக்குடன் அவர்கள் கறுப்பு - வெள்ளை இனத்தவர்கள் உணவு உண்ணத்தக்க பகிரங்க உணவு கொள்ளும் உபசரிப்புகளை ஒழுங்கு செய்தனர். பிற்போக்கான வெள்ளையர் இனத்தோர் பதட்டத்துக்கு உள்ளானார்கள். தீவிரவாத வெள்ளையர்கள் அத்தகைய உணவு உபசரிப்புகளைத் தாக்கவும் செய்தார்கள்.

1930 களில் இந்தியச் சுதந்திரப் போராட்டத்தின் ஒரு பகுதியாக அக் காலத்தில் நிலவிய ஜாதி பேதத்தை நீக்கி காந்தியின் சீடரான பிராமணர் கோரா என்பவர் பாரிய அளவிலான சர்வகுல மற்றும் சர்வமத உணவு உபசரிப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கு செய்தார். ''தாழ்ந்த குலத்தவரோடு ஒன்று சேர்ந்து உணவு உண்ணலாகாது'' என்ற பழைமையான சமூக வழக்கைத்தகர்த்தெறிதல். அத்திட்டத்தின் குறிக்கோளாக இருந்தது.

**விடய ஆய்வு : 2 தந்தி மூலம் எதிர்ப்பைக் காட்டல்.**

ஒரு காலத்தில் இலங்கையில் கூட்டுறவுக் கடைகளில் சாராய விற்பனையை ஆரம்பிக்க அப்போதைய அரசாங்கத்தின் அமைச்சரொருவர் முடிவு செய்தார். அத் திட்டத்தைப் பரீட்சார்த்தமாக பதுளை மாவட்டத்தில் நடத்திப் பார்ப்பதென்பதே அவரது முடிவாக இருந்தது.

பிரதேசத்தில் விநியோகிப்பதற்காகப் பாரிய அளவிலான சாராயம் கூட்டுறவுப் பண்டகசாலைக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் பிரதேச மக்கள் அதனைக் கேள்வியுற்றனர்.

இதன் காரணமாக மதுபானத்துக்குப் பொதுமக்கள் இலக்காகக் கூடிய வாய்ப்பையும் மது அருந்தலுக்கு ஊக்குவிக்கப்படுதலையும் எதிர்த்த சமூக சேவையாளர் சிலர் உடனே செயற்படத் தொடங்கி அத் திட்டத்துக்கான எதிர்ப்பை உணர்த்தும் தந்திகளை அரசாங்கத்தின் பொறுப்பான வர்களுக்கு அனுப்புவதற்காகப் பிரதேசசமயத் தலைவர்களையும், பெரியோர்களையும் நிறுவனங்-களையும் பிரஜைகளையும் ஊக்குவித்தனர். பொது மக்களது எதிர்ப்பைப் புரிந்து கொண்ட ஜனாதிபதி கூட்டுறவுச் சங்கங்களில் சாராயம் விற்பனை செய்யும் அரசாங்கத்தின் திட்டத்தைக் கைவிடுவதற்கான ஆணையைப் பிறப்பித்தார்.

**விடய ஆய்வு : 3 - கட்டளைக்குப் பிரார்த்தனையால் பதிலளித்தல்.**

அமெரிக்காவில் கறுத்த இனத்தோருக்குப் பிரஜாவுரிமை வழங்குவதற்காக பலம் வாய்ந்த அஹிம்சை வழி போராட்டத்தை நடத்திய மக்கள் தலைவரே மாட்டின் லூதர் கிங். அப் போராட்டத்தை நடத்தியமைக்காக அவர் பல தடவைகள் சிறை சென்றார். சிலவேளைகளில் அவருக்கு எதிராகப் பயங்கரமான கடிநாய்களை ஏவி விட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய கூட்டங்களைக் கலைப்பதற்காகத் தீயணைக்கும் போது பயன்படுத்தும் சக்திமிக்க நீர்க் குழாய்களில் இருந்து பாயும் நீரைச் செலுத்தினர்.

1959ல் ஒரு தடவை அலபாமாவில் பர்மிங்ஹாம் நகரிலே கறுப்பு இனத்தோர் வாக்களிக்கவும், பகிரங்க இடங்களில் நடமாடும் உரிமையை வெல்வதற்காக ஊர்வலமொன்றையும், பொதுக் கூட்டமொன்றையும் அவர் நடத்தினார். கறுப்பு இனத்தவர் நகரசபை முன்பாக நடைபெறவுள்ள கூட்டத்துக்காக ஊர்வலமாகச் செல்கையில் நகர செரிஃப் ஆனபுல் கொன்னர் ஊர்வலத்தை நிறுத்தப் பொலிஸ் படையோடு வந்து சேர்ந்தார். அவரது கட்டளைப்படி பொலீசார் ஊர்வலத்தை நிறுத்தி மக்களைக் கலைந்து செல்லுமாறு பணித்தனர். இச் சந்தர்ப்பத்தில் ஊர்வலத்தில் சென்றோர் முழுந்தாளிட்டு கடவுளை வேண்டிப் பிரார்த்தனை புரிந்து கீர்த்தனைகளைப் பாடினர்.

அவர்கள் மீது குழாய் நீரைப் பாய்ச்சுமாறு செரிஃப் ஆணையிட்ட போதும் விளங்கிக் கொள்ள முடியாத ஏதோவொரு காரணத்தினால் பொலீசார் அக் கட்டளைக்குப் பணியாது அமைதியாகப் பார்த்து நின்றனர். கொன்னர் மிகுந்த ஆத்திரத்தோடு மீண்டும் மீண்டும் கட்டளை இட்டபோதும் பொலீஸ் படையினர் அவருக்குக் கீழ்ப்படியாது இருந்தனர்.

பின்னர் ஊர்வலத்தார் அவ்விடத்தை விட்டெழுந்து பொலீஸ் கூட்டத்தாருக் கூடாகவே ஊர்வலமாகச் சென்று நகரசபைக்கு அண்மையில் தமது கூட்டத்தை நடத்தினர்.

**விடய ஆய்வு : 4 எழுத்தாளர் மௌனம்.**

1959 ஹங்கேரியில் மக்கள் புரட்சி தோல்வி அடைந்த பின்னர் பதவிக்கு வந்த அடக்குமுறை ஆட்சியாளர் அதிகாரசபைக்கு ஒத்துழைப்பை வழங்காது தமது எதிர்ப்பைக் காட்டு-வதற்காக எத்தகைய பதிப்புகளையும் வெளியிடுவதைத் தவிர்த்துக் கொள்ள அந்த நாட்டின் பெயர் பெற்ற எழுத்தாளர்கள் முடிவு செய்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் இருந்த பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் எந்தவொரு எழுத்தாளரதும் கடிதங்கள், சிறுகதைகள், கவிதைகள் என்பன வெளியிடப் படவில்லை. நூல்கள் வெளியிடுதலையும் அவர்கள் நிறுத்திக் கொண்டார்கள்.

இது தொடர்பாக ஓர் அறிக்கையில் இவ்வாறு கூறப்படுகிறது. அரசாங்கச் சஞ்சிகைகளால் பெயர் பெற்ற எழுத்தாளர்களது ஒரு படைப்பைத்தானும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. ஒரு பிரபல்யமான சஞ்சிகையின் நத்தார் வெளியீடு ஏற்றுக் கொள்ளப்பட்ட எழுத்தாளர் ஒருவருடையதேனும் கடிதம் அல்லது கவிதை இன்றியே வெளியிடப்பட்டது.

**விடய ஆய்வு : 5 ஒத்துழையாமை**

இரண்டாம் உலக யுத்தத்தின் போது அமெரிக்காவில் இருந்த பிஷப் கார்பெட் (ஆயர்) என்பவர் அரசாங்கத்தால் தமக்குப் பணிக்கப்பட்ட, யுத்தத்துக்கு ஆதரவு வழங்கும் மக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள மறுத்ததன் காரணமாக 1944 செப்டம்பர் 9 ந் திகதி பொலீசாரால் கைது செய்யப்பட்டார்.

அப்போது கார்பெட் உத்தியோகத்தரை நோக்கி, ''எனது ஆத்மாவை நீங்கள் பெறவியலாது. அவசியமாயின் நீங்கள் எனது உடலைக் கொண்டு செல்ல முடியும். எனினும் உடலைக் கொண்டு செல்லவும் கூட எனது உதவி உங்களுக்குத் தேவைப்படின் சுமந்து செல்லவும்'', எனக் கூறினார். அவர்கள் பிஷப் அவர்களை தூக்கிக் கொண்டு சென்று வானத்தில் இட்டு 'மிச்சிகனில் இருந்த தடுப்பு முகாமில் சேர்த்தனர். அங்கு அவர் தமக்கு நிகழ்ந்த அநியாயத்துக்கு ஒத்துழைப்பு வழங்காது இருக்கும் பொருட்டு உணவு கொள்ளல், நிற்றல், ஆடை அணிதல் போன்ற செயல்களை மறுத்தார். இதன் காரணமாகத் தொண்டையில் குழாய்களைச் செலுத்தி பிஷப் அவர்களை ஊட்டப்படுத்த முகாம் பொறுப்பதிகாரிகள் செயற்பட்டனர்.

64 தினங்கள் தடுப்புக் காவலின் பின்னர் நீதிமன்றம் கொண்டு செல்லப் பட்டார். நீதிபதி தீர்ப்பளிக்கும் வரை பிணையில் செல்ல விடப் பட்டார். எனினும் மீண்டும் நீதி மன்றத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகமளிக்க ஆணை பிறப்பிக்கப்பட்ட போது அவர் அதனை மறுத்ததால் மீண்டும் கைது செய்யப்பட்டார். அப்போது அவர் பொலீசாருக்கு ஒத்துழைப்பு வழங்காது இருக்கும் பொருட்டுத் தம் உடலை விறைப்பாக்கிக் கொண்டதால் சுமந்து கொண்டே அவரை நீதிமன்றத்துக்குக் கொண்டு சென்றனர்.

இம்முறை அபராதத்தோடு நான்கு ஆண்டு கால சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. சிறைவாசத்தின்போது கடைப்பிடித்த ஒத்துழைப்பு மறுப்பு நடத்தை காரணமாக விசேட சட்டப்படி சலுகைகள் அடிப்படையில் கார்பெட் அவர்களை சிறையில் இருந்து விடுதலை பெற்றுக் கூட்டுறவுப் பண்ணையொன்றில் வாழ அனுப்புவதற்காக அதிகாரிகள் செயற்பட்டார்கள். எனினும் அவர் அதனை மறுத்ததன் காரணமாக மீண்டும் சிறைவாசம் செய்ய அனுப்பப்பட்டார். அங்கு அவர் மீண்டும் தம் உடலை விறைப்பாக்கிக் கொண்டதாலும் அப்போதைய பத்திரிகைகள் சம்பவத்துக்கு அளித்திருந்த பிரபல்யத்தாலும் அமெரிக்க நீதியமைச்சு அவரை 1946 மார்ச் 1ம் திகதி நிபந்தனை எதுவுமின்றி விடுதலை செய்யத் தீர்மானித்தது. இவ்வாறு தம் தளராத நடத்தைப் பலத்தால் உலகின் பலம் பொருந்திய அரசைப் பின்வாங்கச் செய்வதில் கார்பெட் வெற்றி கொண்டார்.

**சமர்ப்பித்தல் :**

(1) கவர்ச்சிகரமாக இச் சம்பவத்தை வகுப்பில் வாய்மொழியாகச் சமர்ப்பிக்கலாம்.

(2) இடம் பெற்ற வருடம், பெயர், ஊர் என்பனவற்றைக் கரும்பலகையில் எழுதுக.

**மாற்றீடு :**

சம்பவங்கள் 5யும் இங்கு இடம் பெற்றபடியே ஐந்து கடதாசிகளில் எழுதி / புகைப்படப் பிரதி செய்து வகுப்பைக் குழுக்களாக்கி ஒரு குழுவுக்கு ஒரு சம்பவம் வீதம் வழங்கி ஒவ்வொரு குழுவும் கூட்டாகக் கற்றுக் கொள்ளச் செய்யவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்பு வகுப்பை ஒருங்கு சேர்த்து ஒவ்வொரு குழுவினதும் தலைவர் தாம் கற்றுக் கொண்ட சம்பவத்தை வகுப்பில் சமர்ப்பிக்குமாறு கூறவும்.

*(30 நிமிடங்கள்)*

**செயற்பாடு :**

சமர்ப்பிக்கப்பட்ட நிகழ்ச்சிகளில் காணப்பட்ட ஒரு சில சந்தர்ப்பங்களை நாடகமாக நடித்தல். ஒவ்வொரு குழுவும் தாம் விரும்பிய ஒரு சம்பவத்தில் இருந்து ஒரு நிகழ்ச்சியை அல்லது அதனை முழு அளவிலான நாடகமாகத் தயாரித்துச் சமர்ப்பிக்கவும்.

**மாற்றீடு :**

கூறப்பட்ட சந்தர்ப்பங்களை அசையாத உருவங்களாகவும் தயாரித்துச் சமர்ப்பிக்கலாம்.
(அதாவது: கூறப்பட்ட சந்தர்ப்பம் அசையாத புகைப்படத்தில் காணப் படுவது போன்று பாத்திரங்களைச் சிலையாக அசையாது இருக்கத் தக்கதாகச் சமர்ப்பிக்கலாம்.

*(20 நிமிடங்கள்)*

**மதிப்பீடு : கலந்துரையாடல்**

(1) இவற்றில் உங்களை மிகக் கவர்ந்த சம்பவம் எது?

(2) அதற்கான காரணங்கள் எவை?

(3) ஒவ்வொரு சம்பவத்தையும் எடுத்து அங்கே அமைப்பாளர்/போராட்டக்காரர் சந்தித்த தடைகள்/சவால்கள்/எச்சரிக்கைகள் போன்றவற்றை இயன்ற வரை இனங் காணும் கலந்துரையாடலை நடத்தவும்.

**ஒப்படைப்பு :**

அஹிம்சை வழி போராட்டம் தொடர்பாக எமது நாட்டு வரலாற்றில் இருந்தும் சமீப காலத்தில் இருந்தும் உதாரணங்களைத் தேடுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிகமாக : உயர்ந்த குறிக்கோளைக் கொண்ட ஏதாவது ஒரு அஹிம்சை வழிப் போராட்டம்.

**செயற்பாடு :**

அவ்வாறு செயற்பட்ட முன்மாதிரி கொள்ளத்தக்க நபரொருவரது விரிவுரையைப் பாடசாலையில் ஒழுங்கு செய்யவும்.

**உதாரணங்கள் :**

(1) புகைபிடித்தலைக் கைவிடுவதற்காக

(2) சுற்றாடலைப் பேணிக் காக்கும் பொருட்டு

(3) தீயவழியில் செல்லும் கூட்டத்தை நல்வழிப் படுத்தும் பொருட்டு

(4) கிராமத்தில் / பிரதேசத்தில் தபால் அலுவலகம் / பாடசாலை / மின்வசதி போன்ற வசதியைப் பெற்றுக் கொள்வதற்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஹிம்சை வழிப் போராட்ட முறைகள் (1)

பாடம் : 7.6

நேரம் : 1 1/2 மணித்தியாலம்

**அடிப்படை எண்ணக்கருக்கள் :**

*(1)* அஹிம்சையை முதன்மையாகக் கொண்டு சமூகத்தை மாற்றியமைக்கும் போராட்டங்களை மேற்கொள்ளலாம்.

*(2)* அஹிம்சைவழிப்போராட்ட முறை ஆக்கபூர்வமானது.

**குறிக்கோள்கள் :**

*(1)* அஹிம்சை வழி போராடட முறைகளைக் குறிப்பிடுவர்.

*(2)* வழங்கப்பட்ட சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கக் கையாளத் தக்க பல்வேறு அஹிம்சை வழிப் போராட்ட முறைகளை எடுத்துக் காட்டுவர்.

**நுழைவு :**

முன்னைய பாடங்களில் நாம் அஹிம்சையைப் பற்றிக் குறிப்பிடுகையில் அதனை இம்சையையும் அநியாயத்தை-யும் அகற்றுவதற்கான போராட்ட முறையாக/ போர் முறையாகக் கைக் கொள்ளலாம் எனவும் கூறினோம். எனினும் இது உங்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கலாம். அஹிம்சையை முதன்மையாகக் கொண்டு எவ்வாறெனினும் போர் புரிய முடியுமா என்பதே அவ்வாச்சரியமாகும். உண்மையாகப் பலரும் அவ்வாறே எண்ணுகிறார்கள். போராடுவதாயின் அஹிம்சை உள்ளார்ந்த மனிதப் பண்புகளை அப்பால் இட வேண்டும். போர் என்றால் போர். அஹிம்சை என்றால் அஹிம்சை.

அவ்விரண்டையும் ஒன்றாகப் பிணைத்துக் கொள்ளக் கூடாது'' எனப் பலர் கருதுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் போராட்டம் என்பது எப்போதுமே தாக்குதல், கொலை புரிதல், சொத்துக்களை அழித்தல் என்பன-வற்றுக்காக வரையறுக்கப் பட்டதல்ல. இம்சையான போர் மிலேச்சத்தனமான போராட்ட முறை மட்டுமேயாகும். ஒரு போராட்டத்தை மனிதாபிமானதும் நாகரீகமானதுமான தோற்றத்தால் விளங்கிக் கொள்ளலாம். அஹிம்சை வழிப் போராட்டம் அவ்வாறானதே.

சமாதானத்தைக் கடைப்பிடித்தல் என்பது போர் புரியாதிருத்தல் எனக் கருதுதல் தவறு. சமாதானத்தைக் கடைப்பிடிக்கும் நபர் தமக்கும் தம் அயலவர்க்கும் இழைக்கப்படும் அநியாயங்களை கண்டவிடத்து கண், வாய்,, மூடி மௌனம் சாதிப்பவர் அல்லர். அவசியப்படும் போது போராடுவார். எனினும் அவர் அங்கு ஐயமின்றித் தெரிவு செய்வதோ அஹிம்சை வழிப் போராட்ட முறையையே.

உண்மையாகவே சமூக விருத்திக்காக மோதல் / போராட்டம் அவசியமே. எனினும் அத்தகைய போராட்டம் இம்சையைத் தவிர்த்துக் கொண்டு நடத்த வேண்டும் என்பதே எமது செய்தியாகும். இன்று எமது நாகரீக சமூகத்தில் நாம் அனுபவிக்கும் பல சலுகைகளும் உரிமைகளும் வசதிகளும் கடந்த காலத்தில் வாழ்ந்த மானிட நலம் பேணிய வீரரால் பெரும் பாலும் தம் உயிரைப் பணயம் வைத்து ஆற்றிய கடந்த காலப் போராட்டங்கள் வாயிலாக வென்றெடுத்தவையே.

**பாடவிடயம் :**

மேலும் நாம் அஹிம்சையான போராட்டம் நடத்தும் முறைகளைக் கற்போம். அவ்வாறான போராட்டங்களின் குறிக்கோள்களாகப் பெரும்பாலும் அமைவன :

★ அடிப்படைச் சுதந்திரங்களை வென்றெடுத்தல்.

★ சமூக ஊழல்களை ஒழித்தல்.

★ அநியாயங்களை நீக்குதல்.

★ சமூகத்தைச் சரியான பாதையில் செலுத்துவித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதன் பொருட்டு கைக்கொள்ளப்படும் வழிமுறைகள் சில வருமாறு:

**(1) பகிரங்க அறிக்கை வெளியிடல்:**

ஒரு நபர், ஒரு குழு அல்லது ஒரு நிறுவனம் சமூகக் கட்டுப்பாடுகள், நடவடிக்கைகள், அமைப்பு மீது தமது விருப்பை அல்லது வெறுப்பை, உடன்பாட்டை அல்லது மறுப்பைப் பகிரங்கமாக அறிவித்தல் இதனால் கருதப்படும். அத்தகைய பகிரங்க வெளிப்பாட்டு முறைகளுள்:

- ★ பகிரங்க விரிவுரை
- ★ பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் கட்டுரைகளை வெளியிடல்.
- ★ பகிரங்கமாகக் கடிதங்களை எழுதுதல். (அதாவது பொறுப்பான ஒருவரை விளித்துப் பத்திரிகை அல்லது சஞ்சிகை வாயிலாகக் கடிதம் வரைதல்)
- ★ அறிவித்தல்களை மக்களிடயே வெளியிடுதல்.
- ★ பொறுப்பானவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் அல்லது கூட்டாக மனுக்களைச் சமர்ப்பித்தல், தந்திகளை அனுப்புதல்.

என்பன பிரபல்யமானவை.

**(2) வெகுசனத் தொடர்பு சாதனங்கள்:**

- ★ போஸ்டர் ஒட்டல்
- ★ பேனர் கட்டுதல்
- ★ குறியீடுகளும் பாரிய சித்திரக் கண்காட்சியும்
- ★ துண்டுப் பிரசுரங்கள், சிறு புத்தகங்கள், புத்தக வெளியீடு
- ★ நாளிதழ்களை அல்லது சஞ்சிகைகளை அச்சிடல்
- ★ கசட்நாடா / வீடியோ நாடா தயாரித்துப் பிரச்சாரம் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) **நகைச்சுவையும் ஏளனத்தையும் கைக்கொள்ளல்.**

- நகைப்புக்குரிய கதைகளை ஆக்குதலும் பிரச்சாரம் பண்ணலும்

- ஏளனமான பரிசுகளை அல்லது கௌரவப் பட்டங்களை அளித்தல்.
(உதாரணமொன்று : சுற்றாடல் மாசுபடுதலை அகற்றப் பிரதேசத்தில் அதிகளவில் சுற்றாடலை மாசுறச் செய்வதற்கான பட்டத்தை வழங்கல். விஷம் கொண்ட நீரைப் பருகி இறந்த பறவையின் சடலத்தை அதற்கான வெகுமதி-யாக அளித்தல் அல்லது பொதி செய்து (பார்சல்) அனுப்புதல்.

(4) **ஒத்துழைப்பைக் கோரி வீடு வீடாகச் செல்லல்.**

உதாரணம்: ஏதாவது ஒரு தொலைக்காட்சி அலைவரிசைக்கு தம் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக அதனைப் பார்ப்பதைத் தவிர்க்கும்படி வீடுவீடாகச் சென்று ஏதுக்களை எடுத்துக் காட்டுதல்.

(5) **கண்காட்சி:**

- சித்திரக் கண்காட்சி
- புகைப்படக் கண்காட்சி
- தெருக்கூத்து
- பாட்டுக் கச்சேரி

(6) **சின்னங்களை அணிதல்.**

- பெஜ் / பதக்கம்
- விசேட வர்ணங்கள்
- குறிப்பிட்ட ஒன்றை ஆதரித்து அல்லது எதிர்த்து மலர் ஒன்றினை அணிதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7) அடக்குமுறையாளருக்குச் சகோதரத்துவத்தையும் நட்புறவையும் வெளிப்படுத்துதல்.

- மலர்ச் செண்டு அளித்தல்.
- இனிப்புப் பண்டங்களை வழங்கல்
- இரத்த தானம்
- தனிப்பட்ட முறையில் நட்புக் கொள்ளும் அவர்களது செயல்கள் மீது மரியாதையுடன் தமது வெறுப்பை வெளிப்படுத்தலும் அத்தகைய செயல்களை விலக்குமாறு முறையிடலும்.

(8) ஊர்வல ஒழுங்கு

- தர்ம யாத்திரை
- தல யாத்திரை
- பகிரங்கச் சமயச் சடங்குகள், பூசைகள், தியானம் அல்லது பிரார்த்தனை வழிபாடுகளை நடத்தல்.

(9) பொதுமக்கள் கல்வி நிகழ்ச்சி நிரல்கள்

- வயது வந்தோர் வகுப்புகள்
- பாடவிதானங்கள்
- பகிரங்க விவாதங்கள்
- பகிரங்கமான கல்விக் கருத்தரங்குகள்

(அதாவது ஏதாவதொரு விவாதத்துக்குரிய பிரச்சினையைப் பற்றிய பல்வேறு கோணங்களையும் அந்த அந்தக் களங்கள் தொடர்பான வல்லுனர்களைக் கொண்டு விடயங்களை விளக்கும் கருத்தரங்குகள்.

(10) ஒத்துழையாமை

- சங்கத்தின் அல்லது கட்சியின் அங்கத்துவத்தைக் கைவிடல்
- கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மௌனஞ் சாதித்தல்
- தமக்கு வழங்கப்பட்ட கௌரவப் பட்டங்களைக் கைவிடல்
- பண்டங்களைக் கொள்வனவு செய்தலைத் தவிர்த்தல்.

  (உதாரணம்: விலங்கு இம்சித்தலைத் தடுப்பதற்காக யானைத் தந்தத் தயாரிப்புப் பண்டங்களை, தோற் தயாரிப்புப் பண்டங்களைக் கொள்வனவு செய்வதை விலக்கல்.
- வேலையில் இருந்து விலகல்
- அநியாயமான வியாபாரிகளது பெயர்ப் பட்டியலைத் தயாரித்துப் பகிரங்க இடங்களில் காட்சிக்கு வைத்தல்.
- தரையில் அமர்ந்து இருத்தல்
- உண்ணாவிரதம் / தியானம்
- தொடர்புகளைப் பகிஷ்கரித்தல்.

  *(சமர்ப்பித்தல் : 30 நிமிடங்கள்)*

**கலந்துரையாடல் :**

அஹிம்சை வழிப் போராட்ட முறைகளின் தன்மையை வினவவும்.

(துணை:
★ தனியாள் கௌரவமும் மனித வாழ்வின் கௌரவமும்
★ சத்தியமும் அஹிம்சையும் கொண்ட கொள்கை
★ சந்தர்ப்பத்துக்கு ஏற்றதாக ஆக்கபூர்வமான முறைகளைக் கையாளல்.
★ மனிதாபிமானத் தன்மை
★ பலத்துக்கு எதிராக அதே அளவு மட்டத்தில் ஈடுகொடுத்துப் போர் புரியாதிருத்தல்)

*(15 நிமிடங்கள்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு :**

சமூக ரீதியில் அகற்றத்தக்கதான சந்தர்ப்பம் வரும் வரை அதனை அகற்றக் கையாளக் கூடிய அஹிம்சை வழியிலான உபாய மார்க்கங்களைத் தீர்மானிக்கும்படி குழுக்களிடம் ஒப்படைத்தல்.

**எடுத்துக் காட்டுக்கள்:**

*(1)* ஒரு கிராமப் புறத்தில் வரட்சிக் காலம் வரும்போதே சிலர் காடுகளை எரித்து விடுவர். அத்தகையோரில் அதிகமானோர் பொழுதுபோக்கு அல்லது வழக்கம் கருதியே அவ்வாறு செய்கிறார்கள். உங்களது குழுவினது ஊரிலே சுற்றாடலைப் பேணும் சங்கத்தின் உறுப்பினர் எனக் கருதிக் கொண்டு கிராமவாசிகள் அவ்வாறு காடுகளை எரிப்பதைத் தவிர்க்க எடுக்கத்தக்க உபாயங்கள் எவை?

*(2)* சமீப காலந் தொட்டுச் சனத்தொகை கூடிய அப் பிரதே-சத்தில் வீடுகளைச் சேதப்படுத்தித் திருடுதல் (கன்னமிடல்) வீடுகளில் புகுந்து குடும்பங்களைப் பயமுறுத்திக் கொள்ளையிடல் என்பன அதிகரித்-துள்ளன. கடந்த வாரம் பகற் பொழுதில் ஒரு வீட்டில் பிரவேசித்த கொள்ளைக்காரன் ஒருவன் அவ் வீட்டில் அப்போது இருந்த ஒரு வயோதிபத் தாயாரைக் கொலை செய்து கொள்ளையடித்திருக்கிறான்.

வாலிபர் குழுவினர் என்ற வகையில்;

நீங்கள் அதிகரிக்கும் இக் குற்றங்களை நிறுத்த யாதேனும் ஒரு செயல்முறையைத் தீர்மானிக்கிறீர்கள். நீங்கள் மேற்கொள்ளத் தக்க செயல் முறைகள் எவை?

*(3)* நாட்டின் விதியை நிர்ணயிக்கத்தக்கதான தேர்தல் சமீபத்தில் இடம் பெற உள்ளது. தேர்தலுக்கு முன்னரும் பின்னரும் பாரிய அளவில் இம்சைகள் இடம்பெறலாம் என நினைக்கும் இளைஞர் கோஷ்டி அவற்றை நிறுத்த / பின்வாங்கச் செய்ய ஏதாவதொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்முறையைக் கைக்கொள்ள முடிவு செய்கின்றனர். அவ்விளைஞர் கோஷ்டி நீங்களே எனக் கருதிக் கொண்டு அத்தகைய செயல் முறையைத் தீர்மானியுங்கள்.

(4) கிராமத்தில் புதுவருடக் கொண்டாட்டம் அண்மித்துள்ளது. புது வருடத் தினங்களில் முழுக் கிராமமுமே மதுக்களையின் தோற்றத்தை ஒத்ததாக இருக்கும். மதுபோதை காரணமாக ஏற்படும் சண்டை சச்சரவுகள் எண்ணிலடங்கா. இவ்வலங்கோல நிலையை அகற்றிக் கிராமவாசிகளை மதுவில் இருந்து மீட்டுக் கொள்ள யாதேனும் ஒரு செயற்றிட்டத்தை மேற்கொள்ளக் கிராமத்து இளைஞர் குழுவினர் ஒன்று சேர்கின்றனர். நீங்கள் அம் மதுஒழிப்பு இயக்கத்தின் உறுப்பினர் என எண்ணிப் பொருத்தமான செயல்முறையைத் தயாரிக்கவும்.

(30 நிமிடங்கள்)

வகுப்பை 4 குழுக்களாக வகுத்து ஒப்படைப்புகளை அளித்துப் பின்னர் தம் செயல் வழிகளை வகுப்பிலே சமர்ப்பிக்க வகை செய்யவும். ஒவ்வொரு குழுவினரும் தம் செயல் மார்க்கங்களை விபரித்த பின்பு அதனோடு மேலும் சேர்த்துக் கொள்ளத்தக்க அல்லது அச் செயற்பாட்டுக்குப் பதிலாகக் கைக்கொள்ளக்கூடிய வேறும் மாற்றுச் செயல் வழிகள் உண்டா எனப் பிள்ளைகளை வினவி, இயன்ற வரையில் பதில்களைப் பெற்றுக் கொள்க)

**மதிப்பீடு :**

(1) அஹிம்சை வழி செயல் மார்க்கங்களை எண்ணிப் பார்த்தல் உங்கள் குழுவுக்குச் சுலபமாக இருந்ததா? அன்றிக் கடினமாக இருந்ததா?

(2) ''அஹிம்சை வழி முறைகளால் சமூகத்தை மாற்றியமைக்கலாம்''. ஆதரித்து அல்லது எதிர்த்து விடயங்களைக் குறிப்பிட வகை செய்து கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஹிம்சை வழிப் போராட்ட முறைகள் (2)

பாடம் : 7.7

நேரம் : 60 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கருக்கள் :**

அஹிம்சை வழிப் போராட்ட முறைகளைக் கற்றல்.

**குறிக்கோள்கள் :**

(1) அஹிம்சை வழிப் போராட்ட முறைகளைக் கற்றறிவர் / விபரிப்பர்.

(2) அம் முறைகளுக்கு உடந்தையாய் அமையும் கோட்பாடுகளை இனங்காண்பர் / குறிப்பிடுவர்.

(3) இம்சை / அஹிம்சை வழி போராட்டங்களின் சாதாரணமான தன்மை களையும் அசாதாரணமான தன்மைகளையும் குறிப்பிடுவர்.

**நுழைவு :**

அஹிம்சையின் அடிப்படை எண்ணக்கருக்களையும் பண்புகளையும் விளங்கிக் கொள்ள நாம் முன்னைய பாடங்களில் முயன்றோம். அத்தோடு அஹிம்சை ரீதியில் போராடத்தக்க முறைகள் சிலவற்றையும் நாம் கற்றுக் கொண்டோம். இன்று நாம் மேலும் அத்தகைய போராட்ட முறைகள் சிலவற்றைக் கற்போம். இத் தருணந்தொட்டு அஹிம்சையோடு நடத்தும் சமூகப் போராட்டங்களில் பயன்படுத்ததக்க உபாய மார்க்கங்களை இனங் காண்போம்.

(11) மக்கள் அறிவைப் பெறச் செய்தல்.

தம்மால் நிறைவேற்றப்பட வேண்டி எதிர்பார்க்கப்படும் நியாயத்தை அல்லது சரியானதை முதலாவதாக மக்களும் அத்தோடு தவறினைப் புரியும் பிரதிவாதியும் அறிவூட்டப்பட வேண்டியோர் ஆவர். இங்கே பிரதிவாதி என்ற பதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநியாயத்தைப் புரியும் பொறுப்பாளி அல்லது தவறைச் செய்யும் நபர் அல்லது குழு என்பவற்றில் ஒன்றாக இருக்கலாம். சிலவேளை பிரதிவாதி ஏதாவது ஒரு நிறுவனம் அல்லது அதிகார சபையாகவும் இருக்கலாம். மக்களை அறிவூட்டல் எந்தவொரு சமூக இயக்கத் தினதும் ஆரம்பக் கட்டமேயாகும். அதன் வாயிலாகப் பலம் பொருந்திய பொது சன அபிப்பிராயத்தைச் சம்பந்தப்பட்ட அதிகார சபைக்கு மாறாகக் கட்டியெழுப்பல் எதிர்பார்க்கப்படும். இது தொடர்பாகப் பல்வேறு அறிவூட்டும் நிகழ்ச்சி நிரல்களை ஒழுங்கு செய்யலாம்.

**எடுத்துக்காட்டுகள் :-**

★ பகிரங்க இடங்களிலும் நிறுவனங்களிலும் விடயங்களை எடுத்துக் காட்டுவதன் பொருட்டு விரிவுரைகள், கருத்தரங்குகளை நடத்துதல்.

★ பாடவிதானங்களை நடத்துதல்.

★ பகிரங்க விவாதங்களை நடத்துதல்.

★ வெளியீடுகள் : (நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், போஸ்டர்கள்.)

★ நாடக நிகழ்ச்சிகள் (உதாரணம்': வீதி நாடகம்)

★ பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் கட்டுரைகளை எழுதுதல்.

★ கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல்.

★ கட்டுரைப் போட்டிகள் / சித்திரப் போட்டிகள் / புகைப்படப் போட்டிகள் என்பனவற்றை ஒழுங்கு செய்தல்.

★ மக்களை அறிவூட்டும் ஊர்வலங்களும் கச்சேரிகளும் ஒழுங்கு செய்யப்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (12) எதிரியின் மனத்தை மாற்றுதல்.

தம் போராட்டத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்ள இலகுவாகும் விதத்தில் மாற்றான் கருத்துக்களையும் பெறுமதிகளையும் மாற்றச் சில அஹிம்சை வழிச் செயல் மார்க்கங்களை கைக் கொள்ளல் இதனால் கருதப்படுகிறது.

மாகாத்மா காந்தியவர்கள் ஒரு தடவை குறிப்பிட்டபடி அஹிம்சையாளன் தம் மாற்றுக் கட்சியாளனை ஏளனம் செய்தலுக்குப் பதிலாக அவனது எண்ணங்களையும் எதிர்பார்ப்புகளையும் விருத்தி யாக்கச் செயற்படுவான். அவர் 1993 ல் பிரித்தானிய அரசுக்கு எழுதிய கடிதத்தில், ''எனது அபிலாஷை இந்தியாவில் உள்ள பிரித்தானியரை அஹிம்சையால் மாற்றி அவர்களால் இந்தியாவுக்கு இழைக்கப்பட்டுள்ள தீங்குகளைச் சுட்டிக் காட்டுவதே'' என்றார்.

அஹிம்சையாளன் தனக்கு எதிராகத் தவறு புரிவோரை எச்சரித்துப் பயமுறுத்துவதற்குப் பதில் அவனது இதயத்திடம் முறையிடுவான். ''எனது ஒத்துழைப்புப் பகிஷ்கரிப்பு, கொடுமைக்கு ஏதிராக மேற்கொள்ளப் படுவதே அன்றிக் கொடுமை புரிவோருக்கு எதிராக அல்ல'' என மகாத்மா காந்தி அடிக்கடி கூறினார்.

**எதிர்த்தரப்பாரின் மனதை மாற்றக் கைக்கொள்ளத்தக்க செயல் மார்க்கங்கள் சில :**

**முறையீடு :**

- மறுசாரரிடம் அறிவுபூர்வமாக விடயங்களை எடுத்துக் காட்டுதல்.
- மறுசாராரின் மனித உணர்வுகளை விளித்தல் (இதயத்திடம் முறையிடல்)

இங்கே குற்றவாளி மீது மனிதாபிமானத்தோடு நடந்து கொண்டு அவன் புரியும் தவறைத் திருத்திக் கொள்ளத்தக்க விதமாக அதனைச் சுட்டிக் காட்டல் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* **சொந்த விருப்போடு வேதனைகளை அனுபவித்தல்.**

இங்கே சம்பந்தப்பட்ட பிரச்சினை மீது எதிர்த்தரப்பினரதும் பொதுமக்களினதும் கவனத்தை ஈர்ப்பதற்காக அஹிம்சையாளன் உண்ணாவிரதம் போன்ற வேதனை அளிக்கும் செயலில் ஈடுபடுவான். இதனால் எதிர்த் தரப்பினரது இதயத்திலே அனுதாபம் தோன்றச் செய்தல் எதிர்பார்க்கப்படுகிறது.

**எடுத்துக்காட்டு :**

சம்பள அதிகரிப்பைக் கோரி அது கிடைக்காதபோது ஊழியர் தம் கரத்தில் கறுப்பு நாடாவை அணிந்து வரையறை செய்யப்பட்ட காலப் பகுதிக்குள் முன்னரை விடக் கூடுதலான அக்கறையோடும் ஆற்றலோடும் பணி புரிந்து தொழிற்சாலை உரிமையாளனுக்கு அதிக இலாபத்தை ஈட்டிக் கொடுத்தல். (இது ஜப்பானில் வேலை நிறுத்தத்துக்குப் பதிலாகச் சில வேளைகளில் ஊழியர்கள் கடைப்பிடிக்கும் செயல் வழியாகும்.)

சொந்த விருப்போடு வேதனையை அனுபவித்தல் பற்றிக் காந்தியடிகள் இவ்வாறு கூறினார்கள்.
''நியாயமான குறிக்கோளை அடைந்து கொள்ளும் பொருட்டு மேற்கொள்ளும் போராட்டத்தின் போது இம்சையைத் தவிர்த்து நீர்அளவில்லா வேதனையைச் சுய தியாகத்தோடு அனுபவிக்க முடியுமாயின் உமது வெற்றி நிச்சயம்''.

**(13) உடல் ரீதியிலான இம்சித்தற் செயல்களிலும் துவேசங் கொண்ட சொற்பிரயோகத்திலும் இருந்து விலகிச் செயற்படல்.**

எதிராளி, தமக்கு மாறாக நியாயத்தைப் பெற்றுக் கொள்ளப் போராடும் கூட்டத்தாரின் மானிடப் பண்பை விளங்கிக் கொள்ளும்போது அவனுடைய மனப்பாங்குகளில் நிகழும் மாற்றத்தை அவனால் தடுக்க இயலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(14) மறுசாராரின் நம்பிக்கையை வெல்லும் பொருட்டுச் செயற்படுதல்.

இது தொடர்பாகக் கடைப்பிடிக்கத்தக்க செயல் வழிகள் நான்கு, அவை:

★ *உண்மையான இயல்பு :*

*உண்மையான வெளியீடுகள் - நியாயமானதும் சரியானதுமான விடயங்களைச் சமர்ப்பித்தல். மிகையான அல்லது தீவிரவாதமான வெளியீடுகளைத் தவிர்த்தல்.*

★ திறந்த கொள்கை :

தமது எதிர்பார்ப்புகள், திட்டங்கள் என்பனவற்றை திறந்தாக வெளியிடல்.

★ நற்பண்பு கொண்ட இயல்பு :

*(மரியாதையாக நடந்து கொள்ளல், பிறர்க்கு உதவுந்தன்மை, ஏனையோர் மட்டில் மதிப்பையும் அக்கறையும் கொண்டதான பெருந்தன்மை.)*

**உதாரணம் :**

ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் மறுதரப்பார் இயற்கையான இன்னலுக்கு உள்ளானால் அவர் சகஜ நிலையை அடையும் வரை தம் போராட்டத்தைத் தற்காலிகமாக இடை நிறுத்தல்.

★ தனிப்பட்ட தோற்றம், பழக்கங்கள், உடைகள், தொனி, சொற்பிரயோகம், பொதுவான நடத்தைகள், பகைமை, துவேசம், ஐயம் என்பன தோன்றாதவாறு தமது போராட்டத்தை அமைத்துக் கொள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(15) **ஆக்கபூர்வமானதும் நன்னோக்கானதுமான நிகழ்ச்சி நிரல்களும் நடைமுறைகளும்.**

தாம் தீர்த்துக் கொள்ள எதிர்பார்க்கும் பிரச்சினை தொடர்பாக எதிராளிக்கு எதிராகப் போர் புரிவதுடன் மேலதிகமாகத் தம் சக்தியின் தரத்துக்கேற்ப ஆற்றத்தக்க வெறும் செயற்பாடு-களிலும் வெற்றிகரமாக ஈடுபடல்.

**உதாரணம்:** ஒரு மக்கள் குழுவினருக்கு ஏற்பட்டுள்ள அநியாயங்கள் தொடர்பாக அரசாங்கத்தைக் குற்றஞ் சாட்டி நிற்பதோடு மட்டுமல்லாது தமது ஆற்றலுக்கு ஏற்ப அம் மக்களை அபிவிருத்தி செய்யவும் செயற்படுதல்.

இத்தகைய செயல் முறைகள் மூலம் போராளிகளின் அர்ப்பணத்தையும் எண்ணத்தையும் நாணயத்தையும் மறுசாரார் புரிந்துணர்வதால் அவர்களில் மன மாற்றம் நிகழும்.

(16) **எதிர்த்தரப்பாரில் புரிந்துணர்வு, நல்லெண்ணம், பொறுமை என்பன வற்றைக் கடைப்பிடித்தல்.**

எதிர்த்தரப்பாருக்கு மனிதாபிமான ரீதியில் கௌரவம் அளித்தல், அவரது கஷ்டங்களை விளங்கிக் கொண்டு செயற்படல், தேவைப்படுமிடத்து ஒத்துழைப்பு வழங்கல், முடிந்தவரை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நல்ல மானிடத் தொடர்பைக் கொண்டிருத்தல் என்பன எதிர்பார்க்கப்-படுகின்றன.

காந்தியவர்கள், தாம் சத்தியாக்கிரகம் எதிர்ப்பு ஊர்வலங்கள் என்பன வற்றை ஒழுங்கு செய்கையில் ஆங்கிலேயரும் இராணுவத்தாரும் தேவாலயம் செல்ல வாய்ப்பளிப்ப-தற்காக ஞாயிற்றுக்கிழமைகளில் அத்தகையவற்றை மேற்கொள்ளாது இருந்தார் எனப்படுகிறது.

**சமர்ப்பித்தல் :**

குறுகியதொரு விரிவுரை வாயிலாக விடயங்களைச் சமர்ப்பித்து, விளக்கத்தைப் பெறும் பொருட்டுக் கேள்வி-களைக் கேட்க அவகாசம் வழங்கவும். விடயங்களைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பிக்கையில் கரும்பலகையில் முறையான குறிப்பொன்றைக் கட்டியெழுப்பவும்.

*(30 நிமிடங்கள்)*

**மதிப்பீடு :**

இம்சையான / பயங்கரவாதமான போராட்டத்துக்கும் அஹிம்சையான போராட்டத்துக்கும் இடையே காணத்தக்க ஒற்றுமைகளையும் வேற்றுமை களையும் இயன்றவரை குறிப்பிட்டுப் பட்டியலை உருவாக்குவதற்காக வகுப்பைச் சில குழுக்களாக வகுத்து ஒப்படைப்பை வழங்கவும்.

**கீழ்க் காணும் மாதிரியை கரும்பலகையில் குறிப்பிடுக.**

ஒற்றுமைகள்

| வன்முறைப் போராட்டம் | அஹிம்சை வழிப் போராட்டம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

வேற்றுமைகள்

| வன்முறைப் போராட்டம் | அஹிம்சை வழிப் போராட்டம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணைகளைத் தயாரித்துச் சமர்ப்பிக்கையில் கரும்பலகையில் எல்லா விடயங்களையும் நிரப்பிக் கொள்ளவும். அதன் பின்னர் அவ்விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடிப் பிள்ளைகளின் விளக்கத்தைத் திருத்தவும்.

*(10 நிமிடங்கள்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஹிம்சாவாதத்துக்கு எதிரான சவால்கள்.

பாடம் : 7.8
நேரம் : 60 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கருக்கள் :**

(1) துணிவு

(2) அஹிம்சையினால் பதிலளிக்கும் நிலைப்பாட்டிலே உறுதியாகயிருப்பதன் மகத்துவம்.

**குறிக்கோள்கள் :**

(1) அஹிம்சை வழிப் போராட்டத்தில் ஈடுபடும் ஒருவர் சந்திக்கக் கூடிய அடக்குமுறையான நிலைமைகளை விபரிப்பர்.

(2) இம்சையான அடக்குமுறை நிலைமைகளை அஹிம்சை வழிப் போராளிகள் சந்திக்கும் முறைகளைச் சுட்டிக் காட்டுவர்.

(3) அஹிம்சை வழிப் போராட்டங்களைத் தோல்வியுறச் செய்யும் முக்கிய காரணி வன்முறையை நோக்கிப் போராளிகள் சார்வதே என எடுத்துக் காட்டுவர்.

**பாடவிடயம் :**

**வினா : 1**

வன்முறைப் போராட்டத்தில் ஈடுபடல் எவ்வளவு தூரம் பாதுகாப்பைக் கொண்டது?

எந்தவொரு அதிகார சபைக்கும் மாறாகப் புரியும் எவ்வித போராட்ட மாயினும் பாதுகாப்பைக் கொண்டது எனக் கூறவியலாது. அநியாயத்தை எதிர்த்து எழுதலை அதிகாரம் படைத்தோர் பெரும்பாலும் அதனைத் தமக்கு விடப்படும் சவாலாகவே காண்கிறார்கள். தம்மை அதிகாரத்தில் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கும் நோக்கோடு ஆரம்பமான செயல் எனவும் கருதுகிறார்கள்.

''இவ்வாறு தமக்கு மாறாகக் கிளர்ந்தெழும் கூட்டத்தாரை அடக்குவதன் பொருட்டு எத்தகைய கொடூர வன்முறைச் செயலையும் புரிய அதிகாரம் படைத்தோர் தூண்டப்பட இடமுண்டு. நாம் அஹிம்சை வழிப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பினும் அதற்கு மாறாகப் பிரதித் தரப்பார் எந்த வகையான அடக்குமுறைச் செயலையும் புரியக்கூடும் என நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.'' என இந்தியச் சுதந்திரப் போராட்டத்தின் போது நேரு அவர்கள் கூறினார்கள்.

எனினும் ஒன்றைக் குறிப்பிட முடியும். போராட்டமொன்று அஹிம்சை வழி நடக்கும் போது அதனால் இரு சாராருக்கும் நிகழக்கூடிய தீங்குகள் இம்சை வழிப் போராட்டத்தை விட மிகவும் குறைவாகவே இருக்கும்.

**வினா : 2**

**பலம்மிக்க சமூகத்தில் அநியாயத்தை அடியோடு ஒழித்துக் கட்ட அஹிம்சை வழிப் போராட்டத்தால் உண்மையாகவே இயலுமா?**

இவ் வினாவையே இம்சையான / பயங்கரவாதமான போராட்டங்கள் பற்றியும் வினவலாம். இம்சையான போராட்டங்கள் வெற்றி பெற்ற சந்தர்ப்பங்களைப் போலவே தோல்வியுற்ற சந்தர்ப்பங்களும் உண்டு. அவ்வாறே அஹிம்சையான போராட்டங்களும் வெற்றியடைந்த சந்தர்ப்பங்களைப் போன்று தோல்வியடைந்த சந்தர்ப்பங்களும் உண்டு.

சமூகத்திலே வேரூன்றிய வன்மையான அநியாயங்களுக்கு எதிராக அஹிம்சையோடு நடத்தப்பட்ட போராட்டங்கள் வெற்றி பெற்ற சந்தர்ப்பங்கள் உண்டு. உதாரணம் : இந்தியச் சமூகத்தில் ஜாதி பேதத்தை எதிர்த்து காந்தி அவர்களும் அவரோடு இணைந்த கூட்டத்தாரும் தொடர்ந்து மேற்கொண்ட அஹிம்சையான போராட்டத்தால் பெரும்பாலும் அதன் அடித்தளத்தைச் சிதைக்கக் கூடியதாய் அமைந்தது. அமெரிக்காவில் கறுப்பு இனத்தவரின் பிரஜாவுரிமையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொள்ள மாட்டின் லூத்தர் கிங் மேற்கொண்ட அஹிம்சையான போராட்டத்தால் வெற்றி கிடைத்தது.

நாம் எண்ணுவதை விட அஹிம்சை முறைகளால் நாட்டுப் பிரஜைகளும் பல உரிமைகளைப் பெற்றுக் கொண்டு உள்ளனர். பொதுவாக அத்தகைய வெற்றிகள் கிடைத்த போது அவ் வெற்றியை மாத்திரம் நினைவிலிருத்தி அதனைப் பெற்றுக் கொண்ட வழிமுறையை மறந்து விடல் மனித இயல்பாகும். ஜனநாயகமான எல்லா முறைகளும் அஹிம்சையானவையே. உதாரணமாகத் தேர்தல் என்பதும் அஹிம்சையான போராட்ட முறையொன்றே.

**வினா : 3**

**போராட்டங்களை அடக்க அதிகார வர்க்கத்தினர் கையாளும் முறைகள் எவை? அத்தகைய அடக்குதல்களின் முன்னே அஹிம்சையாளர்கள் எத்தகைய செயல் வழிகளைக் கைக்கொள்வர்?**

போராட்டங்களை அடக்க அதிகார வர்க்கத்தினர் பலவாறான முறைகளைக் கைக்கொள்வர். பொய்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வழக்குத் தொடரல், நடத்தையை இழிவுபடுத்தல், பொய்யான பிரதிபலிப்புகள், கூட்டங்களை அல்லது சங்கங்களைத் தடைசெய்தல், செய்தித் தணிக்கை, அபராதம் விதித்தல், கைது செய்தல், சிறைக்கு அனுப்பல், சங்கத்தின் சொத்துக்களை அல்லது தனிப்பட்டவர் சொத்துக்களை அரசுடைமையாக்கல் அல்லது அழித்து விடல், வேலை நீக்கஞ் செய்தல், பயமுறுத்தல் / எச்சரித்தல், தாக்குதல், குண்டர்களை ஏவிவிடல், அடித்து நொறுக்குதல், சித்திரவதை செய்தல், கொலை செய்தல், கூட்டங்களில் குண்டு வெடிக்கச் செய்தல் என்பன அத்தகைய அடக்கு முறையான செயல்களாகும்.

அஹிம்சையாளர் தமக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இன்னல்களைப் பெரும்பாலும் சுயவிருப்போடு சந்திக்கிறார். இம்சையான போராட்டங்களின் போது பெரும்பாலும் தலைவர்கள் தாம் பின்னால் இருந்து அல்லது மறைந்திருந்து ஆதரவாளர்களை முன்னணியில் அனுப்பித் தாக்குதல்களுக்கு உட்படுத்தச் செய்கிறார்கள். அஹிம்சைப் போராட்டத்தின்-போது முன்னணி வகிப்போர் தலைவர்களே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்குமுறையின் முன்னால் அஹிம்சையாளர்கள் மிகத் துணிவு பொருந்திய கொள்கையைப் பின்பற்றுவர். காந்தியவர்களது சொற்களாலேயே கூறுவதாயின், ''அஹிம்சையும் பயங்கொள்ளித்தனமும் நீரும் நெருப்பும் முகங்கொடுக்கத்தக்க தன்னம்பிக்கை அற்ற நபரால் ஒரு போதும் அஹிம்சாவாதத்தைக் கற்கவியலாது. இதன்படி அடக்கு முறையின் முன்னே எழுச்சி கொண்டு பயத்தை அகற்றிக் கொள்ளும் உணர்வு அஹிம்சையின் முதற் கட்டமாகும்.

அஹிம்சையாளர்கள் ஒருபோதும் அடக்குமுறைக்கு மாறாகத் திருப்பித் தாக்குதலை நடத்தமாட்டார்கள். எதிராளியின் பலத்துக்கு அதன் மட்டத்திலேயே சவால்கள் விடுவதற்குப் பதிலாக அஹிம்சையாளர் எதிரி பலத்தைப் பெறும் மார்க்கங்களை அடைத்தல், எதிரியின் கொடுமையை அவனே உணர்ந்து கொள்ளச் செய்தல், எதிரி ஒழுக்க ரீதியில் இக்கட்டான நிலைமைக்கு உள்ளாகச் செய்தல் போன்ற செயல்களையே புரிவர்.

அஹிம்சையாளருக்கு மாறாக எத்தகைய அடக்குமுறைகளை மேற்கொள்ளலாம் என்பதைப் பெரும்பாலும் அதிகார சபையினர் கருதிக் கொள்ள இயலாமல் போனதையும் நாம் காணலாம். முன்னர் நாம் குறிப்பிட்ட அடக்குமுறைச் செயல்கள், அதிகார சபையோருக்கு மாறாக இம்சையோடு செயற்படுவோர் மீது பிரயோகிக்கவே பொருத்தமாக இருக்கும். அஹிம்சையாளருக்கு எதிராகக் கொடிய அடக்குமுறைச் செயல்களைப் பிரயோகிப்பதால் அதிகார வர்க்கமானது தம் கொடுந் தன்மைகளைப் பிரயோகிப்பதால் அதிகார வர்க்கமானது தம் கொடுந் தன்மையை மக்கள் முன்னே வெளிப்படுத்தி மேலும் வெறுப்புக்கு ஆளாகும்.

1930-31 வருடங்களில் இந்தியச் சுதந்திரப் போராட்டத்தின் போது பிரித்தானியப் படைவீரர் ஊர்வலத்தோருக்கு மாறாக குண்டாந்தடித் தாக்குதலை மேற்கொள்ள முனைகையில் அவர்கள் தாக்குதலை எதிர்பார்த்து அமைதியாகத் தரையில் அமர்ந்தனர். 1995ல் தென்ஆபிரிக்காவில் இக்சோபோ நகரிலே ஆபிரிக்க மாதர் நிறபேதத்துக்கு எதிராக ஊர்வலத்தில் செல்கையில் தம்மீது குண்டாந்தடித் தாக்குதலை நடத்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலீசார் முன்வரும் போது வீதியில் முழந்தாளிட்டுக் கடவுட் பிரார்த்தனை புரிந்தனர். அப்போது பொலீசார் செய்யத்தக்கது எதுவென எண்ண முடியாது மாதரைச் சுற்றி வந்தனர். பாரிய அளவிலான மக்கள் குழுக்களை வேண்டுமென்றே பொலீஸ், இராணுவத் தாக்குதல்களுக்கு உட்படுத்தித் தம் போராட்டத்துக்குச் சலுகைகளைத் தேடிக் கொள்ள அஹிம்சைப் போராட்டங்களை மேற்கொள்வோர் முயலமாட்டார்கள்.

அத்தகைய பாரிய கூட்டத்தாரைத் தாக்க இராணுவத்தார் முன்வரும் போது தலைவர்கள் முன்னே சென்று அவர்களுக்கு விடயங்களை விளக்கி, மக்களைத் தாக்காது இருக்குமாறு முறையிட்ட சந்தர்ப்பங்கள் உண்டு. தாக்குதல் நடத்துவோரை ஆத்திரங் கொள்ளத் தூண்டுதலைத் தவிர்த்தல் அஹிம்சையாளரது போராட்டக் கொள்கையாகும்.

எதிர்த்தரப்பாரின் இம்சைக்கு அஹிம்சையால் பதிலளிக்கும் போது, அவனுடைய இம்சிக்கும் எண்ணத்தைத் தொடர்ந்துகொண்டு செல்லும் அவனது ஆற்றல் நலிவடைவதாக காந்தி கூறினார். ''அஹிம்சையான பிரதிபலிப்பு இம்சையாளன் வாளினது கூர்மையை மழுங்கச் செய்யும்'' என ஒவான் என்ற எழுத்தாளரும் குறிப்பிடுகிறார்.

**வினா : 4**

**அஹிம்சையான போராட்டங்களைத் தோல்வியடையச் செய்யும் காரணிகள் எவை?**

ஒரு போராட்டம் அஹிம்சை ஆகிவிடுவதால் மட்டும் அது வெற்றியடையும் எனக் கருதுதல் மாயையாகும். எந்தவொரு போராட்டமும் வெற்றியடையச் சரியான தத்துவம், கொள்கை, குறிக்கோளைத் தேர்ந்தெடுத்தல், ஆக்கபூர்வமான உபாய மார்க்கங்களை இனங்காணல், திட்டம், ஒழுங்கு, விவேகமான தலைமை என்பன அவசியம்.

அஹிம்சையான போராட்டமொன்றைத் தோல்வியடையச் செய்யும் காரணிகளுள் பிரதான காரணியாக அமைவது அதன் மீது இம்சையின் விதை கொள்ளப்படுதலே ஆகும். அஹிம்சை வெற்றியளிக்காது எனப் புலனாகும் போது அல்லது எதிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மைக் கொடூரமாகத் தாக்கும்போது, இம்சைக்கு இம்சையால் பதிலளிக்கப் போராட்டக் காரர் ஊக்குவிக்கப்பட வாய்ப்புண்டு. அஹிம்சையும் இம்சையும் ஒருபோதும் ஒன்று சேர்ந்து செல்லா. போராட்டக்காரர் சிலர் ஆரம்பத்தில் இருந்தே இம்சையான வழிகளைக் கைக்கொண்டு மக்களை ஏமாற்றும் நோக்கோடு மேலோட்டமாக அஹிம்சையைக் கைக் கொள்வர்.

அஹிம்சையான போராட்டமொன்றின் வெற்றியானது இம்சையான போராட்டத்தின் வெற்றியைப் போலன்றிப் பெரும்பாலும் அது நாம் புரிந்து கொள்ள இயலாத புதினமான முறையிலே நிகழும். பௌத்த தர்மப்படி இது அறத்தின் வழிச் செயற்படுவதால் நிகழ்கிறது எனலாம். குவேக்கர்கள் (சமாதானத்தை விரும்பும் கிறிஸ்தவக் குழுவினர்) இதனை மாற்றியமைக்கும் பலம் செயற்படுவதால் நிகழ்வதொன்று எனக் குறிப்பிடுகிறார்கள். இங்கு எதிர்த்தரப்பாரது மனிதாபிமானம் செயற்படுதலைக் காணலாம். இத்தகைய செயற்பாடு நிகழ்கையில் போராட்டம் ஒருவேளை இம்சித்தற் தன்மையைப் பெறுமாயின் போராட்டத்தின் இயல்பு முற்றாகவே மாறிவிடும்.

உண்மையாகவே போராட்டக்காரர் இம்சையைக் கையாளு-வதைக் காண எதிர்த் தரப்பார் விரும்புவர். அப்போதுதான் அவர்கள் விரும்பியவாறு செயற்படச் சட்டப்படியான அனுமதி கிடைக்கும். மகாத்மா காந்தியவர்கள் தென் ஆபிரிக்காவில் நிற பேதத்துக்கு எதிராக அஹிம்சைப் போராட்டம் நடத்தும்போது, ''நீங்கள் ஏன் வன்முறைகளைக் கையாள்வதில்லை'' என ஆட்சியாளர் வினவியதாகக் கூறப்படுகிறது. மேலும் ஒரு சந்தர்ப்பத்தில் ''நீங்கள் இப் போராட்டத்தின்போது இம்சித்தலைக் கைக்கொண்டீர்களாயின், உங்களிடம் இருந்து தப்பிக்கும் விதம் பற்றி நாமறிந்திருப்போம்!!, என உயர் பொலிஸ் அதிகாரி மகாத்மாவிடம் கூறினார்.

**சமர்ப்பித்தல்:**

மேலே குறிப்பிடப்பட்ட வினாக்கள் நான்கையும் கலந்துரை-யாடலில் ஈடுபடுத்தல் வாயிலாகப் பிள்ளைகளிடத்தில் இருந்து துலங்கல்களைப் பெற்றுக் கொள்ளவும். ஆசிரியருக்கு வழிபார்க்கும் விடயங்களே அடைப்புக் குறிகளுக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றன. அவ் விடயங்களை மாணவரிடம் பெற முடியுமாயின் நன்று.

**மாற்று ஏற்பாடுகள் :**

வகுப்பை நான்கு குழுக்களாகப் பிரித்து மேற் குறிப்பிட்ட வினாக்களைக் குழுவுக்கு ஒன்று வீதம் வழங்கிக் கலந்துரையாடச் சந்தர்ப்பத்தை அளிக்கவும்.

குழுக்கள் கலந்துரையாடும் போது சரியாக அவர்களை வழிப் படுத்த அவசியமான ஊகங்களை அளித்து வகுப்பைச் சுற்றி வரவும். 20 நிமிட நேரம் போதுமானது.

கலந்துரையாடல் முற்றுப் பெற்ற பின்னர் அங்கு உருவாகிய கருத்துக்களை வகுப்பிலே சமர்ப்பிக்க வகை செய்யவும்.

ஒரு குழு கருத்துக்களை வெளிப்படுத்திய பின்பு விடுபட்ட விடயங்கள் இருப்பின் மாதிரிப் பதில்களைக் கொண்டு ஈடுசெய்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானம் நிறைந்த உலகைக்
கட்டியெழுப்புவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானம் என்றால் என்ன?

பாடம் : 8.1

நேரம் : 40 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கரு :**

சமாதானத்தின் தன்மையும் பெறுமதியும்

**குறிக்கோள்கள் :**

(1) சமாதானத்தைப் பல்வேறு கண்ணோட்டங்களோடு பார்ப்பர்.

(2) சமாதானம் பற்றி ஆக்கபூர்வமான கருத்துக்களை வெளிப் படுத்துவர்.

**செயற்பாடு : படி : 1 அறிமுகம்**

இப்போது நாம் சமாதானம் பற்றிய சிறியதோர் கண்காட்சியை நடத்துவோம். அது பின்வருமாறு அமையும்:

நீங்கள் எல்லோரும் வகுப்பறையில் இருந்து வெளியே செல்லவும். அங்கு சுற்றி வர நோக்கிச் சமாதானத்தைக் குறியீடாகக் காட்டும், நீங்கள் விரும்பிய ஏதாவதொன்றைக் கொண்டு வந்து வகுப்பின் முன்பாக வரிசையாக வைக்கவும். (இதன் பொருட்டு மேசை வரிசை ஒன்றை அமைத்துக் கொள்ள வேண்டும்) எனினும் நீங்கள் தெரிவு பற்றி உண்மையாகவே கருதுவது எதுவென எவர்க்கும் கூறவேண்டாம்.

**படி : 2**

பிள்ளைகள் தேர்ந்தெடுத்த குறியீட்டுப் பொருட்களை வகுப்பில் கொண்டு வந்து வரிசையாக வகுப்பின் முன்பாக மேசை மீது வைப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின் ஆசிரியர் முறையே ஒவ்வொரு பொருளாக வகுப்பில் காட்டி, அது சமாதானம் தொடர்பாக எதைக் குறிப்பிடுகிறது. என வினவிப் பிள்ளைகளிடத்தில் பல்வேறு ஊகங்களைப் பெற்றுக் கொள்கிறார். இங்கே ஒருவர் கொண்டு வந்த பொருளை ஆசிரியர் வகுப்பில் காட்டி அது என்னவெனக் கேட்கும்போது பிள்ளைகளில் பலவிதமான ஊகங்கள் எழ இடமளிக்க அந்தப் பிள்ளை மௌனமாக இருக்கும். இறுதியில் ஆசிரியர் அதனைக் கொண்டு வந்த பிள்ளை யாரென வினவி அதனால் அவன்/ அவள் உண்மையாகவே கருதியது எதுவென வகுப்பில் விளக்குவதற்கான சந்தர்ப்பத்தை அளிப்பார்.

**கலந்துரையாடல் :**

பிள்ளைகளால் கொண்டு வரப்பட்ட குறியீட்டுப் பொருட்களைப் பயன்படுத்திச் சமாதானம் தொடர்பாக,

- நன்மையான மனப்பாங்குகளை உருவாக்கிக் கொள்ளவும்,
- பல்வேறு கண்ணோட்டங்களோடு நோக்கவும்,
- எண்ணக்கருக்களை நடைமுறை வாழ்க்கையில் கைக்கொள்ளவும் உதவும்.

**மதிப்பீடு :**

*(1)* இப் பாடத்தின் வாயிலாக ஒவ்வொரு மாணவனும் கற்றுக் கொண்ட மிகப் பிரதானமானதை வினவவும்.

*(2)* ''இப் பாடத்தால் ஏதேனும் ஒரு மாற்றம் உங்களில் நிகழ்ந்ததா?'' அவ்வாறாயின் அது யாதென விசாரிக்கவும்.

**குறிப்பு :** பரீட்சித்துப் பார்க்கையில் இது மிகக் களிப்பூட்டும் பாடமாகக் காணப்பட்டது. பிள்ளைகள் பலர் ஆக்கபூர்வமான கருத்துக்களை வெளியிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானம் என்றால் என்ன? (2)

பாடம் : 8.2

நேரம் : ஒவ்வொன்றும் 45 நிமிடங்களைக் கொண்ட பாடவேளைகள் 2

**அடிப்படை எண்ணக்கரு : சமாதானம்**

**குறிக்கோள்கள் :**

*(1)* சமாதானம் தொடர்பான பல்வேறு கண்ணோட்டங்-களின் வழியாக விடயங்களைத் திறனாய்வர்.

*(2)* குழுவாகக் கலந்துரையாடும் திறனை விருத்தி செய்து கொள்வர்.

**நுழைவு :**

சமாதானம் என்ற பதத்தை நாம் அடிக்கடி கேட்கிறோம். நீங்கள் எப்போதாவது உண்மையாகவே அதனால் கருதப்படுவது எதுவென எண்ணிப் பார்த்திருக்கிறீர்களா? நாம் வாழும் சமூகத்தில் / உலகில் சமாதானத்தை எவ்வாறு தோற்றுவிக்கலாம்?

சமர்ப்பித்தல் : கீழ்வரும் மாதிரியைக் கரும்பலகையில் வரைக.

*(1)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவொரு விடயத்தைப் பற்றியும் எண்ணிப் பார்க்க வழிகாட்டும் மாதிரிகை ஒன்றே இங்கு காணப்படுகிறது.

*(1)* சமாதானம் - என்ன?

★ சமாதானம் என்றால் என்ன எனக் கூறல் / வரைவிலக்கணஞ் செய்தல்.

★ சமாதானம் பற்றிய பல்வேறு வகைப்படுத்தல்களைக் குறிப்பிடல்.

*(2)* சமாதானம் - ஏன்?

★ அவசியமாவத ஏன்? (காரணங்களைக் குறிப்பிடுதல்)

★ அதன் முக்கியத்துவம் பயன்கள்

*(3)* சமாதானம் - எவ்வாறு?

★ சமாதானத்தை எவ் வழிகளால் தோற்றுவித்துக் கொள்ளலாம்?

★ அதனை எவ்வாறு காக்கலாம்?

*(4)* சமாதானம் - யாருக்கு? யார்?

★ சமாதானம் யாருக்கு அவசியமாகிறது?

★ சமாதானத்தைத் தோற்றுவிக்கச் செய்ய வேண்டியோர் யார்?

★ பொறுப்பு எவரைச் சாரும்?

*(5)* சமாதானம் - எப்போது?

★ தேவைப்படும் காலம்

★ எக் காலத்தில் அது தொடர்பாகச் செயற்பட வேண்டும்.

*(6)* சமாதானம் - எங்கு?

★ சமாதானம் அவசியப்படும் இடம் எது?

★ எத் தாபனத்துக்கு? என்றவாறு கருதப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு :**

வகுப்பில் பிள்ளைகளை மாதிரியில் காணப்படுவது போன்று,

(1) என்ன?

(2) ஏன்?

(3) எவ்வாறு?

(4) யாருக்கு? யார்?

(5) எப்போது?

(6) எங்கு?

என்றவாறு 6 குழுக்களாக வகுக்கவும். அவர்கள் சமாதானம் பற்றித் தாம் பெற்ற கோணங்கள் தொடர்பாகக் கலந்துரையாட வேண்டும். கலந்துரையாடலை ஒழுங்குபடத்த வேண்டிய முறை.




வகுப்பில் கதிரைகளைப் பெரிய வட்டத்துக்குள் சிறியதொரு வட்டம் அமையுமாறு முன்கூட்டியே தயார்படுத்திக் கொள்ளல் வேண்டும். சிறிய வட்டம் கலந்துரையாடும் குழுவினருக்காக. பெரிய வட்டம் கலந்துரையாடலை அவதானிக்கும் ஏனைய பிள்ளைகளுக்காக.

இவ்விதமாக இருக்கைகளைத் தயார்படுத்திக் கலந்துரையாடலை மேற்கொள்ளும் குழுவினர் உள் வட்டத்தில் அமர்வர். அவர்களது கலந்துரையாடலைச் செவிமடுக்க ஏனைய எல்லோரும் அதாவது வெளிவட்டக் குழுவினர் தாம் பெற்ற தலைப்புகளுக்கு ஏற்பக் கருத்துக்களைக் குறிப்பிட்டுக் கலந்துரையாடும் போது உள் வட்டத்தில் அமர்வர். உள் வட்டக் குழு தாம் பெற்ற தலைப்புக்-கேற்பக் கருத்துக்களைக் குறிப்பிட்டுக் கலந்துரையாடுகையில் வெளிவட்டத்தில் உள்ள ஒருவர் தாம் மிகப் பிரதானமாகக் கருதும் கருத்தை அவர்களுக்குத் துணையாகச் சமர்ப்பிக்க அனுமதிக்கப்-படுவார். இங்கே ஒரு குழுவுக்கு 05 நிமிடங்கள் வீதம் வழங்கவும்.

(5 x 6 = 30 நிமிடங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒப்படைப்பு :**

சமாதானம் பற்றி எல்லாக் குழுக்களும் விடயங்களைக் கலந்துரையாடிய பின்னர் கீழ்வரும் பயிற்சியைத் தனியாக அல்லது குழுவாகப் பிள்ளைகளிடம் அளிக்கவும்.

**பயிற்சி :**

சமாதானம் பற்றிய கருத்துச் சித்திரம் ஒன்றினை வரைதல்.




இவ்வாறான கருத்துச் சித்திரத்தை வரையும் முறையை விளக்கவும். ஏதாவது ஒரு கோணத்தின் ஊடே ஒரு கருத்தைப் பிரதான கருத்து, துணைக்கருத்து என்றவாறு கிளை விட்டுச் செல்லத்தக்கதாக மிகச் சுருக்கமாகக் குறிப்பிடும் ஓவியமே ஆக்கப்படும். இதன் பொருட்டுப் பெரிய கடதாசி கையாளப்படின் நன்று.

**குறிப்பு :**

இப் பாடம் 45 நிமிடங்களைக் கொண்ட இரண்டு பாடவேளைகளாகக் கொள்ளல் மிகப் பொருத்தம் என்பது பரீட்சார்த்தமாக நோக்குகையில் புலனாயிற்று. கலந்துரையாடலைக் கொண்டு செல்ல ஒரு குழுவுக்குப் 10 நிமிடங்கள் வீதம் வழங்கி, முதலாவது பாடவேளையின் போது 3 குழுக்களுக்கும் இரண்டாவது பாடவேளையின் போது மிகுதி 3 குழுக்களுக்குமாகச் சந்தர்ப்பங்களை அளிக்கவும். பாடவேளைகளை அண்மித்த இரு தினங்களில் கைக்கொள்ளல் நன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்தைக் கட்டி எழுப்புவோம் (1)

பாடம் : 8.3
நேரம் : 45 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கரு :**

சமாதானத்துக்குத் துணையாகும் சமூக சக்திகளை விருத்தி செய்ய வேண்டும் என்பது.

**குறிக்கோள் :**

*(1)* நாட்டில் சமாதானத்தைத் தோற்றுவிக்க உதவியாகக் கொள்ளத் தக்க சமூக சக்திகளைக் கூறுவர்.

*(2)* அவற்றை மேலும் வளர்த்துக் கொள்ளக் கூடிய செயல் முறைகளை எடுத்துக் காட்டுவர்.

**நுழைவு :**

எமது நாட்டில் சமாதானத்தை விருத்தி செய்ய மேற்கொள்ள வேண்டியன எவையென நாம் தேடிப் பார்ப்போம். ஒரு நாட்டில் சமாதானத்தை வளர்த்தல், கடைப்பிடித்தல், காத்தல் என்பன எல்லாப் பிரஜைகளினதும் கடமையாகும். ஏனெனில் நாட்டின் சமாதானம் சகல பிரசைகளினதும் வாழ்க்கையோடு தொடர்புடையதாகும்.

**சமர்ப்பித்தல்:**

*(1)* எமது நாட்டில் சமாதானத்தை விருத்தி செய்ய ஆற்ற வேண்டியன எவையெனப் பிள்ளைகளிடம் வினவி, அவர்களிடத்தில் இருந்து பெறப்படும் ஆலோசனை-களையும் கருத்துக்களையும் கரும்பலகையில் குறிக்கவும்.

*(2)* அவ்வாலோசனைகளையும் கருத்துகளையும் கீழ்க் காணும் செயல் திட்டத்துக்காக வழிப்படுத்தவும்.

*(1)* சமாதானத்துக்கு உதவும் சமூக சக்திகளையும் அவற்றை மேலும் விருத்தி செய்யப் புரியத்-தக்கனவற்றையும் இனங் கண்டு கொள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) சமாதானத்துக்கு தடையான சமூக சக்தி-களையும் அவற்றை அகற்றுவதன் பொருட்டுச் செய்யக் கூடியவற்றையும் அடையாளங் காணல்.

(3) சமாதானத்தை மேலும் வளர்க்கப் புதிதாக அறிமுகஞ் செய்யத்தக்க செயல் வழிகளைத் தேடிப் பார்த்தல்.

பிள்ளைகளது ஒவ்வொரு ஆலோசனையும், இவற்றில் எச் செயற்றொகுதியைச் சாரும் என நோக்கவும்.

*(10 நிமிடங்கள்)*

**செயற்பாடு : 1**

எமது நாட்டிலே சமாதானத்தைத் தோற்றுவிக்க உதவும் பொருட்டு தற்போது அமுலில் உள்ள பல்வேறு சமூக சக்திகள் எவையென வகுப்பில் வினவி ஆராயவும். இதன் பொருட்டு முதலில் அடிப்படைச் சமூக சக்திக் களங்கள் சிலவற்றை அடையாளங் காண்க.

**எடுத்துக்காட்டு :**

கலாச்சார விழுமியங்கள்

சமயரீதியான விழுமியங்கள்

ஜனநாயக அரசு முறை

வளர்ச்சி அடைந்த கல்வித் தரம்

மக்கள் தொடர்பு சாதனங்கள்

இவ்வாறு அடையாளங் கண்டு கொண்ட களங்களின் எண்ணிக்கையின்படி வகுப்புப் பிள்ளைகளைக் குழுக்களாக்கி அவர்களிடம் கீழ்வரும் ஒப்படைப்பை வழங்கவும்.

(1) நீங்கள் பெற்றுக் கொண்ட களங்களில் நாட்டின் சமாதானத்தைக் கட்டியெழுப்ப உதவும் அம்சங்களை முடிந்த வரை விசேடமாக அடையாளங் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அவ்வம்சங்களை மேலும் விருத்தி செய்ய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எவை? அச் செயல் முறைகளை எச் சமூகத்தாபனங்கள் அல்லது நபர்க் குழுக்கள் நிறைவேற்ற வேண்டும்?

(15 நிமிடங்கள்)

குழு முயற்சி முற்றுப் பெற்ற பின்னர் ஒவ்வொரு குழுவும் வகுப்பின் முன்பாக வந்து தமது விடயங்களைச் சமர்ப்பிக்க வகை செய்து குறுகிய கலந்துரையாடலை நடத்தவும்.

(20 நிமிடங்கள்)

**எடுத்துக்காட்டு :**

**களம்** : **கலாச்சார விழுமியங்கள்**

**ஆய்வு** :

(1) ஒருவருக்கொருவர் உதவும் பண்பு/ஒத்துழைப்பு மனப்பான்மையான சமூக வாழ்வு.

(2) ஒருவரை ஒருவர் கௌரவித்தலும் கவனித்தலும்

(3) ஒரு பிரதேசத்தில் (உதா: கிராமத்தில்) வாழும் குழுவினர் அனைவரும் உறவினர் குழுவெனக் கருத்தில் கொண்டு வாழ்தல்.

(4) தமக்கிடையே பகிர்ந்து பரிமாறிக் கொள்ளும் பண்பு.

(5) சிரமதானம் போன்ற பொதுப்பணிகளில் மக்கள் கலந்து கொள்ளல்.

அபிவிருத்தி செய்ய மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகளும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களும்:

(1) கிராமங்களில் ஒருவருக்கொருவர் உதவுவதை அடிப்படையாகக் கொண்ட சமூக நலப் பணித் திட்டங்களை ஆரம்பிக்க வழிகாட்டலும் தூண்டலும்.
(அரசாங்கம் - வழிபாட்டுத்தலங்கள் - கிராம அபிவிருத்திச் சங்கங்கள்)

(2) ஒருவரை ஒருவர் கௌரவித்தல், கவனித்தல் என்பனவற்றை மக்களிடையே நிறுவுவதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பிரச்சாரம் செய்தல் / மதிப்பீடு செய்தல் தொடர்பு சாதன நிறுவனங்கள் - பாடசாலைகள் - வழிபாட்டுத்தலங்கள்)

(3) கிராமத்தில் / ஒரு பிரதேசத்தில் மக்கள் ஒன்று சேரத்தக்க பல்வேறு சமூக சந்தர்ப்பங்களை ஒழுங்கு செய்தல்.

**உ+ம்:** புது வருடக் கொண்டாட்டம், சிரமதானம், தலயாத்திரை, களிப்பூட்டும் வைபவம், கூட்டங்களைக் கொண்ட நிகழ்ச்சி நிரல்கள் (கலாச்சார அமைப்புகள் - வழிபாட்டுத் தலங்கள் - கிராம அபிவிருத்திச் சங்கங்கள் - தொடர்பு சாதன அமைப்புகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்தைக் கட்டியெழுப்புவோம் - (2)

பாடம் : 8.4

நேரம் : 45 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கரு :**

சமாதானத்துக்குத் தடையான / தீங்கான சமூக சக்திகளை அகற்றுதல்.

**குறிக்கோள்கள் :**

(1) நாட்டின் சமாதானத்துக்குத் தடையான சமூக தீய சக்திகளைக் குறிப்பிடுவர்.

(2) அச்சக்திகளை அகற்றுவதன் பொருட்டு உரிய நடவடிக்கைகளைப் பிரேரிப்பர்.

**நுழைவு :**

கடந்த பாடத்தில் நாம் நாட்டில் சமாதானத்தை மேலும் வளர்த்தல் தொடர்பாகத் துணையாகும் சமூக சக்திகள் சிலவற்றையும் அவற்றை விருத்தி செய்யத்தக்க முறைகள் பற்றியும் ஆராய்ந்து பார்த்தோம். இன்று நாம் எம் நாட்டில் சமாதானத்துக்குத் தடையாகக் காணப்படும் சமூக சக்திகளை இனங் காண்போம். அடுத்து அவற்றைப் பின்வாங்கச் செய்யவும் நீக்கவும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைக் கவனிப்போம்.

**செயற்பாடு :**

எம் நாட்டில் சமாதானத்தை எழுப்பத் தடையாகவுள்ள சமூக சக்திகள் எவையென வகுப்பில் வினவிக் கலந்துரையாடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்க்கப்படும் துலங்கல்களுக்கான உதாரணங்கள்:

- இனபேதம்
- சமூக முரண்பாடு / ஏற்றத்தாழ்வு
- இளைஞரது வேலைவாய்ப்பின்மைப் பிரச்சினை
- நகரங்களுக்கு மக்கள் புலம் பெயர்தல்
- தொலைக்காட்சி, திரைப்படம் போன்ற தொடர்பு சாதனங்கள் வன்முறையில் பிரச்சாரம் செய்தல்.
- மதுபோதையினால் ஏற்படும் தொல்லை
- பிரஜைகளுக்கான பாதுகாப்புப் போதாமை
- தவறான அரசியல் கட்சி வேறுபாடு / அரசியல் சண்டித்தனங்கள்
- சுற்றாடல் மாசடைதல்
- இயற்கைச் சுற்றாடலை அழித்தல்

இனங் கண்டு கொண்ட பிரதான தலைப்புகள் சிலவற்றின்படி வகுப்பைக் குழுக்களாக்கி அவர்களிடம் கீழ்வரும் ஒப்படைப்புகளை அளிக்கவும்.

(1) நீங்கள் பெற்றுக் கொண்ட தலைப்பை ஆய்ந்து நாட்டுச் சமாதானத்துக்குத் தடையாகும் அம்சங்களை விசேடமாக ஆராயலாம்.

(2) அத் தடைகளை வெற்றி கொள்ள / அகற்றக் கைக்கொள்ளத்-தக்க நடவடிக்கைகள் எவை? அந் நடவடிக்கைகளை எச் சமூக நிறுவனங்கள் அல்லது மக்கள் குழுக்கள் மேற்கொள்ள வேண்டும்?

(15 நிமிடங்கள்)

குழு முயற்சி முற்றுப் பெற்ற பின்னர் ஒவ்வொரு குழுவும் வகுப்பின் முன்பாக வந்து தமது விடயங்களைச் சமர்ப்பிக்க வகை செய்து, குறுகிய கலந்துரையாடல் ஒன்றினை நடத்தவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்திரம் : 9 சமாதானத்தைக் கட்டியெழுப்புவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் : பிரச்சினை ஆய்வு அட்டவணை - இலங்கையின் இனபேதம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்தைக் கட்டியெழுப்புவோம் (3)

பாடம் : 8.5

நேரம் : 50 நிமிடங்கள்

**அடிப்படை எண்ணக்கரு :** சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மக்களது அடிப்படைப் பொறுப்பாகும். அது தொடர்பாக மக்கள் ஆர்வத்துடன் ஈடுபடுதல் வேண்டும்.

**குறிக்கோள்கள் :**

*(1)* ஒரு பிரஜை என்ற வகையில் நாட்டின் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்பு தமக்கு உண்டு என்பதை ஏற்றுக் கொள்வர்.

*(2)* பிரபல்யமான சமூகப் பிரச்சினைச் சந்தர்ப்பம் அளிக்கப்படின் அவற்றுக்கு உகந்த சமாதான ஆலோசனையைப் பிரேரிப்பர்.

**நுழைவு:**

இன்று சமாதானம் தொடர்பான பாடத்தை உங்களிடத்தில் ஒரு வினாவை வினவுவதன் வாயிலாக ஆரம்பிக்க விரும்புகிறேன். சமாதானத்தைக் கடைப் பிடித்தலும் மேலும் வளர்த்தலும் எவரைச் சார்ந்த பொறுப்புகள்?

*(எதிர்பார்க்கப்படும் முடிவு: ஒரு நாட்டில் சமாதானத்தை நடத்திச் செல்லல், விருத்தி செய்தல் என்பன அடிப்படையில் மக்களது பொறுப்பேயாகும். அதனை அரசாங்கத்திடம் கையளித்து விட்டு மக்கள் இயங்காது இருப்பாரெனில் அரசாங்கம் மட்டுமே தனித்து அதனை செய்ய இயலாத நிலை தோன்றும்.)*

நாட்டில் சமாதானத்தைத் தோற்றுவிக்க மக்கள் தீவிரமாகச் செயற்படல் வேண்டும். அதனைச் செய்யத்தக்க விதம் பற்றி இன்று நாம் ஒருவித விளக்கத்தைப் பெறுவோம்.

*(05 நிமிடங்கள்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட ஒரு கிராமத்தில் நபர்களுக்கிடையே, குழுக்களுக்கிடையே அடிக்கடி தகராறுகள், கலவரங்கள், மோதல்கள் இடம் பெறுவதாக நாம் நினைத்துக் கொள்வோம். இப்போது இந் நிலைமையை அகற்ற அக் கிராமத்தில் சமாதானத்தை விரும்பும் கூட்டத்தார் செய்யக்கூடிய செயல்கள் பத்தினை நாம் தேடுவோம்.

பிள்ளைகளிடத்தில் ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டு கரும்பலகையில் குறிப்பிடவும்.

எதிர்பார்க்கக்கூடிய ஆலோசனைகளுக்கான எடுத்துக்காட்டுகள்:

- கிராமத்தில் ஏற்கத்தக்க சிலரைக் கொண்ட இணக்க சபை ஒன்றை அமைத்தல்.

- மோதல் நிகழ்வதற்கான காரணிகளை ஆராய்ந்து அக் காரணிகளை அகற்றல்.

- கிராமத்தில் போதிப் பூசை (வெள்ளரசு மரத்தை வழிபடல்) சமய வைபவங்கள், கச்சேரிகள் போன்ற சமய, கலாச்சாரக் கூட்டங்களை ஒழுங்கு செய்தல்.

- மக்களது பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு உகந்த நிகழ்ச்சி நிரல்களை ஆரம்பிக்க ஊக்குவித்தல்.

- வயது வந்தோருக்கான கல்வி நிகழ்ச்சி நிரல்களைத் தொடங்குதல்.

- மக்கள் ஓய்வு நேரத்தில் சந்திக்கத்தக்கதான பல்வேறு விளையாட்டுக்களில் ஈடுபடக்கூடியதாக மக்கள் மண்டபமொன்றை அமைத்தல்.

- கிராமத்தில் சமாதானத்தைக் கட்டியெழுப்பக் கருதி நபர்களை ஊக்கு விப்பதற்காக மக்கள் தலைவர்களை பயிற்றுவிப்பதன் பொருட்டுப் பயிற்சித் திட்டமொன்றினை ஒழுங்கு செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளிடம் இருந்து பெறப்பட்ட ஆலோசனைகளை மேலும் வினவி மதிப்பளிக்கவும். அவற்றுள் சிலவற்றை நடைமுறைப்படுத்தக்கூடிய முறைகளை வினவவும். இறுதியில் உங்களது கருத்துக்களையும் குறிப்பிடவும்.

*(10 நிமிடங்கள்)*

**சிந்தனைக்கிளர்வு : 2**

குறிப்பிட்டதொரு நாட்டில் இனபேதம் அடிக்கடி தோன்றுகிறது. அதனால் மனிதவுயிர்களும் சொத்துக்களும் அழிந்து விடுகின்றன. இத்தகைய நிலைமையை அகற்ற அம் மக்கள் புரியத்தக்க பத்துச் செயல்களைத் தேடுவோம்.

இச் செயற்பாட்டை முதலாவதைப் போன்றே தொடர்ந்தும் கொண்டு செல்க.

பல்வேறு ஆக்கபூர்வமான ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கப் பிள்ளைகளைத் தூண்டவும்.

இறுதியில் பிள்ளைகளது ஆலோசனைகளை விட மேலதிகமாகவும் சமர்ப்பிக்கத் தக்க ஆலோசனைகள் சில வருமாறு:

*(1)* சமாதான வலயங்களை அமைத்தல்.
(அதாவது ஒரு கிராமத்தில் அல்லது நகரில் அல்லது பிரதேசத்தில் எல்லா இனத்தோரும் கலந்து கொண்டு அப் பிரதேச எல்லைக்குள் மோதல்களை ஏற்படுத்திக் கொள்ளாது இருக்க உடன்பட்டு மோதல்களை விலக்கிக் கொள்ள இயக்கமொன்றை நிறுவி அதனைச் சமாதான வலயமாகப் பிரகடனஞ் செய்தலும் பரிபாலித்தலும்.)

*(2)* மோதல் ஏற்படு முன்னர் அதனைத் தவிர்த்துக் கொள்ளவும், மக்களது உயிர்களைக் காத்துக் கொள்ளவும் நடவடிக்கைகள், ஆயத்தங்கள் என்பவற்றைக் கைக்கொள்ளல்.

*(3)* அத்தகைய மோதல்களைத் தூண்டத்தக்க குழுக்களை முன்கூட்டியே இனங்கண்டு, அவர்களுக்குப் பொருத்தமான மனித வளங்களை விருத்தியாக்கும் பயிற்சித் திட்டங்களை ஒழுங்கு செய்வதன் வாயிலாக அவர்களது மனப்பாங்குகளைப் பயனுள்ள விடயங்கள் மீது ஈர்க்கச் செய்தல்.

*(10 நிமிடங்கள்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் மற்றுமொரு விதமான நாட்டைக் கருத்திற் கொள்வோம். அந் நாட்டிலே படிப்படியாக மனிதப் படுகொலைகள், கற்பழிப்புகள், தற்கொலைகள் போன்ற கொடுஞ் செயல்கள் அதிகரிக்கின்றன. அந்த நாட்டு மக்கள் மகிழ்ச்சி, திருப்தி, பொழுதுபோக்குகள் என்பனவற்றை அறியாதவர்கள். தற்போது அவர்களை மகிழ்ச்சி, திருப்தி, பொழுதுபோக்கு என்பவற்றை அறிந்து கொள்ளும் பொருட்டு எவ்வாறு கற்பிக்கலாம்? (பொதுமக்கள் மகிழ்ச்சி, திருப்தி, பொழுதுபோக்கு என்பவற்றைக் கைக்கொள்ளக் கற்றுக் கொள்வார்கள் எனில் நாட்டில் குற்றச் செயல்கள் வீழ்ச்சியடையும் என நாம் ஒரு எடுகோளைக் கொள்வோம்) பிள்ளைகளிடம் பல்வேறு ஆலோசனைகளைப் பெற்று அவற்றை நடைமுறைப்படுத்தக்கூடிய விதங்களை வினவி முன்னர் போன்று கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

*(10 நிமிடங்கள்)*

**மதிப்பீடு :**

*(1)* நீங்கள் இப் பாடத்தின் வாயிலாகக் கற்றுக் கொண்ட இரண்டு விடயங்களைக் கூறவும்.

*(2)* நாட்டில் சமாதானத்தை உருவாக்கும் பொறுப்பு / ஒரு பிரஜை என்ற வகையில் ஒருவருக்கு உண்டு என்பதை ஏற்போர் கரங்களை உயர்த்துக.

*(3)* ''நாட்டில் சமாதானத்தை உருவாக்குபவர் என்ற வகையில் எனது பொறுப்புகள்'' என்ற தலைப்பின் கீழ் 02 நிமிடப் பேச்சினை நிகழ்த்தவும்.

(மாதிரிக்கு நான்கு பேரை மட்டுமே தெரிவு செய்தல் போதுமானது)

*(15 நிமிடங்கள்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனநாயக சமூகத்தின் அடிப்படை இயல்புகள்

- சொத்துக்களைச் சொந்தமாக்கிக் கொள்ளும் சுதந்திரம் / பிடிவாதத்தின் மூலம் தம் சொத்துக்கள் பறி முதல் செய்யப்படாமை.
- தகவல்களைத் தேடவும் அறிந்து கொள்ளவும் உள்ள உரிமை.
- கல்விக்கான சுதந்திரம்
- நடுநிலையான நீதித்துறை
- சுதந்திரமாக வாழ சொந்தப் பாதுகாப்புக்கு உள்ள உரிமை சட்டத்தின் முன்னால் சகலரும் சமமாகக் கணிக்கப்படல் சட்டத்தின் பாதுகாவல் பெறும் சமவுரிமை.
- தாம் அல்லது தாம் தெரிவு செய்யும் உறுப்பினர் அரசாள்வதில் கலந்து கொள்ளும் உரிமை.
- பொதுமக்கள் விருப்புக்கு அமைய நாட்டை ஆட்சி புரிதல்
- சுதந்திரமாகச் சிந்திப்பதற்கும் தாம் விரும்பிய கருத்தைக் கொண்டிருப்ப தற்கும் வெளிப் படுத்துவதற்கும் உள்ள தனிநபர் உரிமை.
- சொந்த வாழ்க்கைக்குத் தடைகள் ஏற்படுத்தப்படாமை.
- சங்கங்களில் இயக்கங்களில் சேரும் சுதந்திரம் சங்கங்களில் இயக்கங்களில் சேருமாறு நிர்ப்பந்திக்கப் படாமை அமைதியாக ஒன்றுகூடும் உரிமை.
- பொது நலச் சேவைகளைப் பெறுவதற்கான சம உரிமை.
- இனப்பிரிவு, இனம், மதம் போன்ற வரையறைகளைத் தாண்டிச் சுதந்திரமாக விவாகம் செய்து கொள்ளும் உரிமை.
- நியாயமான ஊதியம்
- தமது நாட்டில் தாம் விரும்பும் இடத்தை அடையவும் மீளத்திரும்பவும் தாம் விரும்பும் இடத்தில் வாழவும் உள்ள சுதந்திரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகச் சமூகத்தின் பண்புகள்

பாடம் : 8.6

நேரம் : 45 நிமிடங்கள்

**குறிக்கோள்கள் :**

(1) ஜனநாயக சமூகத்தின் பண்புகளைக் குறிப்பிடுவர்.

(2) அடிப்படைச் சுதந்திரங்களை ஒவ்வொன்றாகத் திறனாய்வர்.

(3) அடிப்படைச் சுதந்திரங்களைப் பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவர்.

**அடிப்படை எண்ணக்கரு :**

ஜனநாயச் சமூகத்தின் பிரதான அடித்தளம் அடிப்படைச் சுதந்திரங்களை ஏற்றலும், பாதுகாத்தலும் ஆகும்.

**ஆயத்தம் :**

ஜனநாயகமான சமூகத்தின் அடிப்படையான பண்புகளைக் காட்டுவதற்காக வகுப்பில் உள்ள குறிப்பேட்டைக் கரும்பலகையில் வரைந்து விடுக, அல்லது போஸ்டராகத் தயாரித்து விளம்பரப் பலகையில் பொருத்தவும்.

**நுழைவு :**

(1) ஜனநாயகம் என்பது ஒரு நாட்டில் அதிகமானோரின் விருப்பத்துக்கு அமைய நாட்டை ஆள்வதே என நீங்கள் கற்றிருப்பீர்கள். மக்களது நலன் கருதி மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் குழுவினர் நாட்டை ஆள்கிறார் என்பதே அதன் கருத்தாகும்.

(2) ஜனநாயகமான சமூகத்தின் அடிப்படைப் பண்புகளைக் காட்டும் இக் குறிப்பை நோக்கவும். அதில் எத்தனை இயல்புகள் காணப்படுகின்றன. அவை எத்தனை சமூக களங்களோடு தொடர்புடையன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது நாம் ஒவ்வொரு ஜனநாயகப் பண்பையும் எடுத்து அதனைத் திறனாய்வு செய்யும் பொருட்டுக் கலந்துரையாடுவோம்.

**செயற்பாடு :**

*(பிள்ளைகளிடத்தில் அறிமுகப்படுத்தும் விதத்துக்கேற்ப)*

★ ஒரு நாட்டில் புதியதோர் அரசு அமைக்கப்பட்டதென நாம் கருதுவோம். அந் நாட்டின் பெயர் சமாதானத்தீர்வு என நினைப்போம். தற்போது அந்த நாட்டின் அரசியலமைப்பை உருவாக்க அச் சமூகத்தில் திகழ வேண்டிய அடிப்படைப் பண்புகள் எவையெனச் சிபார்சு செய்ய ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது அந்த ஆணைக்குழு இந்த வகுப்பே எனக் கருதுவோம்.

★ இப்போது இவ்வாணைக் குழுவின் தலைவராக வகுப்புப் பிள்ளை ஒருவர் தெரிவு செய்யப்படுகிறார்.

★ தலைவரது பணிகள் சாட்சியாளரை வினவல், கலந்துரையாடலை மேற்கொள்ளல், கூட்டத்தைச் செல்வனே நடத்திச் செல்லல் இறுதியாக ஆணைக்குழுவின் பெரும்பான்மையோரது விருப்பை வாக்கெடுப்பின் மூலம் அறிந்து பிரேரணைகளை நிறைவேற்றிக் கொள்ளல் என்பனவாகும்.

★ அடுத்து சாட்சியளிப்பதற்காகப் பிரஜைகள் மூவர் தேவைப்படுகின்றனர். விரும்பிய மூவர் முன்வரவும். (பிள்ளைகள் மூவர் தெரிவு செய்யப்படுவர்) ஒரு வரைபடத்தின் வாயிலாகத் தாம் விரும்பிய ஜனநாயகப் பண்புகளைத் தெரிவு செய்து அவற்றை ஆணைக்குழுவிடம் பிரேரித்து அவற்றின் அவசியத்தை நிரூபிப்பதற்காக விடயங்களை எடுத்து இயம்பச் செய்தலை நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

★ இப்போது இவ்வாணைக் குழுவில் மேலும் இரண்டு பிரதான உத்தியோகத்தர்கள் தலைவரின் இரு பக்கங்களிலும் இருக்கிறார்கள். அவர்களில் முதலாமவர் சாட்சியாளரது ஆலோசனையை ஆதரிப்பவர். இரண்டாமவர் சாட்சியாளரது ஆலோசனையை எதிர்த்து அதனை நிராகரிப்பதற்காக வாதிடுபவர். (எல்லா நல்ல ஆலோசனைகளையும் கருத்துக் களையும் எதிர்த்து வாதம் புரிபவர் ''பிசாசின் வழக்கறிஞர்'' என அழைக்கப்படுவார்.) அடுத்தவர் வழக்கறிஞர் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் என்ற வகையில் நடுநிலையாக விடயங்களை ஆராய்தலே உங்கள் பணிகள். சாட்சியாளரது கட்சிக்கும் பிசாசின் வழக்கறிஞருக்கும் இடையில் நிகழும் விவாதத்தின் போது நீங்கள் எச் சந்தர்ப்பத்திலேனும் கருத்துக்களை வெளியிட இயலும்.

★ சூடான விவாதத்தை உருவாக்க நீங்கள் எல்லோரும் இங்கு செயற்படுதல் வேண்டும். (விபரிக்க 10 நிமிடங்கள்; செயற்பாட்டுக்கு 30 நிமிடங்கள்)

**குறிப்பு :**

(1) பிள்ளைகள் விவாதத்தில் பிரவேசித்த பின்னர் தேவைப்படு-மிடத்து மட்டுமே ஆசிரியர் தலையிட வேண்டும்.

(2) ஒரு சாட்சியாளர் சமர்ப்பிக்கும் ஆலோசனைக்குப் 10 நிமிடங்-களைக் கொண்ட விவாத நேர வரையறை போதுமானது.

(3) ஒரு பாடவேளையின் போது மூன்று ஆலோசனைகளை மட்டுமே கவனத்தில் கொள்ள வேண்டி இருப்பதால் வரைபடக் குறிப்பில் காணப்படும் எல்லாப் பண்புகளையும் உள்ளடக்கத்தக்கதாக இச் செயற்பாட்டைப் பல தடவைகள் ஆற்ற வேண்டியது அவசியம். அடுத்த செயற்பாடு நிகழ்த்தப்படும் திகதி வரை வகுப்பிலே உள்ள எல்லோரும் வரைபடத்தில் காணப்படும் ஜனநாயகப் பண்புகளை வழிமொழியளவு அவை தொடர்பாகக் கற்றறியவும் பணித்து அச் சந்தர்ப்பத்தில் வகுப்பிலிருந்து எவரேனும் பிள்ளைகள் மூவரைத் தேர்ந்தெடுக்கவும்.

**கலந்துரையாடல் :**

எல்லா விவாதக் கருத்தரங்குகளினதும் முடிவில் முழு வகுப்பாரோடும் கீழ்வரும் வினாக்களின் ஊடாகக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவும்.

(1) இவ் விவாதம் தொடர்பாக உங்களை மிகக் கவர்ந்த விடயங்கள் எவை?

(2) இவ் விவாதம் தொடர்பாக உங்களை மிகவும் கவராத விடயம் எது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) ஜனநாயகச் சமூகப் பண்புகளுக்கும் உரிமைகளுக்கும் இடையே உள்ள தொடர்பு யாது?

(4) ''அடிப்படைச் சுதந்திரங்கள் அற்ற சமூகத்தில் ஜனநாயகம் இருக்க வியலாது'' இக் கூற்றினை ஆராய்க.

(5) இன்று நிகழ்த்தப்பட்ட விவாதத்தால் நீங்கள் கற்றுக் கொண்ட மிகப் பெறுமதியானது எது?

(10 நிமிடங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்


*Abrams, Grace Cand Fran C Schmidt (1972)* ***Learning Peace****. Jane Addams Peace Association, Philadelphia*

*Aiyar, V. V. S. (1989) (trans)* ***Tirukkural.*** *Sri Rama Krishna Tapovanam Tiruppataitturai Post Elamaur s, Ry - Tiruchirapalli DT.*

*AVP Education Committee* ***Alternative to Violence. Project Manual Second Level Course,*** *Alternative to Violence Project Inc. 15, Rutherforld Place, New York 1003.*

*Alderich Robert (1982) The* ***Deadly Race*** *in J. Wallis (ed) Waging Peace. Harper & Row. San Francisco.*

*Bandura, A. (1937)* ***Aggression.*** *Printice - Hall Englewood cliff*

*Berbo Roy M, Andrew D. Wolvin . Darly R Wolvin (1986)* ***Communicating*** *Houghton, Miffin Company Boston.*

*Berrowitz (1967) Weapons as aggression eliciting stimuli.* ***Journal of Personality and Social Psychology****, 7 - 202 - 207.*

*Brown, George (1971)* ***Human Teaching for Human Learning.*** *Viking, New York.*

*Brookfield S D (1987)* ***Developing Critical Thinkers: Challenging Adults to Explore Alternative Ways of Thinking and Acting.*** *Open University Press. Milton Reynos.*

*Burnard Phillip (1988)* ***Teaching Interpersonal Skills*** *Chapman & Hall 2 - 6 Boundary Row. London SE18HN*

*Canfield, Jack (1975)* ***101 Ways to Enhance Self Concept in the Classroom,*** *Prectice Hall, Englewood Cliffs.*

*Coover, Virginia et al. (1985)* ***Resource Manual for a Living Revolution.*** *New Society Publishers 4722 Baltimore Avenue, Philadelphia P. A.*

*Cell, E. (1984)* ***Learning to Learn from Experience,*** *State University Press. New York.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Cornelius, Helena and Shoshana Faine (1989)* ***Everyone Can Win. How to Resolve Conflict*** *Simon Schuster Australia, 7 Grosventor Place Brookvale NSW 2100*

*Dewey, John (1973)* ***Experience and Education*** *Collier, New York*

*Dollard, J et al. (1936)* ***Frustration and Aggression.*** *Yale University Press, New Haven.*

*Fountain Susan (1988)* ***Learning Together Global Education 4 - 7*** *Stanely Thrones (Publishers) Ltd. in Association with the World Wide Fund for Nature and the Centre for Global Education, York University.*

*Gorham, Gailetal (1990)* ***Conflict Resolution Skills For the School Community.*** *Conflict Resolution Network Box 10161 Chatswood N. S. W. 2057 Australia.*

*Herzog Stephanie, (1982)* ***Joy in the Classroom*** *University of the Three Press Boulder. Creek California 55006*

*Hamson, Marta (1979)* ***For the Fun of it. Selected Cooperative Games for Children and Adults.*** *The Non Violence and Children Program*

*Hazareesingh, S Sims, kand Anderson P. (1989)* ***Educating the Whole Child.*** *Building blocks Educational.*

*Judson, Stephanine (9182) (ed)* ***A Manual on Nonviolencend Children.*** *Religious Society of Friends - Cherry Street. Philadelphia P. A. 19102*

*Jelfs, Martin (1982)* ***Manual For Action.*** *Action Resource Group (o/13, Mornington Grove. London E 34NS.*

*Kingston Friends Workshop Group (1980)* ***Ways and Means Quaker Meeting*** *House 78, Eden Street Kingston Upon Thames, KTIODJ.*

*Kreidler, William I.* ***Creative Conflict Resolution: More than 200 Activities for Keeping Peace in the Classroom.*** *Foresman, Scott, Glenview.*

*Kolb, D (1984)* ***Experiential Learning,*** *Prentice Hall England Cliffs, New Jersey.*

*Liebman, M (1986)* ***Art Therapy for Groups: A Handbook of Themes, Games and Exercises.*** *Croon Helm.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Lawrence D, (1987)* ***Enhancing Self Esteem the Classroom*** *Paul Chapman Press, London.*

*Lorenz, Konrad (1963)* ***Aggression*** *methuen & Co. Ltd. 11 New Fetter Lane London. EC4*

*Lowenfeld, Margaret (1969)* ***Play in Childhood.*** *Cedric Chivers Portway Bath. Great Britain.*

*Moslow, Abraham H. (1968)* ***Toward a Psychology of Being.*** *(Second Edition) Van Nostrand Reinholf, New York.*

*Madsen Charles H and Clifford k Madsen. (1974)* ***Teaching Discipline. A Positive Approach for Educational Development.*** *3rd ed . Allynand Bacon, Inc. 420 Atlantic Avenue 4, Boston. Massachusetts 02210*

*Prutzman, Priscilla et al (1988)* ***The Friendly Classroom for a Small planet Children's Creative Response to Conflict.*** *Program Fellowship of Reconciliation? new Society Publishers 4527, Springfiels avenue, Philadelphia pA 19143.*

*Pike Graham, & David Selby (1993)* ***Global Teacher Global Learner.*** *Hodder & Stoughton Ltd. London.*

*Pax Christi (1980)* ***Winner All.*** *Pax Christi. (St. Francis of Assisi Centre Pottery Lane, London. W11 4NG.*

*Pietsch, W. Y.* ***Human Be-ing. How to Have a Creative Relationship Instead of Power Struggle.*** *New American Library, New York*

*Reardon, Betty A. (ed) (1988).* ***Educating for Global Responsibility.*** *Teacher Designed Curricula for Peace Education K - 12 Teachers College, Columbia University, New York, NY10027 New York*

*Rogers, C. (1983)* ***Freedom to Learn for the 80's,*** *Charles E, Merrill, Columbus, Ohio.*

*Schmidt, Franand Alice Friedman (1983)* ***Creative Conflict Solving for Kids*** *(Grades 4 - 5) Grace Cotrino Abrams Peace Education Inc. P.O. box 19-1153 Miami Beach FL 33119.*

*Simon Sidney (1975)* ***Values Clarification. A Handbook of Practical Strategies for Teachers and Students.*** *Bantam New York.*

*Sharp, Genee. (1973)* ***Politics of Non Violent Action Part 1, 2 & 3.*** *Porter Sargent Pubishers. Beacon Street Boston Ma 02108*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**සිංහල :**

අදිකාරම්, ඊ. ඩබ්ලිව්. (?) (පරි) අශෝක ලිපි. ප්‍රකාශනය: ඩී. ඇල්. ඇල්. ප්‍රේද්‍රිස්. නැ. පෙ. 202 කොළඹ.

බාලසූරිය, ඒ. එස්. (1988. ජූනි) මිනිස්කමට පිටුපෑම. කල්පනා. ලංකා බැංකුව.

බාලසූරිය ඒ. එස්. (1983) පාසලෙහි ගැටුම් කළමනාකරණය. ජාතික අධ්‍යාපන ආයතනය.

මස්රි, බී. ඒ. අල්-හෆීස්. (1983 නොවැ) සත්‍ය මිනිස් සම්බන්ධතා පිළිබඳ ඉස්ලාමීය ආචාරධර්ම පද්ධතිය. ආර්ථික විමසුම. මහජන බැංකුව

පෙරේරා, මල්ලිකා (1983 නොවැ) සතුන්ට ප්‍රේම කිරීම. ආර්ථික විමසුම. මහජන බැංකුව.

හෙන්රි ස්පිරා. (1983 ජූලි) සත්‍ය මිනිස් අයිතිවාසිකම්. ආර්ථික විමසුම - මහජන බැංකුව.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் பற்றி . . . . .

''சமூகத்தில் வளர்ந்து வரும் வன்முறையின்பால் மாணவர்கள் ஈர்க்கப்பட இடமளித்துக் கல்வியால் வெறுமனே இருக்கவியலாது. சமாதானம் என்பது ஒரு நாட்டில் தானாகவே தோன்றும் ஒன்றல்ல. அது அங்கே உள்ள பிரஜைகளால் கற்கப்பட வேண்டிய நடத்தைக் கோலமே'' *(பக்கம் 29)*

உயர் இடைநிலை மாணவர்களிடையே சமாதானத்தைக் கற்பிப்பதன் பொருட்டுப் பாடசாலை கையாளத்தக்க மாதிரிப் பாடவிதானமான இதனை ஆசிரியர் அபிவிருத்தி நூலாகவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## நூலாசிரியர் பற்றி . . . . .

ஆசிரியராகவும் ஆசிரியராலோசகராகவும் அதிபராகவும் நீண்ட கால அனுபவங்களைக் கொண்ட **திரு. ஏ.எஸ். பாலசூரிய** தற்போது தேசிய கல்வி நிறுவகத்தில் கல்வி முகாமைத்துவம் தொடர்பான ஆலோசகராகக் கடமை யாற்றுகிறார்.

கல்வியின் வாயிலாக மாணவர் தலைமுறையிடையே சமாதானத்தை அறிமுகப் படுத்தும் விசேட முயற்சியில் ஈடுபட்டுள்ள அவர் அதனையே குறிக்கோளாகக் கொண்டு, 'பாடசாலையில் பிணக்கு முகாமைத்துவம்', 'சமாதானக் கல்வி கற்றல் செயற்பாடுகள்', ஆரம்பக் கல்வி சிறார் விளையாட்டுச் சஞ்சிகை போன்ற ஆக்கங்களையும் படைத்துள்ளார்.

## மொழிபெயர்ப்பாளர் பற்றி . . . . .

இந்நூலை சிங்கள மூலத்திலிருந்து சரளமான தமிழில் மொழிபெயர்த்த **திரு. ஆர்தர் ஜோன்ஸ் பெர்னாண்டோ** வென்னப்புவயைச் சேர்ந்தவர். ஓய்வு பெற்ற தமிழாசிரியரான திரு பெர்னாண்டோ மொழிபெயர்ப்புத் துறையில் முன்னேறி வருபவராவார்.

ISBN : 955-597-308-3

Printed by GRAPHIC SYSTEMS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org